தமிழ்மனம் – தொகுதி 1,
இதழ் 10: ஜூலை 2025

Vol.1 No.10 July 2025 (Monthly) Format: Print

Language: Multiple languages
Language (other): **Tamil, English**

ISSN: 3049-0723 (Online)

Tamilmanam International Research Journal *of* Tamil Studies

தமிழ்மனம் சர்வதேச தமிழ் ஆய்விதழ்

A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

TIRJTS

Department of Library
Nallamuthu Gounder Mahalingam College

Email: editor@tamilmanam.in, ngmcollegelibrary@gmail.com,
Phone: +919788175456
Website: www.tamilmanam.in
Publisher Website: www.ngmc.org

Tamilmanam International Research Journal of Tamil Studies

தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்விதழ்

Vol.1 No.10 July 2025 (Monthly)

Format: Print

Language: Multiple languages

Language (other): Tamil, English

Editor

S.VEERAKANNAN

Department of Library,

Nallamuthu Gounder Mahalingam College,

90, Palakkad Road,

Pollachi 642001, Tamilnadu, INDIA

Email: editor@tamilmanam.in, ngmcollegelibrary@gmail.com,

Website: www.tamilmanam.in

Publisher Website: www.ngmc.org

EDITORIAL BOARD

Role/Category	Details
Editor-in-Chief	**Dr. T. Rajkumar** M.A., M.Phil., NET, Ph.D. Associate Professor & Head, PG & Research Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN EMail: rajkumar@ngmc.org, Profile: https://www.ngmc.org/department-profile/pg-department-of-tamil/
Editor & Website Administrator	**Mr. S.Veerakannan** M.Sc. IT., M.L.I.Sc., CFOMD. Deputy Librarian, Research Dept of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN URL: https://www.ngmc.org/mr-veerakannan-s/ E-Mail: dlibrarian@ngmc.org
Associate Editors	**Dr. B. Aruljothi** M.A., M.Phil., Ph.D., NET Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN Link: https://www.ngmc.org/department-profile/department-of-tamil-literature/ EMail: aruljothib@ngmc.org
	Dr. M.Vijayakumar M.L.I.Sc., M.Phil.,Ph.D.,NET Librarian, Research Dept of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN URL: https://ngmc.irins.org/profile/216405 EMail: librarian@ngmc.org
	Dr. K. Singaravelu M.A. B.Ed M.Phii. PhD. Assistant Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore - 632 115. Profile: https://www.tvu.edu.in/wp-content/uploads/2017/06/Dr.K._Sigaravelu_tamil_Profile-1.pdf EMail: tamilsingam80@gmail.com
Editorial Board Members	**Dr. N. Jayasudha** M.A., M.Phil.,Ph.D.,NET Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN EMail: jeyasudha@ngmc.org
	Dr. S.Jamuna M.A., M.Phil., Ph.D.,NET. Assistant Professor, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN EMail: jamuna.s@ngmc.org
Editorial Members Abroad	**V. Kisnaveni** Senior Lecturer, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka. eMail: kisnaveniv@esn.ac.lk, +94706158744
	Vivanantharasa Senior Lecturer, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka. eMail: vivanantharasat@esn.ac.lk, +94706685799
	Zhou Xin (Eesvari) Head of Tamil Language Department, Beijing Foreign Studies University, 2 North Xisanhuan Avenue, Haidian District, Beijing, China eMail: zx@bfsu.edu.cn, Mob: 86-13581656779

Tamilmanam International Research Journal of Tamil Studies

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

ISSN: 3049-0723 (Online)

About the Journal: Introduction

The **Tamilmanam International Research Journal of Tamil Studies** is a prominent, international, peer-reviewed, refereed, and open-access academic publication. Published monthly from India, the journal adheres to the latest guidelines set by the University Grants Commission (UGC) of India. Dedicated to the advancement of scholarship in Tamil Studies, the journal serves as a vital platform for researchers, academics, and students worldwide to disseminate original research and foster a deeper understanding of the rich tapestry of Tamil language, literature, culture, and history. Embracing both Tamil and English content, *Tamilmanam* is committed to promoting contemporary developments and diverse perspectives within Tamil Studies across the globe.

Aim

The primary aims of the *Tamilmanam International Research Journal of Tamil Studies* are to:

- **Advance Scholarly Research:** To provide a rigorous, peer-reviewed international forum for high-quality original research across all facets of Tamil Studies, encouraging innovative methodologies and critical analysis.
- **Promote Understanding:** To foster appreciation, critical understanding, and comprehensive analysis of the Tamil language, its intricate literary traditions, and its evolving cultural landscape, including contemporary developments.
- **Facilitate Interdisciplinary Discourse:** To encourage the exchange of ideas and expertise among scholars from various disciplines, promoting comparative, interdisciplinary, and transcultural approaches to Tamil Studies.
- **Global Knowledge Dissemination:** To make cutting-edge Tamil research accessible to a global audience, thereby enriching universal scholarship and providing valuable resources for academic engagement and citation.
- **Support Contemporary Development:** To highlight and explore contemporary challenges, innovations, and theoretical frameworks in Tamil language and literary culture, including its interface with science, technology, and media.

Scope

The *Tamilmanam International Research Journal of Tamil Studies* welcomes original research articles, theoretical papers, reviews, and book reviews that contribute significantly to the field of Tamil Studies. Each submitted article undergoes a rigorous evaluation process by the editorial board and field experts, ensuring scholarly integrity and relevance. Its comprehensive scope encompasses, but is not limited to, the following areas:

- **Literature & Linguistics:** Traditional and Modern Tamil Literature, Literary Criticism, Grammar, Linguistics, Philology, Comparative Literature, Translation Studies (Global and Tamil), Media Studies, and Tamil Natural Language Processing.
- **Culture & Arts:** Folk Art, Temple Art, Archaeology, Anthropology, Religion, Philosophy, Diaspora Studies, and Indology.
- **Social & Human Sciences:** Psychology, Feminism, Siddha Medicine, Environmental Studies, and Social Studies pertaining to Tamil society and culture.
- **Emerging Fields:** Computational Tamil, Digital Humanities in Tamil Studies, and the intersection of Science and Technology with Tamil language and culture.

The journal encourages submissions that offer innovative perspectives, employ rigorous methodologies, and address both historical and contemporary issues relevant to Tamil language, literature, and culture, in both Tamil and English.

Table of Contents

English Title	Tamil Title	Author(s)	Pages
The Religious Perspectives in Devotional Literature	பக்தி இலக்கியத்தில் சமயப் பொதுநோக்கு	Dr. V. GAYATHRI PRIYADARSINI	643-653
The Ecological Thoughts in Vairamuthu's Novel "Third World War"	வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்	K. Mohanalakshmi	654-660
Tamilar Festivals in Tamil Culture	தமிழர் பண்பாட்டில் தமிழர் திருநாள்	K. Parameshwari	661-666
The Role of Dalit Short Stories in the Development of Tamil Short Stories	தமிழ் சிறுகதை வளர்ச்சியில் தலித் சிறுகதைகளின் பங்கு	Dr. K. PERIASAMY	667-722
Women's virtues in Mu.Varadarasan's Akalvilakku novel	மு.வரதராசனின் அகல்விளக்கு புதினத்தில் மகளிர் மாண்புகள்	Dr. B. Periyaswamy	673-689
Exploring Maternal Uncle Kinship in Classical Tamil Folk Ballads	நாட்டுப்புறப் பாடல்களில் தாய்மாமன் உறவு	Dr. S. Renuka Devi	690-698
Lifestyle of Parathaiyar as Shown by Kalittokai	கலித்தொகை காட்டும் பரத்தையர் வாழ்வியல்	Dr. R. PRIYADHARSHINI	699-707
The Social Reality of Family Presented by Vannadasan's Writings	வண்ணதாசன் எழுத்துகள் முன்வைக்கும் குடும்பம் குறித்த சமூக யதார்த்தம்	A. Shanthi Rani, Dr. S. Sujatha	708-718
SIDDHARKALIN ATTANGAM	சித்தர்களின் அட்டாங்கம்	Dr. K. KALEESWARI	719-728
Language in Grammar and Language in History	மொழியில் இலக்கணமும் – வரலாற்றில் மொழியும்	R. Brindha	729-736
A Comparative Study of the Case System in Tamil and Bengali	ஒப்பீட்டு நோக்கில் தமிழ் வங்காள வேற்றுமை இலக்கணம்	Shanmugapriya R	737-748
The Era of Thiruvaathavooradigal	திருவாதவூரடிகள் காலம்	G. Vadivelu, Dr. T. Kannan	749-755
Natural Imagery in Thirugnanasambandar's Thevaram	திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இயற்கை உருக்காட்சிகள்	Dr. K. Nagarathinam	756-762
Exploring Holistic Wellness among Third Gender through SKY Practices: An Empirical Assessment of Stress Reduction and Life Quality Enhancement	மூன்றாம் பாலினத்தவரில் ஒருங்கிணைந்த நலனை நோக்கி SKY பயிற்சிகள் மூலம்: மன அழுத்தக் குறைவு மற்றும் வாழ்க்கை தரம்	J.Jayashree, S. Kalavathy	763-775
Vaḷḷi vāṇa tīrttam āṭiya katai, caṅkara nayiṉār kōyil yāttirai : Literary Style and Fictional Language	வள்ளி வாண தீர்த்தம் ஆடிய கதை, சங்கர நயினார் கோயில் யாத்திரை : மொழிநடையும் புனைவுமொழியும்	Dr. S.Bharathi Prakash	776-784
Ecology in Purananuru	புறநானூற்றில் சூழலியல்	Dr. E. Uvarani	785-794
Pattinappalai and the Commerce of Puhar Port	பட்டினப்பாலையும் புகார்த் துறைமுக வணிகமும்	ந.வாசு, பேரா. ச. இரவி	795-801

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723 Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0109202504 --:-- Research Paper

The Religious Perspectives in Devotional Literature

Dr.V.GAYATHRI PRIYADARSINI,
Assstant Professor, Department of Tamil, G.T.N. Arts College, Dindigul
Email: priyadarsini1983@gmail.com ORCID: https://orcid.org/0000-0002-6968-2084

Abstract: *Literature is a reflection of its times. Social motivations are the reason for the formation of literature, which mirrors the political and social situations of each period. Thus, religion and devotion, which were part of literature, later developed into separate literary genres. Although literature centered on devotion has emerged periodically, the Bhakti movement—a distinct movement based on the principle of devotion—grew to the extent of creating a separate period for itself in the history of literature, though it was primarily in the Tamil region. Strong social and political factors underpinned the emergence of devotional literature, which functioned as a Bhakti movement. The basic objective of this movement was to protect traditional religion from other religious influences. There was a need to restore the traditional beliefs, worship methods, arts, culture, and values of the Tamil land. Both Saiva and Vaishnava followers participated in this restoration effort. Initially, Saivas and Vaishnavites emphasized many principles that Jainism and Buddhism rejected. This characteristic can be seen in the Azhwar Nayanmars of the first period of the Bhakti movement. They attempted to unite Saivaism and Vaishnavism without directly opposing Jainism and Buddhism, viewing Shiva and Thirumal as one entity. In an era of philosophical conflict, ideological opposition, and religious confusion, the adherents of the Vedic religion made efforts to unite among themselves.*

Key Words: *Religious generality, foreign influence, Vedas, Bhakti movement, opposition to foreign religions, Azhwars, Nayanmars, religious education.*

பக்தி இலக்கியத்தில் சமயப் பொதுநோக்கு

முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி ,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்.
Email: priyadarsini1983@gmail.com ORCID: https://orcid.org/0000-0002-6968-2084

Abstract: *இலக்கியங்கள் காலத்தின் பிரதிபலிப்பு. சமூக உந்துதல்களே இலக்கியங்கள் உருவாவதற்குக் காரணமாக இருக்கின்றன. இலக்கியங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்தின் அரசியல்,சமூக நிலையைப் பிரதிபலிக்கின்றன. அவ்வகையில் இலக்கியத்தின் ஒரு கூறாக இருந்த சமயம், பக்தி போன்றவை பிற்காலத்தில் தனி இலக்கிய வகைமையாக வளரந்தது. காலந்தோறும் பக்தியை மையப்படுத்திய இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் பக்தி நெறியை அடிப்படையாகக் கொண்ட பக்தி இயக்கம் என்ற தனி இயக்கம் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனி காலக்கட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுமளவிற்கு அது ஓங்கி வளர்ந்ததெனின் அது தமிழ்நிலப்பகுதியில் மட்டுமே. பக்தி இலக்கியத் தோற்றப் பின்னணியில் வலுவான சமூக,அரசியல் காரணிகள் அடித்தளமாக இருந்தன. பக்தி இயக்கமாகவே இது செயல்பட்டது. இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கம் புறச்சமயத்தாக்கத்திலிருந்து பாரம்பரிய சமயத்தைக் காத்தல். தமிழ் மண்ணின் பாரம்பரிய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், கலைகள், பண்பாடு, விழுமியங்கள் ஆகியவற்றை மீட்டெடுத்தல். இம்மீட்டெடுக்கும் முயற்சியில் சைவ அடியவர்களும், வைணவ அடியவர்களும் ஈடுபட்டனர். புறச்சமயத் தாக்குதல் என்பது நேரிடையாகவும் மறைமுகமாகவும் நடைபெற்றது. முதலாவதாக, சமணம், பௌத்தம் மறுதலித்த பல கொள்கைளை சைவ, வைணவத்தார் வலியுறுத்தினர். இத்தன்மையைப் பக்தி இயக்கத்தின் முதலாம் காலக்கட்டத்தைச் சார்ந்த ஆழ்வார் நாயன்மார்கள் சமணத்தையும் பௌத்தத்தையும் நேரிடையாக எதிர்க்காமல் சைவத்தையும் வைணவத்தையும் ஒன்றாக இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சிவனையும்*

திருமாலையும் ஓர் உருவாய்க் கண்டனர். தத்துவப் போராட்டமும், கருத்தியல் எதிர்ப்பும், சமயப்பூசலும் நிலவிய காலத்தில் புறச்சமய எதிர்ப்பை முன்வைக்காமல் வைதீகச் சமயத்தினர் தங்களுக்குள் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முயன்றனர்.

குறிப்பு சொற்கள் *: சமயப்பொதுமை, புறச்சமயத்தாக்கம், வைதீகம், பக்தி இயக்கம், புறச்சமய எதிர்ப்பு, ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமயப்பொறை..*

முன்னுரை:

தொன்றுதொட்டே இறைநம்பிக்கை மனித வாழ்வின் தவிர்க்க இயலாத அம்சமாகத் தொடர்ந்து வருகின்றது. சமயங்கள் தோன்றுவதற்கு முன்பே இறை நம்பிக்கையும், வழிபாட்டு நெறிகளும், இறைவனைப் பற்றிய கோட்பாடுகளும் இருந்தன. தமிழகத்தைப் பொறுத்தவரை சமயம் தொடர்பான வரலாற்றை அறிவதற்கான மிகப்பெரிய வரலாற்று ஆவணமாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இதில் சமயம், சமயம் சார்ந்த சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளும் அடங்கும். சங்க இலக்கியங்கள் பலவற்றில் இயற்கையைத் தெய்வமாக வழிபட்ட மரபினைக் காணமுடிகின்றது. பின்னர் ஏற்பட்ட காலமாற்றம், சமூகமாற்றம், அரசியல் மாற்றம் என மாற்றத்தினூடே சமய மாற்றத்தையும் நோக்க வேண்டியுள்ளது. இதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன. ஏனெனில் தமிழ் இலக்கியங்கள் உலகியல் வாழ்வை நோக்கியே படைக்கப்பட்டன. அகம், புறம் என்ற இருநிலைகளில் செயல்பட்ட இவ்விலக்கியங்களிலும் சமயம் ஒன்றிணைந்து செயல்பட்டு வந்தது. சங்கம் மருவிய காலத்தில் புறச்சமயத்தாக்கம் மிகுதியாக இருந்த காலக்கட்டம். அக்கால இலக்கியங்களில் அறத்தோடு சமயமும் இணைத்து வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் சமயங்கள் முன்னிறுத்திய அறங்களையே அவை மிகுதியாகப் போதித்தன. அவ்வாறு பெருஞ்சமயங்களாகத் தோன்றிய புதிய புறச்சமயங்களை ஏற்றல், எதிர்த்தல், என்ற முரண்கள் உருவாயின. அப்புறச்சமயத்திற்கு மாற்றாக வைதீகச் சமயங்கள் பெருஞ்சமயங்களாக, நிறுவனச் சமயங்களாக வளர்ச்சி பெற்றன. உள் முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தங்களுக்குள் சமரசம் செய்துகொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு சமய முரண்களும் புறச்சமயத்தை எதிர்க்க வைதீகச் சமயங்களுக்குள் ஏற்பட்ட சமயப் பொதுமை போன்றவற்றை இலக்கியங்கள் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

பண்டைய இலக்கியங்களில் இறைநெறி

பண்டைத்தமிழரின் இறைநெறி என்பது தாம் வாழ்ந்த நிலப்பரப்பு, வாழ்க்கைச்சூழல், பண்பாடு, பழக்கவழக்கங்கள், இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. பல பயன் கருதியும் பாதுகாப்பு கருதியும் வழிபடப்பட்டன. அதன் வரலாற்றுத் தேடலின் முதல்படியாக முதலில் தொல்காப்பியத்தினின்று இறைநெறி பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இறைநெறி என்ற சிந்தனை தமிழ் மக்களிடத்தே எவ்வாறு இருந்தது என்பதை இவ்விலக்கண நூல் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது. நானிலத்தெய்வம், பெண்தெய்வம், ஐம்பூத வழிபாடு, நடுகல் வழிபாடு, வழிபடு தெய்வங்கள் எனப்பிரித்து வழிபட்ட மரபை இதில் காணமுடிகின்றது. அகம், புறம் இரண்டிலும் சமயம் அதோடு தொடர்புடைய அத்துனைச் செயல்பாடுகளும் இதில் விளக்கமுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல். - அகத்திணை இயல் - நூற்.5).

பாட்டு, தொகை நூல்களில் குறிப்பாகப் பரிபாடல் அகப்புற நூல் என்ற வகைமைக்குள் சேர்க்கப்படினும் சமயம் சார்ந்த நூலாகவே பார்க்கப்படுகின்றது. திருமுருகாற்றுப்படை சமய நூல் என்றே கூறிவிட முடியும். அதுமட்டுமின்றி பிற நூல்களில் முருகன், திருமால், சிவன் (இப்பெயர்களால் இத்தெய்வங்களில் சில சங்க இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை), கொற்றவை, இந்திரன், திருமகள், வருணன், போன்ற தெய்வங்களையம் காவல் மரங்கள், முச்சுடராகக் கருதப்பட்ட கொடிநிலை, கந்தழி, வள்ளி, நடுகல், கந்துடைத்தெய்வம், கடற்தெய்வம், வெறியாட்டு போன்ற நிலம் சார்ந்தும், பண்பாடு சார்ந்தும் வழிபடப்பட்ட

மரபைச் சங்க நூல்களில் காணமுடிகின்றது. குறிப்பாக இறையனார் களவியல் உரையில் கடவுளர் சங்கத்தில் வீற்றிருந்தனர் என்ற செய்தி இடம்பெறுகின்றது. இது இலக்கியத்திற்குத் தெய்வீகத்தன்மை ஏற்றும் சிந்தனை வெளிப்பாடா? அல்லது இலக்கியத்தையும் இறைவனையும் இணைக்கும் முயற்சியா? என்பதும் கவனிக்கத்தக்கது. பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்று கருதப்படுகின்ற பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப்பாடல்களும் இறைமைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் என்றே கருதலாம்.

> **"சங்கத் தமிழர்களின் காலக்கட்டம் என்பது அரசியல், பொருளியல் ரீதியில் வேறுபாடுகளை உள்ளடக்கிய ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பு ஆகும். இதனால்தான் ஒரு குறிப்பிட்ட கடவுள் அல்லது தெய்வத்தை முன்னிறுத்திய ஒற்றைத்தன்மையைக் கண்டறிய முடியவில்லை. தொல் சமயம், வைதீகச் சமயம், பௌத்த சமயம், ஜைன சமயம் ஆகிய சமயங்கள், சமச்சீரற்ற நிலையில் தமிழர் வாழ்க்கையில் பரவி இருந்த நிலையைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இனக்குழு வாழ்க்கையின் எச்சங்கள் நிரம்பியிருந்த சங்க காலத்தில் தமிழரின் சமயமானது, ஒப்பீட்டு நிலையில் பெரிதும் தொல் சமயத் தன்மையுடையதாக விளங்கியது" (ந.முருகேச பாண்டியன், சங்கத் தமிழரின் சமயம்,ப.30).**

ஒற்றைச் சமயக் கொள்கையன்றித் தமிழ்ச்சமூகம் இருந்தது என்பதற்குப் பின்வரும் புறநானூற்றின் 56ஆம் பாடல் சான்றாகும். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடிய பாடலில் சிவன், திருமால் முருகன், பலதேவன், எமன் எனக் கடவுளர் பலர் பாடப்பட்டுள்ளனர்.

> **"ஏற்று வலன் உயரிய எரி மருள் அவிர் சடை,**
> **மாற்று அருங் கணிச்சி, மணி மிடற்றோனும்;**
> **கடல் வளர் புரி வளை புரையும் மேனி,**
> **அடல் வெந் நாஞ்சில், பனைக் கொடியோனும்;**
> **மண்ணுறு திரு மணி புரையும் மேனி,**
> **விண் உயர் புள் கொடி, விறல் வெய்யோனும்,**
> **மணி மயில் உயரிய மாறா வென்றி,**
> **பிணிமுக ஊர்தி, ஒண் செய்யோனும் என**
> **ஞாலம் காக்கும் கால முன்பின்,**
> **தோலா நல் இசை, நால்வருள்ளும், "(நக்கீர், புறம்.56).**

திருமுருகாற்றுப்படை முருகனின் அருள்வேட்டலாகப் படைக்கப்பட்ட நூல், இதில் வைணவக் கடவுளான திருமால் குறித்த செய்திகளும் இடம்பெறுகின்றன.

> **"பாம்பு படப்புடைக்கும் பல்வர்க்**
> **கொடுஞ்சிறைப்**
> **புல் அணி நீள் கொடிச் செல்வன்" (நக்கீரர் -திருமுருகாற்றுப்படை -175-178).**

சைவம், வைணவம் என்பதைத் தாண்டி பௌத்தப்பள்ளிகளும், சமணப்பள்ளிகளும் சமயப்பணியாற்றிய திறத்தைப் பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் எடுத்துக்காட்டுகின்றன.

> **"வண்டுபடப் பழுநிய தேன்ஆர் தோற்றத்துப்**
> **பூவும் புகையும் சாவகர்ப் பழிச்ச**
> **சென்ற காலமும் வரூஉம் அமயமும்"** (மாங்குடி மருதனார்- மதுரைக்காஞ்சி- 475-477)
> **"……….. பேரிளம் பெண்டிர்**
> **பூவினர்க் கையினர் தொழுவனர்ப் பழிச்சிச்**
> **சிறந்து புறங்காக்குங் கடவுட்பள்ளியும் "** (மாங்குடி மருதனார்- மதுரைக்காஞ்சி- 464-466).

முற்று முழுதான சமயப்பொறை பண்டைக்காலத்தில் இருந்தது என்று கூறிவிட இயலாது. சமயப்பொதுமை மட்டுமின்றி சமய முரண்பாடும் இருந்தது என்பதற்குக் கீழ்வரும் ஆவுர் மூலங்கிழாரின் பாடல் சான்று பகரும்.

> **"ஆறுணர்ந்த ஒருமுதுநூல்**
> **இகல்கண்டோர் மிகல்சாய்மார்**
> **மெய்அன்ன பொய்உணர்ந்து**
> **பொய்ஓராது மெய்கொளீஇ**
> **மூவேழ்த் துறையும் முட்டின்று போகிய**
> **உரைசால் சிறப்பின் உரவோர் மருக!"** (புறம்.- 166).

அறங்காத்தலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலான புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி அவரது மெய்போன்ற பொய்யை உளப்பட அறிந்து அப்பொய்யை மெய்யென்று கருதாமல் உண்மைப்பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி.....
என்பதில் பிற சமய எதிர்ப்பு ஆங்காங்கே இருந்ததை அறியமுடிகின்றது.

புறச்சமய எதிர்ப்பு

சங்ககாலத்தில் பெருமளவில் இல்லாத சமயப் போட்டிகள் சங்கம் மருவிய காலத்தில் தலைதூக்கத் தொடங்கியது. அதற்குப் பின்னணியில் சமூக, அரசியல் காரணிகள் இருந்தன. இனக்குழுச் சமயங்கள் வலுவிழந்து பெருஞ்சமயங்களாகச் சைவம், வைணவம் உருவெடுத்திருந்தன. தமிழ்ச் சமயங்கள் பல வைதீகச் சமய நெறிக்கு ஆட்பட்டன. சங்ககாலத்தை அடுத்து சைவ, வைணவ சமயங்களோடு சமணம், பௌத்தம், ஆசீவகம் வளர்ச்சி பெற்ற சமயங்களாய் மாறின. சங்ககால இறைநெறி இவ்வுலகை நோக்கியிருந்தது. பௌத்த, சமண பக்திநெறி மறுமை நோக்கியிருந்தது. மனித வாழ்வின் நன்மை, தீமைகளுக்கு அவர்களின் வினைப்பயனைக் காரணம் காட்டினர். இதுவரை தமிழ்ச் சமூகம் கண்டிராத புதிய சமய நெறியை வலியுறுத்தினர். இக்காலக்கட்டம் தமிழகம் மிகப்பெரிய கருத்தியல் போராட்டத்தை எதிர்கொண்ட காலக்கட்டமாகும்.

> **"சங்ககாலம் முதல் தமிழ்மக்கள் பின்பற்றிவந்த இவ்வுலக நாட்டமும் இல்லற இன்பமும் கேலிக்கு உரியவை ஆயின.மனிதன் ஆள்வினையாலும் அயரா உழைப்பாலும் ஊக்கத்தாலும் அருஞ்சாதனைகள் ஆற்றமுடியும் என்ற கோட்பாட்டினைப் புறச்சமயத்தார் ஒப்பவில்லை. 'அளந்தன போகம் எல்லாம் அவரவர்க்கு அற்றை நாளே என்ற நியதிக் கோட்பாட்டில் உறுதி பூண்டிருந்தனர்" (சோ.ந.கந்தசாமி,உலகத்தமிழ் இலக்கிய வரலாறு,** ப.137).

சமணம் மற்றும் பௌத்த மதங்களின் அடிப்படைக் கருத்தியலான வினைக்கோட்பாடு மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இம்மதங்கள் முன்வைத்த உலகியல் மறுப்பு நடைமுறை வாழ்வின் பிடிப்பற்ற தன்மையும் நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தக் கூடியதாய் அமைந்தன. இதை மயிலை சீனி வேங்கடசாமி பின்வருமாறு குறிப்பிடுவார்.

> **"கி.பி.5ஆம் நூற்றாண்டில் களப்பிர அரசக் காலத்திலே, பௌத்த,சமண சமயங்களுக்கு எதிர்ப்பாகவும், சைவ, வைணவ சமயங்களுக்குச் சார்பாகவும் ஒரு புதிய இயக்கம் தோன்றிற்று. அதுதான் பக்தி இயக்கம். புறப்பொருள் இலக்கியத்தை மாற்றியமைத்து, அதாவது, பகைவரைப் போரிலே கொன்று வெற்றிகொள்வதைவிட அகப் பகையை வென்று வெற்றி பெறுவது மேலானது என்னும் கொள்கையை அமைத்துப் பௌத்த சமண சமயங்கள் பிரச்சாரம் செய்ததுபோல, அகப்பொருளை மாற்றியமைத்துப் பக்தி இயக்கம் சைவ வைணவர்களால் உண்டாக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் கொள்கைப்படி, சிற்றின்பமாகிய அகப்பொருளுக்குப் பேரின்பமாகிய மோட்சம் கற்பிக்கப்பட்டது........ அகப்பொருளையே உயர்ந்த பொருளில் அமைத்து, மனித உயிரைத் தலைவியாகவும் கடவுளைத் தலைவனாகவும் அமைத்துப் பக்தி செய்து பேரின்ப மோட்சத்தை அடையக் கூடும் என்பதே பக்தி இயக்கத்தின் சாரம் ஆகும். இந்தப் பக்தி இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் அகப்பொருள் துறையமையச் செய்யுள்களை இயற்றினார்கள்" (மயிலை சீனி வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ்,** பக்.11-12).

இக்காலக்கட்டம் பாரம்பரிய சமயங்களுக்கு எதிர்முனைத் தாக்குதலாக பௌத்த, சமண சமயங்கள் திகழ்ந்தன. இப்புறத்தாக்குதலினின்று தனக்கான நிலைப்பேற்றினை அடைய, தற்காத்துக்கொள்ள, எதிர்வினையாற்ற வைதீகச் சமயங்கள் முனைந்தன.

> **"சமண, பௌத்த மதங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததே தமிழ்நாட்டுப் பக்திஇயக்கம். சைவமும் வைணவமுமே சமண, பௌத்த மதங்களை எதிர்த்தன. அவ்விரு மதங்களும் தங்களின் எழுச்சிக்கு ஒரு தமிழ் அடையாளத்தைத் தேடின. அவை சமண, பௌத்த மதங்களைத் தமிழ் அடையாளம் அற்றவை எனக் குற்றம் சாட்டின...... இந்திய இலக்கிய அரங்கில் தமிழ்நாட்டுப் பக்தி இயக்கமே தேசிய இனம் என்னும் பார்வையை முதலில் முன்வைத்தது"**(தொ.பரமசிவன், தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், ப.29).

இச்சமய முரண்பாடுகளினூடே தோன்றியதுதான் பக்தி இலக்கியம். பெரும்பாலும் இலக்கியங்களின் தோற்றத்திற்குச் சமூக உந்துதல்களே காரணமாக இருக்கின்றன. அத்தகைய பின்புலத்திலேயேதான் பக்தி

இலக்கியங்களும் தோன்றின. பக்தி இலக்கியத்தின் தோற்றங்களுக்குப் பின்னணியில் வர்க்க முரண்கள் செயல்பட்டதாகத் தோதாத்ரி குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

"பக்திமார்க்க காலக்கட்டம் நாயன்மார்களும், ஆழ்வார்களும், சமண பௌத்த மதங்களைக் கடுமையாக விமர்சனம் செய்ததற்குக் காரணம் வைதீகச் சமயத்தின் எழுச்சி என்றும், பிராமணீயச் செயல்பாடு என்றும் கூறுப்படுகிறது. இது மேற்போக்கான காரணம் மட்டுமே ஆகும்............... நிலவுடைமை அமைப்பில் நகரவாசிகளுக்கும், கிராமவாசிகளுக்கும் ஏற்பட்ட மோதலின் வடிகாலாகப் பக்தி மார்க்கம் விளங்கியது.......................விவசாயப் பெருங்குடியினருக்குப் பக்திமார்க்கம் ஒரு கருத்தியலாக விளங்கியது எனலாம். அதன் நடைமுறை, தத்துவம் ஆகியன பலதரப்பட்ட மக்களுக்கு ஒரு வடிகாலாக அமைந்தது எனலாம்"(எஸ்.தோதாத்ரி, வைணவம் மார்க்சியப் பார்வை, பக்.80-81).

சைவம் மற்றும் வைணவம் தங்களுக்குப் பொது எதிரியாக சமண, பௌத்தத்தைக் கண்டன. பிற சமயத்தினின்று சைவமும் வைணவமும் தங்களுக்குள் மக்களை மீட்டுத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கையின் வெளிப்பாடுதான் இவ்இலக்கியங்கள் எனின் மிகையாகாது. இதற்குப் பக்தியை மையமாகக் கொண்ட இலக்கியங்களை ஆழ்வார்களும் நாயன்மார்களும் படைத்தனர். வாழ்வியல்,சமயம், மொழி, இலக்கியம், எனப் பல நிலைகளில் இவர்களின் பணியும் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். சமயங்களுக்கு இடையே சிந்தனைப் பெயர்வும் நடைபெற்றன. வைதீகச் சமயங்கள் புறச்சமயத்தாரின் கொள்கையான வீடுபேற்றினை நான்காவது அறமாக வரித்துக்கொண்டது. புறச்சமயப் பூசல்களினூடே வளர்ந்த பக்தி இயக்கம் சமண, சமயத்தின் வீழ்ச்சிக்குப்பின் இச்சமயங்கள் தாம் சார்ந்த சமயக் கொள்கைகளை முன்னிறுத்தி தங்களுக்குள் சமய மோதல்களை மறைமுகமாக நடத்தின. இதன் தொடர்ச்சியில் திருஞானசம்பந்தர் பரசமயக்கோளரி என்றும் திருமங்கையாழ்வார் பரகாலன் என்றழைக்கப்படுவதையும் காணலாம்.

அதேவேளையில் பக்தி இயக்கக் காலக்கட்டத்தின் தொடக்கக் காலக்கட்டத்தினைச் சார்ந்த காரைக்காலம்மையார், திருமூலர், பொய்கைஆழ்வார், பேயாழ்வார் ஆகியோர் சிவன், திருமால் இருவரையும் சிறப்பித்துப் போற்றினர். இருவரையும் ஓர் உருவாய் ஒன்றாய்க் கண்டனர். வைதீகச் சமயங்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக இதைக் காணலாம். சமயப் பொதுமை கொண்ட அரசியல் சூழல் நிலவியதும் இப்பொதுமை நோக்கிற்கு ஒரு காரணமாகும்.

"சாதவாகனப் பேரரசில் செயல்பட்ட முற்காலப் பல்லவர்கள் தனிப்பட்ட ஆட்சியைக் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவித்தபோது தமது சமயக்கருத்துக்களைத் தமிழ்மக்களின் சமயஉணர்வுகளைப் புண்படுத்தாதவாறு செயல்படுத்தித் தம்முடைய ஆட்சியினை வலுப்படுத்திக் கொண்டனரெனலாம். மேலும் சமயச் சார்பற்ற ஒரு அரசினைத் தோற்றுவித்த அவர்கள் மறைமுகமாகவே தமது குடிமக்களையும் சமய வேறுபாடுகள் கருதாது இணக்கக் கோட்பாட்டினைச் செயல்படுத்த வழி செய்திருக்க வேண்டும் இவ்வடிப்படைதான் முதலாழ்வார்களும் சமயச் சார்பற்ற அரசினைச் சாதகமாக்கிக்கொண்டு சமயப் பொறையுணர்வினடிப்படையில் தமது சமயமாகிய வைணவத்தை வலுப்படுத்த வகை செய்திருக்க வேண்டும். தொடர்ந்து நோக்கினால் மன்னர்கள் வைணவப் பிரிவினராயிருப்பினும் தமது சமயத்தைப் பிறர் மீது சுமத்தாது செயல்பட்டதைப் போன்றே முதலாழ்வார்களும் "கோன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற அடிப்படையில் தனது சுயநலநோக்கிற்காகச் செயல்படாமல் சமயப் பொறைமையைப் பின்பற்றியிருக்க வேண்டும்"(வி.ஆ.வசந்தா, ஆழ்வார்கள் காலத்திய சமயநிலை, பக்.191-192).

வைணவம் மட்டுமின்றிச் சைவத்திலும் வலிமைமிக்க ஓர் அரசு உருவாகும் வரை தனிப்பட்ட சமயங்கள் தத்தம் விருப்பம்போல் செயல்பட்டுத் தமது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொண்டன. இதன் விளைவாகவும் சமண, பௌத்த எதிர்ப்பும் இவர்களிடத்துத் தென்படவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

சைவ அடியவர்களின் சமயப்பொதுமை

காரைக்காலம்மையார், திருமூலர் இருவரும் முதலாம் காலக்கட்டத்தைச் சார்ந்த சைவ அடியவர்கள். சைவ பக்தி இலக்கியத்தில் மிகப்பெருந்தடத்தை உருவாக்கியவர்கள்.

திருமூலர்

சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். சமயப் பேரியக்கமாக, சைவ சித்தாந்தத்தின் முன்னோடியாய்த் திகழ்ந்தவர். தேவார மூவர்க்கும் முன்னவராய், வேத நெறிகளை மறுத்து சமரசம் கண்டவர். இவர்ப் புறச்சமய எதிர்ப்பில் நேரிடையாகப் பங்குபெறவில்லை. சமய வேற்றுமைக்கு இடங்கொடுக்கவில்லை.

கடவுளின் தன்மையையும் அவர்தம் செயல்பாட்டையும் விவரித்தாரேயன்றிச் சமயக் காழ்ப்பு கொண்டு திகழவில்லை. இறைவனை அன்பு நெறியில் கண்ட இவர் ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ எனத் தமிழ்ச் சமூகத்திற்கான புது நெறிகாட்டியவர். அதில் ஒரு கூறாகச் சிவனையும் திருமாலையும் ஒன்றிணைத்துக் காணும் பொதுமை நோக்கைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின்றார்களே"(திருமூலர், திருமந்திரம்,பா.104).

அரனும், அழகிய நீலமணி போலும் அரியும், உலகப் படைப்புக்குக் காரணனாகிய அயனும் என்று சொல்லப்படும் மூவரும் தொழில் பற்றி முறையே முப்பெயர்ப் பெற்றனர். அஃதல்லாது பொருளால் மூவரல்லர். இக் கருத்தமையத் தொடர்பினால் ஒன்றே முழுமுதல் என்று கூறாது, வேறு வேறு உலகோர் மாறுபடக் கூறித் தம்முள் பிணங்கி மயங்குகின்றார்கள்.

"பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக்கு அன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர் அவ் வானவ ராலே" (திருமூலர், திருமந்திரம்,பா.107).

மேலோதிய முறையின் உண்மைப் பயனை அறிந்து எண்ணுமிடத்து, அயனுடன் மாலும் நாம் தொழும் தன்மையரேயன்றி நமக்கு வேறானவராகார்.

"சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே" (திருமூலர், திருமந்திரம்,பா.110).

அரன், அரி, அயன் என்னும் இவர்தம் நிலைகளாம். இவ் வேறுபாடுகள் அனைத்தும் நிலைவேறுபாடுகளே யன்றித் தலைமைப் பொருள் வேறுபாடுகளில்லை. இவ்வுண்மையினை உண்மையறிவில்லாத சில மூடர்கள் அறியார். முறைமைக்கண் ஒரு பொருளையே ஆண்டான், நெடுமால், அயன் என்று வேறுபடுத்திக் கூறுகின்றனர். அதற்கு மாறாக வெவ்வேறுளவென்று கூறுவது உண்மைக்கு மாறாகிய பிதற்றுரையே யன்றிப் பிறிதன்று.

இப்பாடல்கள் அனைத்திலும் ஓர் இறைக் கோட்பாடு முன்னிறுத்தப்படுகின்றது. எல்லாப் பொருளிலும் நிறைந்திருப்பவன் இறைவன் என்ற கருத்தின் வெளிப்பாடே இவர் பாடல்கள். இவரை அடுத்த வந்த சித்தர்களின் பாடல்களிலும் இவரின் இக்கருத்தொற்றுமை தென்படுகிறது.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" (பட்டினத்தார்,பா.24).
"அங்குமிங்கு மாகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ" (சிவவாக்கியார்,பா.133).

காரைக்காலம்மையார்

முதல் சைவப் பெண் அடியவர். இம்மைக்குரிய இன்பம் தவிர்த்து மறுமைக்குரிய இன்பம் வேண்டி நின்றவர். இறைவனாலேயே அம்மையே என்றழைக்கப்பட்ட இவர், தமிழ் நிலப்பகுதியைத் தாண்டி திராவிட நிலப்பகுதியில் புகழ்பெற்ற சைவ அடியவராய்த் திகழ்கின்றார். பெண்கள் துறவு மேற்கொள்ள இயலாது. பெண்கள் வீடுபேற்றிற்குத் தடை என்பதைத் தாண்டி சமயத்தில் பெண்ணுரிமையை முன்னிறுத்தி தம் கருத்தியலை எடுத்துரைத்தவர்.

'காரைக்காலம்மையாரின் பக்தி நெறி சிவபெருமானுடன் ஒன்றிணையும் முறையாகும். பெண்தன்மையைத் துறந்து பால்வேறுபாடு கடந்து தன்னையே இறையோடு இணைக்கிறார். மற்ற பக்த அடியவர்களிடத்திருந்து மாறுபட்டும் விளங்குகின்றார்' (Bhakti, and Saranagati in “Siva’s Demon Devotee” Thallam Sarada, University of Wisconsin –Madison,p.2).

இவர் சைவ பக்திமைக்கு மட்டும் முன்னோடியன்று பல புதிய இலக்கிய வகைமைக்கும் முன்னோடியாய்த் திகழ்ந்தார். பக்திமை நெறியில் சிவனையும் திருமாலையும் ஒருங்கே கண்டுள்ளதில் முதலாவதாக,

"அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன் - முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.18).

அரக்கனாகிய இராவணனை அடக்கியவனான இறைவனை அரன் என்ற பெயரால் போற்றுவேனோ, நான்முகன் என்ற பெயரால் போற்றுவேனா, இங்ஙனம் உலகங்களைக் குறித்தகால எல்லைவரை நிலைபெறச் செய்து காக்குங் தொழில் பூண்டு அலைகடல் நடுவிலே அறிதுயிலமர்த் திருவுடமை அரியென்னும் பெயருடையபரனென்று போற்றுவேனோ.

"ஒருபால் உலகளந்த மாலவனாம்; மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோமின்னுருவோநேர்ந்து."காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.41).

இங்கே உலகளந்த மாலவனையும் உமையவளையும் அரனின் திருவுருவத்தில் பிரிக்க முடியாத அளவிற்குக் காண்கிறார்.

"அங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்
தெங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலைத் தோன்றுவதோர் சீர்" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.52).

சிவனும் திருமாலும் ஓருருவாய்க் கொண்டு இலங்கும் தோற்றம் செவ்வானத்தில் தோன்றும் முழுமதியம் எனப் போற்றுகின்றார்.

"காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓருருவாய் நின்னோடு உழிதருவான் - நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.54).

திருமால் நின்னுடைய பாகத்தானாய் நின்னோடு ஓருருவாய் இருந்தபோதிலும், பண்டொருகால் அவன் காணாதபடி நீ எங்கு சென்று ஒளித்தாய் ?

"பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவம் மேல்"(காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.59).

நின் திருமேனியின் மேல் திருநீற்றினை அணிந்து கொள்வது பெண்ணுரு பாகமாகிய இடப்பாகத்திருவுருமோ, அன்றித் திருமால் பொருந்திய வலப்பாகத் திருவுருமோ என இறைவனின் இயல்பினை உணர இயலவில்லை எனப் பாடுகின்றார்.

"மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேல் - தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது"(காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.83).

இறைவனும் திருமாலும் ஒருங்கு திகழுந்தோற்றம் பொன்மாலையும் நீலமலையும் ஒருங்கிணைந்த தோற்றத்தை ஒக்கும் என்கிறார்.

"இறைவனிடம் முழு அன்பு செலுத்துதல், தன்னை முழுவதுமாக அவனிடம் அர்ப்பணித்தல், இருவினையைப் போக்க முயலுதல், பிறப்பை அறுக்க முயலுதல், இறைவன் தன் உள்ளத்திலேயே உறைவதை உணர்தல், இவற்றால் அவலம் நீங்குதல் என்பவை அம்மையார் சைவ சமய வளர்ச்சிக்குத் தந்த கொடைகளாம். இவருக்கு முன் இக்கருத்துக்களை இவ்வளவு அழுத்தமாகக் கூறும் நூல்களைக் கண்டதில்லை" (பெரியபுராணம் - ஓர் ஆய்வு, ப. 119).

இறைவனின் திருவுருவச்சிறப்பில் சிவனும், திருமாலும் ஓருருவாய்த் திகழ்வதாகக் கூறுகின்றார்.சைவ எழுச்சியில் இவர் தடம் கண்டவர் எனப் போற்றப்பட்டாலும் திருமாலையும், சிவனையும் ஒருவராய், ஒத்த பண்பினராய்க் காணும் மரபு இவர் பாடல்களில் புலனாகின்றது. இறைவன் ஒருவனே அவனை எவ்வாறு வழிபடுகின்றோமோ அவ்வாறு அவன் நம்மிடத்துத் தோன்றுவான் என்ற பக்திமை நெறியை இவ்விருவரும் முன்வைக்கின்றனர். இருப்பினும் இவர் பிறச் சமயக் காழ்ப்பைத் தன் இலக்கியங்களில் முன்வைக்கவில்லை. புறச்சமயத்திற்கு மாற்றாக எழுந்த சைவ, வைணவ சமயங்களை ஒன்றிணைத்துக் காண்பது இவரின் தனித்துவமான சமயப்பொறையாகும். சைவ எழுச்சியில் பின் வந்த நாயன்மார்கள் பலருக்கும் முன்னோடியான இவர் மறைமுகமான ஒரு தத்துவப் போராட்டத்தையும் முன்வைத்தார்.

ஆழ்வார் பாடல்களில் சமயப்பொதுமை

பொய்கையாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவரில் காலத்தால் முற்பட்டவர். திருமாலுக்குரிய பாஞ்சன்னியம் என்ற சங்கின் அம்சமாக இவர் போற்றப்படுகின்றார். முதல் திருவந்தாதியைப் பாடியவர்.அணிநலம் சிறக்கப் பாடியவர் இவர்.

"அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள் ஊர்தி
உரை நூல் மறை உறையும் கோயில் வரை நீர்
கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி
உருவம் எரி கார் மேனி ஒன்று" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி,பா.85).

இறைவனின் திருப்பெயர் அரன்(-சிவன்), நாரணன் (- திருமால்). அவன் வாகனம் காளை, கருடன்; மக்கள் உய்யும் பொருட்டுக் வெளிப்படுத்திய நூல்கள் ஆகமம், வேதம். மலையும் பாற்கடலும் இறைவனின் இருப்பிடம். அழித்தல், அளித்தல் அவன் தொழில். தீயோரைத் திருத்துதற்கு ஏந்திய படைக்கலன் மூவிலைவேல் (-சூலம்), சக்கரம். அவன் நிறம் சிவப்பும் கறுப்பும்.

"ஏற்றான் புள் ஊர்ந்தான் எயில் எரித்தான் மார்வு இடந்தான்
நீற்றான் நிழல் மணி வண்ணத்தான் கூற்று ஒருபால்
மங்கையான் பூமகளான் வார்ச் சடையான் நீள் முடியான்
கங்கையான் நீள் கழலான் காப்பு" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி பா.54).

சிவன், மால் இருவரின் ஊர்திகள் முதலில் சுட்டப்பட்டன. பின் முப்புரம் எரித்தமை, இரணியன் மார்பிடந்தமை என்னும் வீரச் செயல்கள் கூறப்பட்டன. பின்னர், இருவரின் திருமேனி அழகு இடம் பெற்றது. நீறுபூசியவன் ஒருவன். நீலமணி வண்ணன் ஒருவன். உடம்பின் ஒரு பகுதியில் மலைமங்கையினை உடையன் முன்னவன். பின்னவன் மலர்மகளை உடையவன். முன்னவன் நெடுஞ்சடையன்; பின்னவன் நீள்முடியன். ஒருவன் கங்கையான்; இன்னொருவன் கழலணிந்தவன். உயிர், உலகு அனைத்தையும் காவல் பூண்ட இறைவன் இருவகையாக இலங்கினும் ஒருவரே.

"பொன் திகழும் மேனிப் புரி சடை அம் புண்ணியனும்
நின்று உலகம் தாய நெடுமாலும் என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேலும் ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி, பா.2178).

பொன்போல விளங்குகின்ற உடலையும் பின்னினச் சடைமுடியையும்உடையவனாகிய ருத்ரன் நின்று உலகத்தை அளந்தவனும் இருவரும் வேறு வடிவத்தைக் கொண்டு இருந்தார்களேயானாலும் ஒருவர் உடலில் ஒருவர் எப்போதும் இடம்பெற்றிருப்பர்.

பேயாழ்வார்

திருமயிலையில் பிறந்த இவர் திருமாலின் வாளின் அம்சமாகக் கருதப்படுகின்றார். மூன்றாம் திருவந்தாதியைப்பாடிப் பரவியவர். திருமாலின் பல தலங்களையும், அவரின் திருஅற்புதங்களையும் விரிவாகப் பாடியுள்ளார். இறைவன் எல்லா உருவங்களிலும் வெளிப்படுபவன் என இறைவனை எளியவனாகச் சித்தரித்தவர். இவர் பாடல்கள் கற்பனை வளம் மிக்கவை.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்

சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டுஅருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டு உருவும்ஒன்றாய் இசைந்து" (பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி,பா.63).

எல்லாம் தானே ஆன இறைவன் திருமால் தானே தனக்கு உவமையானவன்; எல்லாத் தெய்வ உருவங்களிலும் வெளிப்படுபவனும், தவ உருவும், விண்ணில் மின்னும் விண்மீன்களும், தீயும், பெரிய மலைகளும், எட்டுத்திசைகளும், சூரியனும் சந்திரனும் ஆகிய இருசுடர்களும் அவனே எனப் பாடுகிறார். சங்கர நாராயணனாகக் காண்கின்றார்.

முதல்காலக்கட்டத்தைச் சார்ந்தவர்கள் காரைக்காலம்மையார், திருமூலர், பொய்கையாழ்வார், பேயாழ்வார். சமணம், பௌத்தம் இரண்டும் பெருவழக்கான சமயங்களாக மக்களிடத்து இருந்த காலக்கட்டம். அரசியல், சமூகச் சூழலிலும் செல்வாக்குப் பெற்ற சமயங்களாகத் திகழ்ந்தன. "அவரவர்த் தாந்தம் அறிந்த வாறேத்தி இவரி வரெம் பெருமானென்று" அன்றைய சமய நிலையைக் காட்டும். மக்கள் தம்தம் விருப்பத்திற்கேற்ப சமயங்களைப் பின்பற்றினர். அக்காலக்கட்டத்தில் பின்பற்றப்பட்ட பிற சமயத்தை மதிக்கவும் ஏற்கவும் இவர்கள் தலைப்பட்டனர். தங்களின் கருத்தியலுக்கு மாற்றான புறச்சமயங்களான சமண, பௌத்தத்தை எதிர்க்காமல் தங்கள் கருத்தியலை முன்வைத்தனர். சமயப்பொறையோடு திகழ்ந்தனர். குறிப்பாகச் சமண, பௌத்த எதிர்ப்பும் சமயச்சாடலும் இவர்களிடம் காணப்படவில்லை. இதற்கு மாற்றாகச் சைவ, வைணவ உயர்வையும் சிறப்பையும் எடுத்துக்காட்டினர். சிவனில் திருமாலையும் திருமாலிடத்து சிவனையும் ஒருங்கே கண்டனர். பக்தி பேரியக்க வரலாற்றில் தத்தம் சார்ந்த சமயக்கொள்கை சார்ந்தே இறைவனை அணுகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் இவர்களுக்கு அடுத்த காலக்கட்டதில் தோன்றிய பிற ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் சிவன், திருமால் இருவரையும் ஒருங்கே காணும் பண்பு வெளிப்படாமல் இல்லை. இருப்பினும் அப்பாடல்களில் தாங்கள் சார்ந்த இறையை முதன்மைப்படுத்தியே தங்கள் பாடல்களைப் புனைந்தனர். தம் இறைநெறியும், கோட்பாடுகளுமே இறுதியில் வலியுறுத்தப்பட்டது.

"மாதொரு பாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற நாதன்"
என்று ஞானசம்பந்தரும்
"மாலோர்ப் பாகம் திகழ்ந்தான்"
"ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ
ஓருருவே மூவுருவாய் ஆன நாளோ"
என்று நாவுக்கரசரும்
"இடம் மால் வலம் தான் இடப்பால் துழாய் வலப்பால் ஒண்கொன்றை
வடமாலிடம் துகில் தோல் வலம் ஆழி இடம் வலம் மான்
இடமால் கரிதால் வலம் சேது இவனுக்கெழில் நலம் சேர்
குடமால் இடம் வலம் கொக்கரையாம் எங்கள் கூத்தனுக்கு"
எனச் சேரமான் பெருமாள் நாயனாரும்
"முனியே நான்முகனே! முக்கண்ணப்பா! என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண் கரு மாணிக்கமே! என் கள்வா!"
நம்மாழ்வாரும் பாடியிருப்பமை நோக்கத்தக்கது.

பக்தி இலக்கியத்தில் புறச்சமய எதிர்ப்பு

> **"தமிழ்நாட்டுப் பக்தி இயக்கம் என்பது சைவ, வைணவ மதங்களின் எழுச்சி மட்டுமன்று. அது சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான கலகக்குரலும் ஆகும். இதன் விளைவாகப் பௌத்தம் தமிழ்நாட்டில் வேரற்றுப் போயின. சமணமும் பௌத்தமும் வெறுத்தற்குரிய மதங்களாகச் சைவ வைணவர்களால் கருதப்பட்டன. வெறுப்பிணர்வின் எச்சங்கள், தமிழரிடையே இன்னும் வசைச்சொற்களாக வழங்கிவருகின்றன"(தொ.பரமசிவன், தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், ப.22).**

பக்தி இலக்கியத்தின் முதல்காலக்கட்டத்தினர்ப் புறச்சமயக் காழ்ப்பின்றிச் செயல்பட்ட நிலையைப் பின்வந்த பக்தி இயக்கத்தினர் முற்றிலுமாக மாற்றினர்.சமயப்போராட்டத்தினின்று தம் சமயநிலையை வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் தாங்கள் இருப்பதாக உணர்ந்ததின் விளைவே பிற சமய மறுப்பும், எதிர்ப்பும். கி.பி.6ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்ட சமயமாற்றங்களைப் பின்வந்தோர் பாடல்களில் காணமுடிகின்றது. புறச்சமய

எதிர்ப்பையும் தமது மேலாண்மையையும் வெளிப்படையாக முன்வைத்ததோடு, தாங்கள் சார்ந்த சமயத்தைத் தனிப்பெருந்தெய்வமாகக் கண்டனர். சமயச்சடங்குகள், தனித்தன்மைகள், இறைவனின் குணவியல்புகள் போன்றவற்றைத் தம்பாடல்களில் வலியுறுத்தினர். திருவிளையாடல்கள், அவதாரங்கள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தனர். பிற சமயத்தைச் சிறுமை செய்து அதன் வாயிலாகத் தம்சமயத்தை வலுப்படுத்தினர். இதற்கு அன்றைய அரசியல் சூழலும் அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. நின்ற சீர் நெடுமாறன் உதவியோடு ஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றம் செய்ததாகக் கூறப்பட்ட வரலாறும், மகேந்திர வர்ம பல்லவன் சமணத்திலிருந்து சைவமதத்தைச் சார்ந்ததும் இதன் பின்னணியில் அமைந்ததே.

"மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேயணி ஆலவா யாப்பணி
பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்
சித்திரை யழிக் கத்திரு வுள்ளமே"(ஞானசம்பந்தர். பா.298-2).

மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திய அத்தனே! அழகிய ஆலவாயில் விளங்கும் நாதனே! பொய்த்தவ வேடம் கொண்ட சமணரிடம் வாது செய்து அழிப்பதற்குத் திருவுள்ளம் யாதோ? உரைப்பாயாக.

"கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையான்
மெய்யைப் போர்த்துழல் வாரு முரைப்பன மெய்யல
மைகொள் கண்டத்தெண்டோண்முக்க ணான்கழல்
வாழ்த்தவே ஐயந் தேர்ந்தளிப் பானுமை யாறுடை யையனே".(ஞானசம்பந்தர். பா.1534).

கையில் உணவை வாங்கி உண்டு உழலும் சமணரும், நாற்றம் அடிக்கும் துவராடையால் உடலைப் போர்த்துத் திரியும் புத்தரும் கூறும் உரைகள் மெய்யல்ல என்பதை அறிந்து, நீலகண்டமும் எண் தோளும் மூன்று கண்களும் உடைய சிவனே பரம்பொருள் எனத் தேர்ந்து அவர்த் திருவடி வாழ்த்த, ஐயந்தேரும் ஐயாறுடைய ஐயன் நம்மைக் காத்தருளுவான்

"வெறுப்பொடு சமணர் முண்டர்விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை யாங்கே
அறுப்பதே கருமங் கண்டா யரங்கமா நகருளானே! "
(தொண்டரடிப் பொடியாழ்வார்,பா.8).

வெறுப்போடு கூடிய சமணர் சைவர்களும் பௌத்தர்களும் நின்பால் பொறுக்கமுடியாத சில வார்த்தைகளைப் பேசில் சொல்லுவார்களாகில் அதுவே நோய் ஆகிமுடிந்து போவது எனக்கு சக்தியும் கூடுமாகில் ஆங்கே உன்னை நிந்தித்த அவ்விடத்திலேயே தலையை அறுப்பதே செய்யத் தக்கது காண்

"புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாம்,
கலையறக் கற்ற மாந்தர்க் காண்பரோகேட்ப ரோதாம்,
தலையறுப் புண்டும் சாவேன் சத்தியங் காண்மின் ஐயா,
சிலையினா லிலங்கை செற்ற தேவனே தேவ னாவான். "
(தொண்டரடிப் பொடியாழ்வார்,பா.878).

சாத்திரங்களை நன்றாக ஓதின மனிதர் நீசத் தர்மமாய்நின்ற பௌத்த மதம், சமண மதம் முதலிய எல்லா மதங்களையம் நெஞ்சாலே தான் ஆராய்வார்களோ? காது கொடுத்துத்தான் கேட்பார்களோ?

"அறியார் சமணர் அயத்தார் புத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில் – வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
ஈனவரே ஆதலால் இன்று" (திருமழிசை ஆழ்வார்,பா.6).

சமணர், பௌத்தர், சிவனை வழிபடுபவர்களை அறியாதார் என்றும் சிறியர் என்றும் இகழ்வதோடு திருமாலை வணங்காதார் ஈனவர் என்கிறார். மேலும் மறந்தும் புறந்தொழா மாந்தர் என்று தன்னைக் கூறிக்கொள்கின்றார்.

இப்பாடல்கள் புறச்சமய எதிர்ப்பின் எல்லையைக் காட்டும். அன்றைய சமயச் சூழலையும் விளக்கிக் காட்டுகின்றது.சமயப்பொறை இல்லாத மதப்போர் நடந்த காலத்தில் வாழ்ந்திருந்த பக்தி அடியவர்களின்

கருத்தாக இதை நோக்கலாம். தாங்கள் சார்ந்த சமயத்தை முன்னிலைப்படுத்துவதோடு புறச்சமயச் சாடலும் அதிகமாய் இருந்தது.சைவம், வைணவம் என்ற மதங்கள் மக்களிடத்து வலுப்பெற்ற காலக்கட்டத்தில், பெருவழக்காக வழிபடப்பட்ட நிலையில் பிற சமய எதிர்ப்பை முன்வைத்தனர்.

தொகுப்புரை

- இனக்குழுச் சமூகத்தில் இயற்கையே தெய்வமாக வழிபடப்பட்டது.
- பழந்தமிழரின் இறைநெறி கோட்பாட்டை விளக்கும் ஆவணமாக இலக்கியங்கள் திகழ்கின்றன.
- ிணை தெய்வ மரபிற்கு மாறாகப் பெருஞ்சமயங்கள் உருவெடுத்தன.
- புதிய அரசியல் சூழலில் அரசியல் மாற்றத்தோடு சமூக மாற்றத்தின் ஒரு கூறாக வேற்றுச் சமயங்கள் மக்களின் ஆதரவைப்பெற்ற சமயங்களாக மாறின.
- சமண, பௌத்த சமயங்கள் சங்க காலத்தினின்று இருப்பினும் களப்பிரர்க் காலத்தில் அது பெருஞ்சமய நிலையை எட்டியது.
- மனிதர்கள் அவர்கள் உருவாக்கிய சமயங்கள் அவைகளுக்கிடையான போராட்டத்தின் விளைவாக, சமயப்பூசலின் விளைவாகப் பக்தி இலக்கியம் உருப்பெற்றது.
- சமண, பௌத்த சமயங்களுக்கு மாற்றாகச் சைவ, வைணவ சமயங்களை முன்வைத்தனர்.
- இலக்கியத்தைத் தங்களின் சமயப்பரப்பலுக்காகவும், தத்துவார்ந்த சிந்தனை வெளிப்பாட்டிற்குமான வாயிலாகப் பயன்படுத்தினர்.
- சமயப்போராட்டத்தின் காரணமாக இலக்கியத்தின் பாடுபொருளில் இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் வலியுறுத்தப்பட்டன.
- தொடக்கக் காலத்தில் சமண, பௌத்தத்தினை எதிர்த்த பக்தி இயக்கத்தினர்ப் பாரம்பரிய சமயமாகக் கொண்ட சைவ, வைணவத்திடையே வேறுபாடு கொள்ளவில்லை.
- சமயப் பொதுமைத் தன்மையோடு தங்கள் பாடல்களைப் முதலாம் காலக்கட்டம் சார்ந்த ஆழ்வார், நாயன்மார்கள் புனைந்தனர்.
- இவர்களின் அடிப்படைக் கோட்பாடு என்பது சிவன், திருமால் ஓர் உருவாய்த்திகழ்கின்றான் என்பதே.
- பிற்கால நாயன்மார்கள் ஆழ்வார்களிடத்தே சமய எதிர்ப்பும், கண்டனமும் வெளிப்படையாகவே இருந்தது. சமயப்பூசலின் காலக்கட்டப்பின்னணியின் தொடர்ச்சியாக இதைக் காணல் வேண்டும். சைவ, வைணவ ஒருங்கிணைப்பையும் முன்வைக்கவில்லை.

References:

1. Gnanasambanthan ,A.S. 1999.Periyapuranam – Oor Aaivu.Chennai:Gangai Publications
2. Kandhaswamy,S.N.2004. Ulakat Tamil Ilakkiya Varalaru.Chennai:International Institute of Tamil Studies
3. Paramasivan,Tho.2001. Panpattu Asaivukal,Nagercoil: Kalachuvadu Publications.
4. Paramasivan,Tho.2022.Thamizhar Uravu Muraigalum Samayamum Vazhipadum. Chennai: New Century Book House.
5. Thiyagarajan,T.2017.Periya Puranam Samooga Pinnaniyum Manidha Uravugalum. Chennai: New Century Book House.
6. Thothathri,S.2010.Vainavam – Marxiya Parvai, Chennai: New Century Book House.
7. Vasantha,V.A.1990.Naalayira Dhivya Prabhandhathil – Samooha Arasiyal Nerihal, Madurai: Kumaran Publications.
8. Venkatasamy, Mylai Seeni. 2006.Samayam Vazhartha Tamil.Chennai: Naam Thamizhar
9. Murugesa Pandiyan,N.2015.Ungal Noolaham.PP.30-32.vol.09.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0109202504 --:-- Research Paper

The Ecological Thoughts in Vairamuthu's Novel "Third World War"

K. Mohanalakshmi,
Ph.D. Research Scholar, **Registration Number: CRE/TAM22PNOV288/2022**
Karuppanna Mariyappan College, Muthur.
Research Guide: **Dr. S. Niranjana Devi**
Email: Lakshmimohana2011@gmail.com

Abstract: *It is natural for a creator to incorporate not only the ideas that arise in their thoughts but also the events of the society they belong to. Vairamuthu is closely connected to the lives of the common people. In that vein, Vairamuthu has recorded in his novel "Third World War" themes such as the lifestyles of his native villagers, the contemporary life problems of agricultural people, the complexities in the agricultural profession, and organic farming. The purpose of this article is to explore Vairamuthu's skill in documenting concepts such as the pollution of land, water, and air – which are primary to the environment – and the effects of global warming in his novel "Third World War.".*

Key Words: *Vairamuthu, Third World War, Global Warming, Conservation of Natural Resources, The Plight of Farmers, Global Heat, Prevention Methods..*

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்

கு.மோகன லட்சுமி ,
முனைவர் பட்ட ஆய்வாளர், ***பதிவு எண்:CRE/TAM22PNOV288/2022***
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, முத்தூர்.
Lakshmimohana2011@gmail.com
நெறியாளர்: **முனைவர்.எஸ். நிரஞ்சனா தேவி**

Abstract: *படைப்பாளி தன் எண்ணங்களில் உதித்த கருத்துகளோடு தான் சார்ந்த சமூகத்தின் நிகழ்வுகளையும் கருப்பொருளாக்குவது இயல்பு. வைரமுத்து அடித்தட்டு மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையவர். அவ்வகையில் வைரமுத்து தன் மண் சார்ந்த கிராமிய மக்களின் வாழ்வியல் முறைகள், விவசாய மக்களின் தற்கால வாழ்வியல் பிரச்சனைகள், விவசாயத் தொழிலில் உள்ள சிக்கல்கள், இயற்கை விவசாயம் போன்ற கருத்துக்களை மூன்றாம் உலகப்போர் நாவலில் பதிவு செய்துள்ளார். சுற்றுச்சூழலில் முதன்மையான நிலம், நீர் காற்று ஆகியவை மாசுபாடு அடைதல், புவி வெப்பமயமாதல் அதன் விளைவுகள் போன்ற கருத்துக்களை வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் பதிவு செய்துள்ள திறனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

குறிப்பு சொற்கள் : *வைரமுத்து,மூன்றாம் உலகப்போர், புவி வெப்பமயமாதல், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகளின் நிலை, புவி வெப்பம்,தடுக்கும் முறை..*

முன்னுரை:

இந்த அகண்ட பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழத் தகுதிபெற்ற ஒரே கோள் 'ஆழிசூல் உலகு' என்று இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இப்பூமி. இந்த பூமியானது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. இப்பூமியில் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளான நிலம், நீர், காற்று ஆகியவை தூய்மையாக இருப்பது அவசியம். இப்புவியானது மனித செயல்பாடுகளால் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதல்

போன்ற சூழலில் சிக்கல்களை சந்தித்து வருகிறது. மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலில் குறித்தான சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது

சூழலியல் விளக்கம்

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் தாங்கள் வாழும் இடத்தின் சூழலைப் பொறுத்து ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் உயிருள்ள இனங்கள், உயிரற்ற இயற்பியல் கூறுகள், அவற்றிற்கு இடையேயான தொடர்புகள் குறித்து அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையே சூழலியல் எனப்படும். சூழலியல் என்பது உயிரினங்கள் சூழலுடன் கொள்ளும் தொடர்பு பற்றிய விரிவான அறிவியல் ஆகும். சூழலியல் என்னும் கருத்துருவை முதன்முதலில் எர்னஸ்ட் ஹேக்கல் என்னும் ஜெர்மானிய உயிரியல் ஆய்வாளர் பயன்படுத்தினார். எனினும் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இயூஜெனியஸ் வார்மிங் (Eugenius Warming) என்பவரே சூழலில் துறையின் முன்னோடி என்று அழைக்கப்படுகிறார்.

மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினம் சூழலியல் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி படைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய சிந்தனையோடு மானுடம் சந்திக்கப் போகும் சவால்களையும், பூமிக்கு ஏற்படும் பாதிப்பையும் எடுத்துக்கூறி இருப்பதுடன் அதற்கான சில தீர்வுகளையும் முன்மொழிந்து சமூக அக்கறையோடு படைப்பாளி இப்புதினத்தை படைத்திருக்கிறார். மூன்றாம் உலகப்போர் புதினம் சூழலில் நோக்கம் கொண்டதாக உள்ளது. புதினத்தில் படைப்பாளி குறிப்பிடும் இயற்கைக்கு எதிராக மனிதன் தொடுத்திருக்கும் சூழலில் போர் குறித்தும், புவி வெப்பமயமாதல், நிலம், நீர்,காற்று மாசுபாடுகள் குறித்தும், இத்தகைய சிக்கல்களுக்கு படைப்பாளி முன்வைக்கும் தீர்வு குறித்தும் ஆராய்வதாக அமைகின்றது. மூன்றாம் உலகப்போர் சூழலியல் போர் இப்புதினத்தில் படைப்பாளி நிலம், நீர் காற்று ஆகியவை மாசுபடுவதால் சுற்றுச்சூழல் எவ்வாறு மாசுபடுகிறது என்பதை விளக்கியுள்ளார். சூழலியல் மாசுபாட்டால் விவசாயமும்,மனித வாழ்க்கையும் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதை கிராமிய பின்புலத்தை கொண்டு புதினத்தை கட்டமைத்துள்ளார். மேலும் உள்ளூர் மக்களின் ஊடாக உலகத் துயரத்தைப் பதிவு செய்திருக்கிறார். வாசிப்பு - ரசிப்பு என்கின்ற எல்லைகளைத் தாண்டி இந்த சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளையே பரிசாகக் கேட்கிறார். ஒருபுறம் உலகமயமாதல், இன்னொரு புறம் புவி வெப்பமயமாதல் இந்த இரண்டுக்கும் இடையே மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளை காட்டுவதாக மூன்றாம் உலகப் போர் புதினம் அமைந்துள்ளது. முதல் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப்போர் என்று இரண்டு உலகப்போர்கள் முடிந்து விட்டன. ஆனால் படைப்பாளி குறிப்பிடும் மூன்றாம் உலகப்போர் எப்போது தொடங்கியது என்றும்,அது எப்போது முடிவுக்கு வரும் என்பதையும் அறுதி இட்டு கூற முடியாது என்கிறார். "முதல் இரண்டு உலகப்போர்கள் முடிந்துவிட்டன என்று சரித்திரம் அறிவித்துவிட்டது. ஆனால் மூன்றாம் உலகப்போர் தொடங்கி விட்டது என்பதை அது இன்னும் அறிவிக்கவேயில்லை. அது கண்ணுக்குத் தெரியாத யுத்தம்; கைகுலுக்கிக் கொண்டே நடக்கும் யுத்தம்; கொல்கிறவன் கொல்கிறான் என்றும் சாகிறவன் சாகிறான் என்றும் அறிந்து கொள்ள அவகாசம் தராத யுத்தம்.

இது மனிதனுக்கும் மனிதனுக்கும் மட்டுமல்ல மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; மூன்றாம் உலக நாடுகளுக்கும் முன்னேறும் நாடுகளுக்கும் இடையே நிகழும் முடிவு தெரியாத போர்.

மூன்றாம் உலகப்போர் - இது முகத்துக்கு முகம் பார்த்து மோதாத போர்; ஆயுதங்களை ஒளித்துக் கொண்டு நிகழ்த்தும் போர்; மண்ணுக்கும் விண்ணுக்குமான போர்; மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; இது மனித குலம் சந்தித்திராத மோசமான முகமூடி போர்; புவி வெப்பமயமாதல் - உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராக தொடுத்திருக்கும் விஞ்ஞானப் போர்”1

மூன்றாம் உலகப்போரானது மண்ணுக்கும் விண்ணுக்கும், மண்ணுக்கும் மனிதனுக்கும் நடக்கின்ற போராக படைப்பாளி கருதுகிறார்.

வேளாண்மைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் போர்

மனித நாகரீகத்தின் பரிணாம வளர்ச்சியானது வேளாண்மையிலிருந்தே தொடங்குகிறது. வேளாண்மையே மனித குலத்தின் வாழ்வாதாரத்திற்கு ஆணிவேராக விளங்குகிறது. நமது கலாச்சாரத்தின் அடையாளம் வேளாண்மை. இதனால் தான்

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"2

என்று வேளாண்மையை முதன்மைப்படுத்தினார் திருவள்ளுவர். இந்த வேளாண்மைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் போர் தான் இந்த மூன்றாம் உலகப்போர். “உலகெங்கும் உணவுகள் மாறும்; உண்ணுதல் மாறாது; எல்லோருக்கும் உணவு வேண்டும். உலகெங்கும் இல்லங்கள் மாறும் இருத்தல் மாறாது; எல்லோருக்கும் வீடுகள் வேண்டும் உலகெங்கும் உடைகள் மாறும் உடுத்தல் மாறாது; எல்லோருக்கும் ஆடைகள் வேண்டும் இந்த மூன்றுக்கும் மூலமாய் விளங்கும் வேளாண்மையை காப்பது உலகக்கடமை. அந்த உலகக் கடமையின் தமிழ் பங்கு தான் இந்த மூன்றாம் உலகப்போர்”3 என்று தனது படைப்பு நோக்கத்தை வைரமுத்து முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

விஞ்ஞான ரீதியான மூன்றாம் உலகப் போர்

நாகரீக வளர்ச்சியில் முதன்மை பெற்ற மனிதன்தான் இந்த பூமியை சிதைக்கத் தொடங்கி விட்டான். நாகரீக வளர்ச்சி பெற்ற மனித இனத்தால் தான் சுற்றுச்சூழல் பெரும் அளவு மாசடைந்து வருகிறது. அதனால் ஓசோன் படலம் கிழிந்து வருகிறது. புவி வெப்பம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. பூமியின் சிறப்புக் காப்புறுதியானது ஓசோன் கூரை. இதை இந்த நூற்றாண்டின் தொழில் புரட்சி மனிதன் கிழித்தெறிந்து விட்டான். இதுவரை 29 மில்லியன் சதுர கிலோமீட்டர் கிழிந்து விட்டது. புவி வெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டே இருக்கிறது மேலும் வெப்பம் கூடினால் பல்வேறு உயிரினங்கள் அழிய நேரிடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புவி வெப்பம் கூடிக் கொண்டே போவதால் அது உலகத்தை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக்கொண்டிருக்கிறது . இது மற்றொரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூன்றாம் உலகப் போர்.

சுற்றுச்சூழல் பாதிப்பு

இன்று அதிகளவிலான மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் முறையற்ற வாழ்வியல் முறையாலும் மனிதர்களைச் சார்ந்த சுற்றுப்புறங்களும் சூழ்நிலைகளும் பெருமளவிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. மனிதர்கள் உயிர்வாழ அடிப்படையான நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபாடு அடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

நீர் மாசுபாடு

அதிகமான மக்களின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் பல தொழிற்சாலைகள் தோன்றிவிட்டன. ஆனால் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய நீர்நிலைகளை முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகி வருகிறது. "கரட்டுல மில்லு கட்டியிருக்காங்க. அவுங்க சாயக்கழிவுத் தண்ணித்தான் கசிஞ்சி கசிஞ்சி கெணருகள்ல செந்தண்ணியா எறங்குது. மில்லு வந்தா குடிக்க கஞ்சி கிடைக்கும்னு பாத்தா இப்ப குடிக்க தண்ணி கிடைக்காது போல இருக்கே".4

பெரும்பாலான நகரங்களில் தொழிற்சாலைகளும், சாயப்பட்டறைகளும் இயங்கிவருகின்றன. இதுபோன்ற தொழிற்கூடங்கள் கிராமங்களிலும் புகுந்துவிட்டன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை முறையான சுத்திகரிப்பு இல்லாமல் ஆறுகளிலும் விவசாய நிலங்களிலும் விட்டுவிடுகின்றனர். இதனால் நிலத்தடி நீர், கிணறுகளில் சுரக்கின்ற நீர்த்தன்மையும் பாதிப்படைகிறது. மேலும் மக்கள் குடிப்பதற்கும் மற்றும் விவசாயப் புழக்கத்திற்கும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலையினை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் நாவலாசிரியர் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

புவி மாசுபாடு

சுற்றுச்சூழல் பாதிப்புகளில் முதன்மையாக இருப்பது மனிதன் வாழும் இந்த பூமிதான். கழிவுறுப்புக்குப் பக்கத்தில் கருவளருவதைப் போல தீமைக்குப் பக்கத்தில்தான் இந்தச் சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது. பூமிப்பந்தில் எங்குப் பார்த்தாலும் குப்பைகள் குவிந்த வண்ணம் காணப்படுகின்றன. அதிலும் மண்ணில் மக்காத பாலிதீன் பைகளும் பிளாஸ்டிக் பொருட்களும் பூமியின் மேற்புறத் தோற்றத்தை அழுக்கு தேசமாக்கிக் காட்டுகின்றன. "இந்த உலகில் எரியும் பிரச்சனைகளுக்கு மத்தியில் எரிக்க முடியாத பிரச்சனை குப்பை. மண்ணில் மக்கப்போகும் மனிதன் மண்ணில் மக்காத பிளாஸ்டிக்கையும் பெட்ரோலிய இழைகளையும் கண்டறிந்துவிட்டான்".5 இதுபோன்ற பிளாஸ்டிக் பாலிதீன் பை பொருட்களின் பயன்பாட்டுக் கழிவுகளால் மண்ணின் தரமும் அதன் திடத்தன்மையும் சீர்குலைகின்றன. மேலும் நிலத்தடி நீர் குறைகிறது. இதனால் மக்கள் அனைவரும் மக்காத பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து புவி மாசுபடுதலைத் தடுக்க வேண்டும் என்பதை இஷிமுரா பாத்திரம் மூலம் உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார் நாவலாசிரியர் வைரமுத்து.

காற்று மாசுபாடு

வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகைகள், தொழிற்சாலைப் புகைகள், மனிதர் குப்பைகளை எரிப்பதனால் உண்டாகும் புகைகள் போன்றவற்றால் காற்றானது அதிகளவில் மாசுபாடு அடைகிறது. இதனால் மனிதர்களின் சுவாசமும் சுற்றுச்சூழலும் பாதிப்படைகிறது. ஆண்டுக்கு இருநூறு மில்லியன் டன் கார்பன் மோனாக்ஸைடும், ஐம்பது மில்லியன் டன் ஹைட்ரோகார்பனும், நூற்றைம்பது மில்லியன் டன் சல்பர் டை ஆக்ஸைடும், நூற்றுத் தொண்ணூறு மில்லியன் டன் சாம்பலும் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது".6 இவ்வாறு காற்றில் கலப்பதால் காற்று பெருமளவு பாதிக்கப்படுவதோடு ஓசோன் மண்டலம் எனப்படும் காற்றடுக்கு படலம் கிழிந்து அதன் வழியாக சூரியனிலிருந்து வெளிப்படும் புறஊதாக்கதிர்கள் பூமியிலுள்ள உயிரினங்களை நேரிடையாக பாதிப்படையச் செய்கின்றன. ஆகவே மக்கள், காற்றும் காற்று மண்டலமும் பாதிக்காத வாழ்க்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும் என எமிலி பாத்திரம் மூலம் தன் நாவல்வழி வலியுறுத்துகிறார் வைரமுத்து.

புவி வெப்பமயமாதல்

புவியானது அதிகளவில் வெப்பமடைந்து வருகிறது. இதற்கு முழுமுதற்காரணம் மனிதன். ஏனெனில் காடுகளையும் மரங்களையும் வெட்டித் தன் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். மேலும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் புவிவெப்பமாதலுக்குக் காரணமாகின்றன. "புவிவெப்பமாதலில் பருவநிலை மாற்றம் கண்டுவிட்டது. கடந்த நூற்றாண்டுகளில் இந்திய வெப்பநிலை 0.48 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கிறது".7
புவி வெப்பம் இனிமேலும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் ஐரோப்பின் ஒரு பகுதியும் மத்திய கிழக்கின் பெரும்பகுதியும் வாழத் தகுதி இழந்துபோகும் நிலை உண்டாகும். "புவி வெப்பம் கூடிக்கொண்டே இருக்கிறது. ஒரு டிகிரி வெப்பம் கூடியதற்கே சில பறவை இனங்களும், கம்பளித்தோல் கொண்ட விலங்கினங்களும் பூமியைவிட்டே போய்விட்டன. புவிவெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டிருக்கிறது".8

நாளுக்கு நாள் உயரும் புவிவெப்பம் காரணமாக பறவைகளும், விலங்குகளும் மட்டுமல்ல மண்ணில் மனித இனமும் இல்லாமல் போகும் நிலை வந்துவிடும் என்று எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

புவி வெப்பத்தின் விளைவுகள்

புவி வெப்பத்தின் காரணமாக எதிர்பாராத பல நிகழ்வுகளும் விளைவுகளும் ஏற்பட்டுவிட்டன. "ஆர்கன்சாஸ் மாநிலத்தில் தலைக்கு மேலே பறந்த ஐயாயிரம் பறவைகள் பொத்தென்று தரையில் விழுந்து செத்தன. ரஷ்யாவில் நீராடப்போன பலர் சூடு தாங்காமல் நீர்நிலைகளில் செத்து மிதந்தனர். விஸ்காலின் நகரத்தில் மேய்ந்து கொண்டிருந்த சில நூறு பசுக்கள் சூடு தாங்காமல் ஒரே நேரத்தில் இறந்து போயின"9 என்பதை எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

"உலகத்தின் பத்துக்கோடி மக்கள் கடல் மட்டத்திலிருந்து மூன்றடி உயரத்தில் தான் வாழ்கிறார்கள். புவிச்சூடு கட்டுப்படுத்தப்படாவிட்டால் இப்போதுள்ள கடல் மட்டம் மூன்றடி கூடும். இதனால் ஏழுகோடி மக்கள் இடம்பெயர நேரிடும்".10

அதிகரித்து வரும் புவிச் சூட்டினால் பனிப்பாறைகள் வேகமாக உருகிவருகின்றன. இதனால் கடல் மட்டம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. மேன்மேலும் கடல் மட்டம் உயர்ந்தால் மக்கள் இடம்பெயர நேரிடுவதோடு மக்கள்தொகைப் பெருக்கமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் மிகுதியாக ஏற்படும். எனவே புவிச்சூடு அதிகரிக்காமல் கட்டுப்படுத்த மக்களோடு அரசும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என இஷிமுரா பாத்திரத்தின் மூலமாக புவிவெப்பத்தின் விளைவுகளைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

புவிவெப்பம் - தடுக்கும் முறைகள்

புவிவெப்பம் தடுக்கவும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தவும் "பூமியை மரங்களால் நிரப்புவோம், மரங்களெல்லாம் புவிவெப்பத்திற்கு எதிராய்க் கைதூக்கிப் போராடும் போராளிகள், மரங்களின் சிறகடியில் ஊர் பத்திரமாய் பாதுகாக்கப்படட்டும். புவிவெப்பத்திற்கு எதிராக மனிதன் தொடுக்கும் முதல் போர் இதுவாக இருக்கட்டும்”.11 மனிதர்கள் காடுகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். புதிய பல மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல் வேண்டும். அப்போதுதான் புவிச்சூடு குறையும் என்று எமிலி பாத்திரம் கூறுவதாக அமைகிறது.
இயற்கை வளம் பாதுகாத்தல்

இயற்கை வளங்களான மலைகள், ஆறுகள், காடுகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். "மேற்குதொடர்ச்சி மலையைக் காப்பது அவசியமாகும். இந்தியாவின் அறுபது சதவீதம் நனைக்கும் நதிகள் மேற்குதொடர்ச்சி மலையிலேதான் ஊற்றெடுக்கின்றன".12 மலையின் மேலுள்ள மரங்களை வெட்டுவதால் மலையின் உயரம் குறைகிறது. மலையின் உயரம் குறையுமானால் மழையின் அளவும் குறையும். ஆகவே மலையைப் பாதுகாக்க வேண்டும் என சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் குறிப்பிடுகிறார் வைரமுத்து. மேலும் "இந்திய நதிகளை இணைப்பது இருக்கட்டும். முதலில் நதிகளை வாழவிடுங்கள். மலையைக் காப்பாற்றுங்கள். மழையைக் காப்பாற்றலாம். முப்பத்தொரு விழுக்காடு காடுகள் இருக்க வேண்டிய தேசத்தில் இருபத்தைந்து விழுக்காடுதான் உள்ளன".13எனவே சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கவும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தவும் முதலில் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டுமென எமிலி பாத்திரம் மூலம் விளக்கியுள்ளார் வைரமுத்து.

விவசாயிகள் நிலை

"மழையில்ல, வயித்துல ஈரத்துணிய கட்டி படுத்திருக்கான் விவசாயி, வெளச்சல் இருந்தா வெலை இருக்காது. வெலை இருந்தா வெளச்சல் இருக்காது. காசு இருந்தா ஆள் கிடைக்காது. ஆள் கிடைச்சா காசு இருக்காது. கரண்டு இருந்தா தண்ணி இருக்காது. தண்ணி இருந்தா கரண்டு இருக்காது.எடஞ்சல் மேலே

எடஞ்சலாகிப் போச்சப்பா கலப்பை புடிச்சவன் பொழப்பு"14 என்று கிராம மக்களான கெடாவீரன், பரமனாண்டி, ஒத்தவீட்டு மூளி போன்ற பாத்திரங்கள் மூலம் விவசாயத் தொழிலுக்குண்டான சிக்கலைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

"புவி வெப்பமயமாதல் உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரே நேரத்தில் விழுங்கப்படுகிறான். அவனது உற்பத்திப் பொருளின் விலையைப் பங்குச் சந்தைகளும், தங்கச் சந்தைகளும் தீர்மானிக்கின்றன".15 பொருளை உற்பத்தி செய்பவனுக்கு அதன் விலையை நிர்ணயம் செய்ய உரிமை இல்லை என்கிற நிலையை எமிலி எழுதியுள்ள கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

விவசாய வீழ்ச்சி

மண் வளமின்மை, நீர்ப் பற்றாக்குறை, விளைநிலம் விற்பனை போன்ற காரணங்களால் விவசாயம் வீழ்ச்சியடைந்து விட்டது. கடந்த இருபது ஆண்டுகளில் விளைநிலங்கள் சுருங்கிவிட்டன. "உலகம் உயிர்களைச் சார்ந்திருக்கிறது. உயிர்கள் உணவை சார்ந்திருக்கிறது. உணவு விவசாயத்தைச் சார்ந்திருக்கிறது. இன்று விவசாயத்தின் நாற்பது விழுக்காட்டு நிலங்கள் ஈனும் சக்தியை இழந்துவிட்டன".16 மண்ணில் அதிகமான இரசாயன உரங்கள் இடுவதால் மண் மலடாகி மண்ணிலுள்ள உயிர்ச்சத்து அழிந்து ஈனும் தன்மையை இழக்கிறது. இதனால் விவசாயமும் உற்பத்தியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்து விட்டது.

இயற்கை விவசாயம்

"இந்தியா கண்டடைந்த மிகப்பெரிய தொழில்நுட்பம் இயற்கை விவசாயம். அதைத் தொலைத்துவிட்டது இந்தியா. மண் ஈன்று கொடுப்பதெல்லாம் உள்ளிருக்கும் உயிர்த் தன்மையால் தான். அந்த உயிர்த் தன்மை இரசாயன உரமிட்டுக் கொல்லப்படுகிறது. பன்னிரண்டு கிலோ மண்ணின் உயிர்த்தன்மை கொல்லப்பட்ட பிறகுதான் ஒரு கிலோ விளைகிறது".17 ஆகவே விவசாயிகள் விவசாயத்திற்கு ஆடு, மாடு முதலியவற்றின் எருக்களைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு மக்கள் அதிகமான கால்நடைகளைப் பெருக்க வேண்டுமென இஷிமுரா பாத்திரம் மூலம் மக்களுக்கு உணர்த்தியுள்ளார் வைரமுத்து.

தொகுப்புரை

மூன்றாம் உலகப்போர் நாவலில் வைரமுத்து பல்வேறு சமூகச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். நிலம், நீர், காற்று மாசுபடுதல் மற்றும் புவி வெப்பமயமாதலின் காரணம், அதன் விளைவுகள், புவி வெப்பம் தடுக்கும் முறைகள், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகள் நிலை, ஏழ்மை, விவசாயி தற்கொலை, தற்கொலையின் காரணங்கள் மற்றும் அரசு தரும் இலவசத்தால் உழைப்பை மறந்த விவசாயிகள், விவசாய வீழ்ச்சி, அதன் காரணங்கள், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் போன்றவை இந்நாவலின் மையக்கருத்துக்களாக இடம்பெற்றுள்ளன.

துணைநின்றவை

- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 52.
- திருவள்ளுவர். திருக்குறள். குறள் எண் 1031.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். முன்னுரை.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 26-27.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 249-250.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 55.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 308.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 55.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 56.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 192.

- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 341-342.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 286.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 31.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 24-25.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 57.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 136.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 289.

References:

1. Vairamuthu. Mundram Ulagappor. p. 52.
2. Vairamuthu. Mundram Ulagappor. Introduction.
3. Vairamuthu. Mundram Ulagappor. pp. 26-27.
4. Vairamuthu. Mundram Ulagappor. pp. 249-250.
5. Vairamuthu. Mundram Ulagappor. p. 55.
6. Vairamuthu. Mundram Ulagappor. p. 308.
7. Vairamuthu. Mundram Ulagappor. p. 55.
8. Vairamuthu. Mundram Ulagappor. p. 56.
9. Vairamuthu. Mundram Ulagappor. p. 192.
10. Vairamuthu. Mundram Ulagappor. pp. 341-342.
11. Vairamuthu. Mundram Ulagappor. p. 286.
12. Vairamuthu. Mundram Ulagappor. p. 31.
13. Vairamuthu. Mundram Ulagappor. pp. 24-25.
14. Vairamuthu. Mundram Ulagappor. p. 57.
15. Vairamuthu. Mundram Ulagappor. p. 136.
16. Vairamuthu. Mundram Ulagappor. p. 289.

Copyright (c) Author

This work is licensed under a [Creative Commons Attribution 4.0 International License](http://Creativecommons.org//license/by/4.0/).

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 09, July- 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Tamilar Festivals in Tamil Culture

K. Parameshwari,
Full-time Ph.D. Research Scholar, Registration Number: CRE/TAM22PNOV285/2022
Guide: S. Niranjana Devi
Karuppannan Mariyappan College, Chettiar Palayam, Muthur.
Email: mithulparames@gmail.com

Abstract: *Tamil culture is deeply ancient. Festivals and their associated traditions hold significant importance in Tamil culture. In an agricultural society, harvest day holds a special place and is also considered an auspicious day for expressing gratitude to nature. Accordingly, this article examines and elaborates on the Pongal festival, currently known as Uzhavar Thirunaal or Pongal Vizha, based on information found in Tamil literature, focusing on the festival itself and its ancient traditions. Furthermore, this research article also explores the unique position held in Tamil culture by heroism, which is a key component of Tamil identity, and the associated sport of 'Eru Thazhuvuthal' (bull-taming/Jallikattu).*

Key Words: *Eru Thazhuvuthal, Sennel (Red Paddy), Pavai Nonbu, Thainiraadal, Pudhiyidu, Bogi, Kathir Eduthal (Harvesting).*

தமிழர் பண்பாட்டில் தமிழர் திருநாள்

க. பரமேஸ்வரி,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : CRE/TAM22PNOV285/2022,
நெறியாளர்: எஸ்.நிரஞ்சனா தேவி
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, செட்டியார் பாளையம், முத்தூர்.
மின்னஞ்சல்: mithulparames@gmail.com

Abstract: *தமிழர் பண்பாடு மிகத்தொன்மையானது. தமிழர் பண்பாட்டில் திருவிழாக்களும் அது தொடர்பான மரபுகளும் மிக முக்கியமானவைகள். வேளாண் பண்பாட்டில் அறுவடை நாள் சிறப்பிடம் பெறுவதுடன் அது இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாகவும் கருதப்படுகிறது. அந்த வகையில் உழவர் திருநாள், பொங்கல் விழா என்று தற்போது அழைக்கப்படுகின்ற விழா குறித்து தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகளின் அடிப்படையில் பொங்கல் விழா குறித்தும் அதன் தொன்மையான மரபகள் குறித்தும் ஆராய்ந்து கூறுகிறது இக்கட்டுரை. மேலும் தமிழ் பண்பாட்டின் ஒரு கூறாகத் திகழ்கின்ற வீரம்மும் அது சார்ந்த 'ஏறு தழுவுதல்' என்ற விளையாட்டும் தமிழ்ப் பண்பாட்டில் பெறும் தனி இடத்தினையும் இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்ந்து கூறுகிறது.*

குறிப்பு சொற்கள் : *ஏறுதழுவுதல், செந்நெல், பாவை நோன்பு, தைநீராடல்,புதுயீடு, போகி, கதிர் எடுத்தல்..*

முன்னுரை:

பொங்கல்விழா, ஏறுதழுவுதல் விழா குறித்து தொன்மையான தமிழ் இலக்கியங்கள் வழி ஆராயப்படுகிறது. இந்த விழாக்கள் தமிழர்களின் அடையாளமாகத் திகழ்வதையும், பிற பண்பாட்டில் இதுபோன்ற விழாக்கள் குறித்தும் ஆராய்கிறது.

பொங்கல் விழா

பொங்கல் திருநாள் என்பது சமயச் சார்பற்ற, உழவை முதன்மைப்படுத்தும் பண்டிகை. உழவர்கள் பூமி, சூரியன், நீர்நிலைகள் போன்ற இயற்கை அமைவுகளுக்கும், தம் வாழ்வோடு இணைந்த கால்நடைகளுக்கும், நன்றி தெரிவிப்பதற்காகவும் மழைவளம் வேண்டுவதற்காகவும் நடத்தப் பெறும் விழாவாகவும் உள்ளது. தமிழர் மரபில் சங்ககாலம் தொட்டே அதாவது கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதலே பொங்கல் திருநாள் வெவ்வேறு வடிவங்களில் தமிழ் நிலத்தில் நிலை பெற்றுள்ளதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

'அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த பாய் கரும்பின் கொடிக்கீரை சாறு கொண்ட களம்போல' என்று குறுங்கோழியூர் கிழார் எனும் புலவர் அறுவடை விழாவை சாறு கண்ட களம் என வருணிக்கிறார். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீவக சிந்தாமணி பொங்கல் பற்றி 'மதுக்குலாம் அலங்கல் மாலை மங்கையர் வளர்த்த செந்நீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்' எனப் பொங்கலைக் குறிப்பிடுவதில் இருந்தே அதன் தொன்மையை அறியலாம்.

பாவை நோன்பு

சங்க காலத்தில் பெண்கள் மார்கழி மாதம் முப்பது நாட்களும், மழைவளம் வேண்டியும் பயிர் வளம் வேண்டியும், நல்ல கணவன் அமையப்பெற வேண்டும் என்பதற்காகவும் 'பாவை நோன்பு' என்ற விரதம் இருந்து முதல் நாள் விரதத்தைக் கலைத்து நீராடி அறுசுவை உணவு சமைத்து உண்பர். இதனை தை நீராடல் என்பர். தை நீராடல் குறித்து பரிபாடல் 'தாயருகா நின்று தவத்தைநீராடல் நீயுரைத்தி வையை நதி' என்கிறது. திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் தாய்மார் அருகில் நின்று வைகையில் தை நீராடி சிறந்த கணவனைப் பெற வேண்டும் என்பதற்காகவும் பழந்தமிழர் இந்தத் திருநாளைக் கொண்டாடினர். 'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' என்கிறது கலித்தொகை. ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் இதனை விரிவாக விளக்குகிறது. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தை நீராடல் தமிழ்நிலத்தில் சிறப்பு வாய்ந்த பண்டிகையாகத் திகழ்ந்தது.

பாவை நோன்பு காலத்தில் பால் மற்றும் பால் பொருட்களை கன்னிப் பெண்கள் உண்ணமாட்டார்கள். தலைக்கு எண்ணெய் வைக்காமலும் கண்ணுக்கு மையெழுதாமலும் இருப்பர். மார்கழி மாதம் முழுவதுவும் வாசலில் கோலமிட்டு கோலத்தின் மையத்தில் சாணம் வைத்து அதில் பூசணிப் பூவைச் செருகுவர். ஒவ்வொரு நாள் மாலையிலும் பூவோடு சேர்த்து சாணத்தினை வறட்டியாக்குவர். தை மாதம் பிறந்த உடன் அதன்மேல் கற்பூரம் ஏற்றி ஆறு, ஏரி, குளம் இவற்றில் நீராடித் திரும்புவர்.

புதுயீடு

பொங்கல் திருநாள் குறித்த பழந்தமிழரின் அறிவியல் நோக்கையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும். சூரியன் தை மாதத்தில் இருந்து ஆனி மாதம் வரை ஆறுமாதம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நகர்கிறது. இதை உத்தராயண காலம் என்றும் ஆடிமாதம் முதல் மார்கழி வரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்கிறது. இதை தட்சிணாயாணம் என்றும் கணித்து உத்தராயண காலத்தின் தொடக்கத்தினையே, அதாவது தை முதல் நாளையே சூரியனை வணங்கும் பொங்கல் பண்டிகை என்னும் அறுவடை நாளைக் கொண்டாடுகின்றனர். ஆண்டின் முதல் அறுவடை என்ற வகையில் இதனை 'புதுயீடு' என்றும் சோழர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இந்தப் பொங்கல் நாளுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை. இந்திரனுக்கு போகி என்ற பெயரும் உண்டு. எனவே இந்திரனுக்கு உரிய இந்திர விழாவாகவும் இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. மழைவளம் வேண்டி இந்திரனை வழிபடும் வழக்கமும் இருந்துள்ளது. இந்திரனுக்கு உரிய ஆயுதம் கரும்பு வில் அதன் காரணமாகவே பொங்கல் பண்டிகையில் கரும்பு முதன்மையிடம் பெறுகிறது.

போதியை பலராமன் விழா என்றும் சொல்வார்கள். பலராமனைப் 'போகி' என்று அழைக்கும் வழக்கம் இருந்ததாகப் பாண்டியர்களின் செப்புப் பட்டயம் குறிப்பிடுகிறது. பலராமனின் ஆயுதம் கலப்பை, பலராமனை விவசாயத் தெய்வமாக வழிபடும் மரபும் சங்ககாலத்தில் இருந்துள்ளது.

கதிர் எடுத்தல்

பொங்கல் விழாவின் ஒரு அங்கமாக உழவர்கள் மார்கழி மாதத்தில் தைப் பொங்கலுக்கு முன்னர் கதிர் எடுத்தல் நிகழ்வை நிகழ்த்துவர். குடும்பத் தலைவன். காலையில் நீராடி, குலதெய்வத்தினை வணங்கி வயலின் வரப்பில் 'பிள்ளையார் பிடித்து வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை படைத்து. தேங்காய் உடைத்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிரை சிறிதளவு வெட்டி, வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். அதை மனையாள் வாங்கி வீட்டின் கூடத்திலோ, தெய்வத்தை வழிபடும் இடத்திலோ கட்டித் தொங்கவிடுவர். அது அடுத்த வருடம் கதிர் எடுக்கும் வரை அங்கு தொங்கிக் கொண்டிருக்கும்.

கதிர் எடுப்பதன் மூலம் அந்த வருடம் முழுவதுவும் தானியத்திற்கு குறைவு இருக்காது என்பது நம்பிக்கை மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி அந்தப் புத்தரிசியைப் பயன்படுத்தி, புதுப்பானையில் பொங்கலிடுவது வழக்கம். அதுவரை களத்துமேட்டில் நெற்கதிர்கள்,நெல் பிரிக்கப்படாமல் குவியலாகக் கிடக்கும்.

பொங்கலின்போது, படைக்கப்படும் பொங்கல் பச்சரிசி, பால், வெல்லம் அல்லது இலுப்பை பூ. உளுந்து அல்லது பச்சைப் பயிறு, வாழைப்பழம் போன்றவற்றைக் கொண்ட இனிப்புப் பொங்கலாகும். சோழர்காலம் வரை அதாவது 13ஆம் நூற்றாண்டு வரை பொங்கல் இதே கூறுகளைக் கொண்டு, அக்கார அடிசில் எனப்பட்டது. அதன் பின்னர்தான் முந்திரி, திராட்சை,ஏலக்காய் சேர்க்கப்பட்டன.

பொங்கலிடும்போது அரிசியைப் பானையில் இடுதல், அது பொங்குதல், பொங்கி வழியும் திசை, நிறைவு செய்தல் எல்லாமே மங்கலக் குறியீடாகவே பார்க்கப்படும் மரபு இன்னும் தொடர்கிறது. பொங்கலோடு சிறு கிழங்கு, பனங்கிழங்கு என ஐந்து வகைக் கிழங்குகளும், பூசணி, மொச்சை, புடலை, சுரைக்காய், கத்தரிக்காய் என ஐந்துவகைக் காய்கறிகளும் படைக்கப்படும்.

பொங்கலுக்கு முன் பூளைப்பூ பிரண்டை, ஆவாரம் பூ எருக்கம் பூ கொண்டு காப்புக் கட்டும் வழக்கம் உள்ளது. பொங்கல் பண்டிகையில் பூளைப்பூ முதன்மையிடம் பெறுகிறது. நிகண்டு ‘பூளை வெற்றிப் பூவாகும் மே’ என்று குறிப்பிடுகிறது. ‘ஏரார் இரும்பூளை இடங்கொண்ட ஈரனே’ என்று ஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

பொங்கல் விழா தமிழ் நிலத்தில் மரபு வழியாக உழவர்களின் அறுவடை விழாவாக, இயற்கை சக்திகள் தவிர பயிர், தாவரங்களில் குடியிருக்கும், ஆவிகள், சிறு தெய்வங்கள், குல தெய்வங்கள் போன்றவற்றிற்கு நன்றி கூறும் விழாவாக நிலை பெற்றிருக்கிறது. பொங்கல் தமிழ்நாட்டிலும், தமிழர்கள் வாழும் வெளிநாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

ஆந்திராவில் மகர சங்கராந்தி என்றும் பஞ்சாப், ஹரியானாவில் லோஹ்ரி' என்ற பெயரில் கோதுமை அறுவடைத் திருவிழாவாகவும் அஸ்ஸாமில் ‘மாஹ் பிகு, புகுலி பிகு’ என்ற பெயரில் நெல் அறுவடைத் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது. உழவனே உலகிற்கு உயிர் கொடுப்பவனாக உலகே போற்றியது. 'மேழி பிடிக்கும் கைவேல் வேந்தர்க்கு நோக்குங்கை’ என்று பாடுகிறார் கம்பர். ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்கிறார் வள்ளுவர். ‘வரப்புயர நீருயரும்’ என்கிறார் ஔவை. ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்கிறார் மகாகவி.

ஏறுதழுவுதல்

ஏறு தழுவுதல் என்பது இடையர், யாதவர் என்ற தொன்மையான ஆயர்குடிகளின் மரபுவழி வீரவிளையாட்டாகும். 'ஏறு' என்பது காளை மாட்டைக் குறிக்கும். பண்டைக்கால ஐந்திணை நிலங்களுள் ஒன்றான முல்லை நிலத்து ஆயர் இன மக்களிடம் காளையை அடக்கும் வீரனை மணமகனாகத் தேர்வு செய்யும் முறை இருந்தது. பின்னர் திருமணம் ஆன ஆடவர்களும் வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களும் இந்த ஏறு தழுவுதலில் பங்கேற்றதினால் இம் மரபு காலப்போக்கில் பல்வேறு திணை மக்களின் வீர விளையாட்டாக மாற்றம் கண்டது.

கலித்தொகையில் ஏறுதழுவுதல்

சங்க இலக்கியமான கலித்தொகை 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும், புல்லாளே ஆய மகள்' என்கிறது. காளையை அடக்கத் துணிவு இல்லாதவனை ஒரு பெண் மறுபிறப்பிலும் அவனைத் தொடுவதற்குக்கூட விரும்ப மாட்டாள்.

'ஏறு தழுவுதல்' நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் னரே, சிந்துவெளி நாகரிக காலத்திலேயே வழக்கில் இருந் துள்ளது. 1930இல் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் காளையை அடக்கும் வீரனின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது இதற்கான சான்றாகும்.

பழந்தமிழ் நூலான கலித்தொகையிலுள்ள முல்லைக் கலியில் இடம்பெற்றுள்ள பாடல்களில் ஏறுதழுவுதல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாம், பட்டினப்பாலை சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களிலும் 'ஏறுதழுவுதல்' பற்றிய குறிப்புகள் உள்ளன.

கூரிய கொம்புகளுடனும், பருத்த திமில்களுடனும் கொல்லும் வலிமை கொண்ட காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் தெற்கு 'கொல்லேறு தழுவுதல் என்னும் பெயர் வந்துள்ளது. வீரத்தின் அடையாளமாகவும் வேட்டையிலும், போரிலும் விலங்குகளை அடக்கும் பயிற்சியாகவும் இது கருதப்பட்டது.

பண்டைக் காலத்தில் மண் தான் அசையா சொத்து மாடு அசையும் சொத்து எதிரியின் இடத்திற்குச் சென்று ஆநிரைகளை (மாட்டு மந்தையை) கவர்ந்து செல்வதும், அதனை மீட்கப் போரிடு வதும் வழக்கம். ஆறலைக் கள்வர்களும், அரண்மனை வீரர்களும், மறவர்களும் இக்கலையில் பயிற்சி பெற்றிருந்தனர் என்றாலும், முல்லை நிலத்தவரைத் தவிர வேறு எந்த நிலத்தவரிடமும் ஏறு தழுவுதல் நிகழ்ந்ததாகக் குறிப்புகள் காணப்படவில்லை.

'ஏறுதழுவுதல்' நடக்கும் இடத்திற்கு 'தொழூஉ' அதாவது 'தொழுவம்' என்று பெயர். முன்னதாகவே 'ஏறுதழுவுதல்' நடப் பதற்கான பறையறிவிப்பு செய்யப்படும். ஏறுதழுவப் போகும் ஏந்தல் (இளைஞர்) தன் சுற்றத்தாருக்குச் சொல்லி அனுப்புவான். 'ஏறுதழுவுதல்' நிகழ்ச்சிக்கு முதல்நாள் இரவு மகளிரும் மைந்தரும் சேர்ந்து 'குரவை'ஆடுவார்கள்.

காளைகளை அடக்க ஆயர்கள் பிடவம் பூ, செங்காந்தள் பூ காயாம் பூ முல்லை, குருந்து, வெட்சி, தளவம் முதலான மாலை களை சூடி அணிவகுத்து நிற்பர். இந்தக் காளையை அடக்குபவனுக்கு இவள் உரியவள்' என அறிவிக்கப்படும். ஆடவர்கள் துறை (இந்திரன்), ஆலம் (சிவன்), மராஅம் (முருகன்) ஆகியவற்றை வணங்கிய பின்னர்தான் தொழுவுக்கு ஏறுதழுவச் செல்லுதல் வழக்கம்.

கொம்பைப் பிடித்து அழுத்துதல், கழுத்தைப் பிடித்து தொங்கல், கழுத்தைத் திருகுதல், திமில் என்னும் கொட்டேறியைத் தழுவுதல், தோளில் ஏறல், நெருங்கிப் பிடித்தல் முதலானவையே காளையை அடக்கும் உத்திகள். 'காளையின் கொம்பைப் பிடித்தால் ஆண்மை, வாலைப் பிடித்தால் தாழ்மை' என்பது நெறியாக இருந்தது. காதல் என்பதே வீரத்தோடு தொடர்புடையதாக இருந்துள்ளது.

பண்டைய காலத்தில் ஆயர்களின் திருமணம் தொடர்பானதாக இருந்த 'ஏறு தழுவுதல் கால மாற்றத்தில் 'மஞ்சுவிரட்டு', 'சல்லிக் கட்டு' வீரவிளையாட்டாக மாற்றம் கொண்டது.

வட தமிழகத்தில் 'மஞ்சுவிரட்டு' என்ற பெயரில் 20 அடி நீளக் கயிற்றால் காளையைக் கட்டி இருபுறமும் காளையை இழுத்துப் பிடிக்க, ஒருசிலர் மட்டும் காளையின் முன்னே நின்று கொம்பில் கட்டப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை எடுக்க முயற்சிக்கின்றனர்.

'சல்லிக்கட்டு' என்பதிலுள்ள 'சல்லி' என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தைக் குறிக்கும். இப்போதும்கூட புளியங்கம்பினால் வளையம் செய்து, காளையின் கழுத்தில் அணி யும் வழக்கம் உள்ளது. 'சல்லிக்காசு' அதாவது நாணயத்தினை மஞ்சள் துணியில் வைத்து மாட்டின் கொம்பில் கட்டிவிடும் வழக்கம் இருந்தது. மாட்டினை அணையும் வீரருக்கு அந்தப் பண முடிப்பு சொந்தமாகிவிடும்.

தற்காலங்களில் 'சல்லிக்கட்டு'

தற்காலங்களில் 'சல்லிக்கட்டு' தமிழ்நாட்டில் 'தை' மாதம் பொங்கல் விழாவின் ஒரு அங்கமாக மாதம் முழுவதும் ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு விதமாக நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டத்திலுள்ள அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம், தேனி மாவட்டத்திலுள்ள சின்னமனூர், பாலார்பட்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நார்த்தாமலை, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆதமங்கலம், சிவகங்கை மாவட்டத்தில் சிராவயல் ஆகிய பகுதிகளில் 'சல்லிக்கட்டு' நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் உலகப் புகழ்பெற்றது அலங்காநல்லூர் சல்லிக் கட்டு. வாடிவாசல் வழியாக வெளியேறும் காளைகளை அடக்கு பவர்களுக்கு 'தங்கநாணயம்', பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், வேட்டி துண்டுகள் போன்ற பரிசுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

சல்லிக்கட்டுக்காகவே காளைகளைத் தனியாக வளர்த்து பயிற்சியளிக்கப்படுகிறது அக் காளைகள் வேறு எதற்கும் பயன் படுத்தப்படுவதில்லை. சல்லிக்கட்டு காளைகளை வளர்ப்பவர்கள் முழுக் கவனத்தோடு,அர்ப்பணிப்பு உணர்வோடு அக்காளைகளோடு ஒரு பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதனோடு இணைந்ததாகவே தங்கள் வாழவை அமைத்துக்கொள்கின்றனர். ஊர்ப்புறங்களில் கோவிலுக்கு நேர்ந்து விடும் கோவில் காளைகளே சல்லிக்கட்டுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதேபோன்று ஸ்பெயின், போர்ச்சுக்கல், மெக்சிகோ போன்ற நாடுகளில் நடைபெறும் 'காளைச் சண்டை' பொழுதுபோக்கு விளையாட்டாக இருப்பினும் அது சல்லிக்கட்டு விளையாட்டிலிருந்து வேறுபட்டதாகும்.

ஏறுதழுவுதல் சல்லிக்கட்டு என்பது ஒரு மரபு சார்ந்த விளையாட்டாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும், தைப் பொங்கல் விழாக்களின் ஒரு அங்கமாகவும் போற்றப்பட்டு வந்த நிலையில் சல்லிக்கட்டு போட்டிகளில் விலங்குகள் துன்புறுத்தப் படுவதாக விலங்குகள் நல அமைப்புகள் குறிப்பாக புளகிராஸ் மற்றும் பீட்டா' போன்ற அமைப்புகள் சல்லிக்கட்டுக்கு எதிராக நீதி மன்றத்தில் தடை கோரின. இதன் காரணமாக 2007இல் இருந்தே ஒவ்வொரு ஆண்டும் சல்லிக்கட்டு ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் நீதிமன்றத்தினை நாடும் சூழல் ஏற்பட்டுள்ளது.

விலங்குகளைக் காப்பது என்பதனை எதிர்ப்பாளர்கள் முன் வைத்தாலும் அதற்கு பின்னால் மிகப் பெரிய பன்னாட்டு அரசியல் இருப்பதாகவும் கருதப்படுகிறது. மாட்டிறைச்சி சந்தைக்கு எதிராக சல்லிக்கட்டு உள்ளது என்றும், நாட்டு மாடுகளுக்கு வெளிநாடுகளில் நல்ல சந்தை மதிப்பு இருக்கிறது, சல்லிக்கட்டுக்கு தடை வந்தால் அதன் விளைவாக நாட்டு மாடுகள் சந்தைக்கு வரும் சூழ்நிலை உருவாக்கப்படும். என்றும் கருதப்படுகிறது.

உலக உணவு, விவசாய அமைப்பும், பொருளாதார கூட்ட மைப்பும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 2016இல் இந்தியா 150 மில்லியன் டன் மாட்டு இறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளது. 2020க்குள் இது 193 மில்லியன் டன் ஆக உயரும் என்றும் கூறியுள்ளது. என்றாலும் எந்தவிதமான மாட்டு இறைச்சி என்று கூறவில்லை எருமை இறைச்சி அதிக அளவில் ஏற்றுமதியில் இடம்பெற்றுள்ளது. 2016-2017இல் 3.76 மில்லியன் மதிப்பிலான எருமை இறைச்சியை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. உலகில் அதிக அளவு மாட்டு இறைச்சி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பிரேசில் முதல் இடத்திலும், ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

'சல்லிக்கட்டு' என்பது ஒரு இனக் குழுவின் தனித்த அடையாளம் மரபுவழிப் பண்பாடு. சல்லிக்கட்டு சார்ந்த பழக்க வழக்கங்கள், சடங்குகள், அது தொடர்பான வழக்குகள், உரையாடல்கள், உறவாடல்கள் பண்பாட்டின் வளமையாகக் கருதப்படுகிறது.

மனிதப் பண்பாட்டில் பிற உயிரினங்களின் தாக்கம் இருப் பதைத் தவிர்க்க இயலாது. அந்த வகையில் உயிரினப் பன்மயம்' என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சல்லிக்கட்டினை ஆதரிக்கின்றது.

முடிவுரை

பொங்கல், ஏறுதழுவுதல், பாவை நோம்பு போன்ற தமிழர் மரபு வழியான திருவிழாக்கள் குறித்து தொன்மையானத் தமிழ் இலக்கியங்கள் வழி ஆராயப்பட்டு பல தகவல்கள் கண்டறிந்து கூறப்பட்டுள்ளது. தொன்மையான இவ்விழாக்களுக்கானக் காரண, காரியங்கள் ஆராய்ந்து கூறப்படுகிறது.

பார்வை நூல்கள்

1. அறிப்படாத தமிழகம், தொ. பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் (2014).
2. தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், தொ. பரமசிவன்.
3. சங்ககால விளையாட்டுகள், ம.திருமலை.
4. தமிழர் வரலாறு பகுதி 1,2 ஞா.தேவநேயப்பாவாணர் தமிழ்மண் மதிப்பகம்,சென்னை.
5. தமிழகச் சமுதாய பண்பாட்டுக் கலைவரலாறு, கு.சேதுராமன், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
6. சங்க இலக்கியம்,(கலித்தொகை, பரிபாடல், நற்றினை, அகநானூறு, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. தமிழ் இலக்கியத் தடங்கள் ம. செ. இரபிசிங் அன்னம் - அகரம், தஞ்சாவூர்(2008)
8. தமிழர் இயங்கியல்,க. நெடுஞ்செழியன், தமிழர் இயங்கியல், சென்னை-70
9. உலகத் தமிழ்ச் செம்மொழி ஆய்வரங்கச் சிறப்புமலர், கோவை (2010)

References:

1. Unknown Tamil Nadu, Th. Paramasivan, Kalachuvadu Publications, Nagercoil (2014).
2. Tamil Kinship Systems, Religion and Worship, Th. Paramasivan.
3. Sangam Era Games, M. Thirumalai.
4. Tamil History Part 1,2 Gna.Deivaneyapavanar Tamilmann Pathippagam,Chennai.
5. History of Tamil Society, Culture and Art, Ku.Sethuraman, New Century Book House, Chennai.
6. Sangam Literature (Kalittokai, Paripaadal, Natrinai, Akananuru, Kurunthokai, Paripaadal,Pathirrupathu), New Century Book House, Chennai.
7. Routes of Tamil Literature, M. Se. Rabisingh, Annam - Agaram, Thanjavur (2008).
8. Tamil Dynamics,Ka. Nedunchezhiyan, Tamil Dynamics, Chennai-70.
9. Special Publication of the World Classical Tamil Conference, Coimbatore (2010).

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110202501 --:-- Research

The Role of Dalit Short Stories in the Development of Tamil Short Stories

Dr. K. PERIASAMY,
Assistant Professor in Tamil,
Goverment Arts College (Autonomous), Karur 639005

Abstract: *Dalit writers serve as vital chroniclers of Dalit life, offering unvarnished portrayals of their experiences in a manner that is both realistic and authentic, eschewing artificial literary flourishes. Dalit short stories, in particular, are characterized by their stark and unflinching directness, confronting the harsh realities of existence faced by the marginalized. This inherent directness, coupled with a profound sense of self-respect and identity, transforms these narratives into powerful instruments of social commentary and advocacy. Throughout the history of Tamil literature, the utilization of literature as a vehicle for achieving specific goals and as a platform for social struggle has been recurrent. In this vein, Dalit short stories function as potent weapons in the fight for the rights, dignity, and liberation of the oppressed, giving voice to the voiceless and challenging the systemic injustices they endure. They represent a literary battleground where the fight for equality and social justice is waged through the power of storytelling.*

Key Words: *Eru Thazhuvuthal, Sennel (Red Paddy), Pavai Nonbu, Thainiraadal, Pudhiyidu, Bogi, Kathir Eduthal (Harvesting).*

தமிழ் சிறுகதை வளர்ச்சியில் தலித் சிறுகதைகளின் பங்கு

முனைவர்.கு.பெரியசாமி,
உதவிப் பேராசிரியர் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர் – 639005

Abstract: *தலித்துகளின் வாழ்வியல் அனுபவத்தை எந்தவிதமான இலக்கிய அலங்காரமும் இல்லாமல் மிக இயல்பாகவும் எதார்த்தமாகவும் இயல்பான முறையில் பதிவு செய்பவர்கள் தலித் படைப்பாளிகள். வாழ்வின் எதார்த்தங்களை தலித் சிறுகதைகள் நேரடியாக பேசுகின்றன. இந்த நேரடி தன்மையும் சுய வழிபாட்டுத் தன்மையும் தலித்திய சிறுகதைகளில் உள்ளீடாக காணப்படுவதால் தலித்தியக் கதைகள் யாவும் கதாயுதங்களாகக் காட்சியளிக்கின்றன. இலக்கியங்களை இலக்கினை அடையச் செய்யும் கருவியாகவும் போர்க்களம் கொண்ட சாதனமாகவும் பயன்படுத்தும் நிலை தமிழ் இலக்கியத்தில் பல்வேறு காலங்களில் நிகழ்ந்துள்ளன. இதன்படி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் போராடும் கருவியாக தலித் சிறுகதைகள் பயன்படுத்தப்படுகின்றன.*

குறிப்பு சொற்கள் *: விஷம்- நஞ்சு, புத்துயிர் ஊக்கம், தாமரை பங்கஜம், குருதி இரத்தம்*

முன்னுரை:

தலித்துகள் ஆதிக்க சமுதாயத்திற்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்து விடுகின்ற சூழலை ஆதிக்க சமூகத்தினர் கட்டமைத்துள்ளனர். உயர் சாதியினரை

தலித்துகள் எதிர்த்து கேட்டால் அதற்கு பதிலீடாக தலித்துகளின் உயிர்களைக் குடிக்கின்றனர். அந்த நிகழ்வுகள் தான் கீழ்வெண்மணி, மேலவளவு போன்ற இடங்களில் நடந்த சம்பவங்கள் தலித்துகளுக்கு நடந்த கொடுமைகளை எதிர்த்து தான் இன்றைய தலித் இலக்கியங்கள் வடிவம் கொள்கின்றன. ஆதிக்க சாதி வெறிக்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இந்த நச்சு செடியினை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்ற அவசரமும் பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் கிளர்ந்து எழுந்து வருவதை இன்றைய தலைப்பு சிறுகதைகள் வழியாக காண முடிகிறது. சிறுகதைகள் ஆதிக்க அதிகார சக்திகளின் சூழ்ச்சியையும் கொடுமைகளையும் ஆழமாக எதிர்த்து வருகின்றன இத்தகைய கலக வடிவமானது தலித்துகள் சமுதாயத்தில் முழுமையாக சுதந்திரம் பெறும் வரை நடந்தேறிக் கொண்டுதான் இருக்கும்.

தலித் வாழ்க்கையை - அடையாளத்தை வெளிப்படுத்தும் சிறுகதைகளை சோ. தர்மன், சிவகாமி, அபிமானி பழி, பா. இதயவேந்தன், பாமா, எ.எம். சாலன் உஞ்சைராசன் பாப்லோ அறிவுக்கோயில் முதலான தலித் படைப்பாளிகள் தொடர்ந்து படைத்து வருகின்றனர். பண்பாட்டில் நிலைகுலைந்து ஒதுக்கப்பட்டத் தலித் மக்களின் வாழ்க்கையை தலித் படைப்பாளிகள் சிறுகதை மொழியில் இருந்து வருகின்ற எதார்த்தவாதம் என்கிற இலக்கிய மரபில் வெளிப்படுத்துகின்றனர்.

“எந்த ஒரு இலக்கியப் படைப்பும் மனித சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவை சார்ந்த மக்களின் அவர்களது போராட்டங்களின் நாடித்துடிப்பை வார்த்தைகளில் வெளிப்படுத்த முனைகிறதோ அது ஒரு பரந்த அர்த்தத்தில் தலித் இலக்கியம் என அழைக்கப்படுவதற்கான தகுதியை பெறுகிறது”1 என்கிற கூற்று தலித் சிறுகதைகளுக்கு பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

பொதுவாக தலித் சிறுகதை வளர்ச்சியை இரண்டு விதமாக நோக்கி விளங்கிக் கொள்ள முடிகிறது.

1) **தொடக்க கால தலிச் சிறுகதைகள்**
2) **தற்கால தலித் சிறுகதைகள்**

என அவற்றை பாகுபடுத்தி அறிய முடிகிறது. 1930களில் படைக்கப்பட்ட தலித் சிந்தனை கொண்ட கதைகள் தொடக்க கால தனிச் சிறுகதைகளாக காட்சியளிக்கின்றன. அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவிற்கு பின் தோற்றம் கண்ட தலித் சிறுகதைகளை தற்கால தனிச் சிறுகதைகள் என வரையறை செய்யப்படுகின்றன.

தொடக்க காலத் தலித் சிறுகதைகள்

கதை கூறும் முறைமை தமிழருக்கு புதியதில்லை. ஏதோ ஒரு வடிவத்தில் அன்றைய செவிலித்தாய் பாட்டி சொன்ன கதைகளாகத் தொடங்கிய கதை கூறும் மரபு இன்றைய சிறுகதைகள் வரை கால நெடுகிலும் வெவ்வேறு தன்மையில் வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது. இருப்பினும் தனித்த வடிவமாக உணர்ச்சியை நறுக்குத் தெரிந்தாற்போல் வெளிப்படுத்த உள்ளதாக அமைந்தது தற்கால சிறுகதை வடிவங்களே என விளங்க முடிகிறது.

கதை பற்றிய குறிப்பு தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது. “பொருள் மரம் இல்லா பொய்ம் மொழி” எனக் கதையை குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். இத்தகைய

தொன்மையான கதை மரபில் தலித் மக்களின் வாழ்க்கை பதிவு செய்த கதைகள் தொடக்க காலத்தில் எண்ணிக்கையில் குறைந்தளவில் காணப்படுகின்றன.

1930களில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் வளர்ச்சியால் தலித் மக்களின் வாழ்க்கையும் சிறுகதைகளில் பதிவு செய்யத் துவங்கியுள்ளது. "கு.பா.ரா.வின் 'பறச்செங்கான்' நா.பிச்சமூர்த்தியின் 'அடகு' புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' 'நாசக்காரக்கும்பல்' 'கடவுளின் பிரதிநிதி' 'புதிய நந்தன்' போன்ற படைப்புகளைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்"2 இவை தவிர ராஜாஜியின் 'அர்த்தநாரி', ஜெயகாந்தனது 'ஒரு பகல் நேர பாசஞ்சர் வண்டி' என்கிற கதைகளும் அன்றைக்கு சாதி கடந்த மனிதநேயத்தைப் பதிவு செய்துள்ளன. இத்தகைய கதைகள் நசுக்கப்படும் தலித் மக்களின் வாழ்வையும் மொழியையும் படைப்புகளில் பதிவு செய்திருந்தாலும் தலித் படைப்பாளியாக யாரையும் இனம் காட்டவில்லை என்பது அக்கால சாதியின் ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது.

தற்காலத் தலித் சிறுகதைகள்

நெடுங்காலமாய் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும் சமூக பொருளாதார சுரண்டலுக்கு ஆட்பட்ட மக்களின் விடிவுகோலாகவும் தலித் படைப்புகள் தோன்றின. புல படைப்பாளர்கள் தங்களின் வாழ்வு சித்திரங்களை சிதைக்காமல் உள்ளது உள்ளபடியே தம்மை சுற்றியுள்ள சமூக நிகழ்வுகளை படைப்புகளாக அமைத்து, எதிர்ப்பு கூறுகளையும் சிறுகதைகளாய், கவிதைகளாய், நாவல்களாய், கட்டுரைகளாய், நாடகங்களாக படைக்க முயற்சித்தனர். கல்வி, விஞ்ஞான வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி போன்ற நிலைகள் காலந்தோறும் சமூகத்தில் மிகப்பெரிய மாறுதல்களை நிகழ்த்தி வந்தாலும் சாதிய நிறுவனத்தின் கட்டமைப்பை, இருப்பை, படிநிலையை மட்டும் அவற்றால் மாற்ற முடியவில்லை.

"ஆதிக்க வர்க்கங்கள் சாதியை கடவுளின் உருவகமாக்கி சமயத்தில் புகுத்தி அதற்கு அமரத்துவம் என்கிற நிலையான இடம் தந்துவிட்டதே இதற்கு காரணமாக அமைகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் சமயமும் சாதியும் தண்டவாளத்தின் இரண்டு பகுதிகளாக இணைந்தே காணப்படுகின்றன. இதனால் சாதியத்தை எதிர்ப்பவர்கள் சமயத்தை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம், சாதியத்துக்கு எதிரான போராட்டமும் அன்றாட தேவைகளும் எதிரான போராட்டமும் அவர்களுடைய உரிமை போராட்டங்களாக பார்க்கப்படாமல் சமயத்துக்கு எதிரான போராட்டங்களாக பண்பாட்டுக்கு எதிரான போராட்டமாக பார்க்கப்படுகிறது"3 என்ற இராசரத்தினம் கூற்று தலித் சிறுகதைகள் கலகப் பதிவுகள் என்று உணர்த்துகிறது. தலித் மக்களின் வாழ்க்கை நுகர்வு போராட்டத்திலேயே கட்டமைக்கப்படுகிறது. போராட்டமும் கலகமும் நிறைந்த தலித் மக்களின் வாழ்க்கை இன்றைய தலித் சிறுகதைகளில் பதிவாகியுள்ளன.

"தலித்துகளிடம் அச்ச உணர்வும் மீறல் உணர்வும் கலந்து இருப்பினும் மீறல் உணர்வுகளை முன்னிலைப்படுத்தி கலையாக்குதலே தேவையாகும்"4 என்ற கேசவனின் கூற்றுக்கேற்ப தலித் சிறுதைகள் யாவும் மீறல் உணர்வை முன்னிலைப்படுத்தியே அதிகமான கதைகள் படைக்கப்பட்டுள்ளன. 'கிசும்புக்காரன்', 'ஒரு தாத்தாவும் எருமையும்', 'பணக்காரி' 'அரசாங்கப் பிணங்கள்' 'ஆதிக்கக் கொண்டாட்டம்' 'சிதறல்கள்'

‘ஊர்சோறு’ ‘உதிரும் மானுடம்’ ‘மனிதம்’ போன்ற தலித் சிறுகதைகள் மீறல் உணர்வினை வெளிப்படுத்துவதற்கான சான்றுகளாக அமைந்துள்ளன.

தலித்தியக் கதைகளில் மறைமுக எதிர்ப்புணர்வும் நேரடி எதிர்ப்புணர்வும் கலக செயல்பாட்டுடன் பதிவாகியுள்ளன. குறிப்பாக பண்ணை வேலை முறைகளில் ஏற்படும் சிக்கல்களை போக்க ஒரு குழந்தையின் கல்வியை பணயமாக்க கேட்கும் அசுரத்தனத்தினை பாமாவின் ‘தாவணி’ என்னும் சிறுகதையும், அபிமானியின் ‘பாழ்’ சிறுகதையும் எதிர்ப்பு உணர்வினை மறைமுகமாக பதிவு செய்துள்ளனர். மேலும் ‘அண்ணாச்சி’ ‘ஒரு தாத்தாவும் எருமையும்’ ‘அந்தக்காலம்’ ‘கிசும்புக்காரன்’ ‘கொண்டாட்டம்’ போன்ற பாமாவின் கதைகளும், ‘தேர்’ எனும் அபிமானியின் சிறுகதையும் சா.கந்தசாமியின் ‘டன்டணக்கு…எனக்கு….டனக்கு’ எனும் சிறுகதையும் நேரடி எதிர்ப்புணர்வினை வெளிப்படுத்தும் தன்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம்

“தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம் பொதுவான சமூக நிகழ்வுகளைக் கொண்டதாக அமைக்கப்படாமல் இருப்பதை காண முடிகிறது. காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு சிதைக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்க்கை பிரதிபலிப்பாக அவர்களின் ஆசைகளையும், ஏக்கங்களையும், எதிர்ப்புகளையும், சாதனைகளையும், ஆழமான உணர்வுகளையும் சுமந்து வரும்”5 என்று தலித் இலக்கியத்தில் உள்ளடக்கம் வரையறை செய்யப்பட்டுள்ளன. தலித் இலக்கியத்தின் உள்ளடக்க வரையறையை சார்ந்து தலித் சிறுகதைகளின் உள்ளடக்கம் அமைந்து வருகின்றன என்பதை தலித் சிறுகதைகளின் வழி காண முடிகிறது. தலித் சிறுகதைகளைவாசிக்கும் ஒரு தலித்தின் உள்ளத்தில் சாதிவெறிக்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இந்த நச்சு செடியை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்ற வேகமும் பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்னும் விழிப்புணர்வும் கிளர்ந்து எழும் தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தலித் கதைகளில் மையப் பொருளாக தீண்டாமையின் கோரமுகம் தலித் பெண்களின் வாழ்க்கை தலித் சிறுவர்களின் கல்வி, இயற்கையோடு பின்னிப்பிணைந்த தலித்துகளின் உறவு விளிப்பு நிலை, மக்களின் மனிதாபிமானம், எதிர்க்குரல் கொடுத்து தொலைந்து விட்ட தம் அடையாளத்தை தேடும் தன்மை ஆகியவை இடம் பெற்றுள்ளன. தலித் மக்களின் கவலைகள், துன்பங்கள், அன்றாட வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் மட்டும் இல்லாது அவர்களின் வீரமும் தீரமும் ஈரமும் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் வீறுகொண்டு எழும்போது அதைப் பொறுக்க இயலாத ஆதிக்க ஆவண சக்திகளின் சூழ்ச்சியும் ஆழமாக தலித் கதைகளில் இடம்பெறுகின்றன. தலித் இலக்கியம் என்பது “புதிய அனுபவங்கள், புத்துணர்வூட்டும் சொல்லாடல்கள், புது பாத்திரப் படைப்புகளைக் கொண்ட கதாநாயகர்கள், பொதுவானதிலிருந்து வேறுபடுகின்ற மாற்று பார்வை, துன்பம், கலகம் ஆகிய புத்துயிர்க் கலவைகள் தலித் இலக்கியங்களில் இருந்து வெளி வந்திருக்கின்றன”6 என்று சரண்குமார் லிம்பாலே கூறுவது தலித் இலக்கியத்தின் மையத்தினை விளக்குகிறது.

இன்றைய தலித் சிறுகதைகள் யாவும் சரண்குமார் லிம்பாலேயின் கருத்தைத் தாங்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளாக பணிந்து கிடக்கின்ற அநீதியானச் சமூகப் படிநிலையானது ஒரே நாளில் மாறிவிடாது. அது முற்றிலும் அழித்து ஒழிக்கப்பட ஆண்டுகள் பலவாகும். அதுவரையிலும் இந்த ஏற்ற தாழ்வான படிநிலை அமைப்புக்கு எதிரான கலகக் குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பதை தலித் சிறுகதைகள் மூலம் உணர முடிகிறது.

தலித் சிறுகதையும் இதழ்களும்

இலக்கியம் படைப்பாற்றலும் கலை உணர்வும் கொண்ட படைப்பாளர் உள்ளத்தில் தோன்றுவதாக அமைகிறது. ஆனால் தலித் இலக்கியங்கள் சாதிய சமுதாயம் தரும் அனுபவங்கள், அவ்வனுபவங்கள் எழுப்பும் உணர்வும், அவற்றால் பெற்றத் தாக்கங்கள், சமூக விடுதலையின் மீது கொண்ட அக்கறை என்பன படைப்பாளர் உள்ளத்தால் தோன்றி எழுத்துருவம் பெற்று இலக்கியமாகிறது. இத்தகைய தலித் இலக்கியங்களை வெகுசன மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியினை இதழ்கள் செய்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்தியா டுடே, புதிய பார்வை, அரங்கேற்றம், செம்மல,ர் தாமரை, தீக்கதிர், தினமணிக்கதிர், தமிழ் முரசு, தீராநதி, ஆனந்த விகடன் பணிக்குடம், தினகரன், சாளரம், குங்குமம், அணங்கு, புதுவிசை, அம்ருதா, கவிதாசரண், கணையாழி, புதிய கோடாங்கி, இலக்கியபீடம், சுபமங்களா போன்ற இதழ்கள் தலித் சிறுகதைகளை வெளியிட்டு தலித் இலக்கிய வளர்ச்சிக்கும் தலித் படைப்பாளர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

தலித் சமூகத்தினர் குனியக் குனிய குட்டி கொண்டு தான் இருப்பார்கள் ஆதிக்க அதிகார வர்க்கத்தினர். ஆகவே குனிந்து குனிந்து குட்டு வாங்கிய காலங்களை விடுத்து தலித்துகள் நிமிர்ந்து எழுதும் காலம் இது. கீழ்வெண்மணி, உத்தபுர தடுப்புச்சுவர், திண்ணியக் கொண்டமை, மேலவளவு, கொடியங்குளம், பாப்பாப்பட்டி, கீரப்பட்டி நாட்டார்மங்களம், கண்டதேவி போன்றவைகளின் தீண்டாமை வனமங்கள், இரட்டைக்குவளை, தனிச்சுடுகாடு போன்ற சமத்துவமின்மை, மேலும் பொதுமைகளில் ஒதுக்குதல் என்று அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகம் எழுச்சிக் கண்டு எதிர்த்து கலகம் செய்கிறது. மேலும் தனி மனிதனின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டும் தலித்துகள் எதிர்த்து போராடுகின்றனர் என்கிறது இன்றைய தலித் சிறுகதைகள்.

தலித் இலக்கியத்துக்கு பல்வேறு நிலைகளில் ஆதரவுகளும் எதிர்ப்புகளும் இன்றைய சூழலில் இருந்து வருவதை காணமுடிகிறது. தலித் இலக்கியத்தில் உள்ள புது அனுபவங்களும், மாறுபட்ட மொழிநடையும், புரட்சிகர கருத்துக் கலகமும், எதிர்த்துத் தாக்குகின்றப் போர்க்குணமும் ஏற்றத்தாழ்வை ஏற்க மறுக்கின்ற பிடிவாதமும், மனித மாண்புகளும் தான் காலத்தை வெல்லும் தன்மையை தீர்மானிக்கக் கூடும். ஒடுக்கப்படும் ஒட்டுமொத்த மக்களின் பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் ‘விடுதலை பெறுதல்’ என்பதை மையமாகக் கொண்டு தலித் இலக்கியங்கள் யாவும் செயல்படுகின்றன. அவ்வகையில் தலித் சிறுதைகளும் தனது பங்களிப்பினை செய்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

தலித் சிறுகதைகள் தொண்ணூறுக்குப் பிறகு புத்துயிர்ப் பெற்று வெளிவரத் தொடங்கியுள்ளன. தொடக்க காலத்தில் கதை மாந்தர்களை மட்டுமே சிறுகதைகளில் உள்ளடக்கமாக, ஒரு பகுதியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆனால் இன்றைய தலித் கதைகளில் கதைமாந்தர், கதைக்களம், படைப்பாளி என்ற அனைத்து தளங்களிலும் தலித்துகளின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக தலித் இலக்கிய சிந்தனை மரபானது தமிழ் இலக்கிய சிந்தனை மரபினை மாற்றி அமைத்துள்ளது. காலம் காலமாக கடைபிடித்து வந்துள்ள இலக்கிய மரபினை இன்றைய தலித் சிறுகதைகள் உருவ உள்ளடக்கத்திலும் மையப் பொருள்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. சு.சண்முகசுந்தரம் (தொ.ஆ) தலித்தியம் ப.99
2. மேலது ப.61
3. இராசரத்தினம் தலித் சிறுகதைகளில் கலகப்பதிவுகள் (கட்டுரை) ப.112
4. கே.கேசவன் தலித் இலக்கியம் சில கட்டுரைகள் ப.112
5. பாமா கொண்டாட்டம் ப.3
6. சரண்குமார் லிம்பாலே முந்துநூல் ப.58

References:

1. Su. Shanmugasundaram (Editor), Dalithiyam, p. 99
2. Ibid, p. 61 (Note: "Ibid" means "in the same place" and refers to the previously cited work)
3. Irasarathinam, "Kalakapthivugal in Dalit Sirukathaikal" (essay), p. 112 (Translation: "Insurrectionary Records in Dalit Short Stories")
4. K. Kesavan, Dalit Ilakkiyam Sila Katturaikal, p. 112 (Translation: "Dalit Literature: Some Essays")
5. Bama, Kondattam, p. 3 (Translation: "Celebration")
6. Sarankumar Limbale, Munthunool, p. 58 (Translation: "Primary Text" or "Original Text")

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Women's virtues in Mu.Varadarasan's Akalvilakku novel

Dr. B. Periyaswamy,
Assistant Professor, Department of Tamil,
Dr. MGR Chockalingam Arts College,
Arni, Thiruvannmalai – 632317,
MAIL ID: periyaswamydeva@gmail.com
CELL : 9345315385,
https://orcid.org/0000-0002-7395-9699,

Abstract

This article extensively examined the Agalvilakku novel of Mu. Varadharasan, feminism, the risks of women in the house, the problems of male and female relationship, love, marriage and the status of women in the birthplace. It is known that feminism is to provide women what they need at the moment and can dissolve gender problems. The relationship between the husband and wife should be good. The character of Manimegalai explains that mostly men are able to lead the family and women are able to do so. We should also note that the privilege of being that is right. The Chandhiran and Imavathi relationship tells us that it is wrong to think that it is love because it is a male and female. The novel has illustrated about love and marriage. The article has been investigated as parents often consider their duty to be completed if parents marry a Marriage aged daughter.

Keywords

Novel, Mu. Varadarasan, Agalvillaku, Feminism, Home, Male - Female Relationship

மு.வரதராசனின் அகல்விளக்கு புதினத்தில் மகளிர் மாண்புகள்

முனைவர் பீ. பெரியசாமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி, திருவண்ணாமலை- 632317,
மின்னஞ்சல்: periyaswamydeva@gmail.com
கைபேசி:9345315385,
https://orcid.org/0000-0002-7395-9699.

ஆய்வுச்சுருக்கம்

மு.வரதராசனின் அகல்விளக்கு எனும் நாவலின் வழி பெண்ணியம், இல்லறத்தில் பெண்கள் சந்திக்கும் இடர்கள், ஆண் பெண் உறவுநிலையில் ஏற்படும் சிக்கல்கள், காதல், திருமணம், பிறந்தவீட்டில் பெண்கள் நிலை ஆகியவற்றை இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது. இதன் வழி பெண்ணியம்

என்பது பெண்களுக்குத் தேவையானவற்றை தேவையான நேரத்தில் வழங்குவது என்றும் பாலின சிக்கல்களைக் கலையக்கூடியதென்பதும் அறியப்படுகிறது. இல்லறம் நல்லறமாக அமைய கணவன் மனைவியிடையேயான உறவு நன்றாக இருக்க வேண்டும். பெரும்பாலும் ஆண்கள் குடும்பத்தை வழி நடத்தக் கூடியவர்களாகவும் பெண்கள் அதைக்கேட்டு நடக்கக்கூடியவராகவும் இருக்கின்றனர் என்பதை மணிமேகலை கதாபாத்திரம் விளக்கியுள்ளது. அதுதான் சரி என்பதாக பாக்கியம் கதாபாத்திரம் மணிமேகலைக்கு அறிவுரை கூறுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண் பெண் பழகினாலே அது காதல்தான் என்று நினைப்பது தவறு என்பதை சந்திரன் இமாவதியின் உறவு நமக்கு எடுத்துரைக்கின்றது. காதல் குறித்தும், திருமணம் குறித்தும் இந்நாவல் எடுத்துரைத்துள்ளது. பிறந்த வீட்டில் பெற்றோர்கள் பெரும்பாலும் பருவம் எய்திய மகளை ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டால் தன் கடமை முடிந்ததாகக் கருதுகின்றனர் போன்ற செய்திகள் இக்கட்டுரையின்வழி ஆராயப்பட்டுள்ளன.

முக்கியச்சொற்கள்

நாவல், மு.வரதராசன், அகல்விளக்கு, பெண்ணியம், இல்லறம், ஆண்-பெண் உறவு

முன்னுரை

மு.வரதராசனின் அகல்விளக்கு நாவலில் காணப்படும் மகளிர் மாண்புகளை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இது பெண்ணிய ஆய்வாகும். இக்கட்டுரையில் புதினம் என்பது காவியத்தின் தன்மை கொண்டது. கிளைக்கதைகளும் கதா பாத்திரங்களும் நிறைந்திருக்கும். பெண்ணியம் என்பது பெண்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வது. தாய்வீட்டில் பெண் பிள்ளைகள் நிலை. திருமணம் நடந்த பிறகு இல்லற வாழ்வில் அவர்கள் நிலை. இன்றைய சமூகச் சீர்க்கேட்டால் பெண்களுக்கு உண்டாகும் பாதிப்புகள். இயல்பான ஆண் பெண் நட்பில் இருக்கும் சிக்கல்கள். பெண்கள் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள், காதல் வாழ்வு, பெண்ணியப்புரட்சி, ஒழுக்கம் ஆகியவற்றை அகல்விளக்கு எனும் நாவல்வழி எடுத்துரைக்கிறது. மேலும், பாக்கியம் அம்மாளின் உயரிய பண்பு, தாய்மையுள்ளம் ஆகியவற்றை எடுத்துரைப்பதோடு அவர் தம்பி மனைவியினால் அனுபவித்த கொடுமைகளையும் எடுத்துரைக்கிறது.

புதினம்

புதினம் என்பது காப்பியங்களைப்போல மிகநீண்டதொரு கதை வடிவம் எனலாம். அதன் சிறிய வடிவத்தை சிறுகதை எனலாம். புதினத்தில் பாத்திரப் படைப்புகள் அதிகமாக இருக்கும். கிளைக் கதைகள் இருக்கும். வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பத் துன்பங்களும் வாழ்வின் போராட்டங்களும் சமூகச் சீர்கேடுகளும் நிறைந்திருக்கும் சமகால சிக்கல்களின் ஆதாரமாகவும் விளங்கும். இதனை,

> **படைப்பாளியின் அல்லது படைப்பளிக்குத் தெரிந்த மனிதர்கள் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக் கூறுகள் இல்லாமல் புதினம் உருவாகாது எனும் வகையில் மனித வாழ்க்கையுடன் மிக**

நெருங்கிய நேரடித் தொடர்பு கொண்டதே புதினம் எனலாம். (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள் ப. 31)

என்கிறார் புதுவை ஞானகுமாரன்.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களை அடிமைதளத்திலிருந்து விடுவித்து சுதந்திரமாய் செயல்பட வைப்பது. பெண் என்பவள் எவர்க்கும் எதற்க்கும் சலைத்தவள் அல்ல என்பதை எடுத்துரைப்பது.

பெண்ணியம் என்பதற்கு அல்லது பெண்விடுதலை என்பதற்கு என்னைப் பொறுத்தவரையில் என்ன விளக்கம் என்றால் ஒரு பெண் சுயமாகச் சிந்திக்கவும் சுயமாக வாழ்க்கையைத் தீர்மாணித்துக் கொள்ளவும் எந்தச் சார்புமின்றி இயங்கவுமான தகுதியை அடைவதுதான். (பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள், ப.131)

இன்றைய நிலையில் கூட நாம் இந்த இலக்கை எட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. அதும்டுமன்றி பெண்ணியம் என்பதற்கு,

பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளிலும், பணிகள் அனைத்திலும் சம உரிமை உடையவர்களாக இருப்பதை வலியுறுத்துவது. பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்தையும் நீக்குதலை வேண்டுகிறது. (பா. சிவசங்கர், ப.1173)

என்கிறார் பா.சிவசங்கர். இது இன்றளவும் முழுமையாக பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே எதார்த்தமான உண்மை.

தினமும் செய்திதாள்களிலும் தொலைகாட்சிகளிலும் வெளிவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் வன்கொடுமைகள் வரதட்சணை கொடுமைகள் எல்லாம் பார்க்கும்போது பெண் சுதந்திரம் அல்லது பெண்களுக்கான பாதுகாப்பு என்ற நிலையில் நாம் இன்னும் தனிகவனம் செலுத்த வேண்டியதாகத்தான் உள்ளது. இதனை,

பெண்களும் ஆண்களை போலவே பல சிந்தனையும், உயர்வும், உணர்வும், விருப்பு, வெறுப்பு உடையவர்களாக உடையவர்கள். (க. சமயேஸ்வரி, ப.1481)

எனவே அவர்கள் தனித்தியங்க நாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து அறியமுடிகின்றது.

பெண்ணடிமை

பாரதி மதில் உறுதி வேண்டும் எனும் பாடலில் பெண்மையைக் குறித்துக் கூறுகையில், **பெண் விடுதலை வேண்டும் (பாரதியார் கவிதைகள்,ப.212)** இதிலிருந்து பெண் அடிமைப்பட்டு கிடந்தால் என்பதை நம்மால் அறிய முடிகின்றது.மேலும், இதனை விவரிக்கும் குணசேகரன்,

பெண்ணடிமை என்பது சமூகத்தில் பெண்களின் இருப்பைக் (existence) குறிக்கும். பெண்விடுதலை என்பது வாழ்வின் நோக்கம். பெண் உரிமை என்பது விடுதலை அடைவதற்கான வழிமுறை. (தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள் ப.132)

என்று கூறியுள்ளதிலிருந்து பெண் தன் அடிமை தளத்திலிருந்து வெளிவர அவள் அவளுடைய உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பது புலனாகின்றது.

பிறந்த வீட்டில் பெண்கள்

ஒவ்வொரு வீட்டிலும் முதல் பெண் குழந்தை பிறந்ததும் மகாலட்சுமி பிறந்து விட்டாள் என்று கொண்டாடுவதையும் காண்கிறோம். அதே இரண்டாவதும் பெண் குழந்தை பிறந்தால் அட என்ன இது இவனுக்கு வாரிசே இல்லாமல் போய்விடும் போலிருக்கே எனப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். இதே அப்பெண் பருவமடைந்துவிட்டாள் போதும் சடங்குகள் செய்து தங்கள் வீட்டில் திருமண வயதில் பெண் இருக்கிறாள் என்பதை வெளிப்படுத்துகின்றனர். உரிய திருமண வயதில் பெண்களுக்கு திருமணம் செய்து விட்டாள் தான் நிம்மதி என மனப்பாண்மையும் பெருமளவில் உள்ளது. இதனை,

> **கல்வியும் பொருளாதாரத் தற்சார்பும் பெற்றிருந்தாலும் பெண் என்பவள் பிறந்த வீட்டைப் பொறுத்த வரையில் மற்றொருவனிடம் பொறுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டியதொடு சுமையாகவே கருதப்படுகிறாள். எனவே சம்பிரதாய மரபுக்கு முரண்படாமல் வரதட்சிணையைத் தந்து, திருமணம் என்ற பெயரில் அவளை எங்கேனும் தள்ளிவிட்டுத் தம் பொறுப்பைக் கழித்துக் கொள்ளவே பெண்ணின் பெற்றோர் விரும்புகின்றனர்.**
> (Revolution and the Status of Women in India Metropiolitan, P. 15)

எனும் சுசிலா மேத்தாவின் கருத்திலிருந்தும் அறியலாம்.

இல்லறத்தில் பெண்கள்

குடும்பம் என்பது தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூகமாக மாறியது என்பது நாம்அனைவரும்அறிந்த ஒன்றே. இதனை,

> **சமூக வாழ்க்கையில் குடும்பம் இன்றியமையாத நிறுவனமாகக் காணப்படுகிறது. தந்தைவழிச் சமூகமாக உருமாறியப் பின்னர் பெண் குடும்ப அமைப்பிற்குள்செரிக்கப்பட்டத் தன்னிலையாக மாறினாள். ஆண் உரனுடைய வனாகவும் பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பண்புகளைப் பெற்றிருப்பவளாகவும் இருத்தலை வலியுறுத்தின**
> (ம.செந்தில்குமார், ப.14)

என்று ம.செந்தில்குமார் கூறியுள்ளார்.

இல்லறத்திற்கு இல்லாள் எவ்வளவு முக்கியம் என்பதை,

> **மனைவி இல்லையெனில் அது வீடு இல்லை. அதனால்தான் மனைவியை இல்லாள் எனக் குறிப்பிடுகின்றனர்** (ர. திவ்யபாரதி, ப.42)

என்பதன்வழிஅறியலாம்.

இல்லறத்தில் தாயாகவும், பாட்டியாகவும், தங்கையாகவும், மனைவியாகவும், மகளாகவும், மருமகளாகவும் இருக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருசூழலில் ஒவ்வொருவிதமான துன்பங்களைச் சந்திக்கின்றனர். அதிலும் மனைவி என்பவளின் நிலையோ சற்றுகூடுதல் என்றுதான் சொல்ல வேண்டும். அகல்விளக்கு நாவலில் மணிமேகலை தன் கணவன் தான் சொல்வதைத்தான்

கேட்டு நடக்க வேண்டும் என்று மிகவும் கண்டிப்புடன் இருப்பதாக பாக்கியம் அம்மாவிடம் சொல்கிறாள் அதற்கு அந்த அம்மா,

> **கோடு போட்டு வாழ்க்கை நடத்துவது நல்லாதுதானே அம்மா! போட்ட கோட்டில் நடப்பது எளிது அல்லவா? ஒரு காட்டில் நடக்க வேண்டுமானால் வழி இல்லாமல் நடந்து போவதுதான் துன்பம். கவலையே இல்லை ஒரு பாதையும் இல்லாத இடத்தில் இப்படி நடப்பதா அப்படி நடப்பதா வலக்கைப் பக்கம் திரும்பலாமா இடைக்கைப் பக்கம் திரும்பலாமா இந்தத் திசையா அந்தத் திசையா என்று நூறுமுறை தயங்கிப் போகவேண்டும் அப்போதும் மனக்குறை தீராது. அல்லலாக முடியும். ஒற்றையடிப்பாதை இருந்துவிட்டால் போதுமே கவலை இல்லாமல் போகலாமே (அகல்விளக்கு, ப. 295)**

என்று பாக்கியத்திற்கு அறிவுரை வழங்குகின்றாள். இதிலிருந்து நமக்கு என்ன செய்தி கிடைக்கிறது என்றால் பொதுவாக இல்லறத்தில் கணவன் சொல்படி கேட்டு நடந்தால் துன்பங்கள் இல்லை என்ற எண்ணம் அக்காலத்து பெண்களிடம் மலிந்து இருந்ததை அறியமுடிகிறது.

இவ்வாறு பாக்கியம் அம்மா கூறியதும் மணிமேகலை,

> **நீ சொல்வது நல்லதுதான் நம்முடைய முன்னோர் காலத்தில் அப்படித்தான் வாழ்க்கை நடத்தினார்கள். கவலையே இல்லாமல் இருந்தது. பெண்களுக்குக் குடும்பப் பண்பாடு என்று இருந்தது. ஆண்களுக்கு உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று இருந்தது. இப்போது நம் நாட்டில் பலவகையரன நரகரிகம் வந்து கலந்துவிட்டன. பணம் ஏற்பட்டு வாழ்க்கையைப் பலவகையாகப் பிரித்துவிட்டது. யாரை யார் பின்பற்றுவது என்று தெரியவில்லை ஐம்பது ரூபாய் வருவாய் உள்ளவர் ஐந்நூறு ரூபாய் வருவாய் உள்ளவரைப் பின்பற்ற முடியுமா? அவர் ஐயாயிர ரூபாய் வருவாய் உள்ளவரைப் பின்பற்ற முடியுமா? எல்லோரும் ஓரே ஊரில் அடுத்தடுத்து வாழவேண்டியுள்ளது. போக்குவரவுக் கருவிகள் பலரைக் கொண்டுவந்து கலந்துவிட்டன. பத்திரிகை சினிமா முதலாகவை பல கருந்துகளைக் கொண்டுவந்து பலந்துவிட்டன. இப்போது குடும்பப்பண்பாடு என்று ஒன்று தனியே எப்படிக் கற்றுக் கொள்வது? உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று சொன்னாலும் உலகில் எந்த வகையான மக்களைப் பார்த்து நடப்பது? முன்காலத்தில் நம் நாட்டு நாகரிகமே ஒரு கிராம அமைப்புப் போல் தெளிவாக எளிமையாக இருந்தது இப்போது நம் நாட்டு வாழ்க்கை ஒரு சந்தைபோல பெருங் கலப்பாக ஆவாரமாக ஆகிவிட்டது. ஆகையால் இப்போது உலகத்தாரைப்போல் நடப்பது என்றால் யாரைப் பார்த்து நடப்பது? கணவன் மனைவி என்ற இரண்டே பேர் தனிக்குடும்பம் நடத்துகிறவர்கள் இதோ நம்முடைய பெரிய குடும்பத்தைப் பார்த்துப் பின்பற்ற முடியுமா? கிராமத்துக் குடும்பம் நகரத்துக் குடும்பத்தைப் பார்த்துப் பின்பற்ற முடியுமா? நகரத்தில் பஸ் பயணத்துக்குக் காசு இல்லாதவர்கள் கார் வைத்து வாழ்பவர்களைப் பின்பற்றி முடியுமா? (அகல்விளக்கு, ப. 295-296)**

என்று கூறியதுடன் நம் வரவுக்கு ஏற்றபடி வாழ கற்றுக்கொள்வதுதான் சிறந்த வாழ்க்கையாக அமையமுடியும். மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து நாம் வாழ ஆரம்பித்தால் நம்முடைய

வாழ்க்கைதான் மிகவும் சிக்கலில் போய் முடியும். அவரவர்களுக்கு எனத் தனித்தனி வருவாயும் தனித்தனிக்குடும்பச்சூழல்களும் உள்ளன. அதனை அறிந்து புத்திசாலிதனமாகவாழ்ந்தால்தான் நம் வாழ்வு சிறக்கும் என்பது அதிலிருந்து அறியப்படுகின்றது.

குடும்பம் எத்தகையது. ஏன் இந்த நிறுவனம் மனிதனுக்குத்தேவை என்பதை,

> **ஒரு கூரையால் பாதுகாக்கப்பட்ட இதயங்களின் இணைப்பு ஒரு குடும்பமாகும். அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்டு வாழ்வது, சகிப்புத் தன்மை ஆகியவற்றின் உறைவிடம் குடும்பம் (பெண்ணுரிமை சில பார்வைகள், ப.79)**

என்கிறார் மைதிலி சிவராமன். இதிலிருந்து நாம் அறிய வேண்டியது குடும்பமே ஒரு மனிதனின் பாதுகாப்பு கவசம் என்பதாகும். இதனை,

> **குடும்பம் அதன் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. குடும்பத்தைச் சிதைப்பதென்பது அதிலுள்ள நல்ல அம்சங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பதாகும் (அரசு - குடும்பம் – பெண்ணியம், ப. 92)**

என்கின்றனர். அனைவரிடமும் குற்றம்குறைகள் உண்டு. உலகத்தில் குற்றம் குறைகள் இல்லாத மனிதனே இல்லை எனலாம். அப்படியிருக்க தன் கணவனிடம் குறைகண்டவுடன் மனைவி அவனை வெறுத்து ஒதுக்குவதில் நியாயமில்லை. அதனை தன் அன்பால் தன் வயமாக்கி அவனோடு சேர்ந்து வாழ்வதே புத்திசாலிதனம். நெடுமாறன் மங்கையர்கரசி வாழ்க்கையிலும்,

> **கணவன் வேறே வழியாகச் சென்றபோதிலும் அவனோடு அன்பாக வாழவில்லையா? கடைசியில் கணவனைத் திருத்தும் முயற்சியில் வெற்றியும் பெறவில்லையா?** (அகல்விளக்கு, ப.357)

என்று பாக்கியம் அம்மாள் அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளதில் குடும்பத்தில் ஆண்பெண் உறவின் விட்டுக்கொடுத்தல் எவ்வளவு முக்கியம் என்பது தெரிகின்றது.

பெண்கள்தம் இல்லறவாழ்வில் விட்டுக் கொடுக்காவிட்டால் எந்நதமாதிரியான விளைவுகளை எல்லாம் சந்திக்க நேரிடும் அன்பும் நயமும் ஏன் தேவை என்பதை,

> **அவளும் பிடிவாதக்காரி நயமாகப் பேசவும் பழகவும் தெரியாதவள் ஆனால் உண்மையும் நேர்மையும் உள்ளவள். உண்மையும் நேர்மையும் மட்டும் இருந்தால் குடும்பத்துக்குப் போதுமா? அவற்றால் மனங்களைப் பிணைக்க முடியாது; அன்பும் நயமும்தான் மனங்களைச் சேர்க்கும் ஆற்றல் உள்ளவை கற்பகத்திடம் அந்தக் குறை உண்டு எதற்கும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுவாள் நயமே இல்லை** (அகல்விளக்கு, ப. 358-359)

என்று கற்பகத்தின் குணத்தைக் குறித்து பாக்கியம்அம்மாள் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

சந்திரனின் தகாத உறவால் அவள் மனைவி மாண்டதுடன், அந்த குடும்பமே சின்னாபின்னமாகிவிட்டது. அவள் மிகவும் நல்லவள். நல்ல பண்பும் அழகும் குணநலனும் உடையவள். அனுசரனையாக நடந்துக் கொள்ளக்கூடியவள். எதற்கும் எதிர்த்து பேச தெரியாதவள் அதனால் சந்திரன் அவளைபகடைக் காயாய் பயன்படுத்திக் கொண்டான். பல பெண்களுடன் உறவுக்கொண்டு அவர்களுக்குக் கொடுப்பதற்காக இவளிடம் இருந்த நகைநட்டுகளையெல்லாம்

வாங்கி கொண்டு போய் கொடுத்துவிட்டான். இதனால் பலநாளாக மனம் நொந்துப்போய் இருந்த சந்திரனின் மனைவி ஒருநாள்,

> **அவனைப் பழிக்கிற பழி எல்லாம் கேட்டு உருகிக் குன்றிப் போய்விட்டாள் அந்தப் பெண். முன்நாள் இரவு வந்தபோது, மனத்தில் இருந்ததை எல்லாம் சொல்லிக் கேட்காததை எல்லாம் கேட்டுவிட்டாள்.அவன் கோபத்தால் தடியும் தாம்பும் எடுத்து அடித்திருக்கிறான். மூக்குத்தி கேட்டிருக்கிறான். அதையும் கழற்றிக் கொடுத்து விட்டுப் பேசாமல் தோட்டத்துப் பக்கம் போனாள் காவல்காரன் இந்த நேரத்தில் எங்கே மா. தனியாகப் போகிறீர்களே என்று தடுத்துக் கேட்டானாம் தனியாகப் போகாமல், இதற்குக்கூட யார் துணை வருவார்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். வெளிக்குப் போகிறாள் என்று காவல்காரன் இருந்து விட்டானாம். நேரே தோப்புக் கிணற்றுக்குப் போய் இறங்கி விட்டாள். (அகல்விளக்கு, ப. 360)**

அவள் இறந்துப் போன செய்தி அறிந்து சந்திரன் அவளின் இறுதி காரியத்துக்குக்கூட வரவில்லை என வேலனின் தாய் சொல்வதிலிருந்து சரியான கணவன் அமையாத பல பெண்களின் நிலை குறித்து அறியமுடிகின்றது. இன்றளவும் குடிகார கணவனுக்கும் பொருளாசை பிடித்தவனுக்கும் பெண் பித்தர்களுக்கும் வாக்கப்படும் பெண்களின் நிலை இதுவாகத்தான் உள்ளது.

சமூகச் சீர்கேடு

இச்சமூகத்தில் பெண் எப்படியாக இருக்க வேண்டும் என்று காலகாலமாக வரையறை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வாழும் பெண்ணே சிறந்தவள் எனும் பார்வை இன்றவும் தொடர்ந்து கொண்டுதான்உள்ளது. இதனை,

> **சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட குணநலன்களோடு வளர்வதுமான் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு; இல்லையென்றால் ஆபத்துதான் என்ற உணர்வு சமூகத்தில் பரப்பப்பட்டிருக்கிறது. அமைதி, உழைப்பு, பணிவு, நன்னடத்தை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் முனைப்பு அற்ற தன்மை உடையவளாகப் பெண் விளங்க வேண்டும் என்று மட்டுமே சமூகம் எதிர்பார்க்கிறது.** (பெண் – மொழி – படைப்பு, ப. 29)

என்று பஞ்சாங்கம் கூறியுள்ளார். எனவே முதலில் இச்சமூகப் பார்வை கலையப்பட வேண்டும். பெண் என்பவள் சுதந்திரமானவள், அவளுக்கென தனிகுணநலன்களும் ஆசைகளும் விருப்பங்களும் வெறுப்புகளும் உள்ளன என்பதை இச்சமூகம் என்று அங்கிகரிக்க துணிகிறதோ அன்றுதான் பெண்களுக்கான விடியல் ஆரம்பமாகும்.

படிக்க செல்லும் பெண்கள் பாலியல் சீண்டலுக்கு உள்ளாவதை இன்று பல செய்திதாள்களிலும் தொலைகாட்சிகளும் நாம் பார்த்துக்கொண்டுதான் உள்ளோம்.எத்தனை சட்டங்கள் இயற்றப்படினும் அவைகளால் எவ்வித பயனும் ஏற்பட்டாக அறியமுடியவில்லை. மாறாக இலைமறை காய்மறையாக அங்கொன்றும் இங்கொண்றுமாக நடந்து வந்தவைகள் இன்று வெளிப்படயைாக அதிகரித்து காணப்படுவதையே உணரமுடிகின்றது. இப்பாலியல் சீண்டல் எண்பதுகளிலிருந்தே இருந்துள்ளது. இதனை,

என் பக்கத்தில் முரடன் ஒருவன் நடந்து வந்தான். அவன் முன்னே போகட்டும் என்று நான் பின் தங்கினேன்.அவன் என்னை ஒரு கண்ணால் பார்த்தபடியே மெல்ல நடந்து ஓர் இடத்தில் நின்றான். நான் பரபரப்பாக நட்நது முன்னே சென்றேன். அவன் தொடர்ந்து என் பக்கத்தில் வந்தான். மறுபடியும் நின்றேன். அவன் முன்போலவே செய்தான். பஸ் நிற்கும் இடத்திற்கு நடந்தேன். அவனும் அங்கே வந்து உராய்வது போல் சென்றான். நான் ஒதுங்கியும் பயன் இல்லை. (அகல்விளக்கு, ப.182)

என்று இமாவதி வேலனிடம் தான் பேருந்து பயணத்தில் எதிர்கொண்ட சிக்கலைக் கூறி அப்போது அந்த முரடனிடம் சண்டையிட்டு தன்னை சந்திரன் காப்பாற்றியதாகவும் அதிலிருந்துதான் தங்களுக்குள் நட்பு ஏற்பட்டதாகவும் கூறினாள். பொதுவாக இன்று செல்பி எடுப்பதிலேயே மோகம் கொண்டு தவறை சுட்டிக் காட்டவோ சிக்கலில்இருப்பவரை காப்பாற்றவோ நாம் துணிவதில்லை. என்று இச்சமூகம் தவறைற்றைக் கண்டு துணிந்து போராடுகிறதோ அன்றுதான் பெண்களுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கே விடிவுகிடைக்கும்.

அன்று நடந்ததை நினைத்த இமாவது,

இந்தப் பாவிகள் எல்லாரும் அக்கா தங்கையோடு பிறக்கவில்லையா? இவர்கள் தங்கள் குடும்பத்தில் பெண்களையே பார்த்ததில்லையா? என்ன நாடு இது! என்ன நாகரிகம் இது என்று வெறுப்போடு இருந்தேன். (அகல்விளக்கு, ப.183)

என்று கூறுகிறாள். இதிலிருந்து ஓர் இளம்பெண்ணுக்கு ஓர் செய்த பாலியல் சீண்டலால் இந்த நாட்டின் மீதும் நாட்டின் நாகரிகத்தின் மீதும் வெறுப்பு உண்டாகிறது. இதுவே பிற்காலத்தில் அவர்கள் சக மனிதர்களோடு இயல்பாக பழக முடியாதவர்களாகவும் மனஇறுக்கத்திற்கு ஆளானவர்களாகவும் மாறுவதற்கு அடிப்படையாய் அமைந்துவிடுகிறது.

ஆண் – பெண் உறவுச் சிக்கல்

இன்றைய சமூகச்சூழலில் காதல் திருமணங்கள் அதிகரித்துள்ளன. அதே நேரம் கலப்பு மணங்களும் அதிகரித்துள்ளன. கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களும் இன்றைக்கு பெருகி உள்ளன. சிறுபான்மையாகவே கணவன் மட்டும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களை நாம் காணமுடிகின்றது. இதனை,

பொது இடங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு உருவாகியதால் சாதி மதங்களைக் கடந்து பழகும் வாய்ப்பு உருவானது. அதன் விளையாக அங்கொன்றும் இங்கொன்றுமாகவேனும் காதல் மணங்கள் கலப்பு மணங்கள் நடைபெறும் சூழலும் உருவானது. பெண் திருமணமான பிறகு சம்பாதிக்க முடியாத சூழல் நிலவிய குடும்பங்களில் ஆண்கள் மட்டுமே சம்பாதிப்பவர்கள் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பெண்கள் குடும்பம் நடத்த வேண்டும் என்பதான குடும்ப அமைப்பு ஏற்பட்டது (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள், ப. 49)

என்று புதுவைஞானகுமாரன் கூறியுள்ளார்.

சந்திரனோடு நட்பாகப் பழகிய இமாவதி அவன் தன்னை காதலித்துள்ளான் என்றும் தன் திருமண அழைப்பிதழ் கண்டு மனமுடைந்து எங்கோ சென்றுவிட்டான் என்பதையும் வேலன் வாயிலாக அறிந்தபோது, ஆண்களோடு எப்படிப் பழகினாலும் ஆபத்துக்கு இடம் இருக்கும்போல் தெரிகிறது என்று கூறுகிறாள். இதற்கு வேலன், ஒரு பெண் திருமணம் ஆன பிறகு இப்படி பழகினால் இடர்பாடு இல்லை என்று கூறினான். ஆனால் இமாவதி அதனை மறுத்து, அப்போதும் உண்டு அந்தப் பெண்ணின் கணவன் அப்போது அவள்மேல் சந்தேகப்படுவான் என்று கூறுகிறாள். இதிலிருந்து ஆண் பெண் நட்பு என்பது சரியான புரிதலோடு இருக்க வேண்டும் இல்லையென்றாள் இருவர் வாழ்க்கையிலும் அந்த உறவானது மிகப்பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும். நிம்மதியில்லாத வாழ்க்கைக்கு அது இட்டுச்செல்லும் என்பதை சந்திரன் இமாவதி நட்பு நமக்கு உணர்த்துகிறது. இதனை, **ஆண், பெண் உறவு என்பது ஒரு நாளில் உங்கள் உணர்ச்சியால் முடிவு செய்யக்கூடியது அல்ல. அது வாழ்க்கை முழுவதையுமே மாற்றக்கூடியாது.** **(அகல்விளக்கு, ப. 190)** என்பதன்வழி அறியலாம்.

நம் கலாச்சாரத்தில் எண்பதுகளில் திருமணப்பேச்சின்போது, பெண்களிடம் அவர்களின் ஒப்புதலை கேட்பது குறைவாகவே இருந்திருக்கும் போலத் தெரிகின்றது. எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசுபவர்கள் காதலைப் பற்றியோ திருமணத்தைப் பற்றியோ பேச்செடுத்தால் மட்டும் வெளிப்படையாகப் பேசுவதில்லை. இதனை,

> **நம் நாட்டு நாகரிகம்! எல்லாவற்றிலும் வெளிப்படையாகப் பழகிவிடுகிறோம். ஆனால் வாழ்க்கைக்கு அடிப்படையாகன காதலில் – திருமணப் பேச்சில் மட்டும் வெளிப்படையாகப் பேசி விளக்குவதில்லை. பெற்றோரும் மக்களிடம் அப்படி இருக்கிறார்கள்; மக்களும் பெற்றோரிடம் அப்படி இருக்கிறார்கள். அண்ணன் தங்கையும் அப்படி நடக்கிறார்கள்; நீங்களும் அப்படித்தான் (அகல்விளக்கு, ப.194)**

என்று சந்திரன் இமாவதியிடம் சொல்கிறான்.

அதற்கு இமாவது ஒரு பெண்ணாக என்னால் சொல்ல முடியவில்லை. ஓர் ஆணாக அவர் சொல்லியிருக்கலாமே என்கிறாள். அதற்கு வேலன் ஆண் பெண் இணைந்து பழகினால் காதல்வரை நீளுவது இயற்கை நீங்கள்தான் அவனுக்கு புரிய வைத்திருக்க வேண்டும் என்பதை, **ஆண் பெண் பழக்கம் என்றால் அது காதல் வரையில் நீளக்கூடியது. அதன்படி அவன் இயற்கையாக நடந்து கொண்டான். நீங்கள்தான் இந்தப் பழக்கம் அதுவரையில் செல்லக்கூடாது என்று கட்டுப்பாட்டோடு பழகினீர்கள். அந்தக் கட்டுப்பாட்டையாவது சொன்னீர்களா? (அகல்விளக்கு, ப.194)** என்று கேட்டுள்ளார். இதிலிருந்து ஆண்பெண் உறவு எதுவரை செல்ல வேண்டும் என்பதை இருவருமே மனதில் கொண்டு தெளிவாக முடிவெடுத்துப் பழக வேண்டும். அவ்வாறு பழகினால் சந்திரனின் வாழ்வில் ஏற்பட்டசோகம் மற்றவரின் வாழ்விலும்ஏற்படாமல் தடுக்கலாம்.

எவ்வளவுதான் கட்டுப்பாடாக இருந்தாலும் ஆண்பெண் உறவில் சிக்கல் வரத்தான் செய்யும் என்பதை வேலன்,

இது எப்படி முடியும்? அழகான ரோசாக் பூவை ஒரு பெண்ணின் கையில் கொடுத்துவிட்டு அதை முகராமல் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னால் பயன்உண்டா? மணமுள்ள மாம்பழத்தை ஒரு சிறுவன் கையில் கொடுத்துவிடல் அதைத் தின்னாமல் வைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் பயன்உண்டா? முகராமலும் தின்னாமலும் வைத்திருக்கும் அளவிற்குப் பயத்தாலும் காவலாலும் செய்ய முடியும். ஆனால் அதனால் மனம் கெடும் (அகல்விளக்கு, ப.196)

என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

ஆண்பெண் உறவில் சந்தேகம்தான் மிகப்பெரிய எதிரி. சந்தேகம் இல்லாத வாழ்க்கை சொற்கத்தைப் போன்றது. அவ்வாறான துணை அமைவதுதான் இன்றைய காலக்கட்டத்தில் பெரிய கடினமானதாக உள்ளது. ஆண்களின் சந்தேக புத்தி குறித்து இமாவதி தன்னிடம் தன் உளநூல் ஆசிரியர் கூறியதாக,

ஆண்கள் எவ்வளவுதான் முற்போக்காக இருந்தாலும் சந்தேகப்படுவார்கள். ஆகையால் அவர்களின் எதிரில் அண்ணன் தம்பியுடனும் எந்த ஆணுடனும் நெருங்கிப் பழகக் கூடாது. பழைய பழக்கங்களையும் சொல்லக்கூடாது என்று அறிவுரை கூறியிருக்கிறார் (அகல்விளக்கு, ப.219)

என்று கூறினாள். இதற்கு வேலன்,

பெண்கள் மட்டும் சந்தேகம் இல்லாதவர்களா? தன் கணவர் இன்னொரு பெண்ணுடன் வேறு எந்தக் காரணத்திற்காகப் பழகினாலும் மனைவிக்குச் சந்தேகம் ஏற்படாதா? (அகல்விளக்கு, ப.219)

என்று இமாவதியிடம் கேட்டான். இதிலிருந்து ஆணுக்கு பெண் மீதும்பெண்ணுக்கு ஆண்மீதும் சந்தேகம் எழுவது இயற்கை ஆனால், அதனை வெளிக்காட்டாமல் உண்மை அறிந்து பேசி பழகுவதே அறிவு என்பதும் இதுவே உறவு நீடிக்க உன்னதமான வழியாகும் என்பதும் அறியப்படுகிறது.

இமாவதியிடம் ஏற்பட்ட காதல் தோல்வியால் விடுதியிலிருந்து வெளியேறிய சந்திரன். நீலகிரிக்குச் சென்று அங்கு,

தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவள் ஒருத்தியாம் முப்பது வயது இருக்குமாம். குழந்தை ஒன்றும் இல்லையாம். அவளோடு அன்பாக வாழ்க்கை நடத்துகிறானாம். (அகல்விளக்கு, ப.235)

என்ற செய்தி கல்லூரி பழைய மாணவன் சாந்தலிங்கம் வேலுவிடம் கூறினார். ஒரு காதல் முறிவு ஒரு மனிதனின் மனதை தன்னைவிட வயதில் மூத்த அதிலும் ஏற்கனவே திருமணமான இரண்டு குழந்தைக்கு தாயானவளிடம் செல்ல துணிவு ஏற்படுத்தியிருக்கிறதே. இதுதான் பலர் வாழ்க்கை தடம்மாறிப் போவதற்கான அறிகுறியாக அமைந்துவிடுகிறது. அவன்தான் இளையவன் அந்த பெண் ஆவது எடுத்துச்சொல்லியிருக்கலாம். இப்பேற்பட்ட பெண்களால்தான் நல்ல குடும்ப பெண்களுக்கும் அவப்பெயர் ஏற்பட்டுவிடுகிறது.

சந்திரனை தேடிச்சென்ற வேலன் அங்கிருந்த தேநீர் கடைக்காரனிடம் விசாரித்தபோது சில அங்க அடையாளங்களைச் சொன்னான். அதைவைத்து,

> **அந்த அம்மா நெருங்கி வந்தபோது கவனித்தேன். கட்டான முரட்டு உடலோடு தேநீர்க் கடையில் இருந்தவன் சொன்ன பொருத்தங்களோடு இருந்ததைக் கவனித்தேன். இப்படிப் பட்டவளை நாடும் அளவிற்குச் சந்திரனுடைய மனம் கெட்டுவிட்டதே என்று வருந்தினேன்**
> **(அகல்விளக்கு, ப.248)**

என்று சந்திரனின் நிலை கண்டு வருந்திய வேலன் கூறுவதில் அவனுடைய உண்மையான நட்பும் நண்பனின் வாழ்வின்மீது கொண்ட அக்கறையும் வெளிப்படுகின்றது. அதுமட்டுமன்றி அவளைக் கண்ட வேலன் தன் நண்பன் அவளிடம் எப்படி சிக்கியிருப்பான் என்பதை,

> **கொடியவர்கள் பொல்லாதவர்கள் என்று பழிக்கப்படுவோரும் இருபத்து நான்கு மணி நேரமும் கொடுமையோடு இருப்பதில்லை; இருக்க முடியாது என்பது மனித இயற்கை அவர்களின் உள்ளத்திலும் ஈரம் உண்டு; குழைவு உண்டு இப்படிக் குழைந்த நெஞ்சோடு அவள் பழகிய நேரத்தில் சந்திரன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பான் என்று எண்ணினேன்**
> **(அகல்விளக்கு, ப.249)**

என்று கூறுகிறான். இதனால்தான் அவரவர் பார்க்கும் பார்வையில்தான் எவரிடமும் அழகும், கவர்ச்சியும், அன்பும் உள்ளது என்பதை அறிய முடிகின்றது. மணிமேகலை, பாக்கியம் அம்மாள், கயற்கண்ணி போன்ற குணமான பெண்கள் வாழும் இந்த உலகத்தில்தான் இவள் போன்ற பெண்களும் வாழ்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சடங்குகள்

சடங்குகள் என்பது காலகாலமாக நம் சமூகத்தில் இரண்டற கலந்துவிட்டதொன்று. அது செய்வதே கௌரவம் என்றும் குடும்பத்தின் நன்மை என்றும் கருதுபவர்கள் இன்றளவும் இருந்துதான் வருகின்றார்கள். ஒருவனின் பிறப்பு முதல் இறப்பு வரை இச்சடங்குகள் தொடர்ந்துக் கொண்டே உள்ளன. இவ்வாறான சடங்குகளால் மக்கள் தங்கள் செல்வத்தில் பெரும்பாலானதை செலவழிக்கின்றனர். இதனை,

> **நமது நாட்டில் நடைபெறும் அர்த்தமற்ற சடங்குகளுக்கோர் எல்லையே கிடையாது. ஏதேனுமொரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போதும். அக்காரியங்களை முடிவு செய்யும்போதும் பைத்தாயக்கார விதமாக ஏதேதோ சடங்குகள் செய்து வருகிறார்கள். இச்சடங்குகள் எதற்காகச் செய்கிறோம் இதனால் என்ன பலன் உண்டு என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. கேட்டால் "ஏதோ முன்னோர் செய்தது அதை ஏன் நாம் விடவேண்டும்?" என்று கூறுவார்கள் எத்தனை கஷ்டப்பட்டாலும் கடன்பட்டாவது பயித்தியக்கார விதமான இச்சடங்குகளை நம்நாட்டு மக்கள் செய்யாமல் விடுவதில்லை.** (பெண் விடுதலையும் பெண்ணுரிமையும், ப. 36)

என்று இரா. பிரேமா கூறுதிலிருந்து அறியலாம்.

திருமணத்தின்போது நடத்தப்படும் பல்வேறு சடங்குகளில் ஒன்றான நலுங்கு வைக்கும் சடங்கு பற்றி அகல்விளக்கு நாவலில் மணிமேகலைக்கு நலுங்கு வைக்கும்போது,

> **மணப்பெண்ணுக்கு நலுங்கு வைக்கப் பெண்கள் ஒவ்வொருவராக வந்து சந்தனம் பூசி ஆரத்தி சுற்றிச் சென்றார்கள். ஒருவர் வடக்குப் பக்கத்தே உட்கார்ந்து நலுங்கு வைத்த பெண்களுக்கு வெற்றிலை பாக்கு எடுத்துக்கொடத்துக் கொண்டிருந்தார். இளம் பெண்கள் இருவர் சேர்ந்து பாட்டுப் பாடினார்கள் பாட்டும் நாதசுர இசையும் மாறி மாறி அமைந்து கேட்பதற்கு இனிமையாக இருந்தது. …… அம்மா சந்தனத்தை எடுத்து மணப்பெண்ணின் முகத்திலும் கைகளிலும் தடவிவிட்டுஆரத்தி சுற்றித்தொடங்கியபோது, "போதும் அம்மா! ஒன்பது பேர் ஆகிவிட்டது. நீங்களே கர்ப்பூரம் ஏற்றிச் சுற்றி விடுங்கள், போதும்" என்றார் ஒருவர். (அகல்விளக்கு, ப. 204)**

என்பதிலிருந்து அச்சடங்கு குறித்து நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

திருமணத்திற்குப் பிறகு மரு வருதல் குறித்து, திருமணம் முடிந்ததும் **மணமகனும் மணமகளும் ஒரு முறை எங்கள் வீட்டுக்கு வந்து பாலும் பழமும் உண்டார்கள். பிறகு மறுநாள் மாலையில் பெண்வீட்டு மருவுக்குச் சென்றார்கள் (அகல்விளக்கு, ப.208)** என்பதிலிருந்து முதலில் மணமகன் வீட்டுக்கு வருவார்கள் என்பதும் அடுத்ததாக மணமகள் வீட்டுக்குச் செல்வார்கள் என்பதும் அறிய முடிகின்றது.

நம்பிக்கைகள்

மனிதன் கடவுள்மீது நம்பிக்கை, சகுனங்கள்மீது நம்பிக்கை, சடங்குகள் மீது நம்பிக்கை, நிமித்தங்கள் மீது நம்பிக்கை என்று தம் வாழ்நாளின் பெரும்பகுதியை நம்பிக்கையோடே வாழ்ந்துவிடுகிறான். அகல்விளக்கு நாவலில் கணவனை இழந்தை பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது என்ற நம்பிக்கை நிலவுவதை,

> **நான் அம்மாவின் நெற்றியிலிருக்கும் குங்குமத்தை எடுத்துப் பாக்கியத்தின்நெற்றியில் இடுவேனாம். பாக்கியம் தடுத்துத் தடுத்துக் கண்ணீர் விடுவாராம், 'வேண்டா கண்ணு! நான் இடக்கூடாது கண்ணு!' என்று அழுவாராம். "அக்கா மூஞ்சிக்குத்தான் குங்குமம் நல்லா இருக்கும்" என்று நான் பிடிவாதம் செய்வேனாம் (அகல்விளக்கு, ப.48)**

என்று வேலன் தன் தாயிடம் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது. அப்போது கணவனை சிறுவயதிலேயே இழந்த பாக்கியம் அம்மா,

கண்ணே! உணக்கு இருக்கிற அவ்வளவு கருணை கடவுளுக்கு இல்லையே! (அகல்விளக்கு, ப. 49)

என்று கூறும் காட்சி படிப்பவரின்மனதை பதைபதைக்க வைக்கிறது. இது நம்பிக்கைக்கு எதிரான மனநிலை இன்றைய தலைமுறையிடம் ஏற்பட வேண்டும் என்பதற்கான அடிப்படையாகக்கூடநாம் இதனை எடுத்துக்கொள்ளலாம்.

துணை இழந்த ஆண்களுக்கு சமூகத்தில் இவ்வாறான எந்த நடைமுறையையும் கடைபிடிப்பதில்லை. இதனை வன்மையாகச் சாடும் சிவசங்கரி, **விதவை என்கின்ற சொல்லையே எதிர்ப்பவள் நான். மனைவியை இழந்த கணவனை விதவன் என்று சொல்லாதபோது கணவனை இழந்த மனைவியை மட்டு விதவை என்று ஏன் குறிப்பிட வேண்டும் (சிவசங்கரி நாவல்களில் பெண்கள், ப.14)** என்று சமூகத்தைப்பார்த்து கேள்வி எழுப்புகிறார். இதனை தான் நாம் ஆணாதிக்கச் சமூகம் என்கிறோம். இக்கட்டுப்பாடுகளிலில் இருந்துதான் பெண்கள் வெளிவர வேண்டும் என்றும் குறிப்பிடுகிறோம்.

காற்று கருப்பு குறித்த நம்பிக்கையும் மக்கள் மனிதரிடையே இருந்துள்ளது. அதிலும் அது பெண்களுக்குதான் தீங்குசெய்யும் என்பதும் நம்பிக்கையாய் இருந்துள்ளது. வேலனும் சந்திரனும் தங்கள் விடுமுறைநாளில் பொழுதைக் கழிக்க வேலத்திலிருந்த ஒரு மலைஅடிவாரத்திற்குப் போனார்கள். அப்போது கற்பகமும் வருவதாகக் கூறினாள். அதற்கு அவளின் அம்மா, **அறியாத பெண் நீ அங்கெல்லாம் போகக்கூடாது. ஏதாவது காற்று இது அது இருக்கும் இடம் அவர்கள் ஆண்பிள்ளைகள் போய் வரலாம். நீ போகக் கூடாது என்று சொல்லி இவளைத் தடுத்து விட்டார்கள்**

(அகல்விளக்கு, ப. 76) என்பதிலிருந்து அறியாத பெண்களைக் காற்று பிடித்துவிடும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியலாம்.

குடும்பத்தில் நல்லகாரியங்கள் செய்யும்போது கணவன் மனைவியாகவும் குழந்தைகளுடன் வாழ்பவர்களே முன்னிருந்து நடத்த வேண்டும் என்ற நம்பிக்கை இன்றளவும் உள்ளது. இதனை பாக்கியம் அம்மாவின் தம்பி திருமண வேலைகளில் அம்மா ஈடுபட்டு வருவதாக மணிமேகலை கூறுகிறாள். அதற்கு வேலன் காரணம் வினவ, **அந்த வீட்டிலும் வந்த உறவினரிலும் வாழ்வரசியாக யாரும் இல்லாத காரணத்தால், அம்மாவின் உதவி அவர்களுக்குத் தேவையாக இருந்தது.**

(அகல்விளக்கு, ப. 201) என்று கூறினாள்.

காதல்

தன்னுடைய நண்பன் சந்திரன் இமாவதி நட்பாகப் பழகியதை சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் இப்படி ஒரு முடிவு எடுத்து விடுதி விட்டேசென்று விட்டானே. சிறந்த அறிவு படைத்தஅவனுக்கு ஒரு பெண் தன்மீது கொண்ட நட்பு எப்படி காதலாகத் தெரிந்ததோ தெரியவில்லையே என வருந்திய வேலன்.

> **ஆண் ஒருவன் மிகுந்த அன்பு செலுத்தினால் அது நட்புத்தானே? அப்படிப்பட்ட அன்பை ஒரு பெண்ணும் ஒருவனிடம் செலுத்த முடியாதா? அதுவும் நட்புத்தானே? ஆணுக்கும் பெண்ணுக்கும் மனத்தில் அன்பு நட்பு எல்லாம் உண்டு அல்லவா? பெண் அன்பு செலுத்தினால் அதை ஏன் ஆண்கள் காதல் என்று எடுத்துக் கொள்ளவேண்டும் என்னிடம் என் தங்கை அன்பு செலுத்துவதுபோல் ஒரு பெண் உடம்பின் எண்ணம் இல்லாத அன்பைச் செலுத்த முடியாதா? இவ்வளவு கூர்மையான அறிவு உள்ள சந்திரன் இதை உணராமல் அலைகின்றானே! இவனுடைய அறிவையும் கண்டு அந்தப் பெண் அன்பு கொண்டிருப்பாள்! அந்த அன்பை உடம்பின் எண்ணம் இல்லாமல் நட்பாக வளர்த்திருப்பாள்! அவளால் முடிந்தது; இவனால் முடியவில்லை. காதல் என்று கோட்டை கட்டிவிட்டான். இன்று கலங்கி நிற்கிறான் என்று பலப்பல எண்ணினேன். (அகல்விளக்கு, பக். 164 – 165)**

என்று கூறுகின்றான். ஆண் பெண் சேர்ந்து பழகினால்அது காதல்தான் என்றுதம்பட்டம் அடிக்கும் சமூகத்திற்கான ஒரு சம்மட்டி அடியாகத்தான்இதை நாம் பார்க்க வேண்டும்.

காதலித்து திருமணம் செய்து கொள்பவர்கள் வாழ்க்கை எப்படி என்பதனை, **காதல் ஒருவகை ஆசை அது வெறிபோல் வளரும்போது குற்றங்களே தெரிவதில்லை. அது தணியும்போது மற்றக் குடும்பங்களின் நிலை வந்து விடுகிறது. அப்போது பண்புகள் இருந்தால்தான் வாழமுடியும்**

இல்லையானால் வாழ்வு இல்லை (அகல்விளக்கு, ப. 299) என்கிறார் மு.வ. அதாவது காதலர்களாய் இருக்கும்வரை குற்றங்கள் தெரிவதில்லை. அந்த காதல் குறையும் போது குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்படும்அப்போது ஒருவரை ஒருவர் புரிந்து நடந்துக் கொண்டால் இல்லறம் நல்லறமாகும். இல்லையென்றால் இருவருக்குமான வாழ்வு வேதனையில்தான் முடியும் என்பதை இதன்வழி அறியலாம்.

ஒழுக்கம்

குடும்பத்தில் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி தவறுகள் செய்வது இயற்கை. அப்போது, அவர்களின் தவற்றைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தி அவர்களோடு ஒன்றி வாழ்வதுதான் சிறறந்த வாழ்க்கைத் துணையின் கடன். அதைவிட்டு அதைக் கொண்டு அவர்களின் நடத்தையையும் அவரையும் இழிவுபடுத்தி தன் வாழ்விலிருந்து விலக்கி வைத்துவிட்டால் பின் வாழ்வேது. இதனை,

> **படித்துவிட்டு வேலைக்குப்போகும் பெண்களைச் சொல்கிறாய், அவர்கள் மணலில் நடப்பவர்கள் அல்ல. சேற்றில் நடப்பவர்கள். ஆகவே வழுக்கி விழுந்தால் மன்னிக்க வேண்டும். ஒரு முறை அனுபவப்பட்டு அறிவு பெற்ற பிறகாவது திருந்த வேண்டும். வெளியே பழகும் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கக்கூடாது. புலனடக்கம் கட்டாயம் வேண்டும். திருமணம் ஆகாத பெண்களுக்கும், என்னைப்போல் கைம்பெண்களுக்கும் ஊன்றுகோல் இருந்தாலும் போதாது. எங்கள் வாழ்க்கை மலைச்சரிவில் பெருங்காற்றில் நடப்பது போன்றது. நாங்கள் நிமிர்ந்து கைவீசி நடக்க ஆசைப்படவே கூடாது. மண்ணோடு மண்ணாய் ஒட்டிப் பற்றிக் கொண்டு நடக்க வேண்டும். இல்லையானால் பெருங்காற்றில் கால் தவறினால் புரண்டு விழுந்து அழிய வேண்டியதுதான்** (அகல்விளக்கு, ப.312)

என்பதிலிருந்து பெண்களும் வழித்தவறி நடவாமல், தன் கணவனின் கௌரவத்தைக் காக்கும்படி தூயவளாக வாழவேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை சீரழிந்துவிடும் என்ற எச்சரிக்கை மணியாக இதனை பாக்கியம் அம்மாள் கூறுகிறார்.

பெண்ணிய புரட்சி

பொதுவாக பெண் என்றாலே பருவம் அடைந்தவுடன் ஏதாவது நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து அவளுக்குச் செய்ய வேண்டியதை செய்துவிடவேண்டும் என்ற எண்ணம்தான் இன்றளவும்பெற்றோர்களிடம் காணப்படுகின்றது. ஆனால், நல்ல கணவன் கிடைக்கும்வரை திருமணம் செய்யக்கூடாது என்பதை, **பெண்ணாய்ப் பிறந்தவர்கள் எல்லோரும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள் வற்புறுத்தக் கூடாது. தக்க கணவர் கிடைக்காத பெண்கள் திருமணம் ஆகாமலே இருக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும். (அகல்விளக்கு,** ப. 356)என்கிறார் மு.வ.

பண்பு நிறைந்த பாக்கியம்

ஒருநாள் பாக்கியத்தின் தந்தை மாரடைப்பால் இறந்துவிட்டார். அதன் பிறகு அவரின் வாழ்க்கையின் நிலை மாற்றம் கண்டு போனது. ஒருமுறை வேலன் கல்லூரியிலிருந்து வீட்டுக்கு வந்தபோது பாக்கியம் அம்மாவைப் பார்த்தான் அப்போது அந்த அம்மா,

> **என்ன செய்வது தம்பி! கழுத்தில் இருந்த ஒரு சங்கிலியும் வேண்டும் என்று தம்பி ஆசைப்பட்டான். அப்பா செய்து போட்டது. தனக்கு வேண்டும் என்று ேட்டான் கொடுத்துவிட்டேன். கொடுத்திருக்கக் கூடாது என்று நம் அம்மா கண்டித்தார்கள்.போகட்டும் என்று கொடுத்து விட்டேன் இனிமேல் என் சொத்து அன்பும் அறிவும் தான். (அகல்விளக்கு, ப.272)**

என்று சொன்னாள் இதிலிருந்து பெண்களுக்கு கல்வியும், தன்னம்பிக்கையும் எவ்வளவு முக்கியம் என்பதை ஆசிரியர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும், உழைக்கும் எண்ணமும் தொண்டுள்ளமும் இருந்தால் எப்படியும் வாழலாம் என்பதை அந்த அம்மையாரின் வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

தாய்மை

நமது சமூகத்தில் பெண் ஆனவள் தாய்மையின் அடையாளமாகவும் பொறுமையின் சிகரமாகவும் பார்க்கப்படுகிறாள். ஒரு பெண் முழுமையடைவது தாய்மையில்தான். இதனை, **பெண்கள் முழுமையடைவது தாய்மையில்தான். உயிர்களைப் பெற்று அன்போடு உருவாக்கும் மகளிர் பணி மேன்மையானதாகும்** (சங்கீதா, ப.209) என்பதிலிருந்து அறியலாம்.

பெண் குடும்பத்தின் மூலாதாரமாகத் திகழ்கிறாள். அவளே குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு வித்தாகிறாள். இதனை, **இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள் "தாய்" (அ) மனைவி என்ற நிலையில் தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகிறாள். எனவே குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தரிய முடியாத ஒரு நிலையில் தான் அவளது வாழ்க்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. (பெண் – மொழி – படைப்பு, ப. 12)** என்கிறார் க. பஞ்சாங்கம். சிறுவயதிலேயே கணவனை இழந்த பாக்கியம் அம்மாள் வேலனையும் மணிமேகலையையும் தம் குழந்தையைப் போல நேசித்தாள். இதனை, **பாக்கியம் குழந்தை பெற்றுத் தாயாக விளங்காவிட்டாலும் தாய்மையுள்ளம் நிறைந்த அம்மையார். அதனால் என்னையும் என் தங்கை மணிமேகலையையும் மற்றொரு தாய்போல் இருந்து வளர்த்து அன்பு காட்டினார். (அகல்விளக்கு, ப. 47)** என வேலன் கூறுவதிலிருந்து நாம் அறிய முடிகின்றது.

தம்பி மனைவி கொடுமை

பாக்கியம் அம்மா, மிகவும் நல்லவர் அவரின் தம்பிக்கு திருமணம் செய்து வைத்தப்பின் அவனது மனைவி இவரை மிகவும் கொடுமைப்படுத்துகிறாள். இதனை வேலனின் அம்மா, **என்ன செய்வது? காலமே இப்படித்தான் மாறி வருகிறது. பாக்கியம் நல்ல பெண்! இருக்கும் இடம் தெரியாமல் அடங்கி ஒடுங்கி வேலை செய்கிறாள். அவளுக்கு வேறு ஒரு திக்கும் இல்லை. அவளுடைய ஒரு வயிற்றுச் சோறுக்காக நேற்று வந்த ஒரு பெண்ணிடம் சிறுமைப்படுகிறாள் என்று அம்மா சொன்ன போது என் உள்ளம் உருகியது. (அகல்விளக்கு, பக். 225-226)** என்று கூறினார். வேலன் பாக்கியம் அம்மாவின் நிலை கண்டு வருந்தினான். இது, இன்றைய காலக்கட்டத்தில் எல்லா இடங்களிலும் நடக்கக்

கூடியதாகவே இருக்கிறது. அதனாலேயே பெரும்பாலான வீடுகளில் பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவைத்தப்பின் ஆண்களுக்கு திருமணம் செய்கின்றனர்.

முடிவுரை

வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பத் துன்பங்களும் வாழ்வின் போராட்டங்களும் சமூகச் சீர்கேடுகளும் நிறைந்திருக்கும் சமகால சிக்கல்களின் ஆதாரமாக விளங்குவன நாவல்கள். சந்திரனின் மனைவியின் துயரநிலை இன்றைய குடிகார கணவனுக்கும் பொருளாசை பிடித்தவனுக்கும் பெண் பித்தர்களுக்கும் வாக்கப்படும் பெண்களின் நிலை நிலையாகத்தான் உள்ளது. ஓர் இளம்பெண்ணுக்கு ஒருவன் செய்த பாலியல் சீண்டலால் இந்த நாட்டின் மீதும் நாட்டின் நாகரிகத்தின் மீதும் வெறுப்பு உண்டாகிறது என்பதையும் ஆண் பெண் நட்பு என்பது சரியான புரிதலோடு இருக்க வேண்டும் இல்லையென்றாள் இருவர் வாழ்க்கையிலும் அந்த உறவானது மிகப்பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதையும் இமாவதி கதாபாத்திரம் வாயிலாக அறியமுடிகின்றது. பெண் என்பவள் சுதந்திரமானவள், அவளுக்கென தனிகுணநலன்களும் ஆசைகளும் விருப்பங்களும் வெறுப்புகளும் உள்ளன என்பதை இச்சமூகம் என்று அங்கிகரிக்க துணிகிறதோ அன்றுதான் பெண்களுக்கான விடியல் ஆரம்பமாளகும்.

அடிக்குறிப்புகள்

1. கனகவல்லி, வை. *பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள்.* இளமுனைவர்ப்பட்ட ஆய்வேடு, தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுவை, 1995.
2. குணசேகரன், அ. *தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2006.
3. சங்கீதா. "ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம்." *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, மலர் 2, இதழ் 3, ஜனவரி 2018, ISSN: 2454-3993.
4. சமயேஸ்வரி, க. "எஸ்.ராமகிருஷ்ணனின் துயில் புதினத்தில் பெண்ணிய சிந்தனைகள்." *International Journal of Novel Research and Development*, Vol.7, Iss.8, August 2022, ISSN:24564184.
5. சிவசங்கர், பா. "பெண்ணுரிமை மீட்டலில் வாஸந்தியின் புதினங்கள்." *புதிய அவையம்*, Vol.7, Iss.02,June 2023, ISSN:2456-821X.
6. சுசிலா மேத்தா. *ரெவலூசன் அன்ட் த ஸ்டேடஸ் ஆப் வுமன் இன் இந்தியா.* மெட்ரோபியோலிட்டன், நியூதில்லி, 1988,
7. சுப்பிரமணிய பாரதி, சி. *பாரதியார் கவிதைகள்.* பாரதி பதிப்பகம், சென்னை, 2009.
8. செந்தில்குமார், ம. "அளம் நாவலில் பெண்மையச் சித்தரிப்பு." *பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*, Vol.2, Iss.2, November 2022, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7810232.
9. சௌரிராஜன், செ. *சிவசங்கரி நாவல்களில் பெண்கள்.* காவ்யா, சென்னை,1997.

10. திவ்யபாரதி, ர. “அறஇலக்கியத்தில் இல்லற மதிப்புகள்.” *பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்,* Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
11. பஞ்சாங்கம், க. *பெண் – மொழி – படைப்பு.* காவ்யா, சென்னை, 2007.
12. பிரேமா, இரா. *பெண் விடுதலையும் பெண்ணுரிமையும்.* அறிவுப் பதிப்பகம், சென்னை, 2008.
13. புதுவை ஞானகுமாரன். *பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள்.* சிந்தனை பதிப்பகம், புதுச்சேரி, 2007.
14. மார்க்ஸ், ரவிக்குமார், வேலுச்சாமி (பதி.). *அரசு – குடும்பம் – பெண்ணியம்.* விடியல் பதிப்பகம், கோவை, 1994.
15. மைதிலி சிவராமன். *பெண்ணுரிமை சில பார்வைகள்.* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1995.
16. வரதராசன், மு. *அகல்விளக்கு.* பாரி நிலையம், சென்னை, 1995.

References

1. Kanagavalli, Vai. *PenniyaNokkil Prapanjan Puthinangal*. M.Phil Thesis, Department of Tamil, Kanji Mamunivar Patta Merpadipu Maiyam, Pudhuvai, 1995.
2. Gunasekaran, A. *Tamil Novelkalil Kudumba Sithaivugal.* Newcentury Book House, Chennai, 2006.
3. Sangeetha. “Andal Priyatharshini Novalkalil Penniyam.” *Shanlax international tamil research journal*, Vol.2, Issue.3, January 2018, ISSN: 2454-3993.
4. Samayeshwari, Ka. “S.Rmakrishnanin Thuyil Puthinathil Penniya Sinthanaigal.” *International Journal of Novel Research and Development*, Vol.7, Iss.8, August 2022, ISSN:24564184.
5. Sivasankar, Pa. “Pennuraimai Meetalil Vasanthiyin Puthinangal.” *Puthiya Avaiyam*, Vol.7, Iss.02,June 2023, ISSN:2456-821X.
6. Sushila Metha. *Revolution and the Status of Women in India.* Metropiolitan, New Delhi, 1988.
7. Subramaniya Bharathi, S. *Bharathiyar Kavithaigal.* Bharathi Pathipagam, Chennai, 2009.
8. Senthilkumar, Ma. “Alam Novalil Penmaiya Sitharippu.” *Pandian Journal of Womens Studies*, Vol.2, Iss.2, November 2022, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7810232.
9. Sowrirajan, S. *Sivasankari Navakalil Pengal.* Kaviya, Chennai, 1997.
10. Dhivyabharath, R. “Arailakkiyathil illara mathipugal.” *Pandian Journal of Womens Studies*, Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
11. Panjangam, Ka. *Pen – Mozhi – Padaippu.* Kaviya, Chennai, 2007.
12. Prema, R. *Pen Vidudhalaiyum Pennurimaiyum.* Arivu Pathipagam, Chennai, 2008.
13. Pudhuvai Ganakumaran. *Penniya Nokkil Melanmai Ponnusamiin Pudhinangal.* Sinthanai Pathipagam, Pudhuchery, 2007.
14. Marx, Ravikumar, Velusamy (Ed.). *Arasu – Kudumbam – Penniyam.* Vidiyal Pathipagam, Kovai, 1994.
15. Maithili Sivaraman. *Pennurimai Sila Parvaigal.* Tamizh Puthagalaiyam, Chennai, 1995.
16. Varadharajan, M. *Agalvilakku.* Pari Nilaiyam, Chennai, 1995.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Exploring Holistic Wellness among Third Gender through SKY Practices: An Empirical Assessment of Stress Reduction and Life Quality Enhancement

J.Jayashree[1], S. Kalavathy[2]
1. Reseach scholar, VISION for WISDOM, Bharathiar University,
Email: jayavijay10@gmail.com ; ORCID: https://orcid.org/0009-0009-7127-6913
2. A Secretary, Calm Trust, SKY yoga, Chennai, Email.: kvseksiva@gmail.com

Abstract:

This empirical study explores the impact of Sudarshan Kriya Yoga (SKY) on stress reduction and quality of life among transgender individuals. Using a pre-test/post-test control group design, 60 participants were studied over a 6-week intervention. Validated tools (PSS and WHOQOL-BREF) were employed to collect data. Findings revealed a statistically significant reduction in perceived stress and an overall improvement in quality of life across all four domains in the experimental group. The study establishes SKY as a powerful, holistic approach to enhancing wellness in marginalized gender communities.

***Keywords**: Third Gender, SKY Practice, Stress Reduction, Quality of Life, Holistic Wellness,Yoga and Meditation, Sudarshan Kriya,Social Inclusion,Empirical Study,Mental Health Enhancement*

மூன்றாம் பாலினத்தவரில் ஒருங்கிணைந்த நலனை நோக்கி SKY பயிற்சிகள் மூலம்: மன அழுத்தக் குறைவு மற்றும் வாழ்க்கை தரம்

J. ஜெயஸ்ரீ[1], S. கலாவதி[2]
1.ஆராய்ச்சி மாணவர், விஷன் ஃபார் விஸ்டம், பாரதியார் பல்கலைக்கழகம், மின்னஞ்சல்: jayavijay10@gmail.com ; ORCID: https://orcid.org/0009-0009-7127-6913
2.செயலர், காம் டிரஸ்ட், ஸ்கை யோகா, சென்னை, மின்னஞ்சல்: kvseksiva@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இந்த பண்புணர ஆய்வு, மூன்றாம் பாலினத்தவரின் மனநிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தில் SKY (Sudarshan Kriya Yoga) பயிற்சியின் தாக்கத்தை ஆய்வுசெய்கிறது. 60 பங்கேற்பாளர்களை கொண்டு, முன்னோடி–பின்னோடி கட்டுப்பாட்டு குழு வடிவமைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பயிற்சி குழுவில் 6 வார SKY பயிற்சி வழங்கப்பட்டது. PSS மற்றும் WHOQOL-BREF கேள்வித்தாள்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பகுப்பாய்வின் விளைவாக, SKY பயிற்சி பெற்ற குழுவில் மன அழுத்தம் கணிசமாக குறைந்ததையும் (p < 0.001), வாழ்க்கைத் தரம் நான்கு பரிமாணங்களிலும் மேம்பட்டதையும் காண முடிந்தது. இது, மூன்றாம் பாலினத்தவருக்கான சுயநல மேம்பாட்டு முயற்சிகளில் SKY பயிற்சி ஒரு சக்திவாய்ந்த, இயற்கையான கருவியாக விளங்குவதை உணர்த்துகிறது.

திறவுச்சொற்கள்: *மூன்றாம் பாலினத்தவர், SKY பயிற்சி, மன அழுத்தம், வாழ்க்கைத் தரம்,ஒருங்கிணைந்த நலம்,யோகா மற்றும் தியானம்,Sudarshan Kriya,சமூக ஒளிச்சாய்வு,பண்புணர ஆய்வு ,மனநல மேம்பாடு*

1. அறிமுகம் (Introduction)

மனித சமூகத்தின் வண்ணமயமான அமைப்பில், பாலினம் ஒரு அடையாளமாக மட்டுமல்லாது, அடையாளப்படுத்தப்பட வேண்டிய நுட்பமான அடையாளமாகவும் மாறியுள்ளது. இந்திய சமூகத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் (Third Gender / Transgender Individuals) ஒரு நீண்ட வரலாற்று பின்னணியுடன் வாழ்ந்து வந்தாலும், சமூக ஒப்புதல், சட்டபூர்வ உரிமைகள் மற்றும் உயிர்வாழ்வின் தரம் குறித்தபடி அவர்கள் பல்வேறு தடைகள் மற்றும் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். பாரம்பரியங்களால் கட்டுப்படுத்தப்படும் சமூக அமைப்புகளில், பாலின வெவ்வேறுபாடுகளை ஏற்கும் மனப்பாங்கு இன்னும் வளர்ச்சியின் அடிப்படையில் உள்ளது.

மூன்றாம் பாலினத்தவரின் வாழ்க்கை முறைகள், எதிர்நோக்கும் சவால்கள், உடல்மன நல பிரச்சினைகள் குறித்து பல்வேறு சமூகவியல் மற்றும் உளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், நலனோக்கி அவர்கள் பயணத்தில் ஒருங்கிணைந்த (Holistic) நலன் என்ற கவனிக்கப்படாத பரிமாணம் இப்போது தான் ஆராய்வுக்கு வரும் நிலையை எட்டியுள்ளது. இத்தகைய ஒருங்கிணைந்த நலத்தில், மனநலம், உடல்நலம், சமுதாய ஒத்துழைப்பு, ஆன்மிக அமைதி ஆகியவை அனைத்தும் இணைந்தே செயல்படுகின்றன.

இந்த சூழலில், யோகா, தியானம் போன்ற இந்திய பாரம்பரியத்தில் இருந்து வந்த மருத்துவ ரீதியான நடைமுறைகள் ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக SKY (Sudarshan Kriya Yoga) எனப்படும் ஒரு சுவாசதன்மையால் வழிநடத்தப்படும் யோகா பயிற்சி முறை, மன அழுத்தத்தை குறைக்கும், ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் உடல்-மனம் சமநிலையை உருவாக்கும் வழிமுறையாக பரிசீலிக்கப்படுகிறது. இந்த SKY பயிற்சி, உலகளாவிய ரீதியில் பல ஆய்வுகளால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ள ஒரு செயல்முறை ஆகும், இது நரம்பியல் அமைப்பை சமநிலைப்படுத்துவதன் மூலம் உடல் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கும் திறன் கொண்டதாகவும் பார்க்கப்படுகிறது.

மூன்றாம் பாலினத்தில் மன அழுத்தம் மற்றும் வாழ்க்கைத் தரம்:

மூன்றாம் பாலினத்தவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான சவால்களில் ஒன்று, சமூக ஒதுக்கீடு. குடும்பங்கள், பள்ளி/கல்லூரிகள், வேலை வாய்ப்புகள் மற்றும் சுகாதார வசதிகளில் எதிர்கொள்ளும் புறக்கணிப்பு, அவர்களின் மனநிலையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால், உடல் நலம் மட்டுமல்லாமல், மன அழுத்தம், நம்பிக்கை இழப்பு, தனிமை, சமூக புறக்கணிப்பு, மற்றும் உளவியல் துன்பங்கள் என பலமுகமாக அவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

வாழ்க்கைத் தரம் (Quality of Life) என்பது வெறும் பொருளாதார நலனை மட்டும் குறிப்பதல்ல. அது உடல்நலம், மனநலம், சமூக உறவுகள், சுயநிறைவு உணர்வு மற்றும் ஆன்மிக நலம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. மூன்றாம் பாலினத்தவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் பின்னடைவை ஆராயும் சில ஆய்வுகள், மன அழுத்தம் மற்றும் பயத்தால் அவர்கள் சமூக ஈடுபாடுகளில் பின்வாங்குவதையும், இயலாமையாக மாறுவதையும் காட்டுகின்றன.

SKY பயிற்சி - ஒருங்கிணைந்த நலத்திற்கான தியான பயணம்:

SKY என்பது "Sudarshan Kriya Yoga" எனப்படும் சுவாச அடிப்படையிலான யோகா முறையாகும், பல ஆய்வுகளில் அதன் மனநலத்திற்கான நன்மைகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த பயிற்சியில் சீரான, ஆழமான, மாறுபட்ட சுவாச முறைபாடுகள் பயிற்சிக்கப்படுகின்றன. இது மன அலைச்சலை கட்டுப்படுத்துவதற்கு, Cortisol (stress hormone) அளவை குறைப்பதற்கு, மற்றும் parasympathetic nervous system-ஐ தூண்டுவதற்கு உதவுகிறது.

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், SKY பயிற்சிகள் *உளவியல் குறைபாடுகள், கவலைக் கோளாறுகள், மனச்சோர்வு, PTSD (Post-Traumatic Stress Disorder), மற்றும் நேர்பார்வை இல்லாத மனநிலை போன்றவற்றை* சீர்செய்ய உதவுகிறது என்பதை வலியுறுத்துகின்றன. இத்தகைய பயிற்சி மூன்றாம் பாலின சமூகத்தில் மன அமைதி மற்றும் வாழ்வியல் நம்பிக்கையை வழங்கும் ஒரு விரிவான பயணம் ஆக அமையக்கூடும்.

ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும்:

மூன்றாம் பாலினத்தவருக்கான ஆராய்ச்சிகள் பெரும்பாலும் சமூகநீதியும், சட்ட உரிமைகளும் சார்ந்துள்ளன. ஆனால், ஒருங்கிணைந்த நலன் எனும் பரிமாணம் குறைவாகவே ஆராயப்பட்டுள்ளது. SKY போன்ற யோகா பயிற்சி முறைகள், மன அழுத்தத்தை குறைக்கும் ஒரு மாற்றுவழி (alternative therapy) ஆக செயல்பட முடியும் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இருப்பினும், மூன்றாம் பாலினத்தவரை மையமாகக் கொண்டு SKY பயிற்சியின் நேரடி தாக்கங்களை அறியும் பண்புணர ஆய்வுகள் (Empirical Studies) மிகவும் அபூர்வம்.

இந்த நிலைமையில், மூன்றாம் பாலினத்தவருக்கான SKY பயிற்சி அளிக்கப்படும்போது,

- அவர்கள் மன அழுத்த அளவு எவ்வாறு மாறுகிறது?
- வாழ்க்கை தரத்தில் எத்தகைய முன்னேற்றம் ஏற்படுகிறது?
- சமூக உறவுகள் மற்றும் சுயநிறைவு உணர்வில் மாற்றம் காணப்படுகிறதா?

என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்களை அளிப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இக்கட்டுரை, மூன்றாம் பாலினத்தவரின் மனநிலை, வாழ்வியல் தரம் மற்றும் நல வாழ்க்கை முன்னேற்றத்தில் SKY பயிற்சியின் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் ஒரு முயற்சி. இதன்மூலம், அவர்கள் நலனுக்கான ஒரு மாற்று, இயற்கை வழியை ஆதரிக்கும் முயற்சியாகவும், சமூக ஒத்துழைப்பு மற்றும் ஒப்புதலைப் பெறும் புதிய வழிகளுக்கான முன்மாதிரியாகவும் அமைய முடியும். மேலும், இந்த ஆய்வு, அரசாங்கம், சமூக நல அமைப்புகள் மற்றும் யோகா பயிற்சிகள் வழங்கும் நிறுவனங்களுக்கு முக்கியமான தகவல்களையும், செயல்திட்ட முன்மொழிவுகளையும் வழங்கும் என்ற நம்பிக்கையோடு முன்வைக்கப்படுகிறது.

2. ஆய்வின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம்

2.1 ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the Study):

இந்த பண்புணர ஆய்வு மூன்றாம் பாலினத்தவரில் SKY பயிற்சியின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, மன அழுத்தம் குறைதலுக்கும், வாழ்க்கைத் தரம் மேம்படுதலுக்கும் SKY பயிற்சி எவ்வாறு உதவுகிறது என்பதை தரவுகள் மூலம் கணிக்க இந்த ஆய்வு செயல்படுகிறது.

இந்த ஆய்வின் துணை நோக்கங்கள் கீழ்வருமாறு:

1. **மூன்றாம் பாலினத்தவரின் தற்போதைய மன அழுத்த நிலையை** அறிவதற்கான முன்னோடி (pre-test) மதிப்பீடு செய்தல்.
2. **SKY பயிற்சிக்குப் பிந்தைய (post-test)** மனநிலையை அளவிடுதல்.
3. **வாழ்க்கைத் தரத்தில் (Quality of Life)** ஏற்படும் மாற்றங்களை WHOQOL-BREF கேள்வித்தாளின் மூலம் மதிப்பீடு செய்தல்.
4. SKY பயிற்சி மற்றும் மனநலன், உடல்நலம், சமூக உறவுகள், ஆன்மீக நலம் ஆகியவற்றுக்கிடையேயான உறவுகளை (correlation) ஆய்வு செய்தல்.
5. மூன்றாம் பாலினத்தவருக்கான பரிந்துரைகள் உருவாக்க, நிரூபண அடிப்படையிலான முடிவுகளை தோற்றுவித்தல்.

2.2 ஆய்வின் முக்கியத்துவம் (Significance of the Study):

இந்த ஆய்வு, சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டு வரும் ஒரு பிரிவான மூன்றாம் பாலினத்தவரின் நல வாழ்வில், SKY போன்ற யோகா பயிற்சி முறைகள் என்ன வகையான நன்மைகளை வழங்க முடியும் என்பதை உணர்த்தும் முன்முயற்சியாக அமைகிறது. இதன் முக்கியத்துவம் பல பரிமாணங்களில் விளங்குகிறது:

1. அறிவியல் முக்கியத்துவம் (Scientific Importance):

மன அழுத்தத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் SKY பயிற்சி எவ்வாறு நேரடியாக மாற்றுகிறது என்பதை கணக்கீட்டுத் தரவுகள் மூலமாக ஆதரிக்கக்கூடிய ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. குறிப்பாக, மூன்றாம் பாலினத்தை மையமாகக் கொண்டு நடத்தப்படும் உண்மைத்தன்மை வாய்ந்த (empirical) ஆய்வுகள் வெகு அபூர்வமானவை. எனவே, இந்த ஆய்வு விஞ்ஞான சமுதாயத்திற்கும், தனிநபர் நலக் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கும் சுயநம்பிக்கை மற்றும் ஆதாரத்தை வழங்கும்.

2. சமூக முக்கியத்துவம் (Social Relevance):

மூன்றாம் பாலினத்தவர்கள் தங்களுக்குரிய ஓர் அடையாளத்திற்காகவும், வாழ்க்கை தரத்தின் மேம்பாட்டிற்காகவும் நீண்ட போராட்டத்தில் இருக்கின்றனர். இந்த ஆய்வு, அவர்களின் மனநலனையும், வாழ்க்கைச் சூழலையும் மேம்படுத்தும் மாற்று வழிகளை வலியுறுத்துவதற்கான சமூக நோக்கத்தையும் கொண்டுள்ளது. SKY பயிற்சி மூலமாக, சமூக ஒத்துழைப்பை பெறும் ஒரு கருவியாகவும் அது அமையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

3. சுகாதார மற்றும் நலத்திட்ட முக்கியத்துவம் (Policy-Level Significance):

இந்த ஆய்வின் முடிவுகள், அரசு மற்றும் தனியார் நல அமைப்புகள் மூன்றாம் பாலினத்தவருக்கான மனநலம் சார்ந்த திட்டங்களை வடிவமைக்க உதவும். SKY பயிற்சி போன்ற இயற்கை மற்றும் பரந்த அடிப்படை கொண்ட முறைகள் சுகாதார மேம்பாட்டிற்கான திறமையான, செலவுத்திறன் வாய்ந்த மாற்றாக பரிந்துரை செய்யப்படலாம்.

4. களத்தில் செயல்படும் அமைப்புகளுக்கான பயன்கள்:

LGBTQIA+ சமூக நலத்திற்காக பணியாற்றும் கள அமைப்புகள், இந்த ஆய்வின் மூலம் உண்மைத்தன்மை வாய்ந்த தகவல்களையும், பயிற்சி திட்டங்களையும் வடிவமைக்க முடியும். யோகா மற்றும் தியான பயிற்சிகளை சேர்த்து சமூக உளநலப் பயிற்சி மாதிரிகளை உருவாக்க முடியும்.

5. எதிர்கால ஆய்வுகளுக்கான தளத்தை அமைத்தல்:

இந்த ஆய்வு, ஒரு ஆரம்ப கட்ட பரிசோதனை மாதிரியாகவும், நீண்டகால SKY பயிற்சியின் தாக்கங்களை தொடர்வாய்ந்த ஆய்வுகள் செய்யும் அடித்தளமாகவும் அமையக்கூடும். இதன்மூலம், குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளில் பரந்த அளவில் ஒருங்கிணைந்த நலத்திற்கான நுண்ணாய்வு சாத்தியமாகிறது. மூன்றாம் பாலினத்தவர்கள் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களில் எதிர்கொள்ளும் தடைகளை உடைக்க, மனஅழுத்தத்தை குறைக்க மற்றும் ஆன்மீக அமைதியை உருவாக்க SKY பயிற்சி ஒரு இயற்கையான, ஆழமான, ஒட்டுமொத்த (holistic) தீர்வாக செயல்படக்கூடும். இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், அந்த மாற்றத்தை எளிய எண் மற்றும் உணர்வுகள் மூலம் உணர்த்துவதும், மேலும் அது சமூகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் முயற்சியாகவும் செயல்படுவதும் ஆகும்.

3. ஆய்வுமுறை (Methodology)

மூன்றாம் பாலினத்தவரில் SKY பயிற்சி மனநலம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களை பண்புணரமான முறையில் (empirical approach) மதிப்பீடு செய்வதற்காக, இத்தகவல் சார்ந்த ஆய்வு திட்டமிடப்பட்டுள்ளது. நுணுக்கமான ஆய்வுமுறைத் திட்டம், தரவுகளை நம்பத்தகுந்த முறையில் சேகரிப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் உதவுகின்றது.

3.1 ஆய்வின் வடிவமைப்பு (Research Design):

இந்த ஆய்வு **முன்னோடி–பின்னோடி கட்டுப்பாட்டு குழு வடிவமைப்பு (Pre-test – Post-test Control Group Design)** கொண்டு நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் SKY பயிற்சியின் நேரடி தாக்கங்களை உணர்த்தக்கூடிய ஒப்பீட்டுப் பகுப்பாய்வு செய்ய முடிகிறது.

- **போதனை குழு (Experimental Group)** – SKY பயிற்சி பெற்ற 30 மூன்றாம் பாலின பங்கேற்பாளர்கள்
- **கட்டுப்பாட்டு குழு (Control Group)** – எந்த பயிற்சியும் பெறாத 30 பங்கேற்பாளர்கள்

3.2 மாதிரி தெரிவு (Sampling):

- **மாதிரி அளவு (Sample Size):** மொத்தம் 60 மூன்றாம் பாலின பங்கேற்பாளர்கள் (n=60)
- **தேர்வு முறை (Sampling Method):** பாவனைத் தேர்வு (Purposive Sampling) முறை பயின்றது. சமூக அமைப்புகள், நலவாழ்வு மையங்கள் மற்றும் LGBTQIA+ தன்னார்வ அமைப்புகள் மூலம் பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- **தகுதி நிபந்தனைகள் (Inclusion Criteria):**
    - 18 வயதிற்கும் மேற்பட்ட மூன்றாம் பாலினத்தவர்கள்
    - உடல் நலத்தால் யோகா பயிற்சியில் கலந்துகொள்ளக்கூடிய நிலை
    - SKY பயிற்சிக்காக சம்மதம் அளித்தவர்கள்
- **விலக்குநிபந்தனைகள் (Exclusion Criteria):**
    - மருந்துகளைச் சாப்பிட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்
    - ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் SKY பயிற்சியை ஏற்கனவே கடந்த 6 மாதங்களுக்குள் பயின்றவர்கள்

3.3 ஆய்வு இடம் (Study Setting):

இந்த ஆய்வு தமிழகத்தின் மூன்று நகரங்களில் அமைந்த மூன்றாம் பாலின சமூகத்துக்கான நலவாழ்வு மையங்களில் நடத்தப்பட்டது – சென்னை, மதுரை மற்றும் திருச்சி. SKY பயிற்சிகள் அந்தந்த மையங்களில் தகுதியான பயிற்சியாளர்களால் வழங்கப்பட்டன.

3.4 பயிற்சி திட்டம் (Training Intervention):

- **பயிற்சி காலம்:** 6 வாரங்கள்
- **அடிக்கடி:** வாரத்திற்கு 3 முறை (திங்கட், புதன், வெள்ளி)
- **நேரம்:** ஒவ்வொரு நாளும் 60 நிமிடங்கள்
- **உள்ளடக்கம்:**
    - Ujjayi Svasam (உஜ்ஜாயி சுவாசம்)
    - Bhastrika (வெகு ஆழமான சுவாசம்)
    - Om Chanting
    - Sudarshan Kriya (சரிசெய்யப்பட்ட சுவாச முறை)

பயிற்சி முன், பங்கேற்பாளர்களுக்கு SKY பயிற்சி பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்பாக உடல்நிலை சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

3.5 தரவுகள் சேகரிப்பு கருவிகள் (Data Collection Tools):

1. **மன அழுத்த அளவீட்டுப் பட்டியல் (Perceived Stress Scale – PSS):**
   - 10 உருப்படிகள் கொண்ட மன அழுத்த மதிப்பீட்டுக் கருவி
   - 5 புள்ளி Likert அளவீடு
   - மன அழுத்தத்தின் தனிப்பட்ட உணர்வுகளை நன்கு பிரதிபலிக்கும் validated tool
2. **வாழ்க்கை தரக் கேள்வித்தாள் (WHOQOL-BREF):**
   - உலக சுகாதார அமைப்பால் உருவாக்கப்பட்ட 26 உருப்படிகள்
   - 4 பரிமாணங்கள்: உடல்நலம், உளநலம், சமூக உறவுகள், சூழல்
   - தமிழ் மொழிக்கு ஒத்திசைக்கப்பட்ட மற்றும் நிலைநாட்டப்பட்ட கருவி

3.6 தரவுகள் சேகரிப்பு செயல்முறை (Data Collection Procedure):

- **முன்னோடி அளவீடு (Pre-test):** பயிற்சி தொடங்கும் முன் இரு குழுவினரிடமும் PSS மற்றும் WHOQOL-BREF கேள்வித்தாள்கள் நிரப்பப்பட்டன.
- **பின்னோடி அளவீடு (Post-test):** 6 வார பயிற்சி முடிவில், அதே கேள்வித்தாள்கள் மீண்டும் நிரப்பப்பட்டன.
- **நம்பகத்தன்மை (Reliability):** Cronbach's Alpha மூலம் கருவிகளின் உள்நம்பகத்தன்மை கணக்கிடப்பட்டது (> 0.7).

3.7 தரவுப் பகுப்பாய்வு (Data Analysis):

- **அளவுரு தரவுகள்** SPSS 25.0 மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன
- **சராசரி மதிப்புகள் (Mean), திசைவிகிதம் (SD)** ஆகியவை கணக்கிடப்பட்டன
- **Matched Pair t-Test** மூலம் முன்னோடி மற்றும் பின்னோடி மதிப்புகளுக்கிடையே வித்தியாசம் இருக்கிறதா என பரிசோதிக்கப்பட்டது
- **Pearson's Correlation** மூலம் SKY பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தர இடையேயான உறவு கணிக்கப்பட்டது

4. தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் விளக்கவுரை

(Data Analysis and Interpretation)

இந்தப் பகுதியில், மூன்றாம் பாலினத்தவரின் மன அழுத்தம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் SKY பயிற்சி வழங்கிய தாக்கங்களை கணக்கீட்டுத் தரவுகள் மூலம் பகுப்பாய்வு செய்து விளக்கமாக விவாதிக்கப்படுகிறது. முன்னோடி மற்றும் பின்னோடி தரவுகளின் ஒப்பீடு, குழுக்களுக்கிடையேயான வித்தியாசங்கள் மற்றும் புள்ளிவிவர ரீதியான முக்கியத்துவங்கள் அனைத்தும் இந்த பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

4.1 பங்கேற்பாளர்களின் சுருக்கப்பட்ட தனிமாறிகள் (Descriptive Statistics of Participants):

தனிமாறிகள்	கட்டுப்பாட்டு குழு (n=30)	பயிற்சி குழு (n=30)
வயது (ம.ச.)	29.6	28.8
கல்வித் தகுதி	உயர்நிலை – 40%	உயர்நிலை – 43%

வேலை நிலை	வேலை இல்லை – 60%	வேலை இல்லை – 63%
மன அழுத்தத் தரம் (முன்னோடி)	24.3	25.1
வாழ்க்கைத் தர மதிப்பு (முன்னோடி)	52.6	51.9

4.2 மன அழுத்த மதிப்பீடு (Perceived Stress Scale – PSS):

முன்னோடி மற்றும் பின்னோடி மதிப்பீடுகள் – பயிற்சி குழு:

நிலை	**சராசரி மதிப்பு (Mean)**	**திசைவிகிதம் (SD)**
Pre-test	25.1	3.2
Post-test	17.6	2.9

Matched Pair t-Test Result:

- $t = 6.32$,
- $p < 0.001$ → முக்கியமான குறைவு

விளக்கம்:
SKY பயிற்சி பெற்ற குழுவில், மன அழுத்த மதிப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளன. இது SKY பயிற்சியின் சுவாச முறைபாடுகள் மனஅழுத்த ஹார்மோனான Cortisol அளவைக் கட்டுப்படுத்தும் திறனை பிரதிபலிக்கிறது.

4.3 வாழ்க்கைத் தர மதிப்பீடு (WHOQOL-BREF):

முன்னோடி மற்றும் பின்னோடி மதிப்பீடுகள் – பயிற்சி குழு:

பரிமாணம்	**Pre-test Mean**	**Post-test Mean**	**t-value**	**Significance**
உடல்நலம்	53.2	64.1	5.01	$p < 0.01$
உளநலம்	51.4	62.7	5.36	$p < 0.01$
சமூக உறவுகள்	49.8	60.3	4.82	$p < 0.01$
சூழலியல் நலம்	52.6	61.9	3.97	$p < 0.01$
மொத்த மதிப்பு	51.9	62.2	6.44	$p < 0.001$

விளக்கம்:
பயிற்சி குழுவில் வாழ்க்கைத் தரம் அனைத்துப் பரிமாணங்களிலும் மேம்பட்டுள்ளது. மனநலமே அல்லாமல், உடல் நலமும், சமூக உறவுகளும், சுற்றுச்சூழல் பற்றிய உணர்வும் மேம்படுவதைக் காட்டுகிறது.

4.4 கட்டுப்பாட்டு குழு எதிர்வினை:

முன்னோடி – பின்னோடி மாற்றம் (Control Group):

- மன அழுத்தம்: குறைந்தபட்ச மாற்றம் (Pre: 24.3 → Post: 24.1)
- வாழ்க்கை தரம்: மாற்றமில்லாத நிலை (Pre: 52.6 → Post: 52.9)

t-Test விளைவுகள்: முக்கியமற்ற மாற்றங்கள் ($p > 0.05$) → பயிற்சி பெறாத குழுவில் மாற்றம் இல்லை.

4.5 Pearson's Correlation (r):

SKY பயிற்சி மற்றும் மன அழுத்த குறைவு இடையேயான உறவு:

- $r = -0.64$, $p < 0.01$ → துல்லியமான எதிர்மறை உறவு
  SKY பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாடு இடையேயான உறவு:
- $r = +0.71$, $p < 0.01$ → வலுவான நேர்மறை உறவு

விளக்கம்:
SKY பயிற்சி அதிகம் வழங்கப்படும்போதெல்லாம் மனஅழுத்தம் குறையும், வாழ்க்கைத் தரம் உயரும் என்பதைக் காணலாம்.

4.6 பண்புணர விளக்கவுரை (Qualitative Interpretation):

பயிற்சி குழுவில் கலந்துகொண்ட சில பங்கேற்பாளர்கள் பின்வரும் கருத்துக்களை பகிர்ந்தனர்:

- "சிறு வயதில் எனக்கு இடையூறாக இருந்த மன அழுத்தம், SKY பயிற்சி மூலம் சோர்வின்றி இலகுவான நிலைக்கு வந்தது."
- "சுவாச பயிற்சிகள் என் உடல் நலத்தையும், தூக்கத்தையும் கூட மேம்படுத்தின."
- "முன்னே பெரிதும் குழப்பமாக இருந்த என் மனநிலை, இப்போது அமைதியாக இருக்கிறது."

இந்த கருத்துக்கள், புள்ளிவிவரத் தரவுகளை ஆதரிக்கும் உணர்வுபூர்வ ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

5. முக்கியமான கண்டுபிடிப்புகள் மற்றும் விவாதம்

(Key Findings and Discussion)

இந்த ஆய்வு மூன்றாம் பாலினத்தவரின் ஒருங்கிணைந்த நலத்தில் SKY பயிற்சியின் தாக்கத்தை பரிசோதிக்க முக்கியமான பண்புணரமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது. கணக்கியல் பகுப்பாய்வுகள், பங்கேற்பாளர்களின் நேரடி கருத்துகள் மற்றும் தற்போதைய இலக்கிய ஆதாரங்களுடன் ஒப்பிட்டு பெறப்பட்ட முக்கியக் கண்டுபிடிப்புகள், கீழ்வருமாறு தொகுக்கப்படுகின்றன.

5.1 முக்கியமான கண்டுபிடிப்புகள் (Key Findings):

1. SKY பயிற்சி மன அழுத்தத்தை கணிசமாகக் குறைத்தது:

- பயிற்சி குழுவில், Perceived Stress Scale (PSS) மதிப்பெண்கள் 25.1 → 17.6 எனக் குறைந்தன.

- t-Value = 6.32, $p < 0.001$ என்பதன் மூலம் இது ஒரு முக்கியமான வித்தியாசமாக கருதப்படுகிறது.
- கட்டுப்பாட்டு குழுவில் இதுபோன்ற மாற்றம் எதுவும் இல்லை.

2. வாழ்க்கைத் தரம் நான்கு பரிமாணங்களிலும் மேம்பட்டது:

- WHOQOL-BREF மதிப்பீட்டில், உடல்நலம், உள்நலம், சமூக உறவுகள் மற்றும் சூழலியல் நலன்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.
- மொத்த மதிப்பெண் 51.9 → 62.2 என உயர்ந்தது.
- இது SKY பயிற்சியின் முழுமையான (holistic) நலனை ஊக்குவிக்கும் திறனை உணர்த்துகிறது.

3. SKY பயிற்சி மற்றும் வாழ்க்கை தர இடையேயான நேர்மறை உறவு:

- Pearson’s correlation கணக்கீடு, SKY பயிற்சி அதிகப்படியான வாழ்க்கை தர மேம்பாட்டை வழங்குவதை நிரூபிக்கிறது ($r = +0.71$, $p < 0.01$).
- SKY பயிற்சி அதிகமாக வழங்கப்படும் போதே மனஅழுத்தம் குறைவதும் ($r = -0.64$) கணக்காயிற்று.

4. பங்கேற்பாளர்களின் உணர்வுப்பூர்வ கருத்துகள்:

- SKY பயிற்சியால் தூக்கம் மேம்பட்டது, சோர்வும் குறைந்தது, மற்றும் மன அமைதி உருவாகியது எனக் கூறினர்.
- சிலர் “முன்பு நாங்கள் தனிமையில் இருந்தோம், இப்போது நாம் நம்மையே உணர்கிறோம்” என்றனர்.
- இது மனநிலை மாற்றத்தின் ஆழத்தை உணர்த்தும் களச் சாட்சியாகும்.

5.2 விவாதம் (Discussion):

1. SKY பயிற்சி மனநல மேம்பாட்டுக்கான தீர்வா?

இந்த ஆய்வின் முடிவுகள், SKY பயிற்சி ஒரு சீரான, கட்டமைக்கப்பட்ட சுவாச பயிற்சி முறையாக மூன்றாம் பாலினத்தவரின் மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது என்பதை உறுதிப்படுத்துகின்றன. SKY பயிற்சியின் போது, உடலுக்குள் சுவாசத்தின் ஆழமான பயணம், நரம்பியல் அமைப்பை சமநிலைப்படுத்துகிறது. இது parasympathetic nervous system-ஐ தூண்டும், இதனால் நபர் அமைதியான நிலைக்குச் செல்கிறார்.

இந்த கண்டுபிடிப்பு, Brown & Gerbarg (2005) மேற்கொண்ட "Sudarshan Kriya and Stress Management" என்ற ஆய்வுடன் ஒத்துப்போகிறது. அவர்களின் ஆய்வும் SKY பயிற்சிகள் Cortisol (stress hormone) அளவைக் குறைக்கும் என்பதைக் காட்டியது.

2. வாழ்க்கைத் தர மேம்பாட்டின் பரிமாண விளக்கம்:

- உடல்நலம் (Physical Health): SKY பயிற்சியில் உள்ள Bhastrika, Ujjayi போன்ற சுவாச நுட்பங்கள் உடலுக்கு தேவையான ஆக்சிஜனை அதிகரிக்கின்றன. இதனால் உடல் சோர்வும் குறைவாகிறது, நோய் எதிர்ப்பு சக்தியும் மேம்படுகிறது.
- உள்நலம் (Psychological Health): SKY பயிற்சி மனசோர்வு, குழப்பம் மற்றும் மன அழுத்தம் போன்ற உளவியல் சிக்கல்களை நீக்குகிறது. மனம் தெளிவடைந்து, நம்பிக்கையும் உருவாகிறது.

- சமூக உறவுகள் (Social Relationships): பயிற்சி குழுவினர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, குழு அமைப்பில் பயிற்சி பெற்றதால், தனிமை உணர்வுகள் குறைந்தன. இது, அவர்களின் சமூக நலனையும், ஒருங்கிணைந்த நலனையும் மேம்படுத்தியது.
- சுற்றுச்சூழல் உணர்வு (Environmental Health): SKY பயிற்சி, மன அமைதியின் ஊடாக சுற்றுச்சூழலைப் பற்றிய தெளிவான உணர்வை வழங்குகிறது. வாழும் இடத்தின் மீது நம்பிக்கையும் உரிமை உணர்வும் மேம்படுகிறது.

3. சமுதாய ஒத்துழைப்பு மற்றும் உள் உணர்வின் வளர்ச்சி:

மூன்றாம் பாலினத்தவர்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுவதால், தனிமை, பயம், மன உளைச்சல் போன்றவை அதிகமாக இருக்கின்றன. SKY பயிற்சி அவர்களுக்கு ஒரு உள் பயணமாகவும், அவமதிப்பிலிருந்து அபிமானத்துக்கான மாற்றமாகவும் இருந்தது. “நான் ஒரு தனி மனிதராக இருக்கிறேன்” என்ற உணர்வை “நான் ஒரு சமூக அங்கமாக இருக்கிறேன்” என்ற நிலைக்கு கொண்டு செல்லும் உள் மாற்றம் காணப்பட்டது.

4. சமூகநீதிக்கான பங்களிப்பு:

இந்த ஆய்வின் ஒரு முக்கியமான பங்களிப்பு, மூன்றாம் பாலினத்தவரை மனநல மையங்களில் "பாதிக்கப்பட்ட குழு" என்ற வகைப்படுத்தலில் இருந்து "சுயவலிமிக்க, சுயநலம் தெரிந்த நபர்கள்" என உருமாற்றம் செய்வதற்கான அடித்தளமாகும். SKY பயிற்சி போலியான இனி தீர்வுகள் அல்லாது, சுயமாற்றத்திற்கான கருவிகளாக இருக்கலாம் என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது.

5.3 தொடர்புடைய முன் ஆய்வுகளுடன் ஒப்பீடு (Comparison with Previous Studies):

முன் ஆய்வு	முக்கிய முடிவு	இப்போதைய ஆய்வுடன் ஒப்பீடு
Brown & Gerbarg (2005)	SKY reduces anxiety & depression	மன அழுத்தத்தில் குறைவு காணப்பட்டது
Sharma et al. (2015)	SKY improves life quality	WHOQOL-BREF மதிப்பீட்டில் முன்னேற்றம்
Chakrapani (2010)	Transgenders experience stress from social stigma	இங்கு SKY பயிற்சி மூலம் அதற்கான தீர்வு ஆய்வுசெய்யப்பட்டது

இந்த ஆய்வின் முக்கியக் கண்டுபிடிப்புகள், SKY பயிற்சி மூன்றாம் பாலினத்தவரின் ஒருங்கிணைந்த நலத்திற்கு ஒரு முன்னேற்ற பாதையாக அமையக்கூடியது என்பதை உறுதிப்படுத்துகின்றன. அவர்களது மனநிலை, உடல் நலம், சமூக உறவுகள் மற்றும் வாழ்வியல் நம்பிக்கையில் ஏற்படும் மாற்றங்கள், மன அழுத்தத்தைக் குறைக்கும் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக SKY பயிற்சி செயல்படக்கூடியது என்பதை காட்டுகின்றன.

6. முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

6.1 முக்கியமான முடிவுகள் (Major Findings / Conclusion):

இந்த பண்புணர ஆய்வு மூன்றாம் பாலினத்தவரின் மனநிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தில் SKY (Sudarshan Kriya Yoga) பயிற்சியின் நேரடி தாக்கங்களை கணக்கியல் மற்றும் உணர்வுப்பூர்வ அடிப்படையில் ஆராய்ந்தது. கீழ்க்கண்ட முக்கிய முடிவுகள் பெற்றோம்:

1. மன அழுத்தம் கணிசமாகக் குறைந்தது – SKY பயிற்சி பெற்ற பங்கேற்பாளர்களில், சீரான சுவாசப் பயிற்சிகளால் மன அமைதி உருவாகியது.

2. வாழ்க்கைத் தரத்தில் எல்லா பரிமாணங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டது – உடல் நலம், உள்நலம், சமூக உறவுகள் மற்றும் சூழலியல் நலன்கள் மேம்பட்டன.
3. பயிற்சி மற்றும் மனநிலை இடையேயான உறவு – SKY பயிற்சி அதிகப்படியான நன்மைகளை வழங்கி, நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியதாக நிரூபிக்கிறது.
4. மூன்றாம் பாலினத்தவரின் உள் வலிமை மேம்பட்டது – மன நிலை மற்றும் சுயநிலை உணர்வில் அதிகரிப்பு காணப்பட்டது.
5. புதிய மாற்று வழி சாத்தியமாகிறது – மருந்தில்லாத, இயற்கையான மற்றும் குறைந்த செலவிலான மனநலத் தீர்வாக SKY பயிற்சி பயனுள்ளதாக இருந்தது.

இந்த முடிவுகள், மூன்றாம் பாலினத்தவர்கள் தங்களது சமூக, உள்நிலை சவால்களைக் கடந்து, ஒருங்கிணைந்த நலத்தை அடைய SKY பயிற்சி ஒரு மாற்றத்திற்கான வழிகாட்டி என அமையக்கூடியது என்பதை வலியுறுத்துகின்றன.

6.2 சமூக மற்றும் அரசுத் துறைகளுக்கான பரிந்துரைகள் (Recommendations):

1. மனநல திட்டங்களில் SKY பயிற்சி சேர்க்கப்பட வேண்டும்:

மூன்றாம் பாலினத்தவருக்கான அரசு மற்றும் தனியார் மனநல சேவைகளில் SKY பயிற்சியை ஒரு விருப்ப பயிற்சி (optional intervention) ஆக சேர்க்க பரிந்துரை செய்யப்படுகிறது. இது மருந்துகளின் மீது இருக்கும் சார்பை குறைக்கும்.

2. யோகா பயிற்சி மையங்களில் மூன்றாம் பாலினம் வழிநடத்தும் பயிற்சியாளர்களை உருவாக்குதல்:

பயிற்சி பெற்ற மூன்றாம் பாலினத்தவரே SKY பயிற்சியாளராக மாறும்படி ஊக்குவிக்க வேண்டும். இது அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்பையும், சமூக ஒப்புதலையும் ஏற்படுத்தும்.

3. பள்ளிகள் மற்றும் சமூக மையங்களில் உள்ளடக்கம்:

முன்னிலை பள்ளிகள், மகளிர் நல மையங்கள், மற்றும் LGBTQIA+ சமூகத்திற்கான சேவைகள் வழங்கும் அமைப்புகள் SKY பயிற்சியை தவறாமல் ஒருங்கிணைக்க வேண்டும்.

4. உணர்வுபூர்வ மற்றும் கள விளம்பரங்கள்:

மூன்றாம் பாலினத்தவரின் நலனுக்காக SKY பயிற்சியின் பலனை வெளிப்படையாக விளக்கும் தகவல் பிரச்சாரங்கள் செய்யப்பட வேண்டும். இது பயமையும் மன தடைகளையும் குறைக்கும்.

5. மருத்துவர்கள் மற்றும் உளவியலாளர்கள் தரவுகளை பரிந்துரை செய்ய வேண்டும்:

மருத்துவ நிபுணர்கள், உளவியலாளர்கள் போன்றவர்கள் SKY பயிற்சியை மன அழுத்தத்திற்கு மாற்று தீர்வாக பரிந்துரைக்க வேண்டும்.

6.3 எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள் (Recommendations for Future Research):

1. நீண்டகால ஆய்வுகள் (Longitudinal Studies):
SKY பயிற்சி அளிக்கப்படும் நபர்களில் 6 மாதம், 1 ஆண்டு போன்ற நீண்டகால தாக்கங்களை ஆய்வு செய்ய வேண்டும். இது பயிற்சியின் நிலைத்தன்மையை (sustainability) அறிய உதவும்.

2. பெரிய மாதிரி அளவுகள்: பல்வேறு மாநிலங்களில், பெரிய மாதிரி குழுக்களுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள், பொதுவாக முடிவுகளை விரிவுபடுத்த உதவும்.
3. விரிவான பண்புணர ஆய்வுகள் (Qualitative Studies): பங்கேற்பாளர்களின் அனுபவங்களை ஆழமாக ஆராய்ந்து, அவர்களின் உள் மாற்றங்களை விவரிக்க பேட்டி மற்றும் கள நோக்கம் கொண்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. ஒப்பீட்டு பயிற்சிகள்: SKY பயிற்சியை மற்ற யோகா/தியான முறைகளுடன் ஒப்பிட்டு அதன் பிரத்யேக பலனை மதிப்பீடு செய்ய வேண்டும்.
5. உணர்வியல் மற்றும் நரம்பியல் அளவீடுகள்: Hormonal analysis (Cortisol, Serotonin), EEG, Heart Rate Variability போன்ற உயிரியல் அளவீடுகள் மூலம் SKY பயிற்சியின் உணர்வியல் அடிப்படை விளைவுகள் புலப்படுத்தப்பட வேண்டும்.

6.4 ஆராய்ச்சியின் சமூக பங்களிப்பு (Social Contribution of the Study):

- மூன்றாம் பாலினத்தவரின் உணர்ச்சி நலத்தையும், மன உறுதியையும் மேம்படுத்த SKY பயிற்சி நம்பகமான தீர்வாகிறது.
- ஒருங்கிணைந்த நலத்திற்கான இவ்வகை பயிற்சி, அவர்களது அடையாள உரிமையை சுயமாக எதிர்கொள்ளும் மனபாங்கை வளர்க்கிறது.
- சமூக அமைப்புகள் மற்றும் அரசுத் திட்டங்கள், SKY பயிற்சியின் அடிப்படையில் புதிய மனநலத் திட்டங்கள் வடிவமைக்க துடிப்புடன் செயல்பட முடியும்.

முடிவுரை:

இந்த ஆய்வு மூன்றாம் பாலினத்தவருக்கான ஒரு மாற்று யோகா மனநல அணுகுமுறையை முன்வைக்கும் முயற்சியாக அமைகிறது. SKY பயிற்சி, மனநல சிக்கல்களில் சிக்கிய குழுக்களுக்கு *மருந்தில்லா, எதிர்வினையில்லா, இயற்கை வழி* தீர்வாக இருப்பதை கணக்கியல் மற்றும் அனுபவ ரீதியாக நிரூபிக்கிறது. இந்த பாய்முறையை வளர்த்தெடுத்து, சமூக மேம்பாட்டு செயல்திட்டங்களில் ஒருங்கிணைத்தால், வாழ்வியல் தரம் மற்றும் மன அமைதியின் சமூகப் பெருக்கம் விரைவில் நிகழும்.

6. மேற்கோள்கள்:

7. Brown, R. P., *மற்றும்* Gerbarg, P. L. (2005). Sudarshan Kriya Yogic breathing in the treatment of stress, anxiety, and depression: Part II—clinical applications and guidelines. *Journal of Alternative and Complementary Medicine*, 11(4), 711–717. https://doi.org/10.1089/acm.2005.11.711
8. Chakrapani, V. (2010). Hijras/transgender women in India: HIV, human rights and social exclusion. UNDP India. *பெறப்பட்டது*: https://www.undp.org/
9. Sharma, H., Sen, S., Singh, R. B., *மற்றும்* Singh, M. (2015). Sudarshan Kriya practitioners exhibit better quality of life and lower anxiety levels. *International Journal of Yoga*, 8(1), 31–36.
10. WHO. (1998). Development of the World Health Organization WHOQOL-BREF quality of life assessment. *Psychological Medicine*, 28(3), 551–558. https://doi.org/10.1017/S0033291798006667
11. Khera, S. (2020). Mental health concerns of transgender people in India. *Indian Journal of Psychiatry*, 62(3), 258–264.
12. Goyal, M., Singh, S., Sibinga, E. M. S., Gould, N. F., Rowland-Seymour, A., Sharma, R., ... *மற்றும்* Haythornthwaite, J. A. (2014). Meditation programs for psychological stress and well-being: A systematic review and meta-analysis. *JAMA Internal Medicine*, 174(3), 357–368.
13. Joseph, N., *மற்றும்* Alex, A. (2021). Impact of yogic practices on the stress levels of LGBTQIA+ community in India. *Journal of Holistic Health*, 14(2), 67–75.

14. Subramanian, S. V., மற்றும் Selvaraj, S. (2017). Social exclusion and health outcomes: Evidence from India's transgender population. *Social Science & Medicine*, 190, 204–212.
15. Raj, A., மற்றும் Bajaj, A. (2022). Yoga-based interventions for marginalized gender communities: A review. *International Journal of Health and Well-being*, 9(1), 22–29.
16. Singh, M. R., மற்றும் Pathak, P. (2023). Transgender wellness and integrative practices: A qualitative study. *Indian Journal of Mental Health*, 10(1), 56–65.

References:

1. Brown, R. P., & Gerbarg, P. L. (2005). *Sudarshan Kriya Yogic breathing in the treatment of stress, anxiety, and depression: Part II—clinical applications and guidelines*. Journal of Alternative and Complementary Medicine, 11(4), 711–717. https://doi.org/10.1089/acm.2005.11.711
2. Chakrapani, V. (2010). *Hijras/transgender women in India: HIV, human rights and social exclusion*. UNDP India.
Retrieved from: https://www.undp.org/
3. Sharma, H., Sen, S., Singh, R. B., & Singh, M. (2015). *Sudarshan Kriya practitioners exhibit better quality of life and lower anxiety levels*. International Journal of Yoga, 8(1), 31–36.
4. WHO. (1998). *Development of the World Health Organization WHOQOL-BREF quality of life assessment*. Psychological Medicine, 28(3), 551–558. https://doi.org/10.1017/S0033291798006667
5. Khera, S. (2020). *Mental health concerns of transgender people in India*. Indian Journal of Psychiatry, 62(3), 258–264.
6. Goyal, M., Singh, S., Sibinga, E. M. S., Gould, N. F., Rowland-Seymour, A., Sharma, R., ... & Haythornthwaite, J. A. (2014). *Meditation programs for psychological stress and well-being: A systematic review and meta-analysis*. JAMA Internal Medicine, 174(3), 357–368.
7. Joseph, N., & Alex, A. (2021). *Impact of yogic practices on the stress levels of LGBTQIA+ community in India*. Journal of Holistic Health, 14(2), 67–75.
8. Subramanian, S. V., & Selvaraj, S. (2017). *Social exclusion and health outcomes: Evidence from India's transgender population*. Social Science & Medicine, 190, 204–212.
9. Raj, A., & Bajaj, A. (2022). *Yoga-based interventions for marginalized gender communities: A review*. International Journal of Health and Well-being, 9(1), 22–29.
10. Singh, M. R., & Pathak, P. (2023). *Transgender wellness and integrative practices: A qualitative study*. Indian Journal of Mental Health, 10(1), 56–65.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Lifestyle of Parathaiyar as Shown by Kalittokai

Dr. R. PRIYADHARSHINI
Assistant Professor, Department of Tamil,
G.T.N. Arts College, Dindigul
Email: priyabalaji205@gmail.com, ORCID: 0000000266710182

Abstract

The ancient grammar and literature of the Tamil language mention the main characters in the Aga life of the people as Thalaivan, Thalaivi, and Dozhi. In this, Parathaiyar is the one who has the same characteristics as Thalaivi. The incidents about Parathaiyar have been mentioned by Tolkappiyar in the Kalaviyal. As drama characters, one of the five dynasties of Marutha, in the epic poems of Sangam literature, the events of Parathaiyar's life are recorded as the reason for the conflict between Thalaivan and Thalaivi. There are records about Parathaiyar in Thirukkural. Agapporul Vilakkam very clearly explains on what basis Parathaiyar is divided. Thus, Parathaiyar is notable among the egoists mentioned in grammar and literature. Parathaitar is the one who is often credited with the rights to the Marutha. This article is based on the lifestyle of Prathaiyar found in the Kalittokai Maruthakali songs to illustrate the qualities and virtues of Parathaiyar.

Keywords : *Parathaiyar discrimination, Love, Lifestyle, Motherhood.*

கலித்தொகை காட்டும் பரத்தையர் வாழ்வியல்

முனைவர் இரா.பிரியதர்ஷினி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்
Email: priyabalaji205@gmail.com ORCID : 0000000266710182

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியின் பண்டைய இலக்கண, இலக்கியங்கள் கூறும் மக்களின் அக வாழ்க்கையில் முதன்மையானவர்கள் தலைவன், தலைவி, தோழி ஆவர். இதில் தலைவிக்கு நிகரான பண்புடையவராகத் திகழ்பவர் பரத்தையர் ஆவர். பரத்தையர் பற்றிய நிகழ்வுக் கூற்றுகளைத் தொல்காப்பியர் களவியலில் குறிப்பிட்டுள்ளார். நாடகப் பாத்திரங்களாக, ஐந்திணைகளில் ஒன்றான மருத நிலத்தில் தலைவிக்கும் தலைவனுக்கும் இடையில் பிரிவு தோன்றுவதற்குக் காரணமாகப் பரத்தையரின் வாழ்க்கை நிகழ்வுகள் சங்க அகப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறளில், பரத்தையர் பற்றிய பதிவுகள் உள்ளன. அகப்பொருள் விளக்கம் பரத்தையர் எத்தகைய தன்மை அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளார் என்று மிகவும் தெளிவாக விளக்குகின்றது. இதனால் இலக்கண, இலக்கியங்கள் எடுத்துக்கூறும் அக மாந்தர்களுள் குறிப்பிடத்தக்கவர், மருதத்திற்கே பெரும்பாலும் உரிமை பூண்டு விளங்குபவர் பரத்தையர் எனலாம்.

கலித்தொகை மருதக்கலிப் பாடல்களில் காணப்படும் பரத்தையர் உறவுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பரத்தையரின் பண்பு நலங்களை, வாழ்வியலை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறிப்புச் சொற்கள் : *பரத்தையர் பாகுபாடு, வாழ்க்கை முறை, அன்புநெறி, தாய்மை உள்ளம்*

முன்னுரை

இலக்கியம் என்பது அந்தந்த காலத்தில் சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்கையை எடுத்தியம்பும் காலக்கண்ணாடி ஆகும். சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்று இரண்டாகப் பகுத்து இவ்வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளன.

அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளுக்கு உரியவையாக இலக்கண, இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதி 'மருதம்' என்று அழைக்கப்படும். இம்மருத நிலத்திற்குரிய உரிப்பொருளான ஊடலும் ஊடல் நிமித்தமும் நிகழ்வதற்குப் பரத்தையர் முக்கிய காரணமாகத் திகழ்கின்றனர். அப்பரத்தை பற்றிய பதிவுகள் பல காணப்பட்டாலும் பரத்தையர் வாழ்வியலைத் தெளிவாக எடுத்துக்கூறும் இலக்கியம் கலித்தொகை. தலைவன், தலைவி மணந்து மனையறம் மேற்கொண்டது. தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையரிடம் சென்றது. அதனால் தலைவி வருந்தி நிற்பது, பரத்தையர் பொருட்டு தலைவனிடம் தலைவி ஊடல் கொள்வது போன்ற நிகழ்வுகளை முப்பத்தைந்து பாடல்களில் கலித்தொகை (மருதக்கலி) எடுத்தியம்புகின்றது.

பரத்தையர்

பரத்தையர் இற்பரத்தை, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, மாயப்பரத்தை எனப் பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றனர். "பரத்தை என்பதற்குப் பொதுமகள், வேற்றுப்பெண், அயன்மை" என்று செந்தமிழகராதியும் (ப.454). "விபச்சாரி, விலைமகள்" என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் (ப.682) பொருள் தருகின்றன.

"சங்க காலத்தில் காமக்கிழத்தி, காதற்பரத்தை, நயப்புப் பரத்தை, இற்பரத்தை, தலைநின்றொழுகப்பட்ட பரத்தை, பரத்தை என ஆறு நிலையினர் காணப்பட்டதாகச் சங்க இலக்கியம் கூறுகின்றது". (இலா.குளோரியா சுந்தரமதி, சங்க இலக்கியம் மருதம், ப.64)

ஆடவர்கள் தம் மனைக்கிழத்தியை மறந்து, அகத்தில் வாழாது புறத்தே சென்று பரத்தையருடன் கூடியொழுகினர். இது புறத்தொழுக்கம் எனப்பட்டது. தலைவன் பரத்தையருடன் கொள்ளும் இவ்வொழுக்கத்திற்குப் பொருள் மட்டும் அடிப்படையாகாது, அன்பும் இன்பமும் அடிப்படையாய் விளங்கியது. இப்புறத்தொழுக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே பரவியிருந்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வரும் உரியவர் பரத்தையர் என்பதை,

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர் (தொல்காப்பியம், பொருளதிகாரம்.220)

என்றும்

மாயப்பரத்தை யுள்ளிய வழியும் (தொல்காப்பியம், பொருளதிகாரம்,145:33)

பரத்தையிற் பிரிந்த காலை யான (தொல்காப்பியம், பொருளதிகாரம் ,185:3)

பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே (தொல்காப்பியம், பொருளதிகாரம் ,220:1)

தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும் (தொல்காப்பியம், பொருளதிகாரம்.231:1)

என்றும் தொல்காப்பியர் பரத்தையரைப் பல சூத்திரங்களில் கூறியிருப்பதால், பழங்காலத்தில் சமூகம் பரத்தையரை அங்கீகரித்ததை அறியமுடிகிறது. இளம்பூரணர் 'ஆடலும் பாடலும் பயின்று அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும், வெளவும்' பண்பினைப் பரத்தையர் இலக்கணமாக வரையறுப்பர். இதனால், பரத்தையர் அழகும் இளமையும் கொண்டவர்கள். ஆடல், பாடல்களால் தலைவனை மகிழ்விப்பவர்கள் என்பது தெரிகின்றது.

வள்ளுவர் திருக்குறளில் 'வரைவின் மகளிர்' என அதிகாரம் வகுத்துப் பரத்தையரை கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகின்றது. அகப்பொருள் விளக்கம் தலைவன், தலைவியின் கற்பு வாழ்க்கையில் நிகழும் பிரிவுகளுள் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவை எடுத்துக்காட்டுகின்றது. மேலும்

குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா ஊடலுட்
டலைவற் கழறலும் மனைவிக் கமைந்நத
ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க் குரிய (அகப்பொருள் விளக்கம்,105)

அக மாந்தர்களுள் காமக்கிழத்தி, பரத்தையரின் செயல்கள் குறிப்பிடத்தக்கது என்பதை உணர்த்தும் வகையில் அவர்களின் செயல்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

“பரத்தையர் பல கலைகள் கற்று அக்காலத்தில் செல்வந்தர் மாளிகைகளில் இருந்துள்ளனர். பரத்தையர் வாழ்கின்ற பகுதிகளில் சாதிப் பிரிவு முறைகள் இருந்ததாக இலக்கியச் செய்திகள் சான்றளிக்கின்றன. குறிப்பாக உயர்குடியில் பிறப்பவளுக்கு உரிய உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்களை, தாசி என்றும், கணிகை என்றும், தாழ்ந்த குலத்தைச்

சாந்தவளை வம்பரத்தை என்றும் சேரிப் பரத்தையை வேசி என்றும் குறிப்பிட்டுள்ளனர்". (மு.தேவராஜ், பரத்தையர் மாலை, ப.13)

தலைவனுடன் பரத்தை மேற்கொள்ளும் செயல்களால், அவள் உள்ளத்து உணர்வையும் தலைவி போல் பரத்தை உரிமை பெற்றிருந்ததையும் காட்டுகின்றது. இதனால் தலைவி உள்ளத்தில் தோன்றும் புலவிக்குக் காரணமாகப் பரத்தையர் விளங்கியதோடு, தலைவியைப் போல் பரத்தையரும் தலைவன்பால் ஊடல் கொண்டனர். இது மருதத்திணைக்குரிய ஊடல் ஒழுக்கத்தைச் சிறப்பிப்பதாய் அமைந்திருக்கின்றது.

சங்க அக இலக்கியங்களில் கலித்தொகை பரத்தையர் ஒழுக்கத்தை முழுமையாகவும் செம்மையாகவும் எடுத்துரைக்கிறது. "பரத்தமையைத் தொழிலாகக் கொண்ட ஒரு தனிக்கூட்டத்தார்.அவர்கள் இருவகையினர். அத்தொழிலால் வாழ்க்கை நடத்திய பரத்தையர் எந்த ஒரு தனிப்புரவலனுடனும் தனியன்பு கொண்டவரல்லர். அவர்களைச் சேரிப்பரத்தையர் அல்லது காமக்கணிகையர் என்றனர். வேறுசிலர் அக்குலத்தைச் சேர்ந்தவர்களாயினும் ஒரு தனிப் புரவலர் மீது அன்பு கொண்டு அவரொடு காதல் வாழ்க்கை நடத்தினர்; ஆயினும் அவர்கள் ஒருவரையும் மணப்பதில்லை. அவர்களைக் காதற் பரத்தையர் அல்லது காமக் கிழத்தியர் என்பர். அவர்கள் மணமாகாத வாழ்க்கைத் துணைவியர்." (ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.397) இத்தகு இருவகையினரையும் மருதக்கலிப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களை மருத மக்கள் ஞாயர், தாயர், தொடகத்துத் தாய், வழி முறைத்தாய் என்றழைத்தனர்.

வதுவை அயர்தல்

வதுவை என்ற சொல்லிற்கு 'மணம்' என்பதே பொருள். பண்டைய மக்கள் எந்த வரன்முறையுமின்றி மனம்போல் வாழ்ந்து வந்தனர். பின்னர் அவர்கள் நியதிகளுக்கு உட்பட்டு பண்பாட்டுடன் வாழவேண்டும் என்பதற்காகச் சமுதாயத்தில் திருமண ஒழுங்குமுறை உருவாயிற்று. இதை,

பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல்காப்பியம், பொருளதிகாரம், 143)

என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. தலைவன் பரத்தையரை அறநூல் வழிப்பட்டுத் திருமணம் புரிந்தான். அந்த மணம் ஊரெல்லாம் ஆரவாரம் எழுமாறு இல்லத்தில் நல்ல நாள் பார்த்து, மணமுரசு முழங்க நிகழ்ந்ததை,

பொதுக் கொண்ட கவ்வையின் பூ அணிப் பொலிந்த
நின் வதுவை அக்கமழ் நாற்றம்... (கலித்தொகை 66:11-142)
துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் ததும்பும் நின்மண முழவந்து எடுப்புமே (கலித்தொகை 70:9-10)

என்று வரும் பாடலடிகள் வலியுறுத்துகின்றன. இதனால் தலைவனிடம் அன்புறவு கொண்டவளாகப் பரத்தை வாழ்ந்தாள். தலைவன் தலைவியிடம் தன்மீதுள்ள உரிமையையும், அவன் பரத்தையர் மீதுள்ள உரிமையையும் வெளிப்படுத்தும் கூற்றுகளை,

தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்
(தொல்காப்பியம், பொருளதிகாரம், 111)

என்று தொல்காப்பியமும்

ஒருவர் தனக்கே உரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர்மகளி ராகிக் (அகப்பொருள் விளக்கம்,113)

என்று அகப்பொருள் விளக்கமும் கூறுவதால் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை வாழும் தலைவிக்கு அடுத்த நிலையில் மனையாளாகப் பரத்தையார் இருந்ததையும் பரத்தையர் பண்புகளையும் அறிய முடிகிறது.

பரத்தையர் எழில்

பரத்தையர் அழகிய மையுண்ட கண்களை உடையவராய், அழகுடையவராய் காணப்பட்டனர். மதிப்புமிகு உடை, ஆபரணங்கள் அணிந்திருந்தனர். கூந்தல் முதல் பாதம் வரை ஆபரணங்கள் சூடினார்கள். தெளிந்த மணிகளையுடைய ஆரவரிக்கும் சிலம்பு, கூந்தலுக்கும் காலுக்கும் நீலக்குதும்பை, கழுத்துக்கு முத்தாரம், விரல்களுக்கு மோதிரம், கைகளுக்கு சூடகம், சங்குவளை, தோளுக்கு முத்துவளையம், இடுப்புக்கு முத்துக்கோவை போன்ற அணிகலன்களை அணிந்திருந்தனர் என்று பரத்தையர் எழிலைப் பலவாறு தலைவியின் சொல்லாடல் வழி கலித்தொகைக் கூறுகின்றது.

நலத்தகை எழில் உண்கண் நல்லார் . . . .
கோடு எழில் அல்குற் கொடி அன்னார் முலை . . . (கலித்தொகை 67:6,10)

கிண்கிணி மணித்தாரோடு ஒலித்து ஆர்ப்ப ஒண் தொடிப்
பேர் அமர்க் கண்ணார் . . . . (கலித்தொகை 74:13-14)

ஒழுங்கு வரிசையில் அமைந்த பற்களையுடையவர். அவர்களின் கூந்தலில் நறுமணச் சாந்தும், புழுகும் மணக்கும். மான்பிணைப் போன்ற நோக்கத்தை உடையர். அகன்ற அல்குலும், கொடி போன்ற இடையும் உடைய பரத்தையரை,

சோலை மலர் வேய்ந்த மான் பிணை அன்னார் பலர் நீ
கடவுண்மை கொண்டு ஒழுகுவார்
அவருள் எக்கடவுள் மற்று அக்கடவுளை செப்பீமன் (கலித்தொகை 93:8-10)

என்றும்

. . . . .கண்டார்க்கு
இறு முறை செய்யும் உருவொடு . . .
. . . . .
நோக்கின் பிணி கொள்ளும் கண்ணொடு மேல் நாள் நீ
பூ பலி விட்ட கடவுளை கண்டாயோ (கலித்தொகை 93:18-19,23-24)

கண்டவர்களுக்கு இறந்துபோகும் நிலையைச் செய்யும் அழகிய உருவத்தோடு, நோக்கினால் பிறரைத் தன்னுடன் பிணித்துக் கொள்ளும் கண் உடையவர் என்றும் கடவுளாகத் தலைவிப் புனைந்துரைக்கின்றாள்.

புனலாட்டு

பரத்தையர் மேற்கொள்ளும் இன்ப வாழ்வில் முதன்மையாக விளங்குவது புலனாட்டு. இதனை ‘நீர் விளையாட்டு’ என்றும் கூறுவர். தொல்காப்பியம்,

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல். சொல்.319)

என்று குறிப்பிடுகிறது. இதில், 'கெடவரல்' என்பது துன்பம் கெடவரும் விளையாட்டு என்றும் இவையிரண்டும் புனல் விளையாட்டை உணர்த்தும் பண்டைய சொற்கள் என்றும் கூறுவர். பரத்தையர் ஆடும் இந்தப் புனலாட்டை அகப்பொருள் விளக்கம்,

விருந்தியர் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்ட
டிளமரக் காவின் விளையா டற்கும்
புனலா டற்கும் புறநகர்ப் போகும் (அகப்பொருள் விளக்கம்,66)

என்று கூறுகின்றது. பரத்தையருடன் தலைவன் புனலாடினான். பரத்தை தலைவன் செய்த குறியிடத்தே சென்று, அங்கு ஆடியும் பாடியும் புனலாடியும் தலைவனை மகிழ்வித்தாள் என்பதை,

கனலும் நோய்த் தலையும் நீ கனங்குழையவரொடு
புனல் உளாய் . . . . (கலித்தொகை 66:13-14)

பொன்னால் செய்யப்பட்ட மகரக் குழை அணிந்த பரத்தையருடன் தலைவன் புனலாடினான் என்றும்

இணர்ததை தண்காவின் இயன்ற நின்குறிவந்தாள்
புணர்வினில் புகன்று ஆங்கே புனல்ஆடப் பண்ணியாய்(கலித்தொகை 69:16-17)

தலைவனை மகிழ்விக்கும் பொருட்டு பரத்தையர் புனலாட்டை மேற்கொண்டனர் என்றும் மருதக்கலிப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஐங்குறுநூறு,

. . . . .மகிழ்நன்
மருதுஉயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறைப்
பெண்டிரொடு ஆடும் என்ப (ஐங்குறுநூறு 33 : 1-3)

என்ற பாடலில் தலைவன் பரத்தையரோடு புதுப்புனல் ஆடுவது குறிக்கப்படுகிறது.

துணங்கை ஆடுதல்

துணங்கை என்பது 'பழுப்புடையிருகை முடக்கியடிக்கத் துடக்கிய நடையது' என்றும் 'சிங்கிக் கூத்தென்றும் இஃதழைக்கப்படும்' என்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இதனை, மகளிர் மகிழ்ச்சியில் கைகொட்டிக் கொண்டு நுடங்கி ஆடுங்கூத்து என்றும் தற்காலக் கும்மி போன்றது என்றும் கூறுவர். பரத்தையர் தலைவனோடு தான் கொண்ட மணத்தின் மகிழ்வினைக் கொண்டாடும் முகமாகத் துணங்கை ஆடினர்.இதை,

தணந்ததன் தலையும் நீ தளரியலவரொடு
துணங்கையாய் எனவந்த கவ்வை (கலித்தொகை,66:17-18)
நினக்கு ஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து நின்
தமர் பாடும் துணங்கையுள் அரவம் வந்து எடுப்புமே (கலித்தொகை,70:13-14)

என்று வரும் மருதக்கலிப் பாடலடிகள் எடுத்துணர்த்துகின்றன.

காதற்பரத்தையரின் ஊடல்

ஊடல் என்பது தலைவன், தலைவிக்கு இடையே ஏற்படும் புலவி. அன்பினால் விளையும் சிறுபிணக்கு. ஊடலுக்குப்பின் இருவருக்கும் அன்பு மிகுதிப்படும் எனலாம். ஊடலின் தன்மையைத் திருக்குறள்,

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து. (திருக்குறள் 1323)

நிலத்தோடு நீர் பொருந்தினாற் போல நம்மோடு கலந்த அன்பு உடையவரான காதலருடன் ஊடுவதைக் காட்டிலும், தேவருலகத்து இன்பமும் சிறந்ததாகாது என்று கூறுவதில் ஊடல் இன்பத்தை அறியலாம். பரத்தையரும் தலைவனுடன் ஊடல் கொண்டதை,

செறிவுற்றேம் எம்மை நீ செறிய அறிவுற்று
அழிந்து உகு நெஞ்சத்தேம் அல்லல் உழப்ப
கழிந்தவை உள்ளாது கண்ட இடத்தே
அழிந்து நிற்பேணிக் கொளலின் இழிந்ததோ
இந்நோய் உழத்தல் எமக்கு (கலித்தொகை, 72:22-26)

உன்னுடன் உறவுகொண்டிருந்தேன். எம்முடன் நீயும் உறவுகொள்ள இப்போது உன் குறைகளை அறிந்து அழிந்த மனம் உடையவராய் அல்லலில் கிடந்து வருந்துகின்றேன். நடந்த குற்றங்களை எண்ணிப்பார்க்காமல் உன்னைக் கண்டவுடன் மனம் மாறி உன்னை ஆதரித்து ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும் இந்தப் பிரிவு நோயினால் வருந்திக்கிடத்தல் எமக்கு இழிந்ததன்று என காதற்பரத்தைத் தலைவனுடன் ஊடல் கொள்கின்றாள்.

மருதத்திற்கு உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். இந்த ஊடல் தலைவிக்குரியதாக இலக்கண, இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஊடலுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவராக மட்டுமின்றி, தலைவியைப் போல் தலைவனுடன் ஊடல் கொள்பவளாகவும் பரத்தையரைக் கலித்தொகை எடுத்துக்காட்டுகின்றது. இதனை,

அன்பு இலன் அறன் இலன் எனப்படான் என ஏத்தி
நின்புகழ் பலபாடும் பாணனும் ஏமுற்றான் (கலித்தொகை 74:6-7)

பரத்தையின் இவ் ஊடல்,

கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல (குறுந்தொகை8 : 4-5)

என்று குறுந்தொகை குறிப்பிடும் தலைவியின் ஊடலை நினைவூட்டுகின்றன.

ஊடியார் நலம் தேம்ப ஓடியெறிந்து அவர்வயின்
மால்தீர்க்கும் அவன்மார்பு என்று எழுந்த சொல் நோவேமோ
(கலித்தொகை 68:24-25)

அமைதியும், அறிவும் வாய்ந்த பரத்தையரின் திறமான இந்த ஊடல் பேச்சில் 'தன் துன்பத்திற்குக் காரணமான தலைவனுடைய தகுதிப்பாட்டிற்கு ஊறு நேரலாகாது' என்னும் காதற்பரத்தையரின் உயர்ந்த காதலுள்ளம் வெளிப்படுகிறது.

இதனால் காதற்பரத்தை தலைவி போன்று தனி ஒரு தலைவனுக்கே உரிமை பூண்டவளாய் விளங்குகிறாள். தலைவன் மாட்டுப் பரத்தையர் கொள்ளும் ஊடல், தலைவனின் அன்பின்மையைக் கண்ட போதும், காதற்பரத்தையரின் அன்பை வெளிப்படுத்துவதாக மருதக்கலிப் பாடலடிகளால் உணரமுடிகிறது.

தாயுள்ளம்

பெண்களுக்குரிய பண்புகளுள் முதன்மையானது தாய்மை. குழந்தைகள் மீது அன்பு செலுத்துவது அனைத்து பெண்களுக்கும் உரிய குணம். இதில் பரத்தையர் விதிவிலக்கானவர் அல்லர். தலைவன், தலைவி கற்பு வாழ்க்கையில் மக்கட்பேறு குறிப்பிடத்தக்கது. தலைவனின் புதல்வன்மேல் தணியாத அன்பு கொண்டவளாகப் பரத்தையரைக் கலித்தொகை எடுத்துக்காட்டுகின்றது. தாயுள்ளம் கொண்ட பரத்தை, தலைவனின் மகனுக்குக் காளை முத்திரையைக் கைக்காணிக்கையாக இடுகிறாள். இதனை,

......................அவளும்
மருப்புப்பூண் கையுறை யாக அணிந்து (கலித்தொகை, 82 : 11-12)

என்றும்

திருந்து அடி நூபுரம் ஆர்ப்ப இயலி விருப்பினால்
கண்ணும் நுதலும் கவுளும் கவவியார்க்கு
ஒண்மை எதிரிய அம் கையும் தண் எனச்
செய்வன சிறப்பின் சிறப்புச் செய்து இவ் இரா
எம்மொடு சேர்ந்து சென்றீவாயால் செம்மால் (கலித்தொகை 83:16-20)

உனது திருத்தமான காலடிகளில் சிலம்புகள் ஆரவாரிக்க ஓடிவந்து, ஆசையோடு உன்னுடைய கண்ணாலும் நுதலாலும் கதுப்பாலும் உன்னைத் தழுவும் உன் தாயர்க்குப் பொலிவினைத் தோற்றுவிக்கும் அழகிய கைகளினாலும் உன் தந்தைக்கு நீ மனங்குளிர செய்யும் சிறப்புக்கள் போல எமக்கும் சிறப்புக்கள் செய்து, இந்த இரவுப்பொழுதுமட்டும் எம்மோடு தங்கியிருந்து செல்லவேண்டும் என்றும் தலைவனின் புதல்வன் மீது பேரன்பு கொண்டவாளாய் பரத்தைக் காட்சியளிக்கின்றாள்.

பரத்தையின் இவ்வுணர்வும் செயலும் தூய அன்பின் உயர்வை எடுத்தியம்புகின்றன. பரத்தையர், தலைவனது புதல்வனின் வடிவுக்கேற்ற அணியை அணிவித்து அவனை அழகுபடுத்துவதில் இன்பம் கண்டனர். பரத்தையின் இப்பாச உணர்வை அங்கீகரிக்கும் முகமாகப் பரத்தையரை ‘வேற்றுத்தாய்’ எனவும், 'தொடக்கத்துத் தாய்' எனவும் குறிப்பிடக் காணலாம். இதனால் தலைவனின் புதல்வன்பால் பரத்தை செலுத்தும் அன்பினில் தாயன்பினை உணர முடிகிறது.

“இத்தகையாரோடு உறவுகொண்ட ஆடவர்களைச் சமூகம் அன்று பழித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு நடந்துகொள்ளுதல் மனிதனுடைய உரிமைக்கு முழுவதும் உட்பட்ட செயலே என்று கருதினர். ஆயினும் அக இலக்கியத்தில் மருதத்திணையில் இந்நிலை (பரத்தையோடு தலைவன் உறவுகோடலால் தலைவி ஊடுதல்) பேசப்படும் வகையைக் காணில், மணவாழ்க்கையின் அமைதி, இக்கணிகையர் தலைவனது அன்பைக் கவர்ந்து விட்டமையால், பலகாலும் சீர்கெட்டது என்பது போதரும்.” (ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.397) பரத்தையரின் இத்தகைய பண்புகளால்தான் பரத்தமை ஒழுக்கம் பழங்காலத்தில் கண்டிக்கப்படவில்லை என்பதும் அக மாந்தர்களுள் பரத்தையரும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர் என்பதும் அறியமுடிகிறது.

தொகுப்புரை

- பரத்தை ஒழுக்கத்தைப் பண்டைய சமுதாயம் ஏற்றுக்கொண்டது. பரத்தையர் சேரிகள் என்னும் தனிப்பாக்கங்களில் வசித்தனர்.

- பரத்தையர் தலைவனுடன் கொள்ளும் உறவுக்குப் பொருள் மட்டும் அடிப்படையாகாது. அன்பும் இன்பமும் அடிப்படையாய் நிற்றலைக் காணலாம்.
- தலைவன் ‘தண்டாப்பரத்தனாக’, தலைவியிடம், பரத்தையிடம் தலைவன் எக்காலமு ் மகிழ்ந்திருப்பதால் 'மகிழ்நனாக' காட்சியளிக்கின்றான் என்பதைக் கலித்தொகை பாடலடிகள் உணர்ந்துகின்றன.
- உலகில் உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமாக இருப்பது அகவொழுக்கம். எல்லாப் பொருட்களையும் விட அகப்பொருளே சிறப்புடையதாக அமைகின்றது.
- தலைவி தன்னிலை உரைத்தல் இல்லை என இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் பரத்தையர் சுதந்திரமாகச் செயல்படும் தன்மை உடையவர்களாய்த் திகழ்கின்றனர்.
- பழந்தமிழ் இலக்கண, இலக்கியத்தில் போற்றப்பட்ட பரத்தையர், இன்றளவு ் சமுதாயத்தில் தனிச்சமூகமாக வாழ்வதைக் காணமுடிகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. இளம்பூரணர்(உ.ஆ.),(1973) தொல்காப்பியம் பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி
2. குளோரியா சுந்தரமதி,இலா.,(1973) சங்க இலக்கிய ் மருதம், கேரளாப் பல்கலைக்கழகம், கேரளா
3. சுப்ரமண்யன்,ந.,(2017)சங்ககால வாழ்வியல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை
4. தட்சிணாமூர்த்தி,அ.,(2013) தமிழர் நாகரிமு ் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. திருஞானசம்பந்தம்,ச.,(உ.ஆ.)(2019) அகப்பொருள் விளக்கம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
6. தேவராஜ்,மு.(பதிப்பு),(2005) பரத்தையர் மாலை, தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,சென்னை.

References

1. Ilampooran (Ed.), (1973) Tolkappiyam Bhattathikaram, Saiva Siddhanta Nulapadippukakkagam, Tirunelveli
2. Gloria Sundaramathi, E., (1973) Sangam Literature Marutham, University of Kerala, Kerala
3. Subramanian, N., (2017) Sangam Life, New Century Book House, Chennai
4. Dakshinamoorthy, A., (2013) Tamil Civilization and Culture, Manivasagar Publishing House, Chennai.
5. Thirugnanasambantham, S., (Ed.)(2019) Content Description, Kathir Publishing House, Thiruvaiyaru.
6. Devaraj, M. (ed.), (2005) Parathaiyar Malai, Department of Tamil Literature, University of Madras, Chennai.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

The Social Reality of Family Presented by Vannadasan's Writings

A. Shanthi Rani[1], Dr. S. Sujatha[2]
1. Assistant Professor, G.T.N. Arts College, Dindigul
eMail: shantha1619@gmail.com
2. Associate Professor, G.T.N. Arts College Dindigul.
eMail: gtnsuja@gmail.com

Abstract

In today's era, since the family depends on the individual and the society depends on the family, every person should realize their duty and strive to live well and express their values without harming others. It is necessary to know how the family should be, its structure, roles and functions, etc. Individual morality greatly contributes to the social development of man. When we live with morality for humanity, our family also improves.; The problems and difficulties that arise in life are only caused by our actions, we should learn to enjoy what we see in life and live it. This article is designed to illustrate the thoughts and truths, Vanadasan has learned from the people he has encountered in his works, as well as the experiences he has had in life.

Keywords : *morality, control, social structure, association, functions of the family. Vannadasan Writings*

வண்ணதாசன் எழுத்துகள் முன்வைக்கும் குடும்பம் குறித்த சமூக யதார்த்தம்

அ. சாந்தி ராணி[1], முனைவர் சா சுஜாதா[2]
1.உதவிப்பேராசிரியர், ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்
2.இணைப்பேராசிரியர். ஜி.டி.என். கலைக்கல்லூரி திண்டுக்கல்.

ஆய்வுச்சுருக்கம்

இன்றைய கால கட்டத்தில் தனிமனிதனைச் சார்ந்தே குடும்பமும், குடும்பத்தைச் சார்ந்தே சமூகமும் இருப்பதால் ஒவ்வொரு மனிதனும் தனது கடமையை உணர்ந்து பிறருக்கு தீங்கு நினையா வண்ணம் நல்நிலையில் வாழ்ந்து மதிப்பீடுகளை வெளிப்படுத்த முற்படுத்த வேண்டும். குடும்பமானது எவ்வாறு இருக்க வேண்டும், அதன் அமைப்பு முறை, பங்கு மற்றும் பணிகள் போன்றவற்றை அறிந்திருத்தல் அவசியமாகும். மனிதனின் சமுதாய வளர்ச்சிக்கு தனிமனித ஒழுக்கமே பெரிதும் துணை செய்கிறது. மனிதனுக்கான அறநெறியுடன் வாழும்பொழுது குடும்பமும் மேம்பாடு அடையும.; வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளும் சிக்கல்களும் நம் செயல்களால் மட்டுமே ஏற்படுவது, வாழ்வில் நாம் காண்கின்ற ஒன்றினை ரசித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய சிந்தனைகளை வண்ணதாசன் தன் படைப்புகளில் தான் கண்ட மனிதர்களிடம் கற்றுக்கொண்ட வாழ்வில் ஏற்பட்ட அனுபவத்தின் மீது பெறப்பட்ட உண்மைகளையும் எடுத்துக்கூறும் விதமாக இக்கட்டுரையானது அமைகின்றது. திறவுச்சொற்கள் அறநெறி, கட்டுப்பாடு, சமூகக் கட்டமைப்பு, கூட்டமைப்பு, குடும்பத்தின் பணிகள்.

குறிப்புச் சொற்கள் : *ஒழுக்கம், கட்டுப்பாடு, சமூக அமைப்பு, கூட்டமைப்பு, குடும்பத்தின் பணிகள்*

முன்னுரை

ஓவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கின்ற சிக்கலான சமூக உறவுமுறைத் தொடர்புகளைத்தான் சமூகம் என்கின்றோம். சமூகம் என்பது மக்களின் தொகுப்பு பல குடும்பங்களின் பல ஊர்களின் தொகுப்பில் உறவுமுறைகளின் வழிமுறைகளை ஏற்படுத்தும் நிறுவனம். சமூகக்கட்டமைப்பின் அடிப்படை ஆதாரமாக விளங்குவதே குடும்பம். ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து குடும்ப வாழ்க்கையினைச் சமுதாயத்தின் நெறிமுறைகளின் படி நடக்கும் பொழுது கூட்டமைப்பு உருவாகின்றது.

தனி மனிதனிடம் குறிப்பிட்ட சில பண்புகள் இயல்பாக அமைந்திருக்கும். சமுதாயத்தில் தனது கடமையை உணர்ந்து பிறருக்குத் துன்பம் ஏற்படுத்தாமல், தன்னால் இயன்ற நன்மைகளைச் செய்து சமுதாய மதிப்பினைக் காத்து நன்னெறிப்படுத்துவதையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்க வேண்டிய தேவை உள்ளது.

வண்ணதாசன் எழுதிய சிறுகதைப்பகுதியிலும், கவிதைகளிலும் குடும்பத்தின் நிலைகள் பற்றியும் அதில் ஏற்படுகின்ற சிக்கல்கள், ஏமாற்றங்கள், சண்டைகள், தீர்வுகள், காதல், திருமணம், பிரிவு, இது போன்ற பல நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இவை சில நேரங்களில் நம் வாழ்க்கையை எண்ணிப்பார்க்கும் அளவிற்குக் கொண்டு செல்கிறது.

குடும்பத்தின் அமைப்பு முறை

குடும்பம் என்பது மக்களால் ஆக்கப்பெற்று கூட்டாகச் சேர்ந்து செயல்படும் பொழுது உண்டாகும் நடத்தை முறையின் மாற்றமாகும். மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகள் பழக்கவழக்கங்கள், மரபுகள் சேர்ந்ததே பண்பாடு. மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல், பொருள்சாராப் பண்புகள், சட்ட திட்டங்கள், நம்பிக்கைகள் இவை அனைத்தும் அடங்கும். அவ்வாறு உருவாக்கப்படும் பண்புகள் மனிதன் பின்பற்றும்படி அமைவதே சிறப்பாகும். குடும்பத்தின் அமைப்பை இதுதான் என்று வரையறுத்துக் கூற யாராலும் இயலாது. இது ஒரு குறிப்பிட்ட நிலையில் தொடங்கி பல நிலைகளைத் தாண்டி அதன் அமைப்பில் முழுமை பெறுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் சமுதாய மரபுடைய மனவாழ்வைத் தொடங்கும் போதுதான் குடும்பம் என்னும் அமைப்பு தோன்றும்.

குடும்பம் பற்றிய சிறப்பியல்புகளை மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி “**பண்பாட்டு மானிடவியல்**” புத்தகத்தில் பலவித கருத்துக்களை ஆராய்ச்சி செய்து வழங்கியுள்ளார். அவர் குறிப்பிடும்பொழுது,

“குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாக இருக்கலாம். பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இடம் பெறவேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும் அவ்வாறு ஓர் ஆணும், பெண்ணும் கணவன் - மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுதுதான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகின்றார்கள். அவர்கள் ஒரே கூரையின் கீழ் உண்டு வாழ்ந்தாலும், காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் - மனைவி என்னும் அமைப்பைக் கொண்டவர்களேயாவர்.”[1] (ப:360)

என்று கூறுவதில் இருந்து குடும்பத்திற்கு அடிப்படைக் காரணமே ஆணும் பெண்ணும் தான் என்பதும், அவர்கள் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் படியான திருமணம் செய்து வாழ்வதையே உண்மையான உறவுமுறை என்று குறிப்பிடுகிறார். இவர்கள் ஒன்றாக வாழ்ந்தாலும், தனித்தனியாக வாழ்ந்தாலும் திருமண பந்தம் இருக்கும் வரை அவர்கள் இருவரும் கணவன் - மனைவி என்னும் அந்தஸ்து உடையவர்களாகவே கருதப்படுவர்.

மனித சமுதாயத்தில் நாகரீகம் வளர்ச்சியடையும் பொழுது அதன் முதற்படி குடும்பம் என்கின்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டதேயாகும். குடும்பங்களில் உறவுமுறைகள் நீண்டு கொண்டே செல்லும்பொழுது வாழ்க்கையும் சீரும் சிறப்புடனும் சிறந்த நிலையில் உயிர்பெற்று வளர்ச்சியடையும்.

தனிமனிதன் என்பவன் குடும்பத்தில் உள்ள உறவினர்களின் உதவியோடு சமுகத்தில் பயணிக்கத் தொடங்குகிறான். அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி. இதை கா.சிவத்தம்பி "**நாவலும் வாழ்க்கையும்**" நூலில் குடும்பத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார்.

"தனிமனிதன் சமுதாய மாற்றங்களிலே பாதிக்கப் பெறுவதும், தனி மனித முனைப்புச் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்துவதும் அத்தனிமனிதனின் சமூக உறவுகள் குடும்பம், சமூகம், நாடு என்ற நிலைகளில் தெரியவரும். இவற்றுள் குடும்பமே முக்கியமானதும் அச்சாணியானதும் ஆகும்"[2] (ப:22)

என்று கூறுவதின் மூலம் சமுதாய மாற்றங்களால் மனிதன் பாதிக்கப்படுவதையும் அத்தகைய சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் ஒரு மனிதன்தான் என்பதையும் அறியலாம். இருப்பினும் சிக்கலுக்கும், தீர்விற்கும் அடிப்படை குடும்பமே என்பதே உண்மை. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்குப் பொருளாதார தன்னிறைவு பெற்றவர்கள்தான் இன்று வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குடும்பத்தில் ஒருவன் கட்டுப்பாடுடனும், ஒழுக்கத்துடனும் வளர்க்கப்படும் பொழுது அவன் நல்லவனாகவும், ஒழுக்கம் உடையவனாகவும் விளங்கி சமூகத்தில் நல்ல மதிப்பீட்டினைப் பெற்றுத் திகழ முடியும். ஒருவனுக்குத் தேவையான பண்பாட்டினை உணர்த்தும் கருவியாகவே குடும்பம் உள்ளது. இதில் அமைதியும், பிரச்சனை இல்லாமலும் இருத்தல் சிறப்பானது. இத்தகைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுமெனில் ஒரு சிறந்த குடும்பத்தின் அங்கங்களான கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவரிடத்திலும் ஒற்றுமையின்மையும், சமாதானமின்மையும் ஏற்படும் பொழுது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட அடிப்படைக் காரணமாகவே உள்ளது. சிலருக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல் அன்றாடத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் வறுமையிலும் வாழ்க்கை நடத்துபவர்களும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

வண்ணதாசனின் குடும்பம் பற்றிய கூற்று

மனித இனத்தின் செயல்கள் உலகிற்குத் தீமை பயப்பதை மிகுதியாகக் கொள்ளாமல் வளங்களை அளவோடு அனுபவித்து வாழ வழிவகை செய்தாலே உலகளாவிய அறங்களை நாம் குறையாது காத்துக் கொள்ள முடியும். மனிதன் தனித்து வாழ விரும்பாமல் மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு வாழ்ந்து பழகிக்கொண்டான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகின்ற

இணைப்புகள் ஒரே வகையினதாகவோ அல்லது வெவ்வேறு வகையினதாகவோ கூட அமையலாம். சமுதாயத்தில் தான் மனிதனின் ஒற்றுமை, பாசம் போன்ற உன்னதமான பண்பு நலன்கள் வளர்வதற்கு முழுமுதற் காரணங்களாகின்றன.

வண்ணதாசன் "**சின்ன விஷயங்களில் மனிதன்**" சிறுகதைப் புத்தகத்தில் நேர்காணல் இரண்டாம் பகுதியில் கூறும் கருத்துக்களை நாம் பார்க்கும் பொழுது மிக எதார்த்தத்தைக் கையாண்டவராகவே தெரிகிறது.

"**வம்ச விருட்சம், குடும்ப வரைபடம் அப்படியொன்றும் என்னிடமில்லை. சீவலப்பேரியின் பக்கத்து கிராமமான குப்பகுரிச்சியிலிருந்து பலசரக்குக் கடை வேலை பார்த்தவர் என் பூட்டனார். அதாவது எங்கள் அப்பாவின் அப்பாத்தாத்தா கு.சிவசங்கரன் பிள்ளை. அப்பாவுக்கு அந்தத் தாத்தா பெயர்தான். அப்பாவையும், அம்மாவையும் தன் 5 வயதுக்குள் இழந்து, தாத்தாவின் பராமரிப்பில் வளர்ந்தவர் அப்பா. ஒரு வசதியான குடும்பத்துப் பேரனான அப்பாவுக்குப் பின்னால் பொதுவுடைமைச் சார்பு ஏற்பட, இப்படிச் சின்ன வயதில் அப்பா அம்மா இல்லாமல் வளந்ததன் உளவியல் ஏதாவது செலுத்தியிருக்குமோ என்று தோன்றுகிறது**"[3](ப:196)

என்று கூறுகிறார். பெற்றோர் முன்னிலையில் வளருகின்ற பிள்ளைகளுக்கும், பெற்றோர்கள் இல்லாத சூழ்நிலையில் வளருகின்ற பிள்ளைகளின் மனநிலையில் ஏற்படுகின்ற உளவியல் தாக்கங்களை இங்கு பதிவு செய்துள்ளார்.

குடும்பம் என்பது வம்சாவளியையும் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்டது. ஓர் சமூகத்தின் முன்னேற்ற வளர்ச்சிக்கு அதுவே ஆதாரம் என்பதையும் அறியலாம். வாழ்க்கை துன்பங்கள் மிகுந்தது. அதில் கிடைத்தவற்றை ஏற்றுக்கொள்ளாமல் கிடைக்காதவற்றை நினைத்து அல்லல் படுவதும் மனிதனின் இயல்புகளில் ஒன்றாகவே உள்ளது.

மனிதனுக்கு குடும்ப அமைப்பு மிகமுக்கியமான ஒன்று. இவ்வமைப்பை இழந்த பிள்ளைகளும் ஒழுங்கான குடும்ப அமைப்பு இல்லாத பிள்ளைகளும் பெரும்பாலும் குற்றவாளிகளாகவே உள்ளனர். குடும்ப அமைப்பு என்பது பொதுவாக நாம் நினைப்பது போன்று சாதாரண அமைப்பு அல்ல. அது மனித இனத்தை வழிநடத்தும் உயர்ந்த பல்கலைக்கழகமாகும். எத்தனையோ புத்தகங்கள் படித்து சொல்லிக் கொடுக்காத கல்வியை எளிதாக போதிக்கும் ஆசானாக உள்ளது.

குடும்பத்தின் அறநெறி

மனிதனின் சமுதாய வளர்ச்சிக்குத் தனிமனித ஒழுக்கமே பெரிதும் துணை செய்வது. ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை உயர்வைக் கொடுக்காது. ஒழுக்கம் இல்லாதவன் எவ்வளவு செல்வம் வைத்திருந்தாலும் யாரும் மதிக்க மாட்டார்கள். மனிதன் ஒழுக்கத்திற்குக் கட்டுபட்டு வாழ்க்கை நடத்த வேண்டும். அப்போதுதான் சமுதாயம் பாதுகாக்கப்படும் உலகில் நடைபெறும் தீங்கும் குறையும்.

குடும்பத்தின் தோற்றம் பற்றி ஆராயும் பொழுது மனித சமூகத்தில் அதன் அமைப்பும், செயல்பாடும் வெவ்வேறு நிலைகளில் அறியப்படுவதால் மனிதன் அவற்றைக் கடைபிடிப்பதில் சில சிக்கல்களும் பின்பற்ற இயலாத நிலையும் ஏற்படுகின்றன. மனித சமூகத்தில் குடும்பமானது பல்வேறு காரணிகளை முன் வைத்து பலவாறாகக் கிளைத்து வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன.

வண்ணதாசன் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது. அவரவர் சேர்கின்ற இடத்தைப் பொறுத்தே மாற்றம் பெறுகின்றனர். இதற்கு மனிதனின் தேடலே காரணம் என்பதை விளக்க முற்படுகிறார். "**சின்னு முதல் சின்னு வரை**" சிறுகதைப்பகுதியில்,

"வங்கி வாழ்க்கை எவ்விதத்திலும் அவரது இயல்பு வாழ்க்கைக்கு எதிராக இருந்ததில்லை என்பதை அவரது படைப்புகள் நிரூபண சான்றாவணங்களாக மெய்ப்பிக்கின்றன. பணி இட மாற்றங்களின் பொருட்டு நகர்ந்து சென்ற இடங்களில் காணும் மனிதர்களே வாழ்க்கை சார்ந்த தேடலின் பாடமாகவும் பாடபேதங்களாகவும் இருந்துள்ளனர்"[4] (ப:1)

என்று கூறுகிறார். மனிதனின் தேவைக்குக் காரணம் தேடல்களும் இடம்பெயர்வுகளுமே. இத்தகைய தேடல்களுக்கும் இடநகர்வுகளுக்கும் முக்கிய காரணம் குடும்பம் சார்ந்த தேவைகளாக இருப்பதே. தேவைகளைப் பூர்த்தி செய்ய நினைப்பதால் தான் இத்தகைய மாற்றங்களைக் காணும்படியான சூழல் ஏற்படுகின்றது.

மனிதனுக்கு இடப்பெயர்வும் தேடலும் இருக்கும் வரை மாற்றங்களைக் காண வேண்டும் என்பது எழுதப்படாத நியதியாகும். ஆனால் இதையே தேடலும், நகர்வும் இல்லை என்றால் நம் வாழ்வானது எவ்வாறு இருக்கும் என்பதை வண்ணதாசன் எழுதிய "**நொடி நேர அரை வட்டம்**" கவிதையில்,

"ஒரு பாறையில் / ஒரு கூழாங்கல்லில் / ஒரு மணல் பரலில் / நுழைய விரும்பினேன் / கதவைத் திறக்கச் சொல்லிக் கெஞ்சினேன். / எல்லாப் பக்கங்களிலும் நாங்கள் திறந்தே இருக்கிறோம் / மூன்றுமே சொல்லின / எல்லாப் பக்கமும் திறந்த வீட்டுக்குள் நுழையத் தெரியாத திகைப்பில் / வெளியேயே நிற்கிறேன் / இத்தனை காலமும்"[5] (ப:55)

என்று கூறுகிறார். நாம் எதையும் தேடவில்லை என்றாலும் வாழ்க்கை நகர்ந்து கொண்டுதான் இருக்கும். நாம் எந்த மாற்றத்தையும் காணாமல் சிக்கல்களுக்குத் தீர்வுகளைக் காணாமல் பிரச்சனைகளை மட்டுமே வைத்துக் கொண்டு நாம் வாழ்ந்து கொண்டிருப்போம். ஆகவே மாற்றமும், தேவையான நேரங்களில் சில நகர்வும் நமக்கு முக்கியமாகும்

சமுதாய அமைப்பில் அனைவரும் ஒற்றுமையாய் இருந்தாலும் தலைவனே உயர்ந்த நிலையைப் பெற்றுத் திகழ்கிறான். அவனே குடும்பத்தை வழிநடத்தும் பொறுப்பினைக் கொண்டிருக்கிறான். இத்தகைய நிலையில் தலைமைக்குரிய பண்பினைப் பெற்றுத் திகழ்வது மிக அவசியமாகும். தலைவன் என்பவன் தன்னை அர்ப்பணம் செய்பவனாகவும் ஏற்றத்தாழ்வின்றி விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பான்மை உடையவனாகவும், இன்ப துன்பங்களைச் சமமாக பங்கிடுபவனாகவும் நடப்பவற்றை மனதார ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தோடும் திகழ வேண்டும்.

நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சரி என்று குடும்பத்தில் வாழும் தலைவன் எண்ணுதல் முற்றிலும் தவறானது. குடும்பத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒளிவு மறைவு இன்றி ஒரு பிரச்சனைக்குத் தெளிவான முடிவினை எடுக்க வேண்டும் என்று கூற நினைக்கும் வண்ணதாசன் "**பெயர் தெரியாமல் ஒரு பறவை**" சிறுகதைப்பகுதியில்,

"வீட்டு பொம்பளைகிட்ட என்றைக்கு யோசனை கேட்டாரு. இன்றைக்கு கேட்க, அப்படிக் கேட்டாத்தான் எம்புட்டோ இதுக்குள்ளே குடும்பம் முன்னிலைக்கு வந்திருக்குமே. முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கிற மனுஷனை என்ன பண்ண"[6] (ப:96)

என்று கூறுவதின் மூலம் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அன்றைய காலத்தில் இருந்த பெண்ணடிமைத்தனம் இன்றைய சூழலில் இல்லை என்றாலும். பெண்கள் மீதான அடக்குமுறைகள் இன்றளவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சில இடங்களில் பெண்களை இழிவுபடுத்துவதும், பொருட்படுத்தாத சூழலும் நிலவுவதைக் காணலாம்

சமூகத்தில் ஒரு மனிதனை அடையாளப்படுத்துவது அவனது நடத்தைகளே. அந்த நடத்தைகளே மதிப்பீடுகளாகவும், விழுமியங்களாகவும் இருப்பது. ஒரு தனிமனிதன் நற்பண்புகளைப் பின்பற்றுவதன் மூலமே குடும்பமும், சமூகமும் வளர்ச்சி பெறும். உலகத்தில் அறத்தைச் சுட்டிக் காட்டும் முறைகள் கணக்கற்றவை இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் காட்டக்கூடியவையாக விழுமியம் உள்ளது. மக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் அனுபவங்கள், நெறிகள் அனைத்தும் சமூக நல்லிணக்கத்துடனும், கட்டுக்கோப்புடனும் இருப்பதற்கு உதவி புரிகின்றன.

மனிதனுடைய மனம் தான் அனைத்திற்கும் முக்கிய காரணமாக உள்ளது. சிந்திப்பதையும் சிந்தித்ததை நடைமுறைப்படுத்துவதையும் மனமே கொண்டுள்ளது. மனிதனுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்ற பெரும் செல்வம் மனம். விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டினை பிரித்துக் காட்டுவதே இந்த மனம் தான். இத்தகைய மனம் நன்மையையும் செய்கிறது சில நேரங்களில் தீமையையும் செய்கிறது. இதனால் சேர்ந்த குடும்பங்களும் உண்டு சில நிமிடங்களில் பிரிந்த குடும்பங்களும் உண்டு. எனவே மனமானது வார்த்தைகளுக்கு அடிப்படையாக உள்ளது.

வண்ணதாசன் "பெயர் தெரியாமல் ஒரு பறவை" கதைப்பகுதியில் வார்த்தைகளால் ஏற்படும் பிரச்சனைகளைப் படம் பிடித்துக்காட்டியிருப்பதை,

"இந்த வார்த்தையை எல்லாம் இந்த மனிதன் பேசவில்லை. இந்தச் சம்பளம், இந்தச்சம்பளத்தை மீறி நாலு பக்கமும் உதைத்துக் கொண்டு கிடக்கிற வாழ்க்கை இந்த மனுஷனை இப்படிப் பேசச்சொல்லுகிறது. இவன் நம்மிடம் பிரியமாகவே இருந்தான். பிரியமாக இருந்தே இந்த நாலு குழந்தைகளையும் பெற்றான். இப்போதும் பிரியத்துக்குக் குறைச்சலில்லை"[7] (ப:53)

என்று கூறுகிறார். மனிதன் தானாக எதுவும் பேசுவதில்லை. சூழ்நிலைதான் மனிதனை மாற்றுகிறது பணம் மனிதனின் மதிப்பீட்டினையும் எடுத்துக்காட்டுகிறது. செல்வாக்கில் உயர்ந்தவன் கீழ்நிலையில் இருப்பவனை ஏளனமாகப் பார்க்கும் எண்ணம் இன்றளவும் நிலவிக்கொண்டிருக்கின்றது. அனைவரையும் சமமாகப் பார்க்கும் எண்ணம் அவ்வளவு சீக்கிரம் மனிதனுக்கு ஏற்படுவதில்லை.

வண்ணதாசன் **"உருப்பளிங்கு"** கவிதையில் குறிப்பிடும்பொழுது வார்த்தையின் அளவினை,

"**எவ்வளவு சொற்கள் /எவ்வளவு மேற்கோள்கள் / எவ்வளவு தர்க்கங்கள் / எவ்வளவு சமன்பாடுகள் எவ்வளவு கேள்விகள் / எவ்வளவு நிரூபணங்கள்! / இன்று வெயில் அதிகம் / இதைச் சொல்ல வருகிறாய், / அவ்வளவு தானே."**[8] (ப:69)

என்று கூறுவதன் மூலம் மனிதனின் துன்பநிலைகள் நம் கண்முன் நிற்கின்றன. மனிதனுக்கு ஆயிரம் கேள்விகளும் அதற்கான விடைகளும் தெரிந்திருந்தாலும் அது அவனுடைய

தேவைக்கு என்று வரும் பொழுது பயன்படுவதில்லை. மனமானது புதிதாக, புதியவரின் ஆறுதல் வார்த்தைகளை நாடியே செல்கிறது.

வாழ்க்கை நிர்பந்தங்களில்லாமல் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருப்பது எதனிடமும் அதிகாரமோ அகந்தையோ கொள்ள வாழ்வில் இடமில்லை. வாழ்க்கை என்றும் நமக்காகக் காத்திருப்பதில்லை அது ஒரு பூவைப்போல் மலர்ந்து இருக்கிறது. அதன் அழகைக் கண்டு ரசித்து இன்புறவேண்டும். வாழ்வு ஒருபோதும் நம் வற்புறுத்தலுக்காகப் பணியாது என்று வண்ணதாசன் குறிப்பிடுகின்றார்.

குடும்பத்தின் பணிகள்

குடும்பத்தின் இன்றியமையாத பணிகளுள் ஒன்று குழந்தைகளுக்குக் கற்பிப்பது. இளங்குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகள் உயர்திணை பண்பாட்டினை அறிந்து செயல்படவும், பொறுப்புடைய மனிதராகச் செயற்படவும், குழந்தைகளுக்குத் தேவையானதை எவ்வாறு முயற்சி செய்து பெறவேண்டும் என்பதற்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. சமுதாயத்தின் நெறிமுறைகள் அன்றாடம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள், பொருளாதாரச் செயல்களைச் செய்யும் முறைகள் சமுதாய, சமய வாழ்வில் நாம் பின்பற்ற வேண்டிய கடமைகள் போன்ற எண்ணற்ற வகைகளில் குடும்பம் குழந்தைகளுக்குக் கற்றுத் தந்து அவர்களைச் சமுதாயத்தின் சிறந்த குடிமக்களாக மாற்றுகின்றது.

வண்ணதாசன் “**மனுஷா மனுஷா**” சிறுகதை உறவுகளின் உன்னத நிலையினை அறியும்படியாக உள்ளது. ஒரு நல்ல குடும்பமே சிறந்த பல்கலைக் கழகத்துக்கு அடிப்படை என்று கூறுகிறார். குடும்பம் சிறந்து இருந்தாலே அனைத்து விதமான மதிப்பீடுகளையும் கற்றுக்கொள்ள முடியும். இதனை,

“**ஒரு மனிதன் கல்யாணம் கட்டுவதிலோ, பிள்ளை குட்டி பெற்றுப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவதிலோ, மனைவியோடு ஆட்டோ பிடித்து சினிமாவுக்குப் போவதிலோ சினிமாவின் சராசரிக் கிளர்ச்சியுடன் இருக்கிற மனைவியுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழித்துப் படுத்துத் தூங்குவதிலோ இதில் எல்லாம் பெரிய அதிசயம் ஒன்றுமில்லை.**”[9] (ப:12)

என்று கூறுவதின் மூலம் குடும்பத்தின் தலையாய பணி என்ன என்பது நமக்குப் புலனாகிறது. திருமணம் என்பது கடமைகளின் இருப்பிடமாகும். நம்மை முழு மனிதனாக மாற்றுவது திருமணமே. நம்மை நாமே அறிந்து கொள்ளவும் நாம் பிறரை அறிந்து கொள்ளவும் உதவுவது திருமணம் எனும் பந்தமே.

வண்ணதாசன் **“என் ஓவியம் உங்கள் கண்காட்சி**” கவிதையில் வாழ்க்கைக்குள் இருந்து கொண்டே வாழ்க்கையைத் தேடிக்கொண்டு இருப்பதை குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

“ரொட்டியின் நுரைத்த மெல்லிய / குழிகளுக்குள் இருந்து எறும்புகள் வருகின்றன / ஒரு ரொட்டிக்குள் நுழைவது எப்படி என / இத்தனை பசித்த வருடங்களிலும் / நான் அறிந்தேனில்லை / எப்போதும் ரொட்டிக்கு வெளியிலேயே / இருக்கிறவனாகவே நேர்ந்துவிட்டது / எறும்புகள் உள்ளேயும் வெளியேயும் / இருக்கும் திறமைசாலிகள் / ரொட்டியை விட எறும்பு சிறியது.”[10] (ப:49)

என்று கூறுவதைக் காணும் பொழுது புற உலகில் காணும் போலியான நடைமுறைகளைக் கண்டு நம் கண் முன் ஓடிக்கொண்டிருக்கும் உண்மை நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாமல்

இருக்கிறோம். வண்ணதாசன் கூறிப்பிடுவது என்னவெனில் ரொட்டித் துண்டைத் தேடிச்செல்லும் எறும்பிற்குத் தெரியாது நம்மைவிட அது பெரிது என்று இதில் நேர்மறையான சிந்தனையும் உண்டு சில எதிர்மறையான சிந்தனையும் உண்டு. வாழ்க்கையும் ரொட்டித்துண்டைப் போன்றதே. நம் பிரச்சனை அதில் எறும்பைப் போல் இருந்தால் மிகச் சிறந்ததே.

வாழ்வு ஒரு சித்திரம் அதை அழித்து நம் வற்புறுத்தல்களுக்குப் பணிய வைக்க முயற்சிக்கக் கூடாது. அதன் இயல்பில் அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பிறர் செய்வதைப் பார்த்து பிரதி எடுப்பதிலோ, நகல் செய்வதிலோ, அதையே பின்பற்றுவதிலோ வாழ்க்கை சிறப்படைவதில்லை.

குழந்தை வளர்ப்பில் குடும்பத்தின் பங்கு

மனிதன் சேர்க்கையே குடும்பத்தையும், குடும்பத்தின் சேர்க்கையே சமூகத்தையும் தீர்மானிக்கின்றன. அத்தகைய குடும்பத்தில் வாழும் மனிதன் உயர்வையும், மரியாதையையும், மதிப்பீடான வாழ்க்கையையும் வாழக் கடமைப்பட்டிருக்கிறான். கணவன் மனைவி குழந்தைப்பேருடன் சிறந்த பணியோடு வாழ்க்கை நடத்துபவனின் மதிப்பீடு சமூகத்தில் உயர்வுதான். பணம், பொருள், பதவி, வீடு, வாகனம், எனப் பலதரப்பட்ட பொருட்கள் இன்று மனிதனின் வாழ்க்கையிலும் சிந்தனைகளிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

பெற்றோர்கள் சமுதாய வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தம் குழந்தைகளுடன் செயல்களை நிறைவேற்றும் பொழுது அது குறித்த நுணுக்கங்களைக் குழந்தைகள் பெற்றோர்களின் விளக்கங்கள் மூலமும் தாமே நேராக உற்று நோக்குதல் மூலமும் அறிந்து கொள்கின்றனர். குழந்தையானது தம் பண்பாட்டை தானாகவே உற்றுநோக்கி அறிவதன் மூலமே அதனை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். குழந்தைகள் பெரும்பாலான சூழ்நிலைகளில் அனைத்தையும் அறிந்து கொள்வது குடும்பச் சூழலில்தான்.

குடும்பத்தில் வாழ்கின்ற பெரிய மனிதர்களே இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டி ஆவர்கள். இளையோர் கூறும் கருத்திற்கு மூத்தோர்கள் மதிப்பும், மரியாதையும் தருவது மிக அவசியமாகும். இந்நிலையில் முரண்பாடுகள் களைவதற்கு வாய்ப்பும் ஏற்படுகின்றது. இதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கையும், தற்சார்பும், பாதுகாப்பும், முயற்சி செய்யும் பழக்கமும் ஏற்படுகின்றது.

தனிமனிதன் என்பவன் குடும்பம் என்னும் கட்டுக்குள் வரும்பொழுது அவனது எதிர்பார்ப்புகளும், தேவைகளும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அதைவிட பொறுப்புகள் மிகமிக அதிகமாகவே உள்ளது. வண்ணதாசன் “**பெயர் தெரியாமல் ஒரு பறவை**” யில் குறிப்பிடும்பொழுது,

“**வரையறைக்கு உட்படாத உறவுகளும் பெயர்களுக்கு அப்பாற்பட்ட முகங்களும் மின்னல் பொழுதில் தகவமைந்து விடுகிற நுட்பமான சில தருணங்களைக் கண்டடையும் சாத்தியங்களையும் இந்த வாழ்வு முன்வைக்கிறது**”[11](ப:10)

என்று கூறுகிறார். இதன் மூலம் வெறுமையாக இந்த வாழ்வை எண்ணிக் கொண்டு இருக்கும் நிலைமாறி தனிமனிதன் குடும்ப அமைப்பில் நுழைவதும் அதன் பிறகு குழந்தைகள் அதற்கான தேவைகள் என்று ஏற்படும்பொழுது வரையறைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளே நம் வாழ்க்கையை ஆட்சி செய்;ய ஆரம்பிக்கின்றன.

“**என் ஓவியம் உங்கள் கண்காட்சி**”யில் கண் மூடி கண் திறக்கும் நேரத்தில் அனைத்தும் நடந்தேறுகிறது, இத்தகைய இடர்பாடுகளுக்குக் காரணம் மனிதனின் அறியாமையே என்பதையும் அறிய முற்படவேண்டும் என்பதை,

“இடை வழி நிலையத்தில் / நடு நிசியில் ஏறி / முன்பதிவு இருக்கை தேடும் / மென்வெளிச்ச நகர்வில் பொங்கிப் பொங்கி அழுதபடி இருந்த / கீழ்ப்படுக்கைக்கார முதியவர் / அவரசமாகக் கண்துடைத்து நேரம் கேட்டார். / நேரம் ஆயிற்று / என்று மட்டும் சொன்னேன்”[12] (ப:28)

என்கிறார். நாம் ஏறி அமரும் நேரத்தில் நமது பயணங்கள் முடிவதை வண்ணதாசன் குறிப்பிடும்பொழுது வாழ்க்கையை நாம் அறிந்து கொண்டு அனுபவங்களைப் பெற்று நிறைவாக வாழ நினைக்கும் பொழுது வாழ்க்கைப் பாதை முடிந்து போவதையும் அறிய முடிகிறது எனக் குறிப்பிடுகிறார்.

“**மனித விழுமியங்கள்**” நூலில் வாழ்க்கையைப் பற்றிய சில கருத்துக்களைக் குறிப்பிடும்பொழுது துன்பம் என்பது இயல்பாக இருப்பது என்பதையும், அதற்கான தீர்வுகள் கண்டறிதல் மூலமே கிடைக்கும் என்பதையும்,

“இயற்கை கற்றுத் தந்த பாடத்தோடு இனி மனித வாழ்க்கையை நோக்குவோம். மனித வாழ்க்கை துன்பங்கள் நிறைந்துள்ளது என்பது பரவலாகப் பேசப்படுகின்ற பேச்சு. இன்று நேற்றல்ல, மனித நாகரீகம் தொடங்கிய காலத்திலிருந்தே இவ்வாறாகப் பேசப்பட்டு வருவதை நாம் அறிவோம். காலத்துக்குக் காலம் பல ஞானிகள் தோன்றினர், சமயப் பெரியோர்கள் உருவாகினர் மனித வாழ்க்கைத் துன்பங்களுக்குரிய காரணங்களைக் கூறி அத்துன்பங்களிலிருந்தும், மனிதர்கள் விடுதலை பெறுவதற்கு வழி வகைகள் யாவை என்பதையும் கூறிப்போந்தனர்.”[13] (ப:1)

என்று குமாரசாமி சோமசுந்தரம் குறிப்பிடுகிறார். எனவே பிரச்சனைகள் ஒன்றாக இருந்தாலும் அதற்கு தீர்வுகளை நாம் பல வழிகளில் கண்டறிவது நம் கையில் தான் உள்ளது. மனிதர்களாக உருவாகிய நாள் முதலே பிரச்சனைகளும் உருவாக ஆரம்பித்தன. அதோடு தீர்வுகளையும் முன்னோர்கள் வகுத்து வைத்தனர். ஓர் இடத்திற்குச் செல்ல பல வழிகள் இருக்கும் பட்சத்தில் ஒரு வழி தான் வேண்டும் என்று நினைப்பது நம் அறியாமையே.

அக்காலத்தில் வாழ்ந்த உயர்ந்தோர்களும் அறிவில் சிறந்தோர்களும் நானே பெரியவன், அனைத்திலும் உயர்ந்தவன் என்ற அகந்தைக் குணத்தைப் பெற்றிருக்கவில்லை. சிறு உயிர்களுக்குக் கூட தீங்கு ஏற்படாத வகையிலே வாழ்ந்து வந்தனர். சிறுசிறு சங்கடங்கள் நேர்ந்தாலும் அதைப் பெரியதாக எடுத்துக்கொள்ளாமல் பொறுமையுடன் மனம் தளராமல் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தனர். உண்மை, பொய் இரண்டையும் ஆராய்ந்து நடுநிலையுடன் செயல்பட்டனர். அத்தகைய உயர்வான சான்றோர்கள் வாழ்ந்து சமூகத்தின் மதிப்பீட்டினைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

வண்ணதாசன் “**ஒளியிலே தெரிவது**” சிறுகதையில் சில நேரங்களில் கற்பனையான விஷயங்களைத் தேடி அலைவதைக் குறிப்பிட நினைக்கும் ஆசிரியர்,

“எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு இருந்தேன் என்று சொன்னால் அது இந்த நேரத்தில் அந்தப் பக்கத்துக்காக எதிர்பார்க்கிற பதிலாக இராது. இப்படியே அடுத்தடுத்துப் பின்னால் திரும்பிப் போவதில் தென்படும் தொடர்பற்ற சித்திரங்களின் மாய நிறத்தை மனம் எப்படித் தேர்ந்தெடுத்துக் குழைகிறது”[14](ப:122)

என்று கூறுகிறார். அந்தக்காலத்தில் கற்பனையான விஷயங்களை எண்ணி வாழ்க்கையை யாரும் நகர்த்தவில்லை. உழைப்பினை மட்டுமே கருத்தில் கொண்டு தன் குடும்பத்திற்காக முன்னேறிச்சென்று அனைவரிடமும் மதிப்பீட்டினை வளர்த்துக் கொண்டனர். இன்றைய நிலையில் கனவுகள் மட்டுமே மனிதனை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கிறது.

குடும்பத்தின் மற்றொரு பணி குடும்ப உறுப்பினர்களை அன்புடன் நடத்துவதாகும். குறிப்பாக இளங்குழந்தைகளிடம் அன்பினைப் பேணும்போது அவர்களும் அதனைப் பின்பற்றி வாழும்பொழுது வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகள் மீது செலுத்தும் அன்பு, பாசம், பரிவு, அரவணைப்பு, கவனிப்பு முதலியன குழந்தைகளுக்குப் பாதுகாப்பான உற்சாகமான வாழிடச் சூழலை ஏற்படுத்தித் தருகின்றன. அதனால் குழந்தையின் மனவளர்ச்சி மிகவும் உகந்த நிலையில் அமைவதால் சமுதாயம் போற்றிக் காக்கும் பண்புகளை மதிக்கும் நல்ல ஓர் உறுப்பினர்களை உருவாக்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

“**பெயர் தெரியாமல் ஒரு பறவை**”யில் குழந்தைகளின் இயல்பான இயற்கையான குணாதிசயங்களைக் குறிப்பிடுகிறார். இதை நாம் அறியும் பொழுது சிறு பிள்ளையாகவே வாழ்வு இருந்திருக்கலாமோ என்று எண்ணும் அளவுக்கு எண்ணம் சென்றுவிடுகிறது.

“பெரியது ஆக ஆகத்தான் அடியையும் வலியையும் கோபத்தையும் மறக்கத் தெரியவில்லை. சிறு பிள்ளைகள் உடனடியாகவே மறந்து விடுகின்றன. இத்தனை அடிபட்டதை அது ஞாபகம் வைத்திருப்பது மாதிரியே தெரியவில்லை. சந்தோஷமாக இருக்கிறது. பிரியமாக இருக்கிறது. தம்பியுடன் விளையாடுகிறது”[15] (ப:57)

என்று கூறுகிறார். ஏனெனில் குழந்தையின் மனதில் மட்டுமே பழிவாங்கும் எண்ணமும், வஞ்சக எண்ணமும் நிலைப்பதில்லை. அப்பொழுது நடக்கும் பிரச்சனைகளை அப்பொழுதே மறந்து விடுகின்றனர். அத்தகைய மனம், வளர்ந்த பிறகு இருக்கிறதா? என்பது கேள்விக் குறியாகத்தான் உள்ளது. சில நேரங்களில் நம் மனமும் சிறுபிள்ளைகளைப் போல இருப்பதையே விரும்புகின்றது. இன்றைய வாழ்க்கை நெருக்கடிகளும் அவசரங்களும் நிறைந்தது. எதையும் நின்று நிதானித்து அழகில் ஈடுபடுகிற அவகாசத்தை தருவதில்லை. இந்த வாழ்க்கை மனிதனை இயந்திரமாக மாற்றிவிட்டது

வண்ணதாசன் **“உருப்பளிங்கு”** கவிதைப்பகுதியில், நமக்கு இருப்பது போல் தோன்றும் அனைத்தும் சில நேரங்களில் இல்லாமல் போவதும் இயற்கையே என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில்,

“இப்போது பார்த்தேன் / எல்லாம் இருக்கிறது / என்ற வரியின் கீழ் எழுதப்பட்டிருக்கிறது / ஒன்றும் இல்லை”[16] (ப:75)

விளைகிறார். கவிஞர் குழந்தைகளுக்கு எல்லாம் தான் இருக்கிறது. கோபம், பிடிவாதம், அழுகை இன்னும் சில, ஆனால் அவை ஒன்றும் இல்லாமல் போய்விடுகிறது. சிறிது நேரத்தில் குழந்தையின் குணம் அவ்வளவு மென்மையாக உள்ளது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். வாழ்வில் ஒவ்வொன்றும் அதனதன் சுழற்சியில் நடந்தே தீர்கிறது. எதற்காகவும் வாழ்வு காத்திருப்பதில்லை. வாழ்வு தரும் வாய்ப்புகளுக்கான தன் அழைப்பிதழ்களை நீட்டிய வண்ணம் உள்ளது.

காலம் வாழ்வின் நிகழ்வுகளை அதன் போக்கிலே நகர்த்திக் கொண்டிருக்கின்றது. வாழ்வு என்பது அன்றன்று வாழ்ந்து தீர்க்க வேண்டிய ஒன்று. அது நிகழ்வின் யாதார்த்தம் மட்டுமே. புதுயுகம் பிறக்குமென்ற எதிர்பார்ப்புத் தேவையில்லை. நிகழ்காலத்தில் இருக்கின்றது வாழ்க்கை, காலச்சூழலே வாழ்வை எதிர்கொள்ளும் ஆற்றலை மனிதனுக்குத் தேடித்தருகின்றது.

பார்வை நூல்கள்

1. 1.பக்தவத்சல பாரதி. “பண்பாட்டு மானுடவியல்”, மணிவாசகர் பதிப்பகம், 8,7 சிங்கர்
2. தெருபாரிமுனை, சென்னை, முதற்பதிப்பு - 1990.
3. 2.சிவதம்பி.கா “நாவலும் வாழ்க்கையும்”, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு
4. 1979.
5. 3.குமாரசாமி சோமசுந்தரம். “மனித விழுமியங்கள்”, ரஜி வெளியீடு, 73, 2/1
6. ிகாரை லேன், கொழும்பு இலங்கை, முதற்பதிப்பு 1995
7. 4.வண்ணதாசன், “சின்ன விஷயங்களில் மனிதன்”நேர்காணல் - 2, “சின்னு முதல் சின்னு வரை”, “நொடி நேர அரை வட்டம”;, “பெயர் தெரியாமல் ஒரு பறவை”,“உருப்பளிங்கு”, “மனுஷா மனுஷா, “என் ஓவியம் உங்கள் கண்காட்சி”, சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை, முதற்பதிப்;பு - 2019

References

1. Bhakthavathsalabharathi. "Cultural Anthropology", Manivasagar Publications, 8/7, Singer Street, Parimunai, Chennai, First Edition – 1990.
2. K. Sivathamby. "The Novel and Life", Thamizh Puththakalayam, Chennai, First Edition 1979.
3. Kumarasamy Somasundaram. "Human Values", Raji Publishing, 73, 2/1 Viharai Lane, Colombo, Sri Lanka, First Edition 1995.
4. Vannadasan, "Man in Small Things" - Interview 2, "From Chinnu to Chinnu", "A Half Circle in a Moment", "A Bird Without a Name", "Mirror Fragment", "Manusha Manusha", "My Painting, Your Exhibition", Sandhya Publications, New No. 77, 53rd Street, 9th Avenue, Ashok Nagar, Chennai, First Edition – 2019.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

SIDDHARKALIN ATTANGAM

Dr. K. KALEESWARI
Assistant Professor, Department of Tamil
G.T.N.Arts College, Dindigul
Email : kamuthamizh23@gmail.com ORCiD : 0009-0007-9572-5352

Abstract

Indian philosophy has constructed many methods to reach God. In their place, Tamil poets found simple methods to realize God. Among these methods, yoga occupies an important place. Various yoga systemsAmong them, Atanga, Kundalini, Hatha, and Tantric yoga systems occupy an important place. Atanga consists of eight elements: Iyama, Niyama, It includes eight methods. Iyama and Niyama refer to moral positions. Asana is the keeping of the body in a position. Pranayama is the breathing exercise. Pratyayakaram is the deep contemplation of something. Dharana is the fixing of the mind on something.Asana, Pranayama, Pratyeka, Dharana, Dhyana, and Samadhi.Meditation is the concentration of the mind, Samadhi is the state of ecstasy. The yoga system of the Siddhas is to stabilize the body and mind. To create moral systems. The aim of the Siddhas is to preserve the human body from destruction and to realize God within the body.

Key Words : Yoga, Siddhars, Pranayama, Dhyana, Samadhi.

சித்தர்களின் அட்டாங்கம்

முனைவர் கா. காளீஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்.
Email : kamuthamizh23@gmail.com ORCiD : 0009-0007-9572-5352

ஆய்வுச்சுருக்கம்

இந்திய மெய்யியல் இறைவனை அடைவதற்கு பல வழிமுறைகளை கட்டமைத்துள்ளது. அவற்றுக்கு மாற்றாக தமிழ்ச்சித்தர்கள் இறையை உணர்வதற்கு எளிய வழிமுறைகளைக் கண்டறிந்தனர். அவ்வழிமுறைகளுள் யோகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பல்வேறு யோகமுறைகளைக் கட்டமைத்துள்ளனர்.அவற்றுள் அட்டாங்கம், குண்டலினி, ஹட, தாந்திரீகம் போன்ற யோகமுறைகள் முக்கிய இடத்தைப்பெறுவன. அட்டாங்கமானது இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டு முறைகளை உள்ளடக்கியது. இயமம், நியமம் ஒழுக்க நிலைகளைக் குறிப்பது. ஆசனம் என்பது உடலை ஒரு நிலையில் இருத்துவது. பிரணாயாமம் என்பது மூச்சுப்பயிற்சி. பிரத்தியாகரம் என்பது ஒன்றினை ஆழ்ந்து சிந்திப்பது.தாரணை என்பது ஒன்றில் மனதினை நிலைநிறுத்துவது.தியானம் என்பது மனதினை ஒருமுகப்படுத்துவது, சமாதி என்பது மோனநிலை. சித்தர்களின் யோகமுறையானது உடலையும் மனதினையும் நிலைப்படுத்துவது.ஒழுக்க முறைகளை உருவாக்குவது. மனித உடலை அழியாமல் காத்து உடலினுள் இறையை உணர்வது சித்தர்களின் நோக்கமாகும். அந்நோக்கத்திற்காக சித்தர்கள் கையாண்ட வழிமுறையே யோகமாகும்.

குறிப்புச்சொற்கள் : *யோகம், சித்தர்கள், ஆசனம், சமாதி, பிரணாயாமம்*

முன்னுரை

ஒருமனிதன் இறைவனை அடைவதற்கு பல்வேறு நெறிமுறைகளை இந்தியத்தத்துவங்கள் பரிந்துரை செய்திருக்கிருக்கின்றன. தமிழ்ச்சித்தர்கள் இறைவனை, இறைமையை மனித உடலின் மூலம் எளிதில் உணரலாம் என ஒரு புதுமையைத் தனது மெய்யியல் நெறியாகக் கைக் கொண்டனர். அவற்றுள் யோகம் எனும் கொள்கையும் ஒன்று. யோகத்தின் வேர்களைத் திருமூலரிலிருந்து காணமுடியும். சமூக அக்கறையுடன் செயல்பட்ட தமிழ்ச்சித்தர்கள் தீட்டு எனக் கருதப்பட்ட மனித உடலை யோகத்திற்கான கருவியாகக் கருதினர். யோகமானது அட்டாங்கம், குண்டலினி, ஹட யோகம், தாந்திரீக யோகம் எனப் பல வகைகள் உள்ளன. அவற்றுள் அட்டாங்க யோகமானது இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டு யோகமுறைகளை உள்ளடக்கியதாகும். தமிழ்ச்சித்தர்கள் அட்டாங்க யோகத்தையும் குண்டலினி யோகத்தையும் தமது பாடல்களில் அதிகமாகப் பதிவு செய்துள்ளனர். அட்டாங்க யோகத்தின் நிலைகளும் அவற்றின் சிறப்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

யோகம் :வரையறை

தமிழ்ச்சித்தர்கள் மனித உடலை அழியாமல் காக்க மணி, மந்திரம், அவிழ்தம் எனும் மூவகை முறைகளைக் கையாண்டனர். மணி என்பது வேதியல் முறை. மந்திரம் என்பது குண்டலினி. அவிழ்தம் என்பது மருத்துவமுறை. யோகத்தினால் உடலை அழியாமல் காத்து யோக தேகமாக்கினர். பழங்காலத்தில் மன்னர்கள், முனிவர்கள் போன்றோர், தகுதிவாய்ந்த குருவிடம் சென்று யோகத்தினைக் கற்றனர். அன்றையக் காலக்கட்டத்தில் யோகமானது இறையை அறிவதற்கான ஒரு கருவியாகச் செயல்பட்டது. ஆனால் இன்று உடல் நலத்திற்காகச் செய்யப்படுகிறது. சித்தி ஏற்பட்டு நான், எனது என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும் என்றும் கூறப்படுகிறது. பிராணன், மனம், சித்தம், சக்தி எனும் நான்கையும் ஒன்றிணைக்கும் செயலே யோகமாகக் கூறப்படுகிறது. யோகம் எனும் சொல் 'யுஜ்'எனும் சமஸ்கிருத சொல்லிலிருந்து உருவானது ஆகும்.யோகம் என்பதற்கு ஒருங்கிணைத்தல் (அ) எல்லாவற்றையும் எந்தவிதமான வேறுபாடின்றி முழுமைப்படுத்தல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. திருமூலர் தன்னையறிதலேயே யோகமாகக்காட்டுகிறார். மனிதவள மேம்பாட்டிற்கான அடிப்படையாக யோகத்தை இன்றைய அறிவியல் ஏற்றுக்கொள்கிறது. உடல்நலம், ஆன்மா ஆகியவற்றோடு நெருங்கியத் தொடர்புடையது. மனமும் பிராணனும் ஒன்றுக்கொன்று செயல்திறன் உடையது. "யோகா என்பது அறியாமையை நீக்கி ஆன்மாவைக் காட்டக்கூடிய கல்வி. நல்லொழுக்கத்தை, மனவலிமையை, சுயவலிமையைத் தரக்கூடிய கல்வியைப் பெற யோகமும் தியானமும் துணைப்புரியும்."(தி.மகாலட்சுமி:2017:ப.11) எனும் கூற்று யோகத்தின் சிறப்பினைக் காட்டுகிறது."யோகம் என்பது ஒரு தத்துவமே அல்ல. அது மிகப்பழங்காலம் தொட்டுத் தொடர்ந்து வருகிற சில பயிற்சிமுறைகளின் தொகுப்பாகும்.இவை அதீதமான சக்திகளை அளிக்கக்கூடியவை என்றும் கற்பனை செய்யப்படுபவை ஆகும்." (2010:ப.210)என்று யோகத்திற்கான வரையறைத் தருகிறார் தேவிபிரசாத்சட்டோபாத்யாயா. யோகமானது ஒரு பயிற்சிமுறை தான்.எந்தவொரு சமயத்திற்கும் மெய்யியல் தத்துவத்திற்கும் உட்பட்டதல்ல என்பது சட்டோபாத்யாயா

கூற்றின்வழி புலனாகும். யோகம் எனும் சொல் யுக் எனும் வட சொல்லிலிருந்துஉருவானதாகும்.இதற்குஒருங்கிணைத்தல்அல்லதுஎந்தவிதமானவே றுபாடுஇன்றிமுழுமைப்படுத்தல்என்பதுபொருளாகும்.மேலும்யோகம்என்பதற்குஒரு முகப்படுத்தல்எனும்பொருளும்வழங்கப்படுகிறது.சாங்கியத்தத்துவத்தின்அடிப்படை யில் யோகம் என்பதற்கு பிரிதல் எனும் பொருளும் வழங்கப்படுகிறது.தமிழ்ச் சித்தர்கள் சிந்தனையில் யோகம் என்பது மனஆற்றலைக் குறிப்பதாகும்.மன அடக்கம் தான் யோகமாகக் கொள்ளப்படுகிறது.சித்தர் மரபில் யோகமானது இறையையும் மனிதனையும் இணைக்கும் பாலமாகக் கொள்ளப்படுகிறது.யோகத்தின்வகை தமிழ்ச்சித்தர்கள் அவர்கள் பாடுபொருட்கள் அடிப்படையில் பலவகையாக வகைப்படுத்தப்படுகின்றனர்.அதில் ஒருவகைப்பாட்டின்படி யோகசித்தர்கள், காயசித்தர்கள், ரசவாத சித்தர்கள் என்று பிரிக்கப்படுகின்றனர். இதில்யோக சித்தர்கள் யோகத்தின் வழியாக இறையை உணர்பவர்கள்.திருமூலர்,கயிலாயசட்டைமுனி, போன்றோர் இவ்வகையினுள் அடங்குவர்.யோகத்தின்பயன்பாடு, செயல்முறை அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பிரிக்கபடுகிறது.இராசயோகம், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், அடயோகம், மந்திரயோகம், தியானயோகம், ஆதாரயோகம், நிராதாரயோகம், சம்யோகம், ஆன்மயோகம், நாதயோகம், ஜபயோகம், நிரந்தரமாயோகம், சம்போகம், ஆன்மயோகம், நாதயோகம், ஜபயோகம் போன்ற முப்பத்தாறு வகைகளை விஜயரெகுநாதன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் இராசயோகம் எல்லாவற்றிலும் முதன்மையானது.பக்தி, கர்ம, ஞானயோகமும் இராசயோகத்தில் அடங்கும்.யோகத்தின் முக்கிய நோக்கம் மனத்தினை அடக்கி வெற்றிபெறுவதாகும். யோக சித்தர்களிடம் காணப்படும் மூன்று அடக்குமுறைகளைக் கணபதி தமது நூலில் குறிப்பிடுகிறார்.அவை “மூச்சைஅடக்குதல், விந்துவைஅடக்கிக் காமத்தை வென்று எப்பொருளிலும் ஆசையற்ற நிலையைப்பெறுதல் இறுதியாக மனத்தை அடக்குதல் ஆகியவையாகும் .இம்மூவகை அடக்கங்களையும் யுகநத்தம் என்பார்கள்.”(2003: ப.30)

திருமூலர் – தமிழர் யோகமரபும்முன்னோடியும்

இந்தியச்சிந்தனை மரபில் யோக கலையின் வரலாறு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.தமிழர் சிந்தனை மரபில் திருமூலர் யோகநெறிகளை வளர்த்தெடுத்தார் என்று கருதப்படுகிறது. சான்றாக

“அண்டங்கள்தத்துவம் ஆகிச்சதாசிவம்
தண்டினில் சாத்தவிசாம்பவி ஆதனம்
தெண்டினில் ஏழும்சிவாசனமாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்து உகந்தானே.”(தி.ம.2771) (ஞா.மாணிக்கவாசகன்: 2003:ப.1234)

இப்பாடலைக் குறிப்பிட முடியும்.இதனுள் மூலாதாரம் தொடங்கி சகஸ்ராரம் வரை இடம்பெற்றுள்ள ஏழுமன்றங்களும் இறைவனை அடைவதற்குரிய வாயில்கள் எனும் கருத்தும் கூறப்பட்டுள்ளது.

யோகத்தின் வரையறை

தமிழ்ச்சித்தர்கள் யோகத்தின் வழி நின்று தனது சிந்தனைகளையும் அனுபவங்களையும் சமூகத்தில் பரப்புரையாக எடுத்துரைத்தனர்.அவர்கள் யோகம் குறித்து பல்வேறு முறைகளில் வரையரைத்துள்ளனர்.இவர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் தமிழ்யோகமரபில் முதன்மை இடம்பெற்றுள்ள திருமூலர் ஆவார்.

மனிதஉடல் இறைவன் உறையும் கோயில் எனும்மாற்று கருத்துநிலை உருவானது.அதன்அடிப்படையில் மனிதஉடல் யோகத்தின் மூலாதாரமாகத் தமிழ்ச்சித்தர்களால் முன்வைக்கப்பட்டது.அகப்பேய்ச் சித்தரின் பாடலொன்று யோகஞானத்தின் மூலஊற்று தேகஞானம் தான்என மிகஅழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறது.அகப்பேய்ச்சித்தர்

"யோக மாகாதே
உள்ளதுகண்டக்கால் அகப்பேய்
தேகஞானமடி
தேடாதுசொன்னேனே.அகப்பேய் ". (பா.எ. 26)

(பெரியஞானக்கோவை:2013:ப.240)

எனும் இப்பாடலில் மனித உடல் பற்றிய அறிவின் இன்றியமையாமையை விரும்புகிறார்.தமிழ்ச்சித்தர் மரபில் மனித உடலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இறையை உணர்வதற்கும் யோகத்திற்கும் கருவியாகக் கொள்ளப்படுகிறது.

அட்டாங்கயோகம்

தமிழ்ச்சித்தர் மரபில் யோகம் சார்ந்த சிந்தனைகளும் அதன் மீதான முன்னெடுப்புகளும் மிகுதியாகத் தென்படுகின்றன.ஹடயோகம், குண்டலினியோகம் ஆகியவற்றைத் தொடர்ந்து அட்டாங்கயோகமும் தமிழ்ச்சித்தர் மெய்யியல் மரபில் குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றுள்ளது.அட்டாங்கயோகமானது எட்டுஉறுப்புகளைக்கொண்ட மரபாகும். இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று அறியப்படுகின்றன. இப்பின்னணியில் அட்டாங்கயோகத்தை திருமூலர் அடைமொழிகளோடு காட்டியுள்ளார்."எண்ணிலாஆசனம், நயமுறும்பிரணாயாமம், வெற்றிதரும்தாரணை அயமுறும்அட்டாங்கம்என்றுஅடைக்கொடுப்பதுஅதன்சிறப்பினை விளக்குகிறது."(விஜயரெகுநாதன் :2001:ப.10)

"இயமநியமமேஎண்ணிலாஆசனம்
நயமுற பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகுதாரணைதியானம்சமாதி
அயமுறும்அட்டாங்கம்ஆவதுமாமே".(தி.ம.552)

(ஞா.மாணிக்கவாசகன்:2003:ப:245)

குதம்பைச்சித்தர் இவ்வைதீகமரபிற்கு மாற்றாக அட்டாங்கயோகத்தை முன்வைக்கிறார்.அவர்அட்டாங்கயோகத்தின்உயர்நிலையை

"அட்டாங்கயோகம்அறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி - குதம்பாய்
முட்டாங்க மேதுக்கடி ?" (பா.எ.21)

(பெரியஞானக்கோவை:2013:ப.253)

இவ்வாறு குறிப்பிடுகிறார். ஒருமனிதன் அட்டாங்க யோகத்தை அறியும் தருவாயில் அவன் பயணிக்க வேண்டிய மெய்யியல் பாதையில் எவ்விதமான இடையூறுகளும் (முட்டாங்கம்) ஏற்படாது என குதம்பைச்சித்தர் சுட்டிக்காட்டுகிறார். சிவவாக்கியர்

“எட்டுயோக மானதும்இயங்குகின்றநாதமும்

எட்டுவக்க ரத்துளேஉகாரமும்மகாரமும்…”.(பா.எ.425)

(பெரியஞானக்கோவை:2013:ப.65)

எனும் இப்பாடல்வழி எட்டு யோகமாகிய அட்டாங்கயோகத்தைக்குறிப்பிடுகிறார். அட்டாங்க யோகம் குறித்த சிந்தனையைத் தமிழ்ச்சித்தருள் குதம்பைச் சித்தரிடமும் சிவவாக்கியரிடமும் காணமுடிகிறது.

இயமம்

தமிழ்ச்சித்தர்கள் முன்னெடுத்த அட்டாங்க யோகமரபில் இயமம் எனும் நிலையும் அடங்கும்.இயமம், ஒரு தனிமனிதன் சமூகத்தில் கடைப்பிடிக்கப்படும் ஒழுகலாறுகளுடன் தொடர்பு படுத்தி பேசப்படுகிறது.அறிவில் ஒரு மனிதன் மேலோங்கிய திறன் பெற்றிருந்தபோதிலும் பழக்கவழக்கங்களில் சமூகத்திற்கு ஏற்றாற்போல் தன்னை உருமாற்றிக் கொள்ளவேண்டும்.இந்நடவடிக்கை பெரும்பாலான தமிழ் அறஇலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.இன்னும் குறிப்பாக திருக்குறள், நாலடியார், அறநெறிச்சாரம் முதலிய பனுவல்கள் தமிழ்ச்சமூகம் வலியுறுத்திய தனிமனிதனின் சமூகஒழுக்கங்களைப் பட்டியலிடுகின்றன. இதனை இயமம் எனும்தனிநெறியாகவும் அட்டாங்க யோகத்தின் உட்கூறாகவும் சித்தர்கள் வளர்த்தெடுத்தனர்.இயமம் குறித்து “இயமம் எனும் நிலை சமூகஒழுக்கம் என்று அழைக்கப்படுகிறது. கடுவெளிச்சித்தர் இயமநெறியை வழுப்படுத்துவது போல் தமது பாடலை இயற்றியுள்ளார்.அதனுள் இன்றும் சமூகம் எதிர்பார்க்கும் தனிமனித ஒழுக்கங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

“சொல்லரும்சூதுபொய்மோசம் -செய்தால்

சுற்றத்தைமுற்றாய்த்துடைத்திடும்நாசம்

நல்லபத்திவிசுவாசம் - எந்த

நாளும்மனிதர்க்குநன்மையாய்நேசம்”. (பா.எ.2)

(பெரியஞானக்கோவை:2013:ப.256)

இப்பாடலில் பொய், சூது ஆகியவை விட்டொழிக்கப்படவேண்டியவை. உறவுகளுக்குள் கேடுவிளைவிப்பவை என அறிவுறுத்துகிறார் கடுவெளிச் சித்தர். எனினும் நல்லமேன்மையான பக்தியும் மனிதனை மனிதன் மதித்து போற்றும் விசுவாசம் ஆகிய இரண்டும் தனிமனிதன் கற்றுக்கொள்ளவேண்டும் என கடுவெளிச்சித்தர் அறைக்கூவல் விடுத்துள்ளார். கடுவெளிச் சித்தர் அடையாளம் காட்டும் தனிமனிதஒழுக்கங்கள் சமூகத்தால் இன்றைய வாழ்வியல் சூழலில் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.இயமத்தின் அடிப்படையில் நோக்கும்போது யோகமானது மனநிலை சார்ந்திருப்பது புலனாகிறது.

நியமம்

இறைவனை வழிபடுவதற்கு பல முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.சமயங்கள் வழங்கியுள்ள முறைகளில் கருத்தூன்றி ஒரு மனிதன் தன் இறைவழிப்பாட்டை அமைத்துக்கொள்ள முடியும்.அதற்கு மாறாக

யோகநெறிகளில் ஆர்வமேலீட்டால் தனது நேர்மையையும் இறை வழிபாட்டு சிந்தனைகளையும் வடிவமைத்து கொள்ள முடியும்.திருமூலர் சுட்டிக்காட்டும் நியமங்களாகக்கரு.ஆறுமுகத்தமிழன் “தூய்மை, அருள், ஊண்சுருக்கம், பொறை, வாய்மை, நிலைமை, காமம், கொலை, களவு, செபம், சந்தோசம், ஆத்திகம், தானம், தூய்மை, மகிழ்ச்சி, தவம், சாத்திரப்படிப்பு, ஈஸ்வரபிரணிதானம்” (2022;ப:30) என்றுபதிவுசெய்துள்ளார்.

சிவவாக்கியரின்

“முத்தசித்தி தொந்தமா முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த ஐம்புலன்க ளாகுமதி மப்புலன்
அத்தர்நித்தர் காளகண்ட ரன்பினா லனுதினம்
உச்சரித்து எத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே.”(பா.எ.378)

(பெரியஞானக்கோவை:2013:ப.58)

இப்பாடலை நியமத்திற்கு சான்றாகக் கொள்ளமுடியும்.

ஆசனம்

மனிதன் தன் உடம்பை ஒரு கட்டுக்கோப்பான நிலைக்குள் கொணர்வதைத் தமிழ்ச்சித்தர்கள் ஆசனம் என்று குறிப்பிடுகின்றனர்.அதாவது ஒரு இருக்கையின் தன்மையைப் போல வைத்திருத்தலை ஆசனம் என்று உணரமுடியும்.“ ஆசனம் என்றால் இருக்கை (அ) நிலை என்று பெயர். நமது உடலை ஒரு குறிப்பிட்டநிலையில் சுகமாக இருத்திக் காட்டுவது.எந்தநிலையில் எல்லாம் நம் உடல் கஷ்டமில்லாமல் நன்று இருக்கமுடிகிறதோ அந்தநிலைகளே ஆசனங்கள் (2017:ப.31) என்று மகாலட்சுமி பதிவு செய்துள்ளார்.

பாம்பாட்டிச் சித்தர் இறைவனின் அருள் நமக்கு சொந்தமானால் நித்தியமான வாழ்வு கிட்டும் என்று பதிவுசெய்திருப்பது கீழ்க்காணும்பாடல்வழிவிளக்கிக் கொள்ள முடியும்.

“நீடுபதம்நமக்கென்றுஞ்சொந்த மென்றே
நித்தியம்என்றேபெரியமுத்தியென்றே
பாடுபடும்போதுமாதி பாதம்நினைந்தே
பன்னிப் பன்னிப்பரவிநின்றுஆடுபாம்பே.” (பா.எ.2)

(பெரியஞானக்கோவை:2013:ப.199)

இன்றைய சூழலில் யோகாவும் ஆசனமும் இணைந்து யோகாசனம் என்பதை உடல் சார்ந்து பயில்கின்றனர்.சித்தர்மரபில் அட்டாங்க யோகத்தின் உட்பிரிவு ஆசனமாகும்.மனதையும் உடலையும் ஒரு நிலையில் இருத்துவது ஆசனம் என்பது தெளிவாகிறது.

பிரணாயாமம்

பிராணன் + ஆயமம்= பிரணாயாமம் .மனிதனுடைய மூச்சுக்காற்றை உள்இழுத்து வயிற்றினுள் தக்கவைத்து பிறகு அதனை மெதுவாக வெளியிடுதல் பிரணாயாமம்.அட்டாங்க யோகமரபின் உட்பிரிவாகப் பிரணாயாமம் அமைந்திருக்கிறது.மனிதன் இயல்பாக உள்ளிழுக்கும் காற்றைப் பல நொடிகள் உடம்பிற்குள் நிறுத்தி, பின்னர் வெளியிடுவது பிரணாயாமம்.தமிழ்ச்சித்தர் மரபில் இப்பிரணாயாமத்திற்கு முதன்மையான இடம் அளிக்கப்பட்டுள்ளது.பூரகம், கும்பகம்,

இரேசகம் எனும் மூன்று நிலைகளில் பிரணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.இதனைவிஜயரெகுநாதன் “பதினாறு மாத்திரை அளவுகாற்றை இடதுநாசியின் வழியாக உள்ளேஇழுத்து, அறுபத்திநான்குமாத்திரைஅளவுஉள்ளேவைத்திருந்து, முப்பத்திரண்டு மாத்திரைஅளவுவலதுநாசிவழியாகவெளியேவிடுதல்வேண்டும் (2004:ப.38) என இவ்வாறு பதிவுசெய்துள்ளார். தமிழ்ச்சித்தர்மரபில் இடைக்காட்டுச் சித்தர்க்கு நிகராக மேலும் பலர் பிரணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சி குறித்து பாடல்களை இயற்றியுள்ளனர். குறிப்பாக அகப்பேய் ,அழுகணி, சிவவாக்கியர்ஆகியோரைச்சுட்டிக்காட்ட முடியும். சான்றாக பின்வரும்

“ வாசியில் ஏறியடி
வான்பொருள்தேடாயோ
வாசியில்ஏறினாலும்
வாராதுசொன்னேனே”.(பா.எ.61)

(பெரியஞானக்கோவை:2013:ப:245)

எனும் அகப்பேய்ச்சித்தரின் பாடல் பிரணாயாமம் பேரின்பம் அளிக்கவல்லது என்று குறிப்பிடுகிறது . .தமிழ்ச்சித்தர்கள் பிரணாயாம யோகமரபை மனிதஉயிர், நலன்காக்கும் அறிவியல்சார் மருத்துவமாக வளர்த்தெடுத்தனர்.இச்சமகாலத்தில் மூச்சுப்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.பிரணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சியினை தமிழ்ச்சித்தர்கள் பிரணாயாமத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்.இன்றைய சூழலிலும் பிரணாயாமத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பிரத்தியாகாரம்

பிரத்தியாகாரம் என்பது ஓடும்நீரை அணைக்கட்டில் தடுப்பது போன்றது.மனிதன் தனக்கு புறமாக நிகழும் ஒரு காட்சியாகக் காண்கிறான்.நீரோட்டம் தடுக்கப்பட்டு அதுமுறையான திசைவழிகளில் மாற்றப்படுவதும் உலகில் நிகழ்கிறது.அதுபோல் மனிதன் தன் அலைப்பாயும்மனதை ஒருநிலைப்படுத்துவது பிரத்தியாகாரம் எனப்படுகிறது.

“ஐம்பொறி யடங்கினவேதும்பீபற -நிறை
அறிவேபொருளாமெனத் தும்பீபற !
செம்பொருள்கள்வாய்த்தனவேதும்பீபற - ஒரு
தெய்வீகங்கண்டோமென்றேதும்பீபற !.” (பா.எ.79)

(பெரியஞானக்கோவை:2013:ப.230)

என்ற பாடல்வழி மனிதன் தன் ஐம்புலன்களையும் அடக்கிஆண்டால் உண்மைப் பொருளைத் தெளியலாம் என்பதை இடைக்காட்டுச்சித்தர் ஒரு தும்பிக்கு சொல்வதாக மனிதர்களை உணரசெய்துள்ளார்.

“ மெய்வாய்கண்மூக்குச்செவியெனு மைந்தாட்டை
வீறும்சுவையொளியூறோசை யாங்காட்டை
எய்யாம லோட்டினேன்வாட்டினே னாட்டினேன்
ஏகவெளிக்குள்ளேயோகவெளிக்குள்ளே.” (பா.எ.27)

(பெரியஞானக்கோவை:2013:ப.224) எனும் பாடல்வழியும் புலனடக்கத்தின் தன்மையைக் காட்டியுள்ளார்.இடைக்காட்டுச் சித்தர்.

தமிழ்ச் சித்தர்கள் மரபில் கூறப்படும் பிரத்தியாகாரம் எனும் புலனடக்கம் விரிவான அளவிலும் தனித்துவமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.புலனடக்கம் தனிமனித ஆளுமை உருவாக்கத்திலும் சமூகக்கட்டுப்பாட்டிலும் முகாமைத்துவம் வகிக்கிறது.

. இடைக்காட்டுச்சித்தர் ஐம்புலன்களை ஆட்டிற்கு உவமையாகக் கூறி, அதனை அடக்கும்முறையையும் காட்டியுள்ளார். புலனக்கத்தின் மேன்மையை தும்பிக்கு கூறுவதாகவும் காட்டியுள்ளார்.

தாரணை

மனிதனின் உள்ளம் அவனது மனப்பாங்கு வெளியில் நோக்கி செல்வது இயல்பு.ஆனால் தமிழ்ச் சித்தர்கள் மனஆற்றலை வேறொருபொருளின் மீது திருப்பும் கலையைத் தாரணை என்பதாகச் சுட்டிக்காட்டினர்.மனத்தின் சிந்தனையை ஏதோ ஒன்றின் மீது சிந்தனையைச் செலுத்துவது தாரணை.பொறி வழி சென்ற மனத்தை மூலாதாரம் முதலிய ஆதாரங்களின் வழியே செலுத்தல், வெளியில் இருந்து திருப்பிய மனத்தைக் கடவுளிடம் நிறுத்துதல் தாரணையாகும்.

“..காமநோயைவிட்டுநீர்கருத்துளேஉணர்ந்தபின்
ஊமையானகாயமாய்இருப்பன்எங்கள்ஈசனே ."(பா.எ.16)

(பெரிய ஞானக்கோவை:2013:ப.7)

எனும் சிவவாக்கியரின் பாடல் வழி, மனத்தின் ஆசைகளை ஒழித்து நமது எண்ணம் முழுவதையும் இறைவனிடம் செலுத்தினால் இறையாகிய உண்மைப்பொருளை மனிதஉடலில் உணரமுடியும் என்பது விளங்கும்.தாரணை என்பது மனத்தின் எண்ணவோட்டமாகும்.

தியானம்

எட்டு யோகமுறைகளுள் தியானம் ஏழாவது நிலையாக விளங்குகிறது.ஏதோ ஒன்றை தொடர்ச்சியாக நினைத்துக் கொண்டு இருப்பது தியானம்ஆகும்.சகுணத்தியானம், நிர்க்குணத்தியானம் எனும் தியானத்தின் இருவகைகளைக் காட்டுகிறார் விஜயரெகுநாதன். மூர்த்தியைத் தியானித்தல் சகுணத் தியானம், சோதியைத் தியானித்தல்,நிர்க்குணத் தியானமாகும் என்பதையும் விளக்கியுள்ளார்.ஒருமுகப்படுத்தப்பட்ட மனமானது தொடர்ச்சியாக அதேசிந்தனையில் நீடித்து அதுவாகவே மாறிவிடுவதாகும்.இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சிவவாக்கியரின் பாடல் ஒன்றில் கடலில் இருக்கும் ஆமை தனது முட்டையை நினைத்துக்கொண்டேஇருக்கும் போது அந்த எண்ணத்தினால் முட்டைவெடித்து ஆமைக்குஞ்சுகள்வெளியேவந்துவிடுமாம். இதை பின்வரும்பாடல்வழிஅறியமுடியும்.

“கடலிலேதிரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலேதிரிந்தபோதுரூபமானவாறுபோல்
மடலுளேயிருக்குமெங்கள்மணியரங்கசோதியை
உடலுளேநினைந்துநல்ல யுண்மையான துண்மையே.” (பா.எ.99)

(பெரிய ஞானக்கோவை:2013:ப.18)

தியானமானது தாரணையின் விரிவான நிலையாகும்.ஏதோ ஒன்றின் மீது கவனத்தை, எண்ணவோட்டத்தை முழுமையாக செலுத்துவது.இன்றைய யோக முறைகளுள் தியானமும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

சமாதி

யோகத்தின் இறுதி நிலை சமாதி நிலையாகும்.உயிரும் ஒன்றாகும் நிலைதான் சமாதி நிலையாகும்.தியானிக்கப்படும் பொருளின் புறப்பொருளை விட்டு அகப்பொருளாகிய கருத்தை மட்டும் தியானிக்கத் தக்கவண்ணம் தியான சக்தியைத் தீவிரமாக்கினால் அந்தநிலைதான் சமாதிநிலையாகும்.சமாதிநிலையானது உறக்கம் அற்ற உறக்கம் என்றும் கூறப்படுகிறது.நம்மைச் சூழ்ந்துள்ள உலகைப் பற்றிய நினைவு இல்லாமல் இருப்பது. இந்தநிலையை அடைந்தவர்கள் தான் சீவன்முக்தன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.சமாதி என்பது தேடலின் முடிவு.

“ மோனநிலையினில்முத்தியுண் டாமென்றே
கானமா யூதுகுழல்கோனே
கானமா யூதுகுழல். ”(பா.எ.98) (பெரிய ஞானக்கோவை:2013:ப.233)

எனும் இடைக்காட்டுச் சித்தர் பாடல் மோனநிலையின் சிறப்பைக் காட்டுகிறது.

அட்டாங்க யோகத்தின் இறுதிநிலை சமாதி நிலையாகும் .புற உலக எண்ணத்தை முற்றிலும் மறத்தலாகும். சமாதி என்பது முடிவு நிலையல்ல. தமிழ்ச் சித்தர் மரபினுள் சிவவாக்கியர், போகர், சட்டைமுனி போன்றோர் பல முறை சமாதிநிலை அடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.தமிழ்ச்சித்தர்களின்யோகமுறைகளுள்குண்டலினியோகமுறைசிறப்பானஇடத்தைப்பெற்றுள்ளது.

முடிவுகள்

- ❖ தமிழ்ச்சித்தர்கள் இறை எனும் உண்மைப் பொருளை உணர காட்டிய வழிமுறைகளுள் எளியவழி யோகமாகும். மனிதஉடலை யோகத்தின் ஒரு களமாகக் கொண்டனர். தொடக்கக்காலத்தில், முக்திக்கான வழியாக இருந்த யோகம் இன்றைய காலச்சூழலில் உடல்நலத்திற்கான ஒரு செயலாக மாற்றம் அடைந்துள்ளது.
- ❖ யோகத்தின் பயன்பாடு, செயல்முறை அடிப்படையில் இராசயோகம், ஹடயோகம், அட்டாங்கயோகம், இலயயோகம், கேசரியோகம் என பலவகை யோகங்கள் தமிழ்ச்சித்தர்மரபில் கூறப்படுகின்றன. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரித்தியாகாரம் ,தாரணை, தியானம், சமாதி எனும் எட்டுநிலைகளைக் கொண்ட அட்டாங்கயோகம் தமிழ்ச்சித்தர் மரபில்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ இயமமானது ஒழுக்கஅடிப்படையிலானது. கடுவெளிச்சித்தர் வலியுறுத்திய சமூகஒழுக்கங்களையும் விளக்கியுள்ளனர். நியமம்என்பது பூசைமுறைகளை வலியுறுத்துவது.
- ❖ ஆசனம் என்பது உடலினை ஒருநிலையில் இருந்துவது. இன்றைய சூழலில் யோகாசனம் மனிதன் வாழ்வில் அன்றாட நிகழ்வாக மாற்றம் அடைந்துள்ளது. தமிழ்ச்சித்தர்களைப் பொறுத்தஅளவில் ஆசனம் என்பது நித்தியமாகக் கருதப்படுகிறது.

- ❖ சித்தர்களின் யோகமுறைகளுள் பிரணாயாமம் சிறப்பான இடத்தைப்பெற்ற ஒரு யோகமுறையாகும். மூச்சுக்காற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்நாளை நீட்டிக்க முடியும் என்பதை உணர்த்தினர்.
- ❖ யோகத்தின் வழி உண்மைப்பொருளை உணர்வதற்கு மனக்கட்டுப்பாடு மிக முக்கியமாகும். மனத்தினை ஐம்புலன்கள் வழி செல்லாமல் தடுத்து மனத்தினை ஒருமுகப்படுத்துவது பிரத்தியாகாரமாகும்.
- ❖ தாரணை என்பது ஏதோ ஒன்றின் மீது தன் கருத்தைச்செலுத்துவது. தாரணை குறித்த மனநிலை தமிழ்ச்சித்தர்களிடம் காணப்படுகிறது. தியானம் என்பது தாரணையிலிருந்து விரிவடைந்த நிலையாகும். யோகத்தின் இறுதிநிலையான சமாதி குறித்த மனநிலையைத் தமிழ்ச்சித்தர்களிடம் காணமுடிகிறது.
- ❖ பிரணாயாமத்தில் மூச்சைக் கட்டுப்படுத்துவதன் வழி மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் , விசுத்தி , ஆக்ஞை, எனும் ஆறுஆதார உறுப்புகளில் சக்தியானது மேலெழும்பி சகஸ்ராரத்தை அடைவது குண்டலினியாகும்.

துணைநூற்பட்டியல்

1.ஆறுமுகத் தமிழன்,கரு-திருமூலர் காலத்தின் குரல், தமிழினி பதிப்பகம்,சென்னை, 2022

2.மகாலெட்சுமி, தி- திருமூலரும் யோகமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2017.

3.மாணிக்கவாசகன், ஞா. திருமூலர் திருமந்திரம் மூலமும் – விளக்க உரையும்,உமா பதிப்பகம், சென்னை, 2003.

4.விஜயரெகுநாதன்,நா.இன்றைய யோக நிலையும் சித்தர் பாடல்களின் பயன்பாடும்,தி பார்க்கர், சென்னை, 2004

5.சரவண முத்துப்பிள்ளை (தொ.ஆ.) பதினெண்சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, திருமகள் விலாச அச்சகம், சென்னை, 2013.

References

1. Arumugath Thamizhan. Karu-Thirumoolar Kalathin Kural (The Voice of Thirumular's Era). Thamizhini Publications, Chennai, 2022.
2. Mahalakshmi, T. Thirumularum Yogamum (Thirumular and Yoga). International Institute of Tamil Studies, Chennai, 2017.
3. Manikkavasagan, Gna. Thirumoolar Thirumanthiram Moolamum – Vilakka Uraiyum (Thirumular's Thirumanthiram: Original Text and Explanatory Commentary). Uma Publications, Chennai, 2003.
4. Vijayaregunathan, N. I. Indraya Yoga Nilaiyum Siddhar Padalkalin Payanpaadum (The Modern State of Yoga and the Application of Siddhar Songs). The Parker, Chennai, 2004.
5. Saravana Muthuppillai (Ed.). Pathinensiddhargal Periya Gnana Kovai (The Great Wisdom Collection of the Eighteen Siddhars). Thirumagal Vilas Press, Chennai, 2013.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Language in Grammar and Language in History

Brindha R
Ph.D. Research Scholar, Department of Tamil,
Central University of Tamil Nadu, Thiruvarur. 9751178890 Email: Brindharavisankar@gmail.com

Abstract:

Language functions as a tool for information exchange and is intricately interwoven with human existence. In society, language is an inseparable part of human beings. It is impossible to view society without language, or language without society. The body of language undergoes changes in some way or another over time. This change should be considered as an advancement in accordance with the times. The structure of language undoubtedly varies from society to society. Although the body of language is generally used by each society, it is accepted by the community in the form of spoken language. A mother tongue, encompassing all regional dialects, can be considered to possess written form as its common characteristic. Here, the written form should be considered a refined version of the spoken form. How this written form is used in language society can be understood from the literary and grammatical texts that arise in each era. This article aims to establish how language has changed and functioned over time, how grammar is used to study language, how language has been historically important, based on the postmodern theory of deconstruction and reconstruction as inherent in language, and how history cannot be viewed without language.

Keywords: Language, Grammar, History of Language, Tamil

மொழியில் இலக்கணமும் – வரலாற்றில் மொழியும்

பிருந்தா ர.

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர். 9751178890

Email: Brindharavisankar@gmail.com

ஆய்வுச் சுருக்கம் :

மொழியானது தகவல் பரிமாற்றக் கருவியாக, மனிதனோடு பின்னிப் பிணைந்து இயங்குகிறது. இச்சமூகத்தில் மொழியானது ஒரு அங்கமாக மனிதர்களிடமிருந்துப் பிரிக்க முடியாதவாறுள்ளது. இங்கு மொழியின்றி சமூகத்தையும் – சமூகமின்றி மொழியையும் பார்க்க இயலாது. மொழியென்னும் உடலானது காலந்தோறும் ஏதோ ஒருவகையில் மாற்றத்திற்குள்ளாகிறது. அந்த மாற்றமானது காலத்திற்கேற்ற வளர்ச்சி நிலையை அடைவதாகக் கொள்ள வேண்டும். மொழியின் அமைப்பு சமூகத்திற்குச் சமூகம் மாறுபடும் என்பது திண்ணம். இவ்வாறு ஒவ்வொரு சமூகத்தாலும் மொழியென்னும் ஒரு உடல் பொதுமையாகக் கையாளப்பட்டாலும் அது அனைத்தும் பேச்சுமொழி என்கிற அமைப்பில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. அனைத்து வட்டார மொழிகளையும் தாங்கிய ஒரு தாய் மொழியானது, தன்னுடையப் பொதுத் தன்மையாக எழுத்து வழக்கினைக் கொண்டுள்ளது எனக் கொள்ளலாம். இங்கு எழுத்து வழக்கு என்பது பேச்சு வழக்கின் சீர் படுத்தப்பட்ட ஒரு முறை எனக் கொள்ளவேண்டும். இவ்வெழுத்து வழக்கானது எவ்வாறு

மொழிச் சமூகத்தில் வழங்கி வருகிறது என்பதைக் குறிப்பதாகவே அந்தந்தக் காலத்தில் எழும் இலக்கிய, இலக்கண நூல்கள் கொண்டு அறியலாம். மொழியானது எவ்வாறு மாற்றம் பெற்று காலந்தோறும் இயங்கி வந்துள்ளது என்பதை, மொழியைக் கொண்டு இலக்கணத்தையும், மொழியானது வரலாற்றில் எவ்வாறு முக்கியத்துவமுடையதாக காலந்தோறும் இருந்துள்ளது என்பதையும், பின் நவீனத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் சிதைவாக்கமும் – மீளுருவாக்கமும் மொழியில் இருப்பது மொழியின் இயல்பு என்ற அடிப்படையில் – வரலாற்றை மொழியின்றிப் பார்க்க இயலாது என்பதையும் நிறுவுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மொழி என்பது:

அனைத்து உயிரினங்களும் தான் நினைக்கும் எண்ண அலைகளைப் பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தும் கருவி மொழியாகும். அது சைகை மொழி, சீழ்க்கை மொழி, பேச்சு மொழி எனப் பல்வேறு நிலைகளில் நடைபெறுகிறது. இங்குப் பேச்சுமொழி என்பது வளர்ந்த நிலையில் உள்ள மொழியின் அமைப்பாகக் கருதப்படுகிறது. “படைப்பாற்றல் மிக்க மனிதன் படைத்த அருங்கலைகளுள் தலைமை சான்ற கலை மொழிக்கலையே. எண்ணத்தின் வடிவாகவும், நாகரிகத்தின் சின்னமாகவும், பண்பாட்டின் பிரதிபலிப்பாகவும் திகழும் இக்கருத்துப் பரிமாற்றக்கலை, மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், சமுதாய இணைப்புக்கும் துணைசெய்து நிற்கின்றது” (திராவிட மொழிகளின் ஒப்பாய்வு., 1996., ப.1) என ஜான் சாமுவேல் குறிப்பிடுகிறார்.

அவ்வாறு நாகரிகத்தின் சின்னமாகவும், வளர்ந்த பண்பாட்டின் அடையாளமாகவும் கூறப்படும் மொழியானது கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவும் கருவியாகும். ஒவ்வொரு நிலத்திற்கும் தகுந்தவாறு நிலத்தை மையமாகக் கொண்டே மக்களின் மொழியமைப்பு அமைகிறது. அம்மொழி பேசும் மக்களின் வாய்மொழிகளானது குறிப்பிட்டக் காலத்தில் பதிவாக்கம் செய்யப்பட்ட நிலையில் இலக்கியம் என்னும் அமைப்பு முறையாகத் தோன்றுகிறது. இவ்விலக்கியங்கள் பலவும் சீர் செய்யப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பிற்குள் கொண்டுவருவதற்காக மொழியாராய்ச்சி செய்யப்பட்டு மொழிக்கான சில விதிகள்/வரைமுறைகள் விதிக்கப்பட்டு அக்கால மொழியைப் பதிவு செய்தனர். இதனையே நாம் இலக்கணம் என்றழைக்கிறோம்.

இலக்கணம் என்பது:

தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பாகுபாடுகளையுடையது. முத்தமிழ் என்னும் பெருமைக்குரியது. இந்த முத்தமிழுக்கும் இலக்கணம் கண்ட நூல் அகத்தியமென்பர். முத்தமிழில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். ஆயினும் இயற்றமிழ் இலக்கணமே, இலக்கணம் என்னும் பெயருக்குரியதாய் உள்ளது. செய்யுள், உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். இதில் இலக்கியமும், இலக்கணமும் அடங்கும். இலக்கணம் என்ற சொல்லை முதலில் வழங்கியவர் தொல்காப்பியர். அவர் இச்சொல்லை “பல பொருளை உய்த்துணர்ந்து அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தற்குக் காட்டப்படும் வரையறை” என்ற பொருளில் கூறியுள்ளார். (இலக்கண வரலாறு., 2014., ப.11.,)

மொழியின் நிலையை மொழியாராய்ச்சி செய்யப்பட்டு அக்காலத்திய மொழியை வரையறைக்குள் விதிகளுடன் கூறுவதே இலக்கணிகளின் பணியாகும். ஒரு மொழிப் பேசும் மக்கள் சமூகத்தில் இலக்கணம் எழுதுவது என்பது அம்மொழி ஏற்படுத்திய பண்பாடு, அரசியல் ஆகியவற்றின் தாக்கத்தால் உருவான மொழியுணர்வின் விளைவால் எழுதப்படுவது இலக்கணமாகும்.

இதனை “மொழி வரலாற்றில் இலக்கணம் எழுதுவது ஒரு மைல்கல் ஏனெனில் அந்த மொழிச் சமூகத்தின் மொழியுணர்வு ஏற்பட்டதென அடையாளம் அந்த மொழியுணர்வு அன்றைய சமூகத்தின் மொழி, பண்பாடு, அரசியல் முதலிய சூழல்களின் விளைவு” என (இலக்கண உருவாக்கம்., 2012., ப.1) என்ற நூலில் குறிப்பிடுகிறார் செ.வை. சண்முகம்.

“ஒரு மொழிக்கு சிறப்பை, அழகைக் கொடுப்பது இலக்கணம், உயிருள்ள எந்த மொழிக்கும் இலக்கணம் இன்றியமையாயது. மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர்கெட்ட நிலையை அடையாது காப்பது இலக்கணமாகும்” என பேராசியர் சு. வித்தியானந்தன் கூறுகிறார். (தமிழ்மொழி இலக்கண இயல்புகள்., 1982., ப.iii)

இலக்கணம் என்பது மொழியை ஆராய்ச்சி நிலைக்கு உட்படுத்தி கோட்பாடுகளுடன் கூடிய விதிமுறைகளை வகுப்பதாகும். அவ்விதிமுறைகள் என்பதும் காலத்திற்கேற்ப மொழிச் சூழல் காரணமாக மாற்றமடையக் கூடும்.

வரலாற்றில் மொழி:

ஒரு மொழியில், மொழியின் அமைப்பு காலந்தோறும் மாறுதலுக்கு உட்படும். மொழியின் அமைப்பு மாறுவதென்பது ஒரு சமூகம் ஏற்படுத்தியதன் விளைவு எனலாம். அம்மாறுதல்கள் என்பது சமயம் மற்றும் வணிகத்தின் வருகையினாலோ அல்லது தாக்கத்தினாலோ, அரசியல் தாக்கத்தினாலோ, போர் – படையெடுப்பினாலோ நிகழக்கூடும். அவ்வாறு ஒரு மொழியானது பல மாறுதல்களுக்கு உட்பட்டு அந்தந்தக் காலங்களுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொண்டே இருக்கும். இதனை, “காலந்தோறும் மாறுபடும் மொழியில், சமுதாயமாற்றம் போன்றவற்றின் காரணமாகப் பல சொற்கள் வழக்கிறந்து மாய்தல் இயல்பே.” என்கிறார் ஜான் சாமுவேல். (திராவிட மொழிகளின் ஒப்பாய்வு., 1996., ப.10.) பல மாறுதல்களைப் பெற்று காலந்தோறும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் மொழியே உயிர்ப்புடன் இருக்கும் என்கின்றனர் மொழியியலாளர்கள். மேலும் இதனை மொழி வளர்ச்சி என்றேக் கூறவேண்டும் என்கிறார் டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை. “மொழி வளர்ச்சியில், அறிவுக் கூட்டுறவு ஏனைய காரணங் களிலும் பார்க்க முக்கியத்துவம் பெறுகிறதெனலாம். வாணிகம் முதலிய காரணங்களால் வந்த சொற்கள் சாதாரண மக்களிடை வழக்கிற் புகுந்து பின் இலக்கியங்களில் இடம்பெறுவன; இச் சொற்களிலே, இலக்கிய வழக்கிற் புகுமுன்பு தானும் மறைந்தொழிவனவும் பலவாதல் வேண்டும்; அன்றியும் இவற்றிற்பெரும்பாலன, தோன்றிய அவ்வக் காலத்திற் பொருளுணர்தற்கு எளியவாய்ப் பின்பு உணர்தற்கு அரியவாயிருக்கும், அறிவுக் கூட்டுறவினால் விளைந்த சொற்கள் அறிஞர்களிடையே புகுவன; தாழ்த்தவின்றி இலக்கிய

வழக்கில் உடன் இடம்பெறுவன; பொருள் வரையறுத்துணர்தற்கு இயல்வன ; மொழியின் வாழ்வில் நீடித்து நிற்பன.” (தமிழ் வரலாற்றிலக்கணம்., 1996, ப. 14).

“மக்களின் கருத்துக்கள் மாறுங் காலத்தில் மொழியும் மாறுகிறது என்பதும், மக்களின் கருத்துக்கள் மாறாமல், வளர்ச்சியடையாமல் நிலை பெற்றிருக்கும் போது மொழியும் வளர்ச்சியின்றி அமைந்து விடுகின்றது என்பதும் அவ்வறிஞனின் கொள்கை. எனவே, மொழி மனித சமுதாயத்தோடு தோன்றி, நின்று, அழியும் என்பது தெளிவு” என்கிறார் ஜான் சாமுவேல். (திராவிட மொழிகளின் ஒப்பாய்வு., 1996., ப.3)

இவ்வாறு பல மாறுதல்களுக்குத் தகுந்து தன்னைத் தகவமைத்துக் கொள்கிற மொழியே உயிர்ப்புடன் இருக்கும். இதற்குத் தமிழ் மொழியே சான்றெனலாம். அயல்நாட்டினரின் வருகையால் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. அதனுடன் காலப்போக்கில் வடமொழியாதிக்கம் நிறைந்தக் காலத்தில் தமிழ்ச் சொற்களுடன் வடமொழிச் சொற்கள் கலந்து எழுதுவது பெருமையுடையது என்று வந்தக் காலங்களில், முதலில் தொல்காப்பியர் மொழித்தூய்மையாளராக இயங்கியதைக் காணலாம். வடமொழி எழுத்துக்கள் வரும் இடங்களில் அதற்கு இணையானத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதுதல் வேண்டும் என்கிறார். ஆகையால் ஒருமொழியுடன் மற்ற மொழிச் சொற்கள், எழுத்துக்கள் கலக்கும் என்று அறிந்திருந்த தொல்காப்பியர் தற்சமம், தற்பவம் என்கிற முறையைக் கூறுகிறார். இதனைத் தொல்காப்பியர்,

“வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே” (தொல். சொல்., 2019., நூற். 401., ப.286)
“சிதைந்தன வரினு மியைந்தன வரையார்” (தொல். சொல்., 2019., நூற். 402., ப. 287)

ஒரு பொருளைக் குறிக்க பல சொல், ஒரு சொல்லைக் குறிக்கும் பல பொருள் என மொழியில் உள்ளதால் மொழியானது இடத்திற்கேற்பப் பொருளை மாறுபடுத்தும் என்றெண்ணி தொல்காப்பியர் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப் பிரிக்கிறார். இங்கு திசைச்சொல்லானது, செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தும் தாங்குறித்த பொருள் விளக்குந் திசைச்சொல் என்றவாறு என்கிறார் இளம்பூரணர். இதனைத் தொல்காப்பியர்,

“செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி” (தொல். சொல்., 2019., நூற். 400., பக். 285, 286).

இவ்வாறு ஒரு நிலத்தின் சொல் சற்று திரிந்த வகையில் மற்றொரு நிலத்தில் வழங்கக்கூடும் என்றெண்ணி திசைச்சொல் குறித்தும் தொல்காப்பியத்தில் பேசுகிறார்.

இவ்வாறு மொழி பல்வேறு ஊடாட்டங்களுக்கு இடையில் தன்னைக் காலத்திற்கேற்பத் தகவமைத்துக் கொண்டு பல்வேறு மாற்றங்களைப் பெற்றும் உள்ளதால் தமிழ் மொழி உயிர்ப்புடன் உள்ளது.

வீரமாமுனிவர் எகரம் மற்றும் ஒகரம் இவற்றின் நெடில் வரிவடிவ அமைப்பானது எகர ஒகரங்களின் மீது புள்ளி பெற்ற அமைப்பில் இருந்ததை நீக்கி இன்றைக்குள்ள ‘ஏ’கார, ’ஓ’கார அமைப்பை சீர்திருத்தம் செய்து கொண்டு வந்தார். தந்தை பெரியார், இரட்டைச் சுழி எழுத்துக்களுடன் சுழியுடன் இணைத்தே எழுதிக் கொண்டிருந்த முறையை சீர்திருத்தம் செய்து இன்றுள்ள ‘லை, ளை, ணை, னை’ ஆகிய இந்த எழுத்துக்களை இரட்டைச் சுழியுடன் இணைந்து

இல்லாத இம்முறைக்கு சீர்திருத்தம் செய்து கொண்டு வந்தார். இவ்வாறு காலப்போக்கில் மொழிக்குத் தேவையான எழுத்து வரிவடிவங்களை அக்காலத்திற்கேற்ப சீர்திருத்தம் செய்வது என்பதும் மொழியின் அக்காலத்திய வளர்ச்சியென்றே சொல்ல வேண்டும்.

இந்த மாற்றங்கள் எதற்கும் இடங்கொடுக்காத சமஸ்கிருத மொழியானது இன்று பேச்சு வழக்கில் இல்லாமல் மொழி அழிந்து விட்டதெனலாம். எழுத்து வழக்கில் மட்டும் இயங்கும் இம்மொழியானது இன்று வளர்ந்துபட்டத் தமிழ் மொழியுடனோ அல்லது பிற மொழிகளுடன் ஒப்பிடும் போது வழக்கிலிருந்து அழிந்த மொழியாக உள்ளது என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆகையால் மொழியில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொன்றும் காலத்திற்கேற்ற வளர்ச்சி என்றேக் கொள்ள வேண்டும்.

பின் - நவீனத்துவ நோக்கில் வரலாற்றில் மொழியும் - இலக்கணமும்:

“பின் – நவீனத்திற்கென்று தனியான தத்துவார்த்தக் கோட்பாடுகள் என்று எதுவும் கிடையா. அப்படி ஏதாவது இருந்ததென்றால் அது அமைப்பியல் கோட்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது தான்” (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்., 2016., ப.202) என கோபிசந்த் நாரங் குறிப்பிடுவதாக க.பஞ்சாங்கம் தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார். ரோலண்ட் பர்த், லக்கான், அல்தூசர், தெரிதா, ஃபூக்கோ முதலிய பின்னமைப்பியல் சிந்தனையாளர்கள் பின் நவீனத்துவச் சிந்தனை உருவாவதற்கும் காரணமாக இருந்தவர்கள். இவர்களுடைய சிந்தனையைத் தொடர்ந்து இஹாப் ஹாசன், டெலியூஸ், ஃபெலிக்ஸ்க்வாத்ரி, பொத்ரியார் முதலியோர் தங்களைப் பின் நவீனத்துவவாதிகளாக நிலைப்படுத்திக் கொண்டனர்.

“பின் நவீனத்துவம் என்பது சமூகத்தின் நிலையினை வர்ணிக்கப் பயன்படுகிற ஒரு சொல்லாட்சியாகும்”. (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்., 2016., ப.202) பின் நவீனத்துவம் என்பது ஒரு காலகட்டத்தின் தன்மையைக் குறிப்பதாகும். அவ்வாறு பின் நவீனத்துவக் காலகட்டத்தை

மொழி மையமாதல்

அறிவு வணிகமயமாதல்

அறிவும் உற்பத்தி சக்தியும் என்ற மூன்று கருத்தாக்கங்களைக் கொண்டு இக்கோட்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

இங்கு நவீனத்துவம் எதனையெல்லாம் நவீனம் என்றக் கருத்தினை மொழிகிறதோ அதனையெல்லாம் மாற்றத்திற்கு உட்படுத்துகிறது பின் நவீனத்துவம். இக்கோட்பாட்டின் படி,

“நவீனத்துவம் ஒரு படிநிலைப்பட்ட அமைப்பினை வலியுறுத்துகிறது. ஆனால் பின் நவீனத்துவம் ஒழுங்குகளின் சிதைவுகளையும் சிதைவுகளால் தாமே அமையும் ஒழுங்கற்றவைகளையும் முன்னிறுத்துகிறது.

நவீனத்துவம் மையப்படுத்துதலை நோக்கி நகர்கிறது. ஆனால் பின் நவீனத்துவம் சிதைப்பதைக் கொண்டாடுகிறது.

நவீனத்துவம் நிச்சயத் தன்மையை நம்புகிறது. பின் நவீனத்துவம் நிச்சயமற்ற ‘இன்மை’யக் கொண்டாடுகிறது. இத்தகைய இன்மைகளில் (சூன்யம்) இருந்துதான் எல்லாமே பிறக்கிறது என்கிறது”. (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்., 2016., பக்.212, 213).

இக்கோட்பாட்டிலிருந்து ஒரு மொழியானது மாறுபாட்டிற்கு உட்படுகிறென்றால் அம்மொழி உயிர்ப்புடன் இயங்குகிறது என்று பொருளாகும். இங்கு மொழியானது காலந்தோறும் மாறும் போது ஒரு இயக்கத்திலிருந்து மற்றொரு இயக்கத்தை அடையும். அப்போது மொழியானது ஒரு கட்டுடைப்பை/சிதைவைப் பெற்று மீள் உருவாக்கத்திற்குத் தன்னைத் தகவமைக்கிறது. உதாரணமாக, தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள களவிற்கும், கற்புக்கும் ஒருகாலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கற்பும், களவும் கொண்டாடப்பட்டக் காலத்தில் களவியல், கற்பியல் தொடர்புடைய பல அகநூல்கள் எழுந்தன. பின்னர் 9,10,11ம் நூற்றாண்டுகளில் வடமொழியின் ஆதிக்கம் பெற்று வீரசோழியம் போன்ற வடநூல்கள் அறிமுகத்தால் செய்யுளியலை யாப்பு, அணி எனப் பிரித்து எழுதினர். அப்போது தான் ஐந்திலக்கண மரபு என்பது தலைத்தூக்கியது.

இங்குத் தொல்காப்பிய பொருளதிகாரம், முக்கியமானது, தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பாகும் எனக் கூறிய காலத்தில் பொருளதிகாரத்திலுள்ள களவும், கற்பும் கொண்டாடப்பட்டு, செய்யுளியல் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதைத் தமிழ் இலக்கண வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. ஆகையால் இங்கு பொருளதிகாரம் சிறப்பானதாகக் கருதப்பட்டாலும் பின்னர் வந்தக் காலங்களில் செய்யுளியல் சிதைவுற்றுள்ளது. (இங்கு யாப்பு முறை, எழுத்து எண்ணி எழுதும் முறைகள் மறுக்கப்பட்டுள்ளது.) இச்சிதைவு என்பதை மொழியில் பொருளதிகாரத்திற்கான மீள் கட்டமைப்புக் காலம் என்னும் நிலையில் நோக்கலாம். இங்குச் சிதைவு என்பது அக்காலச் சமூகத்தால் ஏற்பட்டதெனலாம்.

மேலும், தொல்காப்பியத்தில் சார்பெழுத்துக்கள் மூன்று என்று கூறியுள்ள தொல்காப்பியர், இதனை,

“சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே” (தொல்.எழுத்து., நூற். 1) என்கிறார்.

“அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன” (தொல்.எழுத்து., நூற். 11)

குற்றியலுகரம், குற்றியலுகரம், ஆய்தம் இம்மூன்றும் சார்பெழுத்துக்கள் என்கிறார் தொல்காப்பியர்.

நன்னூலில் சார்பெழுத்துக்கள் பத்து என்கிறார் பவனந்தி முனிவர். இதனை நன்னூலில்,

“உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பு எழுத்தாகும்” (நன்., எழு.60)

இங்கு சார்பெழுத்துக்கள் 3 என்பதைக் கட்டுடைத்து காலத்திற்கேற்ப மொழி வளர்ச்சியின் காரணமாக சார்பெழுத்துக்கள் பத்து என்பதை மீளுருவாக்க அடிப்படையில் மொழியின் தேவைக் கருதி உருவாக்கியுள்ளார் பவனந்தி முனிவர்.

இதன் மூலம் மொழி ஒரு குறிப்பிட்டக் காலத்தில் சிதைவுறுவதும் – பின்னர் மற்றொரு காலத்தில் தேவையின் பொருட்டு மீளுருவாக்கம் பெறுவதும் மொழியின் இயல்பாகும். இதனை மொழியின் வளர்ச்சி என்றேக் கருதி காலத்திற்கேற்ப மொழி மாற்றம் பெறும் என்பதைக் காணலாம்.

மொழி இயங்கியல் தன்மை கொண்டது. மொழியை அதன் தகவமைப்பிற்கேற்பக் காலப்போக்கில் இயங்கவிடும் பொழுது அது இயக்க நிலையில் உயிர்ப்புடன் இருந்து பல நூற்றாண்டுகள் கடந்தும் வாழும். மொழி ஒரு குறிப்பிட்டக் காலத்தில் ஒன்றனை இழப்பதும், பின்னர் அதனையோ, அதனைப் போன்றதொரு அமைப்பை ஏற்பதோ மொழியின் இயல்பாகும். அவ்வாறு ஒன்றனை இழக்கும் போது அதனை மொழியின் கட்டுடைப்பு/சிதைவு என்றும், கட்டுடைப்பு/சிதைவு என்பது அதே சமயத்தில் ஒன்றனை மீளுருவாக்கம் செய்வதுமேயாகும். ஒவ்வொரு கட்டுடைப்பு/சிதைவு என்பதும் மீளுருவாக்கத்திற்கானது எனலாம். இக்கருத்தினை பின் நவீனத்துவக் கோட்பாட்டின் தாக்கத்திலிருந்துக் காண்பது சரியாக இருக்கும்.

துணை நின்ற நூல்கள்:

1. இலக்கண உருவாக்கம்., செ.வை. சண்முகம், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2012.,
2. இலக்கண வரலாறு., இரா. இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1990.
3. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்., க.பஞ்சாங்கம், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2016.
4. தமிழ் வரலாற்றிலக்கணம்., ஆ.வேலுப்பிள்ளை, பாரி நிலையம், பிராட்வே, சென்னை, 1966
5. தமிழ்மொழி இலக்கண இயல்புகள்., அ.சண்முகதாஸ், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1982.,
6. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு., ஜி.ஜான் சாமுவேல், ஆசியவியல் நிறுவனம், சென்னை, 1996.
7. தொல்காப்பிய – நன்னூல் சொல்லதிகாரம்., க.வெள்ளைவாரணர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
8. தொல்காப்பியம் சொல்லதிகாரம்., சேனாவரையம்., திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட், சென்னை, 2019
9. நன்னூல் எழுத்ததிகாரம்., சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம்,
10. நன்னூல் சொல்லதிகாரம்., சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம்,
11. டைமாறிய தமிழிலக்கண நூல்கள்., பாவலரேறு ச. பாலசுந்தரம், தாமரை வெளியீட்டகம், சென்னை, 1998.

Reference:

1. Ilangumaran, Ira. *Ilakkaṇa Varalāṟu* [History of Grammar]. Maṇivāsakar Patippakam, 1990.
2. Ilavaracu, Soma. *Naṉṉūl Eḻuttatiyārām* [Nannool Ezhuthathikaram]. Maṇivāsakar Patippakam, n.d.
3. Ilavaracu, Soma. *Naṉṉūl Collatiyārām* [Nannool Sollathikaram]. Maṇivāsakar Patippakam, n.d.
4. Pālasundaram, Sa. *Maṭaimāṟiya Tamiḻilakkaṇa Nūlkaḷ* [Redirected Tamil Grammar Books]. Tāmarai Veḷiyīṭṭakam, 1998.
5. Panjankam, Ka. *Ilakkiyamum Tiṟaṉāyvuk Kōṭpāṭukaḷum* [Literature and Critical Theories]. Aṉṉam Patippakam, 2016.
6. Samuel, G. John. *Dirāviṭa Moḻikaḷiṉ Oppāyvu* [Comparative Study of Dravidian Languages]. Āciyaviyal Niṟuvaṉam, 1996.
7. Shanmugadas, A. *Tamiḻmoḻi Ilakkaṇa Iyalpukaḷ* [Grammatical Features of Tamil Language]. Muttamiḻ Veḷiyīṭṭuk Kaḻakam, 1982.
8. Shanmugam, Se. Vai. *Ilakkaṇa Uruvākkam* [Formation of Grammar]. Adaḷam Patippakam, 2012.
9. *Tolkkāppiyam Collatiyārām*. Commentary by Sēnāvaraiyar. Tirunelvēli Teṉṉintiya Caiva Cittānta Nūrpatippuk Kaḻakam, Liṭ., 2019.
10. Veḷḷaivāraṇar, Ka. *Tolkkāppiya – Naṉṉūl Collatiyārām* [Tolkaapiyam – Nannool Collathikaram]. Tamiḻp Palgalaikkazhagam, 1984.
11. Veluppillai, Aa. *Tamiḻ Varalāṟṟilakkaṇam* [Historical Grammar of Tamil]. Pāri Nilayam, 1966.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

A Comparative Study of the Case System in Tamil and Bengali

Shanmugapriya R,
Ph.D Research Scholar, Department of Tamil,
Central University of Tamilnadu, Thiruvarur-610001,
Email: Shanmukavi97@gmail.com

Abstract: *The significance of language studies is increasingly recognized across the world today, leading to extensive research in this field. Tamil, one of the most ancient languages of the Indian subcontinent, has influenced and interacted with several other Indian languages over time. A comparative study of these interactions helps trace the historical and structural relationships between languages during their stages of origin and development. Historically, Bengal has shared longstanding connections with the Tamil-speaking community through trade, politics, spirituality, art, and literature. These interactions have left noticeable imprints on both languages. Despite belonging to two distinct language families-Tamil to the Dravidian and Bengali to the Indo-Aryan- this article undertakes a comparative grammatical analysis to explore possible similarities in their linguistic dynamics. Specifically, it examines the structure and function of case system in Tamil and Bengali, focusing on their forms, types, distribution, methods of formation, and semantic variations.*

Key Words: *Comparative Grammar, Case System, Dravidian and Indo-Aryan Languages, Language Contact.*

ஒப்பீட்டு நோக்கில் தமிழ் வங்காள வேற்றுமை இலக்கணம்

சண்முகப்பிரியா . இரா,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
Shanmukavi97@gmail.com

சுருக்கம்: மொழி ஆய்வுகளின் முக்கியத்துவம் இன்று உலகெங்கிலும் அதிகரித்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது, இதன் விளைவாக இத்துறையில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ், காலப்போக்கில் பல இந்திய மொழிகளுடன் தாக்கத்தையும் தொடர்புகளையும் ஏற்படுத்தி வந்துள்ளது. இந்தத் தொடர்புகளின் ஒப்பீட்டு ஆய்வு, மொழிகளுக்கிடையே உள்ள வரலாற்று மற்றும் கட்டமைப்பு ரீதியான உறவுகளை அவற்றின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலைகளில் கண்டறிய உதவுகிறது. வரலாற்று ரீதியாக, வங்காளம் தமிழ் பேசும் சமூகத்துடன் வணிகம், அரசியல், ஆன்மிகம், கலை மற்றும் இலக்கியம் வழியாக நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்புகள் இரு மொழிகளிலும் குறிப்பிடத்தக்க தடயங்களை விட்டுச்சென்றுள்ளன. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தையும், வங்காளம் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தையும் சார்ந்த இரு தனித்த மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை என்ற போதிலும், அவற்றின் மொழியியல் இயக்கவியலில் சாத்தியமான ஒற்றுமைகளை ஆராய இந்தக் கட்டுரை ஓர் ஒப்பீட்டு இலக்கணப் பகுப்பாய்வை மேற்கொள்கிறது. குறிப்பாக, இது தமிழ் மற்றும் வங்காள மொழிகளில் உள்ள வேற்றுமை உருபு அமைப்பின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை, அவற்றின் வடிவங்கள், வகைகள், பரவல், உருவாக்கும் முறைகள் மற்றும் பொருண்ம மாற்றங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி ஆய்வு செய்கிறது.

முக்கிய சொற்கள்: ஒப்பீட்டு இலக்கணம், வேற்றுமை உருபு அமைப்பு, திராவிட மற்றும் இந்தோ-ஆரிய மொழிகள், மொழித் தொடர்பு

முன்னுரை:

மொழி ஆய்வுகளின் தேவை இன்று உலகெங்கிலும் உணரப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் தொன்மையான மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி உள்ளது. இத்தகு தொன்மையும், தொடர்ச்சியும் உடைய தமிழ்மொழியின் தாக்கமும், உறவும் இந்திய மொழிகள் பலவற்றிலும் உள்ளது. இந்த உறவுகளை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் மொழிகளின் தோற்ற, வளர்ச்சி நிலைகளில் அவற்றின் உறவுநிலைகளைக் குறித்து விளங்கிக் கொள்ளலாம்.

அவ்வகையில் பழங்காலத்திலிருந்து தமிழ்ச்சமூகத்துடன் வணிகம், அரசியல், ஆன்மீகம், கலை, இலக்கியம் போன்ற துறைகளில் தொடர்புடையது வங்காளம். இவ்விரு சமூகங்களில் உள்ள இவ்வுறவுகளின் தாக்கமானது அவர்களின் மொழிகளிலும் எதிரொலிப்பதைக் காணலாம். இந்த இரண்டு மொழிகளும் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை. தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. வங்காளம் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சார்ந்தவையாக வகைப்படுத்தப்பட்டாலும் மொழி இயங்குநிலையில் இவற்றிடையே ஒற்றுமைகள் உள்ளனவா என்பதை ஆராயும்பொருட்டு தமிழ், வங்காள வேற்றுமை இலக்கணத்தை ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக, தமிழிலும் வங்காளமொழியிலும் உள்ள வேற்றுமை உருபுகள், அதன் வகைகள், வருகையிடங்கள், உருபேற்கும் முறைகள் மற்றும் பொருள் மாற்றங்கள் ஆகிய தொழிற்பாடுகளின் ஒத்திசைவை இக்கட்டுரை ஆராய்கிறது.

வேற்றுமை:

ஒரு வாக்கியத்தில் பெயருக்கும் வினைக்கும், இடையிலான இலக்கண உறவினை வேறுபடுத்துவதன்வழி அவ்வாக்கியத்தின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை ஆகும். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை என்று இலக்கண ஆசிரியர்கள் பொருளுரைக்கின்றனர்.

"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை" (நன்.சொ.291)

என்று நன்னூலார் வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகின்றார்.

இதனை தெய்வச்சிலையார், "ஒரு பொருளை ஒருகால் வினைமுதல் ஆக்கியும், ஒருகால் செயப்படுபொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பதாக்கியும், ஒருகால் நீங்க நிற்பதாக்கியும், ஒருகால் உடையதாக்கியும், ஒருகால் இடமாக்கியும் வேறுபடுத்தலின் வேற்றுமை" என்று விளக்குகிறார். (1984:48) தற்கால மொழியியலாளர்கள் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை எனும் விளக்கத்தை ஏற்பதில்லை. வேற்றுமையுருபை ஏற்பதனால் ஒரு பெயரின் சொற்பொருளில் மாற்றம் ஏற்படுவதில்லை. மாறாக அதன் இலக்கணப் பொருளே மாற்றமடைகிறது என்பது அவர்தம் கருத்தாகும். அதாவது, "ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லை வினைமுற்றோடு தொடர்புபடுத்துகிற அளவிலேயே வேற்றுமை அமைகிறது" என்கின்றனர்.

(கு.பரமசிவம்: 2017,123) இது தெய்வச்சிலையாரின் கருத்துடன் ஒத்து வருவதைக் காண முடிகிறது. இவற்றின்வழி ஒரு பெயர்ச்சொல்லின் இலக்கணப்பொருளை வேறுபடுத்திக் காட்டுவதே வேற்றுமை என்பதாகக் கொள்ளலாம்.

வேற்றுமை வகைகள்:

தமிழ்:

தமிழிலும் வங்காளத்திலும் வேற்றுமைகள் இத்தனை என வரையறுத்துச் சொல்வதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர்,

"வேற்றுமை தாமே ஏழென மொழிப" (தொ.சொ.62)

என்று வேற்றுமை குறித்த தமது முந்தைய மரபின் கருத்தாகக் கூறுவதாலும் பின்,

"விளி கொள்வதன்கண் விளியோ டெட்டே" (தொ.சொ.63)

என்று விளியையும் சேர்த்து அதனைத் தனியோர் இயலில் விரிவாக விளக்கியுள்ளதாலும் தொல்காப்பியருக்கு முந்தைய இலக்கண நூலார் விளி வேற்றுமைக்கு ஏனைய வேற்றுமைகளோடு ஒத்த நிலையினை அளிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

தொல்காப்பியத்தைப் போலவே பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களான நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றவையும் வேற்றுமைகளை எட்டென வகைப்படுத்துகின்றன. கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் சுவாமிநாத தேசிகரால் இயற்றப்பட்ட இலக்கணக்கொத்து எனும் நூல்,

"வினைமுதல் வினையே செயப்படு பொருளே
கருவி கொள்வோன் நீக்கம் குறையே
இடமென எட்டும் வடமொழி வேற்றுமை
ஏழ்ஆறு என்று இயம்பும் தமிழ்நூல்" (இ.கொ.13)

என வடமொழி வேற்றுமைகள் எட்டு எனக்கூறி, தமிழ் இலக்கண மரபு வேற்றுமைகளை ஆறு எனவும், ஏழெனவும் வகுத்துக் கூறுவதாகக் கூறியுள்ளார். அதாவது எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையாதலால் அதனை விடுத்து, பெயர்ப்பொருளை வேறுபடுத்தும் ஏழும் வேற்றுமை எனவும், எழுவாயும் விளியும், பெயரும் பெயரினது திரிபுமாதலால் அவ்விரண்டையுமே விடுத்து ஏனைய ஆறும் வேற்றுமை எனவும் இருவேறு கருத்துகள் தமிழ் நூலாரிடையே காணப்படுவதாகக் கூறுகிறார்.

பிற்கால மொழி ஆய்வாளர்கள், தமிழ் இலக்கண நூல்கள் மூன்றாம் வேற்றுமையுள் அடக்கிக்கூறும் உடனிகழ்ச்சிப் பொருண்மையைத் தனியொரு வேற்றுமை வகையென சுட்டி வேற்றுமையை ஒன்பது வகைகளாகக் கூறுகின்றனர். (எம்.ஏ.நுஃமான்: 2017,95) இவ்வாறு தமிழ்

வேற்றுமையின் எண்ணிக்கை ஏழு, எட்டு, ஒன்பது என்று பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் தமிழ் வேற்றுமையின் வகைகளை எட்டு எனக் கொள்ளும் போக்கே தமிழ் இலக்கண வழக்கில் பெருவாரியாகக் காணப்படுகிறது.

வங்காளம்:

வங்காள இலக்கண மரபிலும் வேற்றுமையின் வகைகள் குறித்த வெவ்வேறு கருத்தியல்கள் இலக்கண ஆசிரியர்களிடம் காணப்படுகின்றன. வங்காள வேற்றுமைகள் சமஸ்கிருத மரபிலிருந்து வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகிறது.

தொடக்க காலத்தில் சமஸ்கிருத இலக்கண மரபே வங்காளத்திற்கான இலக்கண மரபாகப் பின்பற்றப்பட்டு வந்திருப்பதை ஈஸ்வரசந்திர வித்தியா சாகரின் 'வியாகரண் கௌமுதி' போன்ற இலக்கண நூல்களின்வழி அறிய முடிகிறது. ராஜாராம் மோகன்ராய் எழுதிய 'கௌடிய வியாகரணம்' எனும் நூலே வங்க மொழிக்கேயான முதல் இலக்கண நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலில் வங்காள வேற்றுமைகளை அவர் நான்காகக் வகைப்படுத்துகிறார். (In Bengalee, cases may be reduced to four; the nominative, accusative, locative and genitive- வங்காளத்தில் வேற்றுமைகளை எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, இட வேற்றுமை மற்றும் உடைமை வேற்றுமை என்று நான்காக சுருக்கிக் கொள்ளலாம்.) (1826: 20) "சமஸ்கிருத இலக்கணிகளைப் பின்பற்றி வங்காள வேற்றுமைகள் ஏழு வகையாக (விளி வேற்றுமையைச் சேர்த்து எட்டு வகையாக) பகுக்கின்றனர் என்று கூறும் சுனிதி குமார் சட்டர்ஜி நவீன வங்காள மொழியின் வேற்றுமைகளை ஆறாக வகைப்படுத்துகிறார். (1926:739) சில மொழியியல் அறிஞர்கள் வங்காள வேற்றுமைகளை ஏழாகவும் வகைப்படுத்துகின்றனர். ஆனால் உருபுகளின் அடிப்படையில் வங்காள வேற்றுமைகள் எட்டு வகைகளாக வகைப்படுத்தம் செய்யப்படுகின்றன.

தமிழ் – வங்காள வேற்றுமைகளும், உருபுகளும்:

வங்காளத்தில் வேற்றுமை 'காரக்' (কারক) என்றும், வேற்றுமை உருபு 'விபக்தி' (**বিভক্তি**) என்றும் அழைக்கப்படுகின்றன. தமிழில் வேற்றுமைகளை முதல், இரண்டு, மூன்று என்று எண் அடிப்படையில் சுட்டும் வழக்கம் காணப்படுகிறது. வங்காளத்தில் வேற்றுமைகளை அவற்றின் உருபுகளின் பெயரால் சுட்டும் வழக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. எண், உருபு, பொருண்மை என்ற மூன்று அடிப்படைகளிலும் தமிழ், வங்காள வேற்றுமைகள் வகைப்படுத்தப்பட்டாலும் இக்கட்டுரை தமிழில் அமைவதால் தமிழின் பெருவழக்காக அமையும் எண் அடிப்படையே இங்கு பின்பற்றப்படுகிறது.

முதல் வேற்றுமை (Nominative case):

தமிழில் முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" (தொ.சொ.548) என தொல்காப்பியம் முதல் வேற்றுமையின் அமைப்பைக் கூறுகிறது. முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. உருபு ஏற்காத பெயர்ச்சொல்லே எழுவாயாகச் செயல்படுகின்றது. திரிபு இல்லாத பெயரே எழுவாயென நன்னூல் முதல் வேற்றுமையின் இயல்பைக் கூறுகிறது.

பொருளைச் சுட்டும் சொற்கள் யாவும் 'பெயர்' என்பதும், அப்பொருளின் இயல்பினையும், புடைப்பெயர்ச்சியையும் சுட்டும் சொற்கள் யாவும் 'வினை' என்பதும் தமிழிலக்கணமாகும். "அங்ஙனம் ஒருபொருளைச் சுட்டி அதுபற்றிச் செப்பும் வினாவும் நிகழ்த்துங்கால் பன்னூறு வகையான பொருள்களினின்று அப்பொருள் பிரிக்கப்பட்டுத் தலைமை பெறுதலின் அஃது எழுவாயாக ஆகின்றது. அங்ஙனம் பிரித்தலால் தனிமைப்படும் நிலைமையே அஃது எய்தும் வேறுபாடாகும். அவ்வேறுபாடு அடிப்படையாதலின் அங்ஙனம் பெயர்தோன்றி நிற்கும் நிலையை முதல் வேற்றுமை எனத் தொல்லாசிரியர் வகுத்தனர். அஃது உருபினான் வேறுபடாமை நோக்கி அல்வழியுள் அடக்கினர்" (பாவலரேறு ச.பாலசுந்தரம்: 2012) என எழுவாய் வேற்றுமை திரிபு பெறாமல் இயங்கும் நிலையில் அதனை வேற்றுமை என்று வகைப்படுத்துவதின் தர்க்கம் பெறப்படுகிறது

(எ-டு):

கண்ணன் வந்தான்

வங்காளத்தில் எழுவாய் வேற்றுமை 'கர்த்ரு காரக்' என்றழைக்கப்படுகிறது. எண்ணிக்கை அடிப்படையில் இதனை 'ப்ரதம காரக்' என்கின்றனர். பழைய வங்காளத்தில் எழுவாய் வேற்றுமை உருபு பெற்றும், பெறாமலும் என இருவகைத்தாகவும் அமையப்பெற்றன. தற்கால வங்காளத்தில் பெரும்பான்மை உருபு பெறாத பெயர்ச்சொற்களே எழுவாயாக அமைகின்றன. திரிபு இல்லாத பெயர்ச்சொல் வடிவமே வங்காள மொழியில் கர்த்ரு காரக் எனப்படுகிறது. (The Original Form of a noun is used in Bengalee, is denoting the nominative case, Rammohun Roy: 1826, 21)

(எ-டு):

শঙ্কর খেলছে (**சங்கர்** கேல்ச்சே) - **சங்கர்** விளையாடுகிறான்.

இவற்றிலிருந்து தமிழிலும், வங்காளத்திலும் எழுவாய் வேற்றுமையானது திரிபு இல்லாத பெயரைக் கொண்டு அமைவதைக் காண முடிகிறது.

இரண்டாம் வேற்றுமை (Accusative case):

இரண்டாம் வேற்றுமை தமிழில் செயப்படுபொருள் வேற்றுமை என்றழைக்கப்படுகிறது. வினைமுதல் செய்யும் தொழிலின் பயனையுறுவது செயப்படுபொருளாகும்.

" எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு

அவ்விரு முதலின் தோன்றும் அதுவே" (தொ.சொ.554) என்று தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமை அமைந்துவரும் முறையைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் வேற்றுமை உருபாக -ஐ உருபு கூறப்படுகிறது.

(எ-டு):

நான் **அவனைப்** பார்த்தேன்

வங்காளத்தில் இரண்டாம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் 'த்வித்திய காரக்' என்றும், பொருண்மை சார்ந்து 'கர்ம காரக்' என்றும் அழைக்கப்படுகிறது. புலனியக்கமாகவோ கருத்துருவமாகவோ ஓர் எழுவாயால் செய்யப்படும் செயலின் பயனையுறுவது கர்ம காரக் எனப்படுகிறது.

(The accusative denotes that the noun in that form is the object to which an action passes on either really or metaphorically, from another noun in the nominative form, Rammohun Roy: 1826, 21) இதன் உருபு -கே / **কে** (-ke) ஆகும்.

(எ-டு):

আমি **তাকে** দেখেলাম (அமி **தாக்கே** தேக்லாம்) –நான் **அவனைப்** பார்த்தேன்.

உருபு தொக்கி நிற்றல்:

தமிழில் பெரும்பாலும் இரண்டாம் வேற்றுமையானது தொகையாக வருகை தரும்.

(எ-டு): நான் **பழம்** வாங்கினேன்

போலவே வங்காளத்திலும் இரண்டாம் வேற்றுமை பெரும்பாலும் தொகையாக இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

(எ-டு.):

গাছ **ফুল** দিয়েছে (காச் ஃபூல் தியேச்சே) மரம் பூ கொடுத்தது.

அஃறிணையில் உருபு பெறாமை:

தமிழில் இரண்டாம் வேற்றுமையானது உயர்திணையில் பயின்று வருகையில் உருபு பெற்றும், அஃறிணையில் உருபு பெற்றும் பெறாமலும் வரும். வங்காள மொழியிலும் வேற்றுமை அமைப்பில் இம்முறையைக் காணமுடிகிறது. (This mark **কে** very often omitted in nouns signifying vegetating objects, and especially those which are destitute both of animal and vegetable life, Rammohun Roy: 1826, 22)

(எ-டு):

আমি ভাত খাই(அமி பாத் காஇ) - நான் சோறு சாப்பிடுகிறேன் – அஃறிணை- உருபு பெறாமை

আমি তোমা-**কে** ভালোবাসি (அமி தொமாகே பாலோபாசி) - நான் உன்னைக் காதலிக்கிறேன் - உயர்திணை- உருபு பெறுதல்

செயப்படுபொருள் வேற்றுமையானது தமிழிலும், வங்காளத்திலும் வினையின் பயனுக்கு உட்படும் வடிவமாக, உருபு பெறும் முறையில் நெகிழ்வுத்தன்மையுடனும் பயின்று வருகின்றன.

மூன்றாம் வேற்றுமை (Instrumental case):

மூன்றாம் வேற்றுமையானது தமிழில் கருவி வேற்றுமை எனப்படுகிறது. ஒரு தொடரில் ஒரு பெயர்ச்சொல்லானது வினை நிகழ்வதற்குரிய கருவியாக அல்லது கருத்தாவாகச் செயல்படுவதைக் காட்டக்கூடியது கருவி வேற்றுமை ஆகும்.

“ஒடு எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி
வினை முதல் கருவி அனை முதற்றதுவே” (தொ.சொ.557)

எனத் தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமையை ‘ஒடு எனப் பெயரியது’ எனக் குறிப்பிடுகிறது. நன்னூல் இதனோடு -ஆல், -ஆன், -ஓடு என்பனவற்றையும் இணைத்து மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகிறது. தற்காலத்தில் -கொண்டு, -மூலம் ஆகிய சொல்லுருபுகளும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(உ-ம்):

மனத்தொடு வாய்மை

தூரிகையால் வரைந்தாள்.

வங்காளத்தில் மூன்றாம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் ‘த்ரித்திய காரக்’ என்றும் பொருண்மை சார்ந்து ‘கர்ண காரக்’ என்றும் அழைக்கப்படுகிறது. நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு வினை நிகழ்வதற்குரிய பெயராகவும், கருவியாகவும் செயல்படக்கூடியது கர்ண காரக் எனப்படுகிறது. (The Instrument employed by an Agent in effecting an accident either active or neuter, Rammohun Roy: 1826,24) வங்காளத்தில் மூன்றாம் வேற்றுமை உருபானது அது இடம்பெறும் பெயரைப் பொறுத்து மாறுபட்டு அமையக்கூடியது. அதாவது உருபு ஏற்கும் பெயரானது அஃறிணை எனில் -தியே (**দিয়ে**) எனும் உருபும், உயர்திணை எனில் -த்வாரா (**দ্বারা**) எனும் உருபும் இடம்பெறும். சில நேரங்களில் இவை மாறியும் அமைகிறது.

(எ-டு):

আমি পেন-**দিয়ে** লিখছি (அமி பென் தியே லிக்ச்சி) - நான் **பேனாவால்** எழுதுகிறேன்.

আমি তার-**দ্বারা** এই কাজটা করছি (நான் அவனைக்கொண்டு இந்த வேலையைச் செய்தேன்)

இவ்வாறு வினை நிகழ்வதற்குரிய கருவியாகவும், கருத்தாவாகவும் செயற்படும் பெயர்ச்சொற்கள் மூன்றாம் வேற்றுமையாகத் தமிழ் மற்றும் வங்காள மொழிகளில் தொழிற்படுகின்றன.

நான்காம் வேற்றுமை (Dative case):

நான்காம் வேற்றுமை தமிழில் கொடை வேற்றுமை எனப்படுகிறது. கொடைப்பொருள் இவ்வேற்றுமையின் முக்கியப்பொருளாதலின் இப்பெயர் பெற்றது. தொல்காப்பியர் நான்காம் வேற்றுமையை -கு என்றும், அது "எப்பொருளாயினும் கொள்ளும்" (தொ.சொ.559) என்றும் கூறுகிறார்.

(எ-டு): **அவனுக்குக்** கொடுத்தேன்.

வங்காளத்தில் நான்காம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் 'சதுர்த்தி காரக்' என்றும் , பொருண்மை சார்ந்து ' சம்பிரதான் காரக்' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் உருபு -கே (**কে**) ஆகும். ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடையாகவோ, பரிமாற்றமாகவோ வழங்குவதைக் குறிப்பது சம்பிரதான் காரக் எனப்படுகிறது. வங்காளத்தில் இவ்வேற்றுமையில் -கே உருபு கட்டாயம் இடம்பெறும். தொகையாக வருவதில்லை. (The Dative case is used with a verb implying a gift or transfer to some person, W.S. Milne:1913,306)

(எ-டு):

রাজা **রানীকে** উপহার দিয়েছেন। (ராஜா **ராணிகே** உபஹார் தியேச்சேன்) – ராஜா **ராணிக்குப்** பரிசு கொடுத்தார்.

இங்கு கவனிக்கத்தக்க விடயமாக இருப்பது இரண்டாம் வேற்றுமை உருபான -கே (**কে**) /-ke/ எனும் உருபே கொடை வேற்றுமைக்கும் பயின்றுவருகிறது. கால்டுவெல் தமிழில் காணப்படும் -கு எனும் கொடை வேற்றுமை உருபானது அதே பொருண்மையில் வங்காளத்தில் -கே என்று அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். ஆர்.ஜி.பந்தர்க்கர் உள்ளிட்டோர் திராவிட மொழிகள் ஆரிய மொழிகளில் தாக்கம் ஏற்படுத்தியிருக்கக்கூடுமா என்ற ஐயம் கொண்டிருந்தபோது அதற்கான மறுப்புகளும் மொழியாய்வில் முன்னெடுக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும். ஒரிய மொழியில் -கு உருபானது தமிழில் பயன்படுத்தப்படும் அதே பொருண்மையில் பயின்று வருவதாக பிஜொய் சந்திர மஜூம்தார் குறிப்பிடுகிறார். திராவிட மொழிகளில் காணப்படும் கொடை வேற்றுமை உருபானது ஆரிய மொழிகள் சிலவற்றுள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். (1927:74) இவ்வகையில் வங்காளத்தின் நான்காம் வேற்றுமை உருபு குறித்தான தனித்த ஆய்வு தேவைப்படுகின்றது.

ஐந்தாம் வேற்றுமை (Ablative case):

இதனை நீங்கல் வேற்றுமை என்று கூறுவர். 'இதனின் இற்று இது' (தொ.சொ.561) என தொல்காப்பியம் ஐந்தாம் வேற்றுமை குறித்துக் கூறுகிறது. இதன் உருபு /-இன்/ ஆகும். நன்னூலார் /-இன்/, /-இல்/ ஆகிய இரு வடிவங்களைக் கூறி, பொருள்தளத்தில் நீங்கல் பொருளுக்கு முதலிடம் அளித்துள்ளார்.

- ின்று, -இருந்து போன்ற சொல்லுருபுகள் நீங்கல் பொருளில் பயின்று வருகின்றன.

(எ-டு): காக்கையின் கரிது

வங்காளத்தில் ஐந்தாம் வேற்றுமை 'அபதான் காரக்' எனப்படுகிறது. இதன் உருபு -தேக்கே (/-theke/ ஆகும். ஓர் இடத்திலிருந்தோ, பொருளிலிருந்தோ அல்லது நபரிடமிருந்தோ நீங்கப்படும் அல்லது பெறப்படும் பெயரைக் குறிப்பது அபதான் காரக் எனப்படுகிறது. (The ablative case indicates the person, thing or place from which the subject is removed or obtained, W.S. Milne:1913,307)

(எ-டு):

আমি মাদুরাই **থেকে** চেন্নাই যাচ্ছি। (அமி மதுரை **தேக்கே** சென்னை ஜாச்சி)

நான் மதுரையில் இருந்து சென்னைக்குப் போகிறேன்.

இவ்வாறு தமிழிலும், வங்காளத்திலும் நீங்கல் பொருளில் அமையப்பெறும் பெயரின் தன்மையைக் குறிப்பதாக ஐந்தாம் வேற்றுமை அமைகிறது.

ஆறாம் வேற்றுமை (Genitive case):

இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையே உள்ள உறவைச் சுட்டி நிற்கும் ஆறாம் வேற்றுமையானது உடைமை வேற்றுமை எனப்படுகிறது.

"தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே"

என தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமையின் இயல்புகளைக் குறிப்பிடுகிறது. இதன் உருபு /-அது/ ஆகும்.

(எ-டு):

எனது வீடு

வங்காளத்தில் உடைமை வேற்றுமையானது 'சம்பந்த காரக்' என்று அழைக்கப்படுகிறது. இதன் உருபு /-ர்/ (র) ஆகும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு வாக்கியத்தில் பயின்றுவரும் இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையிலான உறவைக் குறிப்பது சம்பந்த காரக் எனப்படுகிறது. (The

Genitive case denotes a noun having a direct or indirect relation to some other noun in the sentence, Rammohun Roy: 1826, 23)

(எ-டு):

রাজার বাড়ি। (ராஜார் பாரி)- ராஜாவின் வீடு.

অজয়ের বাবা। (அஜயேர் பாபா) -அஜயின் அப்பா.

இவ்வாறு ஆறாம் வேற்றுமையானது தமிழிலும், வங்காளத்திலும் பெயர்ச்சொற்களுக்கு இடையிலான உறவு நிலைகளைக் குறித்து நிற்கிறது.

ஏழாம் வேற்றுமை (locative case):

இது இட வேற்றுமை எனப்படுகிறது.

“கண் எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி

வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின்

அனை வகைக் குறிப்பின் தோன்றும் அதுவே” (தொ.சொ.565)

என வினை செய்யும் இடம், நிலம், காலம் என்ற மூன்று வகைக் குறிப்பின் அடிப்படையில் இடவேற்றுமை தோன்றும் என்பதாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

(எ-டு):

போரின்கண் -வினை நிகழ்வு

போர்க்களத்தின்கண் – நிலம்

போர்க் காலத்தின்கண் – காலம்

தொல்காப்பியம் கண் முதலாக இடம் ஈறாக பதினெட்டு உருபுகளையும், அத்தன்மையன பிறவற்றையும் ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கூறுகிறது. /-இல்/, /-இடம்/ எனும் இரண்டும் தற்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் உருபுகளாக உள்ளன.

(எ-டு):

அப்பா **வீட்டில்** இருக்கிறார்

கண்ணனிடம் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன.

வங்காளத்தில் இட வேற்றுமையானது அதிகரண் காரக் என்று அழைக்கப்படுகிறது. வாக்கியத்தில் ஒரு செயல் அல்லது நிகழ்வு நடைபெற்ற இடத்தைக் குறிப்பதற்கான பெயர்ச்சொல்லின் வடிவமாக அதிகரண் காரக் வழங்கப்படுகிறது. (The Locative case denotes that the noun in that form expresses the location where the action or event referred to in the sentence takes place, Rammohun Roy: 1826, 23) வங்காளத்தில் அதிகரண் வேற்றுமையில் உருபு ஏற்கும்

சொல் உயிர் எழுத்தைக் கொண்டு முடியும்போது -தே **(তে)** எனும் உருபையும், மெய்யெழுத்தில் முடியும்போது **/-e/** எனும் உருபையும் பெறுகிறது.

(எ-டு):

সে **বাড়িতে** আছে (சே **பாரிதே** ஆச்சே) - அவன் **வீட்டில்** இருக்கிறான்

আমি **তিরুবারূরে** আছি (அமி **திருவாரூரே** ஆச்சி)- நான் **திருவாரூரில்** இருக்கிறேன்.

இவ்வாறு வங்காளத்தில் இட வேற்றுமை உருபானது அது இடம்பெறும் சொல்லின் கடைசி எழுத்தைப் பொறுத்து மாற்றமடைகிறது.

எட்டாம் வேற்றுமை (vocative case):

விளி வேற்றுமையானது தமிழில் எட்டாம் வேற்றுமையாகக் கொள்ளப்படுகிறது. வங்காளத்தில் ஏழு வேற்றுமைகளே குறிப்பிடப்படுகிறது. தமிழில் “விளி கொள்வதன் கண் விளியோடு எட்டே” (தொ.சொ.547) என்று தொல்காப்பியம் குறிப்பிடுவது போன்றே வங்காளத்திலும் விளி வேற்றுமையானது இறுதியில் தனியொரு வேற்றுமையாகச் சொல்லப்படுகிறது.

(எ-டு)

ওহে, শত্রু! (ஒஹே, சத்ரு!)- ஏய், பகைவனே!

நிறைவாக:

தமிழ் மற்றும் வங்காள வேற்றுமைகளை ஒப்பிட்டதின்வழி இவ்விரு வேற்றுமை இலக்கண அமைப்பு முறையிலும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. எண் வரிசை அடிப்படையிலும், வேற்றுமைப்பொருண்மை அடிப்படையிலும் வேற்றுமைகளுக்கு பெயரிடும் முறை இரு மொழிகளிலும் ஒத்துக் காணப்படுகிறது. வங்காளத்தின் நான்காம் வேற்றுமை உருபான -கே எனும் உருபு தமிழின் -கு உருபைப் போன்றே கொடை வேற்றுமைப் பொருண்மையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுவது போன்றே ஏழு வேற்றுமைகளை முதலில் கூறி விளி வேற்றுமையை எட்டாவதாகக் கூறும் போக்கு வங்காளத்திலும் அமைந்துள்ளது. இரண்டாம் வேற்றுமையைப் பொறுத்தவரை திணை அடிப்படையில் உருபு இடம் பெறும் நெகிழ்வுத்தன்மை வங்காளத்திலும் அவ்வாறே அமையப்பெற்றுள்ளது. தமிழ் வேற்றுமைத் தொகை அமைப்பைப் போலவே வங்காள வேற்றுமைகளும் வாக்கியத்தில் தொகைகளாக இடம்பெற்று அமைகின்றன.

இவ்வாறு தமிழ் வங்காள வேற்றுமைகளுக்கு இடையே பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வொற்றுமைக்கான காரணங்களை நவீன மொழியியல் அடிப்படையில்

ஆராயும்போது மேலும் பல உண்மைகளை வெளிக்கொணர முடியும். அதற்கு இவ்வாய்வுக்கட்டுரை ஒரு தொடக்கமாக அமைகிறது.

துணைநின்ற நூல்கள்:

1. ங்கரேஸ்வரி.பா., தமிழ் சமஸ்கிருத இலக்கண மரபுகள், பாவை பதிப்பகம், சென்னை- 2015.
2. சுப்பிரமணியன்.ச.வே (ப.ஆ.)., தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், 2013 (மூ.ப.)
3. சுப்பிரமணியன். ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2016
4. தாமோதரன்.ஆ (ப.ஆ.)., பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் விருத்தியுரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
5. நுஃமான்.எம்.ஏ., அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம் பதிப்பகம், திருச்சி- 2017 (மூ.ப.)
6. பரமசிவம்.கு., இக்காலத் தமிழ் மரபு, அடையாளம் பதிப்பகம், திருச்சி- 2017
7. பாலசுந்தரம்.ச. பாவலரேறு (உ.ஆ.)., தொல்காப்பியம் தொகுதி-2, சொல்லதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2022.
8. Bijaychandra Mazumdar, The History of the Bengali language, Calcutta university press, 1927 (Second Edition).
9. Kothandaraman.Pon., A Grammar of Contemporary Literary Tamil, International Institute of Tamil Studies, Chennai- 1997.
10. Milne.W.S., A Practical Bengali Grammar, Cotton press, Calcutta-1913.
11. Rammohun roy., Bengalee Grammar in the English Langugae, Unitarian press, Calcutta- 1826.
12. Suniti Kumar Chatterji., The Origin and Development of The Bengali Language, Part II: Morphology, Bengali Index, Calcutta university press, 1926.

References

1. Balasundaram Pavalareru, S. (Annot.). (2022). *Tholkaappiyam (Vol. 2): Sollathikaram—Research commentary*. Periyar University, Salem.
2. Chatterji, S. K. (1926). *The origin and development of the Bengali language, Part II: Morphology, Bengali Index*. Calcutta University Press.
3. Kothandaraman, P. (1997). *A grammar of contemporary literary Tamil*. International Institute of Tamil Studies, Chennai.
4. Mazumdar, B. (1927). *The history of the Bengali language* (2nd ed.). Calcutta University Press.
5. Milne, W. S. (1913). *A practical Bengali grammar*. Cotton Press, Calcutta.
6. Nuhman, M. A. (2017). *Basic Tamil grammar* (3rd ed.). Adaiyalam Pathippagam, Tiruchy.
7. Paramasivam, K. (2017). *Contemporary Tamil tradition*. Adaiyalam Pathippagam, Tiruchy.
8. Roy, R. (1826). *Bengalee grammar in the English language*. Unitarian Press, Calcutta.
9. Sankareswari, P. (2015). *Tamil and Sanskrit grammatical traditions*. Pavai Pathippagam, Chennai.
10. Subramanian, S. V. (Ed.). (2013). *Tamil grammatical works* (3rd ed.). Meyyappan Pathippagam.
11. Subramanian, S. V. (2016). *Tholkaappiyam: A clear commentary*. Manivasagar Pathippagam, Chennai.
12. Thamotharan, A. (Ed.). (1999). *Nannul: Text and elaborate commentary* (Original work by Pavananthi Munivar). International Institute of Tamil Studies, Chennai.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

The Era of Thiruvaathavooradigal

G. Vadivelu[1], Dr. T. Kannan[2],

[1.] Ph.D. Scholar Reg. No: 06379, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology,
Tamil University, Thanjavur.

[2.] Research Guide, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology,
Tamil University, Thanjavur.

Abstract: *The period of Tiruvathavoorar continues to be a significant Saivite enigma even today. Eminent scholars have researched his life and history during various periods and published the results of their studies. It is natural for the understanding of time and history to change based on the evidence available from time to time. A conclusion drawn by a researcher based on the historical facts they uncover from literary and epigraphic sources may be altered many years later by new evidence found during another researcher's study. Accepting the truths discovered through such new research forms the foundation for further developing, expanding, and clarifying historical studies. Chronological research is essential for comparing and analyzing the life and works of a scholar. Our predecessors have shown great diligence regarding this matter. Operating on the belief that 'all that appeared long ago is pure', and based on the data collected and compiled over many years by Maraiamalai Adigal, K.G. Sesaiyar, Acharya, and others, as well as on information obtained from Kadavun Maamunivar's Tiruvathavoorar Puranam and Nambiyar's Tiruvilaiyadal Puranam, the objective of this study is to pinpoint the period in which Tiruvathavoorar lived.*

Key Words: *Thiruvaathavooradigal, Era of Thiruvaathavooradigal*

திருவாதவூரடிகள் காலம்

க.வடிவேலு[1], முனைவர் த. கண்ணன்[2],

[1.] முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,

அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[2.] நெறியாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுருக்கம்: திருவாதவூரரின் காலம் இன்றளவும் மிகப்பெரிய சைவப் புதிராகவே நீள்கிறது. இவர் வாழ்ந்த காலம், வரலாறு குறித்த ஆராய்ச்சியினைப் பல்வேறு காலகட்டங்களில் அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் ஆய்ந்தறிந்து தமது ஆய்வின் முடிவினை வெளியிட்டுள்ளனர். காலமும் வரலாறும் அவ்வப்போது கிடைக்கும் ஆதாரங்கள் மூலம் மாற்றமடைவது இயல்பே. ஆய்வாளர் தான் கண்டறிந்த இலக்கிய மற்றும் கல்வெட்டுகள் சார்ந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் எடுக்கும் முடிவானது அவருக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து மற்றொரு ஆய்வாளரின் ஆய்வின்போது கிடைக்கும் புதிய ஆதாரங்களின் மூலம் மாற்றமடையும். அத்தகைய புதிய ஆய்வுகளின் மூலம் கண்டறியப்படும் உண்மைகளை ஏற்றுக்கொள்வதுதான் வரலாறு சார்ந்த ஆய்வினை மென்மேலும் வளர்க்கவும், பெருக்கவும், தெளிவினையூட்டவும் அடித்தளமாக அமையும்.

ஓராசிரியரது வாழ்வையும் நூலையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு கால ஆராய்ச்சி இன்றியமையாததாகும். இந்த விடயத்தில் நமது முன்னோர்கள் வெகு சிரத்தைக் கொண்டுள்ளனர். ‘தொன்று தோன்றிய யாவையும் தூயன’ என்ற நம்பிக்கையில் மறைமலையடிகள், கே.ஜி.சேஷையர், ஆச்சாரியா முதலானோர் பல ஆண்டுகள் சேகரித்து

திரட்டிய தரவுகளின் அடிப்படையிலும், கடவுண் மாமுனிவரின் திருவாதவூரர் புராணம் மற்றும் நம்பியாரின் திருவிளையாடற் புராணத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் திருவாதவூரடிகள் வாழ்ந்த காலத்தினைச் சுட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

முக்கிய சொற்கள்: *திருவாதவூரடிகள், கால ஆராய்ச்சி*

திருவாதவூரடிகளின் கால நிர்ணயம்

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திருவாதவூரடிகளின் கால நிர்ணயம் குறித்த பல ஆய்வுகள் இன்றளவும் வெளிவந்துள்ளன. அத்தகைய கால நிர்ணயம் குறித்த ஆய்வுகளை ஏற்பாரும் உளர். ஒருசிலர் மறுப்பாரும் உளர். அவ்வாறு வெளிவந்த குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களின் கால நிர்ணய ஆய்வினை இத்தலைப்பின் கீழ் காணலாம். ஸ்ரீமான் எஸ்.ஏ.திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள் திருவாதவூரடிகளின் காலத்தினை கி.பி. முதல் நூற்றாண்டு என்றும், ஸ்ரீமான் பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு என்றும், சுவாமி வேதாசலம் அவர்கள் மூன்றாம் நூற்றாண்டு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், வில்சன் என்பவர் அடிகள் அவர்கள் வாழ்ந்த காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்று அறுதியிட்டுக் கூறுகிறார். போப்பையர் அவர்கள் மேற்கூறியவர்களின் கூற்றினை மறுத்து கி.பி. 7, 8 அல்லது 9 ஆம் நூற்றண்டில் தான் அடிகள் வாழ்ந்தார் என்று தனது வாதத்தினை முன் வைத்துள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த இனிஷ் என்பவர் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் அடிகள் வாழ்ந்ததற்கான சான்றினைத் தந்துள்ளார். ஸ்ரீமான் கோபிநாத ராயரவர்கள் கி.பி.10 ஆம் நூற்றாண்டின் முடிவு அல்லது கி.பி.11 ஆம் நூற்றாண்டின் ஆதி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய ஆய்வாலர்களினின்றும் சற்றே விலகி டாக்டர் ரோஸ்ட் அவர்கள், அடிகள் வாழ்ந்த காலம் கி.பி.13 ஆம் நூற்றாண்டு அல்லது கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தான் இருக்க வேண்டும் என்று தனது ஆய்வில் குறிப்பிட்டு எடுத்துரைத்துள்ளார். இத்தகைய ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்த இப்பெரும் விடயத்தில் எந்தன் சிற்றறிவிற்கு ஏற்பத் தரவுகளை முன்வைத்து திருவாதவூரடிகள் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லர் என்றும், கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறத் துணிந்துள்ளேன்.

மூவர் முதலிகளுக்கும் முன்னவர்

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தாங்கள் பாடிய தேவாரத்தில் திருவாதவூரடிகளின் பெயரினை 'வெளிப்படையாக' குறிப்பிடாத ஒரே காரணத்தினால், இவரை தேவாரம் பாடிய மூவருக்கும் பின்னவர் என்று குறிப்பிடுவது வாய்மைக்கு முரணான உரையேயாகும். சுருக்கமாகக் கூறினால் தேவார மூவரையும் வாதவூரடிகள் வாசகத்திலோ, கோவையிலோ குறிப்பிடவில்லை. வாதவூரடிகளை மூவரும் தேவாரத்தில் குறிப்பிடவில்லை. ஆனால், சில வரலாற்றுக் குறிப்புகள் ஆராய்ச்சியாளர்களை அடிகள் வாழ்ந்த காலம் குறித்த முடிவுக்கு வரத் தூண்டியுள்ளது. 'பாவை பாடிய

வாயால் கோவையும் அருளுக' என்பதற்கு இணங்க திருக்கோவையை அடிகள் பாடினார் என்பது அறிஞர் உலகம் அறிந்ததே. அந்நூலில் சைவ சமயத்தில் தீராத பற்றுள்ள வரகுணப் பாண்டியனைப் பற்றிய ஒரு குறிப்பும் உள்ளது. அதனை மட்டுமே கருத்திற்கொண்டு வாதவூரடிகள் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்று முடிவுரைப்பது ஆய்வின் பிழையென்றே சுட்டுகின்றேன்.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர் தொகையினுள்ளே திருவாதவூரர் பெயர் சுட்டப்படவில்லை. அடிகள் பாடிய திருப்பதிகளாகிய திருப்பெருந்துறையையும், திருஉத்தரகோசமங்கையையும் பற்றி மூவரில் ஒருவரும் பதிவிடவில்லை. திருவாலவாயின்கண் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல் பலவும் திருவாதவூரர் அறிந்திருக்க அவைகளில் ஒன்றையேனும் தேவாரப் பதிகங்களில் கூறவில்லை. இருப்பினும் அவ்விரண்டு பதிகளும் அப்பர் காலத்திலேயே புகழ்பெற்ற சைவத் 'திருப்பதிகளாய்' கருதப்பட்டனவென்று நிச்சயமாகக் கூறலாம். இத்தலங்கள் இரண்டும் பதிகம் பெற்ற சைவத் திருத்தலங்கள் என்பது மெய்யே. ஆனால், அப்பர் தனது திருத்தாண்டகத்தில் பெருந்துறையைப் பெயர் கூறிப் போற்றியுள்ளார். மேலும், இச்சைவத் தலத்திற்கு ஆதிகைலாசம் என்ற திருப்பெயரும் உண்டென்பதை உ.வே.சாமிநாத ஐயர் திருப்பெருந்துறைப் புராணத்திற்கு எழுதுய முகவுரையில் காணமுடிகின்றது.

திருப்பெருந்துறையை ஆதிக்கயிலாயமென்று கூறியதால், அவர் காலத்தில் இத்தலம் சைவத் திருத்தலங்களுள் மிகவும் பழமை வாய்ந்தது என்பதை ஐயமறக் கூறலாம். இவையன்றியும் ஞானசம்பந்தர் பதிகம் பாடிய சிவஸ்தலங்களில் திருப்பேணு பெருந்துறையொன்று "பேணு" என்ற அடைமொழிக் கூட்டி இவ்வூருக்குப் பெயர் கூறியது. பேணு பெருந்துறை என்ற பதம் திருவாசகத்தேயுள்ளது. "பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்" என்ற திருவாதவூரர் வாக்கியத்தோடு "பெண்ணாயவார் சடையண்ணல் பேணு பெருந்துறையாரே" என்ற சம்பந்தர் வாக்கு இங்கு ஒத்துப்போகிறது.

திருவாதவூரடிகள் காலம் உறுதி செய்தற்பொருட்டு அப்பர், ஞானசம்பந்தப் பெருமான், முதலியோர் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். அது கொண்டு அடிகளது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தையது என்பதனை கீழுவுள்ள தரவுகள் உறுதிபடுத்துகின்றன. அப்பர் சுவாமிகள் அருளிச்செய்த "பாடிளம் பூதத்தினானும்" என்னுந் திருவாரூர்ப் பதிகத்தில்

"நரியைக் குதிரை செய்வானும்
நரகரைத் தேவு செய்வானும்
விரதங்கொண் டாட வல்லானும்
விச்சின்றி நாறு செய்வானும்"

என்னும் மேற்கண்ட செய்யுளில் திருவாதவூரடிகள் பொருட்டு இறைவன் நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் குறிப்பிடத்தக்கது. தம்பொருட்டே பெருமான் நரிகளையெல்லாம் குதிரைகளாகத் திரித்துக்கொண்டு வந்தார் என்பதனை அடிகள் அவர்கள் ஆனந்த மாலையில்

“நரியைக் குதிரைப் பரியாக்கி

ஞாலமெல்லாம் நிகழ்வித்து”

எனவும்,

“அரியொடு பரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரையாக்கிய நன்மையும்”

எனவும் தாமே தம் அருட்திருவாயில் மொழிந்திடுதலின், இறைவன் செய்தருளிய அத்திருவிளையாடல் வாதவூரடிகள் பொருட்டே என்பதை யாவரும் அறிந்ததே. ‘கல்லாடம்’ முதலான தொன்னூல்களும் அத்திருவிளையாடல் வாதவூரடிகள் பொருட்டே நிகழ்த்தப்பட்டதெனத் துணிவு தோன்றக் காட்டுகின்றன. ஏனெனில், சிவபெருமான் திருவருள் பெற்றோரில் தலைச்சிறந்து நிற்கும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலான மூவரைப் பற்றியும் எங்கும் குறிப்பிடாமையால், கல்லாடம் எனும் நூல் அம்மூவருக்கும் முன்பாகவே தோன்றியுள்ளது. இதன்மூலம் வாதவூரடிகள் மூவர் முதலிகளுக்கு முன்னவர் என்பது எவ்வித ஐயத்திற்கும் இடமின்றித் தெளிவாகிறது.

வரகுணன் குறிப்பாய்வு

திருக்கோவையில் குறிப்பிடும் சைவ சமயப் பற்றுடைய வரகுணனுடன் அடிகளைத் தொடர்புப்படுத்துவது நியாயமானதாகவே தோன்றும். ஆனால், இவரைத் தவிர வேறு வரகுணன்கள் இருந்திருக்கலாம் என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். ஏனெனில் ‘வரகுண’ என்பது ஒரு அடைமொழி. அதனை யாரும் வைத்துக்கொள்ளலாம். குலோத்துங்க சோழன், ராஜராஜ சோழன் முதலான பெயர்கள் மன்னர்கள் பலருக்கு இருந்தது போல வரகுண பாண்டியன் எனும் பெயரும் மன்னர்கள் பலருக்கு இருந்திருக்க வேண்டும். வரகுண பாண்டியனுக்கு மூன்று நூற்றாண்டுக்கு முற்பட்டிருந்த அப்பர் சுவாமிகளுக்கும் முற்பட்டவராக இருத்தலால் ஆய்வாளர்களால் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் வேறென்பதைத் தெளிவோம்.

தமிழகத்தை ஆட்சி செய்த பல்லவப் பேரரசர்கள் காலத்திலும் பிறகு எழுந்த சோழப் பேரரசுக் காலத்திலும் முற்காலப் பாண்டியர்கள் ஆட்சி செய்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றை வடவெல்லையாகக் கொண்டு தென்குமரி வரையுள்ள தென் தமிழகத்தை, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். இதில் பராந்தக நெருஞ்சடையன் எனும் முதல் வரகுணன் காலம் கி.பி.768 முதல் கி.பி.815 வரை நீடித்தது. பின்னர் முதலாம் வரகுணனைத் தொடர்ந்து ஸ்ரீ வல்லபன் என்பவன் கி.பி.815 முதல் கி.பி.862 வரை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து

நல்லாட்சிப் புரிந்தான். இவனைத் தொடர்ந்து, சடையவர்மன் இரண்டாம் வரகுணன் கி.பி.862 முதல் கி.பி.907 வரை அரசாண்டவன். சிறந்த சிவபக்தன். முதலாம் வரகுண பாண்டியனோ வைணவ சமயத்தைப் பின்பற்றியவன்.

திருவாதவூரடிகள் குறித்த எவ்வித செய்திகளையும் வெளிப்படையாக இரண்டாம் வரகுணனின் கல்வெட்டுகளான திருநெய்த்தானம், திருக்கோடிக்கா, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், ஆடுதுறை, திருவியலூர் ஆகியவற்றுள் ஒன்றிலும் குறிப்பிடவில்லை என்பது திண்ணமே. அதேபோல் இரண்டாம் வரகுணனின் தம்பியாகிய அவனி நாராயணன் என்பவன் தந்த தளவாய்புரச் செப்பேட்டில் இரண்டாம் வரகுணனைப் பற்றிப் பின்வருமாறு பேசப்பெற்றுள்ளது. ‘பிள்ளைப் பிறை சடைக்கணிந்த பினாகபாணி உளத்திருத்தி உலகம் காக்கின்ற நாளில்’ என்று அச்செப்பேடு தொடங்குகிறது. எனவே வரகுணனின் தனிச்சிறப்பாகப் பேசப்பெற்றது அவனுடைய சிவ பக்தியையே ஆகும். வரகுணன் என்ற ஒரு நாமத்தை மட்டும் கருத்திற்கொண்டு, திருவாதவூரடிகள் சுட்டும் வரகுணன் இரண்டாம் வரகுணன் என்றுரைப்பது ஆய்வின் தெளிவான முடிபாகாது.

பொய்யடிமை இல்லாத புலவர்

பொய்யடிமை இல்லாத புலவர் என்பது திருவாதவூரடிகளையே குறிப்பதாகும். இதுவரை ஆராய்ந்த அறிஞர்கள் யாரும் அறுதியிட்டு அவருடைய இயற்பெயரைக் கூறாமல் திருவாதவூரர் என்ற அவர் பிறந்த ஊரின் பெயராலும், கடவுள் கொடுத்த மாணிக்கவாசகர் என்ற பெயராலும் அழைத்து வருகின்றனர். இன்னவரையில் இதற்கான சான்று எங்கும் கிடைத்தில.

அறுபத்துமூன்று நாயன்மானர்களைப் பாடிய சேக்கிழார் பெருமான் ஏன் அடிகளைப் பாடாமல் விட்டுவிட்டார் என்றால், சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகையில் அடிகள் பெயர் இல்லாததால் சேக்கிழார் பாடவில்லை. சேக்கிழார் பெருமானுக்கு திருத்தொண்டர் தொகையே ஆதார நூலாகும். இத்திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் ‘பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்’ என்று பாடியுள்ளார். தேவார மூவரில் அப்பரும், சுந்தரரும் திருவாதவூரடிகளைத் தன் பாடல்களில் குறிப்பிடுவதன் வாயிலாக அடிகள் தேவாரம் பாடிய மூவருக்கும் முன்னவர் என்பது தெளிவே.

டாக்டர் நாகசாமியின் பொய்யடிமை இல்லாத புலவர் என்ற கட்டுரையில் கீழ்கண்ட தகவலினைப் பதிவிட்டுள்ளார்.

அடியார்கள் புராணத்தை வடமொழியில் தரும் உபமன்யு பக்த விலாசம் இரண்டு விதமாக பொய்யடிமை இல்லாத புலவரை மொழிப்பெயர்த்துள்ளது. அதனைக் கூர்ந்து நோக்கினால் புலவர் என்னும் சொல் ஒருவரையே குறிக்கிறது என்பது தெளிவாகிறது. அந்தக் கவி சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் பாடவில்லை. அறுபத்து மூவர் வரலாற்றைக் கூறும் அகஸ்திய பக்த விலாசம் என்ற சமஸ்கிருத நூலும் பொய்யடிமை இலாத புலவரை ‘ஒருவர்’ என்றே கூறுகிறது.

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களின் திருத்தொண்டர் தொகையில் உள்ள கூற்றுப்படி திருப்பாடல்கள் மொத்தம் பதினொன்று, அவற்றுள் தனியடியார்களைப் பற்றிய குறிப்புகளை உணர்த்தும் திருப்பாடல்கள் முதல் ஒன்பது பாடல்களும், ஈற்றுப் பாடலாக அமைந்த பதினோராவது பாடலும் ஆகப் பத்துப் பாடல்கள். இடையில் உள்ள பத்தாவது திருப்பாடல் தொகையடியார்களைப் பற்றியே குறிப்பிடும் பாடலாகும்.

பொய்யடிமை இல்லாத புலவர் தொகையடியார் என்பது கருத்தாயின், சுந்தரர் ஒன்பதாவது செய்யுளின் இறுதியிலும், பதினோராவது செய்யுளின் தொடக்கத்திலும் குறிப்பிட்டுப் பாடித் தொகையடியார்களுக்கென பாடியமைந்த பத்தாவது செய்யுளுடன் இயைபு காட்டிச் சென்றிருப்பார். இங்ஙனம் செய்யாமல் தனியடியார்களைப் பற்றியே குறிப்பிட்டுப் பாடிவருகின்ற போக்கில் பொய்யடிமை இல்லாத புலவர் எனும் தொடரில் குறிப்பிட்ட புலவர் தனியடியாரே ஆவர் என்று குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் சுட்டும் அத்தனியடியார் திருவாதவூரடிகள் என்பது மெய்மையே.

தொக்குப்புரை

திருவாசகத்தில் மிகப் பழமையான அடியவர்களான கண்ணப்ப நாயனாரைப் பற்றிய குறிப்பும், சண்டேசுவர நாயனாரைப் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. ஏனைய நாயன்மார்களைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை. திருவாதவூரடிகள் பிற்பட்டவராயின் தேவார மூவரையோ நாயன்மார்களில் சிலரையேனும் குறிப்பிட்டிருப்பார். ஆகவே, இவர் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவரே ஆவார்.

சீரிய கிறித்துவப் பாதிரியார் தம் மதக் குருக்களுக்கு எழுதிய 'கோட்டயக் கோவில்' கடிதம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டினது. அக்கடிதத்தில் மணிமொழியார் பல கிறித்துவர்களை மதமாற்றிச் சைவ சமயத்தவர்களாகச் செய்தமை குறிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வினை க.சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள், தான் எழுதிய மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் என்னும் நூலில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தங்களது பாடல்களின் வழியே திருவாதவூரடிகளைக் குறிப்பிடுவதால் அடிகள் மூவர் முதலிகளுக்கு முன்னவர் என்பது ஆய்வின் வழியே தெளிவுருகின்றது. மேலும், உயர்திரு மறைமலையடிகள், கே.ஜி. சேஷையர், வித்துவான் கண்ணப்ப முதலியார் ஆகியோரது ஆய்வுத் தரவுகளின் அடிப்படையிலும், இன்னபிற நூல்களிலிருந்து பெறப்பட்ட செய்திகளின் அடிப்படையிலும் மணிமொழியார் திருவாதவூரடிகள் காலவரம்பு கி.பி.மூன்றாம் நூற்றாண்டு என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக மெய்ப்பிக்கப்படுகிறது.

பார்வை நூல்கள்

1. Achariyar, P. S. (1929). *மணிவாசகர் சரித்திரம்*. இ.மா.கோபாலக்ருஷ்ணக் கோன்.
2. Kadavun Mamunivar. (1895). *திருவாதவூரர் புராணம்*. வாணீ விலாஸ் அச்சுக்கூடம்.
3. Palur Kannappa Mudaliyar. (1958). *பொய்யடிமை இல்லாத புலவர்– யார்?*. சென்னைப் புதுக்கல்லூரித் தமிழ்த்துறை.
4. Maraimalai Adigal. (2003). *மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்*. பூம்புகார் பதிப்பகம்.
5. Maraimalai Adigal. (2017). *மாணிக்கவாசகர் பாகம் (1 & 2)*. வைத்தியநாதன் பதிப்பகம்.
6. Pope, G. U. (1900). *The Thiruvachagam*. Oxford at the Clarendon Press.
7. Seshaiyar, K. G. (1915). *மாணிக்கவாசகர் காலவாரச்சி*. மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை.
8. Sivapriya. (2009). *மாணிக்கவாசகப் பெருமான்*. மணிவாசகர் பதிப்பகம்.
9. Vanmeeganathan, G. (1983). *இந்திய இலக்கியச் சிற்பிகள்: மாணிக்கவாசகர்*. சாகித்திய அகாதெமி.

References

1. Sesha Iyer, K. G. (1915). *Māṇikkavācakar kālavārachi* [Manikkavasagar's Chronology]. Madurai Tamil Sangam Muttirasalai.
2. Vanmeeganathan, K. (1983). *Māṇikkavācakar* [Manikkavasagar]. Sahitya Akademi.
3. Maraimalai Adigal. (2003). *Māṇikkavācakar varalāṟuṅ kālamum* [Manikkavasagar's History and Period]. Poompuhar Pathippagam.
4. Sivapriya. (2009). *Māṇikkavācakap perumāṉ* [Lord Manikkavasagar]. Manivasagar Pathippagam.
5. Maraimalai Adigal. (2017). *Māṇikkavācakar: Pākam 1 & 2* [Manikkavasagar: Parts 1 & 2]. Vaidhyanathan Pathippagam.
6. Achariyar, P. S. (1929). *Maṇivācakar sarittiram* [History of Manikkavasagar]. E. Ma. Gopalakrishna Kon.
7. Pope, G. U. (1900). *The Thiruvachagam* (1st ed.). Clarendon Press.
8. Paloor Kannappa Mudaliar. (1958). *Poyyaṭimai illāta pulavar – Yār?* [The Poet Without Falsehoo—Who?]. Chennai New College Tamil Department.
9. Kaṭavuṇ Māmuṉivar. (1895). *Tiruvātavūrar purāṇam* [The Purana of Thiruvathavurar]. Vani Vilas Press.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: **https://doi.org/10.63300/tm0110.25** --:-- Research Paper

Natural Imagery in Thirugnanasambandar's Thevaram

Dr. K. Nagarathinam,
Associate Professor, Department of Tamil, Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore – 641049
Email: rathnak80@gmail.com

Abstract: *The word "art" signifies the creation of a desired outcome or action. Language is the most excellent among the civilizational tools created by humanity. The art expressed through this language is 'literature'. The journey of this river called literature traverses many domains, continuously moving towards its inherent purpose. Even though various contributing factors and time encountered on this journey possess the power to alter its course, they have not been able to bring about significant changes in the fundamental trajectory of literature. When the trajectory of literature appears to reflect the trajectory of the creator who produced it, a remarkable harmony can be observed among literary creators living in the same era. Many world poets share a common perspective. Even though these eminent individuals may express themselves differently due to variations in physicality and language, the venerable Avvai Pirattiyar affirms that they converge on a single path through their noble experiences and their ability to articulate their felt emotions. An examination of the natural imagery found in Thirugnanasambandar's Thevaram offers an opportunity to closely observe and elucidate his creative genius.*

Key Words: *Thirugnanasambandar, Thevaram*

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இயற்கை உருக்காட்சிகள்

முனைவர்.க.நாகரத்தினம்,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர்.எஸ்.என்.எஸ்.இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
கோயமுத்தூர் -641049

சுருக்கம்: *"கலை" என்ற சொல் விரும்பிய வினையை உண்டாக்கித் தருவது எனப் பொருள்படும். மனிதன் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளில் மிகச் சிறந்தது மொழி. இம்மொழியின் வாயிலாக விளக்கப்பெறும் கலையே 'இலக்கியம்: இவ்விலக்கியம் என்னும் நதியின் கால்கள் களங்கள் பல கடந்து தன் நோக்கில் பயணித்துக் கொண்டு இருக்கின்றன. அப்பயணத்தில் எதிர்ப்படும் காரண காரணிகளும், காலமும் அந்ததியின் போக்கினை மாற்றும் வல்லமை கொண்டிருந்தாலும் கூட இலக்கியத்தின் போக்கில் மிகப் பெரிய மாற்றங்களைத் தோற்றுமிக்க இயலவில்லை. இலக்கியத்தின் போக்கு என்பது அவ்விலக்கியத்தைப் படைத்தளித்த படைப்பாளின் போக்காகத் தென்படும் சூழலில், ஒரே காலக்கட்டத்தில் வாழும் இலக்கியப் படைப்பாளர்களுக்குள் ஒரு உத்தமமான ஒத்திசைவினைக் காண முடிகின்றது. உலகக் கவிஞர் பலரும் ஒரு நோக்கு உடையவர்கள், தேக, மொழி மாறுபாடுகளால் அச்சான்றோர் வேறு வேறு திறப்படினும் விழுமிய அனுபவத்தாலும் தாம் உணர்ந்த உணர்வை வெளிப்படுத்தும் திறத்தாலும் அவர்கள் ஒரு நெறிப் படுவர் என்பதனை ஔவைப் பிராட்டியார். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்படும் உருக்காட்சிகளில் இயற்கைப் பொருள் தொடர்பான உருக்காட்சிகளை ஆராயும்போது அவரின் படைப்பாற்றலை உற்று நோக்கி வெளிப்படுத்துவதற்குவாய்ப்பாகஅமைகிறது.*

முக்கிய சொற்கள்: *திருஞானசம்பந்தர், தேவாரம், இயற்கை உருக்காட்சிகள்*

முன்னுரை

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகள் பக்தி இலக்கியத்தின் கருவூலமாகும்.இத்திருமுறைகளில் இயற்கையில் இறை ஒளியைக் கண்டு வழிபடும் ஒரு நெறியையும் காணலாம். பக்தி நெறியை உணர்த்தும் வகையில், உவமை நயங்களும், உருக்காட்சிகளும், இசைக்கூறுகளும் இத்திருமுறைப் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ள தன்மையைப் புலப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

உருக்காட்சி

"ஐம்புல நுகர்ச்சியினால் அறியலாகும் அனைத்துப் பொருள்களையும், குணங்களையும் பற்றி வருகின்ற உருவங்களின் ஒட்டு மொத்தமான தொகுதி 'உருக்காட்சி' எனப்படும்" (.பா. இராசேந்திரன்: 1988:187)

உருக்காட்சியின்தன்மை

'உருக்காட்சி' என்பது கலைஞன் அல்லது கவிஞனின் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்வது. பாடல்களில் அமைந்துள்ள அணிநலச் சிறப்பினைக் காட்டவல்லது; படைப்பாளியின் கற்பனை ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது; பாடலின் சுவை நலத்தை அளவீடு செய்வதற்குச் சிறந்த கருவியாக அமைவது சுருங்கக் கூறின், கற்பனை, சுவை, சொல்லாட்சி, அணி நலம், படைப்பாற்றல் முதலிய யாவும் உருக்காட்சியின் உள்ளடக்கமாகும். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்படும் உருக்காட்சிகளில் இயற்கைப் பொருள் தொடர்பான உருக்காட்சிகளை ஆராயும்போது அவரின் படைப்பாற்றலை உற்று நோக்கி வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

மரங்கள்-கமுகு

திருஞானசம்பந்தர் கமுக மரம், புன்னை மரம், கொன்றை மரம், வாழை மரம், மாமரம், மூங்கில் மரம் ஆகிய மரங்கள் பற்றிய உருக்காட்சிகளை அமைத்துப் பாடியுள்ள திறம்தனிச்சிறப்புடையதாகும்.சீர்காழியில் நிற்கும் அழகிய கமுக மரங்களில் வெள்ளிய பிஞ்சுகள் அரும்பியிருப்பது முத்துக்கள் போலவும், பச்சை நிறக் காய்கள் மிகுந்துள்ள காட்சி மரகதமணிகள் காய்த்து இருப்பது போலவும், செந்நிறப் பழங்கள் விளங்கும் காட்சி செம்பவளம் பழுத்திருப்பது போலவும் அமைந்துள்ளனவாகத் திருஞானசம்பந்தர் தெளிவுபடுத்துகின்றார்.

"எண்ணார் முத்தமீன்று, மரகம் மேற்காய்த்துக்
கண்ணார்கமுகுபவளம்பழுக்குங்கலிக்காழி")1:102:4)

என்று கமுகின் வெள்ளிய பிஞ்சுகளுக்கு முத்துக்களையும் பச்சைக் காய்களுக்கு மரகதக் கற்களையும், செந்நிறப் பழங்களுக்குச் செம்பவளத்தையும் ஒப்புமைகாட்டி உருவக வாயிலாக உருக்காட்சிகளை அமைத்திருப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது. இன்னும் சில பாடல்களில் கமுகு மரத்தினை உருக்காட்சியாகக் காட்டுகின்றார்.

கொன்றை

கொன்றை மலர்களினின்றும் பூக்கள் உதிர்கின்ற காட்சியைத் திருஞானசம்பந்தர் அம்மரங்கள் பொன்னைச் சொரிவது போன்றும், உதிர்ப்பது போன்றும்உருக்காட்சிசெய்துள்ளார்.

"கொன்றை பொன்சொரியும் கொள்ளம்பூதூர் (3:6:5)

என்ற அடிசான்றாக அமைகின்றது.

மாமரம்

மாமரத்தை மையமாகக் கொண்டு திருஞானசம்பந்தர் படைத்துள்ள கற்பனை உருக்காட்சிகள் கற்போர்க்குப் பெரிதும் சுவையூட்டுவன.

"தவமுயல்வோர்மலர்பறிப்பத்தாழவிடுகொம்புதைப்பக்கொக்கின்காய்கள்
கவணெறிகற்போற்கனையிற்கரைசேரப்புள்ளிரியுங்கழுமலமே" (1:129:7)

இதில் தவமுயல்வோர் பூப்பறித்துவிட்ட கொம்பு போய் மாமரக் கிளையினைத் தாக்கியதன் மூலம் மாங்கனிகள் சிதறிப் பக்கத்திலுள்ள கனையில் வீழ்கின்றன. தண்ணீரில் இரைச்சல் தோன்றுகின்றது. இரைச்சலைக் கேட்டுப் பறவைகள் அஞ்சி அகல்கின்றன என்றவாறு அமைத்த உருக்காட்சி படிப்போர் உள்ளத்தில் எளிதில் புரியும் வண்ணம்அமைத்துள்ளது.

புன்னை

திருஞானசம்பந்தர் கட்டுவிடாத புன்னையின் மொட்டுக்கள் பொன் முடிப்பைப் போன்று விளங்குவதாக அவைகளின் உள்ளே மகரந்தமாகிய பொன் நிதி பொந்த்து வைக்கப்பட்டு உள்ளதாகவும் அவை மலர்வது அப்பொருள்முடிப்பு அவிழ்வது போலவும் மகரந்தம் பரந்து மணம் பரப்புவது பொற்காசுகள் சிதறிப் பிறர்க்குப் பயன்படுவது போலவும் உருவகித்து அதில் அடங்கியுள்ள உருக்காட்சிகளை ஒருஅடியில் திறம்படக் காட்டியுள்ளார்.

'புன்னையின் முகைநிதி பொதியமிழி பொழிவன புரவமே' (3:84:6)

என்றவாறு ஒரு அடியில் பல்வேறு உருவங்களை அமைத்து அவற்றை ஒன்றோடொன்று இணைத்து ஒட்டு உருக்காட்சியைத் திறம்பட அமைத்துப் பாடியது வியப்படையச் செய்கிறது.

வாழை

நீர்வளம் மிக்க காழி, பேணுபெருந்துறை ஆகிய தலங்களில் வாழை மரங்கள் செழிப்பாக உள்ளன. அவற்றிலிருந்து குலைகள் தொங்குகின்ற காட்சி யானையின் துதிக்கை போன்று விளங்குவதாக உருக்காட்சி செய்துள்ளார் திருஞானசம்பந்தர்.

'கைபோனான்ற கனிகுலை வாழை (1:42:3)
' *.........முரண் வேழக்
கைபோல் வாழை காய் குலையீனுங் கலிக்காழி" (1:102:2)

என்ற வரிகள் சான்றாக அமைகின்றன.

மூங்கில்

யானை மூங்கில் நுனியைப் பற்றி வளைத்துவிட்டது. விசைத்தெழுந்த மூங்கில் நுனிபோய் கருமுகியின் வயிற்றைக் கிழிக்க மழை பெய்ததாக உருக்காட்சியைப் படைத்துள்ளார் திருஞானசம்பந்தர்,

"தான் அமர் வேய்தலைப் பற்றித்தாழ்கரியிட்ட விசை போய்க்
காளமதார் முகில் கீறுங் கற்குடி மாமலையாரே" (1:43:6)

என்ற அடிகள் நோக்கத்தகும். இவ்வுருக்காட்சியில் உள்ளுறைப் பொருளும் அமைந்துள்ளது. திருவருள் துணை நிற்குமானால் ஆன்மாக்களின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் கருநிறமேகம் போன்ற ஆணவப்படலம் கிழிக்கப் பெற்று அருளாகிய மழை பொழிவிக்கப் பெற்று உய்தி கிடைக்கும் என்ற சைவக்கருத்தும் இவ்வுருக் காட்சியின் அகத்து உறைந்துள்ளது. உட்குறிப்புத் தொனிக்குமாறு உருக்காட்சியினை உருவாக்குவது திருஞானசம்பந்தரின் திறம் என்பதற்குச் சான்றாக இவ்வுருக்காட்சி அமைகின்றது.

மலர்கள்

திருஞானசம்பந்தர் மலர்களை மையமாகக் கொண்டு உருக்காட்சிகளைப் படைத்துள்ளார். இவ்வருக்காட்சிகள் இலக்கிய எழிலுடன் படிப்போர் கருத்தைக் கவரும் பான்மை பெற்றுள்ளன.

தாமரை

மலர்ந்த தாமரை மலர்கள் கிண்ணங்கள் போலக் காட்சி தருவனவாகவும், அப்பூக்களில் உள்ள மகரந்தத் கிண்ணங்களில் விளங்கும் வண்ணப்பொடிகள் போலவும், அன்னங்கள் தங்கள் அலகுகளால் தாமரை மலர்களைக் கோதுவது கிண்ணங்களிலுள்ள வண்ணப் பொடிகளைத் தூவுவன போலவும் திருஞானசம்பந்தர் உருக்காட்சிகளை உருவகித்துக்காட்டியுள்ளார்.

"கிண்ண வன்ண மலருங் கிளர் தாமரைத்தாதளார வண்ணநுண்மணன்
கண்ண வெண்பொடிக் கொண்டு மெய்பூச வல்லீர் சொலித்" (2:2:3)

தாமரை மலர்வதை மையமாகக் கொண்டு திருஞானசம்பந்தர் படைத்துள்ள கற்பனை உருக்காட்சிகள் கலை உள்ளம் படைத்தோர்களுக்கு விருந்தாக அமைகின்றது.

செங்காந்தள்

மகளிர் தங்களுடைய செந்நிறமான கைவிரல்களை விரித்து மேலே காட்டி நிற்பதுபோன்று செங்காந்தள் மலர்கள் செடியினின்றும் மேல் நோக்கி மலர்ந்துள்ளனவாகத் திருஞானசம்பந்தர் காட்டியுள்ளார். இவ்வாறு செங்காந்தள் பூத்து நிற்கும் தோற்றம் நல்ல பாம்பு படமெடுத்து நிற்பது போன்று அமைந்து உள்ளதாகவும் உருக்காட்சியாகப் பாடியுள்ளார்.

"கையரிவையர் கொல்விரல்லவை காட்டி அம்மலர்க்
காந்தளங்குறிபையராவிரியும்" (2:53:7) என்றுகாட்டுகின்றார்.

முல்லை

"கொல்லை வேடர் கூடி நின்று கும்பிட
முல்லை யயலே முறுவல் செய்யும்" (2:64:9)

என்பதில் முல்லைச் செடியை ஒரு பெண்ணாகப் பாவித்துக் கொண்டு அப்பெண் தன்னுடைய பல்லாகிய பூவைச் சிறிதுவெளியே காட்டிப் புன்முறுவல் பூப்பது போலவும், கொல்லை வேடர் தெய்வத்தை வணங்குவதைக்கண்டு உள்ளம் பூரித்ததால் அவ்வாறு முல்லைப் பெண் முறுவலித்தாள் என்பது போலவும் உருக்காட்சியைத் திருஞானசம்பந்தர் படைத்துள்ளார்.

செருந்தி

காலையில் கோங்கம் போன்று மலர்கின்ற மலர். செருந்திப் பூவட்டமாகத் தட்டைப் போன்று அமைந்துள்ளது. ஆக செருந்திப் பூவின் தோற்றத்தைக் கண்ட திருஞானசம்பந்தர் பொன்னாலியன்ற வட்டமான தட்டு ஒன்றிற்கு ஒப்பிட்டு உருக்காட்சியைப் படைத்துள்ளார்.

"கட்டலர்ந்தமலர்தூவிக்கைதொழுமின்பொள்ளியன்ற
தட்டலர்ந்தபூஞ்செருத்தி")2:41:4

என வருதல் காணத்தகும்.

தீர்ப்பூக்கள்

திருஞானசம்பந்தர் நீர்ப்பூக்களை அவயங்களாக உருவகித்துச் சிரிய உருக்காட்சிகளை உருவாக்கியுள்ளார்.

"வாவிதொறும் வண்கமலமுகங்காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்டக் காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டும் கழுமலமே" (1:129:

என்பதில் திருக்கழுமலத்தில் தடாகம் ஒரு பெண் போல் காட்சி தருவதாகக் கொண்டு நீரில் மலர்ந்து

இருக்கும், தாமரை மலரை அப்பொய்கைப் பெண்ணின் முகமாக்கிச் செங்குமுத மலரை வாயாக்கி நீலோற்பலம், கருங்குவளை, கருநெய்தல் ஆகிய நீர்ப்பூக்களை வாவியாகிய பெண்ணுக்குக் கண்ணாக்கிக் கற்பனை நயம் தோன்ற உருக்காட்சிகளை மலர்களை மையமாகக் கொண்டு இலக்கியச் சுவையுடன் படைத்துள்ளார்.

பறவைகள்

திருஞானசம்பந்தர் பறவைகள் பற்றிய உருக்காட்சிகளைத் திறம்படப் படைத்துள்ளமை அவருடைய கற்பனை ஆற்றலுக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

அன்னம்

"செறி யிதழ்த்தாமரைத் தவிசிற்றி கழ்ந்தோங்கு விலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல் வெறிக் கதிர்ச் சாமரைவிரட்ட விளவன்னம் வீற்றிருக்கும் மிழலையாமே" (1:132:2)

என்பதில் திருவிழிமிழலையில் தாமரை மலரில் இள அன்னம் அமர்ந்திருந்த காட்சியைக் கண்ட திருஞானசம்பந்தர் செறிந்த இதழ்களையுடைய தாமரை மலரை அரசு வீற்றிருக்கும் ஆசனமாகப் பாவித்துத் தாமரை மீது அமர்ந்திருக்கும் இள அன்னத்தைத் தவிசின் மீது வீற்றிருக்கும் இளவரசாக எண்ணி மேலோங்கி நிற்கும் வட்டமான தாமரை இலையைக் குடையாகக் கொண்டு இருமருங்கும் காற்றில் அசைந்து ஆடும் செந்நெற்கதிர்களைச் சாமரைகளாகக் கற்பனை செய்து புதியதோர் உருக்காட்சியைக் காட்டுகின்றார்.

வண்டு-மயில்-குயில்

வண்டு பாடுவதையும், மயில் ஆடுவதையும் குயில் கூவுவதையும் மையமாகக் கொண்டு உருக்காட்சிகளைத் திருஞானசம்பந்தர் அழகாகக் காட்டுகின்றார்.

"பங்கய மதுவுண்டு வண்டிசை பாட மாமயிலாட விண்முழ
வங்கையாலதிர்க்கு ஆமாத்தூர் அம்மானே" (2:50:7)

தாமரையாகிய கிண்ணத்தில் தேனாகிய மதுவினை மாந்திய வண்டாகிய பாடகன் இசைபாட, மயிலாகிய நடனமாது நடனமாடுகின்றான் என்றும் அவ்வாட்டத்திற்கு ஏற்ப மேகங்கள் முழவாக நின்று அதிர்கின்றன என்றும் திருஞானசம்பந்தர் உருக்காட்சிகளைப் படைத்துள்ளார்.

விலங்குகள்

விலங்குகளை மையமாகக் கொண்டும் திருஞானசம்பந்தர் உருக்காட்சிகளை உருவாக்கிப் பாடியுள்ளார்.

யானை

அடர்ந்து செறிந்த காடுகளையுடைய கயிலை மலையில் இருள் மண்டிக் கிடந்தது. அந்த இருட்டில் பெரிய யானையை மலைப் பாம்பு விழுங்கி மறைந்தது. இருளில் திகைத்த யானைகள் கன்றும், பிடியுமாகச் சிதறிக் குளிர்ச்சி பொருந்திய சாரலின் வழியே ஓடி விரைந்து மலையடி வாரத்தைச் சர்ந்தன என்பதனைத் திருஞானசம்பந்தர் பின்வருமாறு காட்டுகின்றார்.

"பரிய களிற்றை யரவு விழுங்கி மருங்கவிருள் கூர்ந்த
கரிய மிடற்றர் செய்ய மேனிக் கயிலை மலையானே" (2:68:4)

இவ்வாறு யானைகளைக் கொண்டு உருக்காட்சியைத் தீட்டுகின்றார்.

மந்தி

"கொண்டலார் வந்திடக் கோலவார் பொழில்களிற் கூடமந்தி
கண்டவார் கழைபிடித்தேறிமா முகிறனைக் கதுவு கொச்சை" (3:89:7)

என்பதில் திருக்கொச்சை வயத்தில் சோலைகளில் மேகங்கள் வந்து படிவது போலவும், மந்திகள் கூட்டமாகக் கூடி நிற்பது போன்றும் அவைகள் மூங்கில்களைப் பிடித்து ஏறி, விண்ணளவு சென்று

மேகங்களைக் கையால் பற்றுவது போலவும் கற்பனை செய்து உருக்காட்சியைத் திருஞானசம்பந்தர் மேற்கூறியவாறு படைத்துள்ளார்.

காட்டுப்பசுக்கள்

மேகம் இடி முழக்கம் செய்தது; அம்முழக்கத்தைக் கேட்டுக் காட்டுப் பசுக்கள் அஞ்சி ஓடிக் கூட்டமாக அண்ணாமலைச் சாரலில் அணைந்தன என்பதனைப் பின்வருமாறு

"தூமாமழை நின்ற திரவெருவித்தொறு விண்திரையோடும்
ஆமாம்பிணை வந்தணையுஞ் காரல் அண்ணாமலையாரே" (1:69:1)

என்றவாறு உருக்காட்சியை அமைத்துள்ளார்.

மீன்கள்

நீர் வாழ்வனவற்றுள் மீன்கள் திருஞானசம்பந்தரைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அவர் மீன்களைப்பற்றிய உருக்காட்சிகளைச் சுவைபடத் தீட்டுகின்றார்.

தாழை மலரின் நிழல் குளத்தில் படிவது இயற்கை குளத்திலுள்ள கெண்டை மீன் தாமரைப் பூவின் பக்கத்தே சென்று தங்குவதும் இயற்கை, கடலில் முத்துக்களிருப்பதும் இயற்கை இம்மூன்று இயற்கைக் காட்சிகளையும் ஒன்றாக இணைத்துக் கொண்ட தாழை மணின் நிழலைக் குருகென்று அஞ்சித் தாமரையின் பக்கத்தில் ஒளிந்து கொண்டதாகத் தற்குறிப்பேற்றித் தம்முடைய கற்பனை ஆற்றலால் கடலில், சிப்பிகளில் இருந்து வெளிப்பட்ட முத்துக்கள் அக்காட்சியைக் கண்டு நகைப்பதாகத் திருஞானசம்பந்தர் உருக்காட்சியினை உருவாக்கியுள்ளார்.

"விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல் விண்ட கதிர்முத்த நகை காட்டுங் காட்சியதே" (2:43:4)

என்ற பாடல் உற்று நோக்கற்பாலது. கெண்டை மீன் பற்றிய உருக்காட்சி இதற்குச் சீரிய காட்டாகும். மேலும் மீன்கள் பாய்வதால் தாமரை மொட்டு மலர்வதாகவும், உருக்காட்சியை உருவாக்குகின்றார்.மரங்களில் ஏறி மந்திகள் மடுக்கள் தோறும் பாய்வதாகவும் அதனால் மரங்களிலுள்ள தேன் மடுக்களில் சிந்துவதாகவும் சிதறிய தேனைக் குடித்த மீன்கள் துள்ளிப் பாய்ந்து தாமரைப் பூக்களில் மோதுவதனால் தாமரை மொட்டுக்கள் மலர்வதாகவும் உருக்காட்சியினைத் திருஞானசம்பந்தர் சமைத்துள்ளார்.

முடிவுரை

திருஞானசம்பந்தர் பெருமளவில் இயற்கைப் பொருள் பற்றிய உருக்காட்சிகளைப் பக்தி உணர்வு அடிப்படையில் படைத்துள்ளார் என்பதை உய்த்துணர முடிகிறது.இயற்கை எழிலை அணிகலச் சிறப்போடு உருகாட்சிகளாக்கி இலக்கிய நயத்தினைத் திறம்பட அமைத்துள்ளமையை உணரலாம்.உட்குறிப்புப் பொருளாகப் பக்திநெறி தொளிக்குமாறு உருக்காட்சிப் பொருள்களைத் திருஞானசம்பந்தர் உருவாக்கியுள்ளார்.திருஞானசம்பந்தர் காட்டும் பறவை உருக்காட்சி, மற்றும் ஆதக்கற்பனை ஆகியன அவரின் கற்பனை ஆற்றலைக் காட்டுவதாக அமைகின்றன.

துணைநூற்பட்டியல்

1. முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்(பதி.ஆ), திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை மூலமும் உரையும் தருமபுரம் முதற்பதிப்பு-1997.
2. மௌன மகாலிங்க தம்பிரான் சுவாமிகள்(பதி.ஆ) திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் இரண்டாம் திருமுறை மூலமும் உரையும் தருமபுரம் முதற்பதிப்பு-1997
3. பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்(பதி.ஆ) திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் மூன்றாம் திருமுறை மூலமும் உரையும் தருமபுரம் முதற்பதிப்பு-1997

4. அண்ணாமலை.சுப,உருவும் உணர்வும் கயல் பதிப்பகம் -625020 இரண்டாம் பதிப்பு-1977.
5. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (பதிஆ), திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிசெய் தேவாரத் திருப்பதிகங்கள் மூன்றாம் திருமுறை தருமபுர ஆதீன வெளியீடு முதற்பதிப்பு - 1955.

References

1. Muthukumarasamy Thambiran Swamigal (Ed.). (1997). *Thirugnanasambandha Swamigal Devaram, First Thirumurai: Original Text and Commentary*. Dharmapuram Adheenam. *(Note: "முதற்பதிப்பு-1997" means "First Edition-1997". In APA, "First Edition" is usually omitted unless it's a specific series or important for distinction. "பதி.ஆ" means "Editor").*
2. Mouna Mahalinga Thambiran Swamigal (Ed.). (1997). *Thirugnanasambandha Swamigal Devaram, Second Thirumurai: Original Text and Commentary*. Dharmapuram Adheenam.
3. Ponnambalath Thambiran Swamigal (Ed.). (1997). *Thirugnanasambandha Swamigal Devaram, Third Thirumurai: Original Text and Commentary*. Dharmapuram Adheenam.
4. Annamalai, S. (1977). *Uruyum Unarvum* (2nd ed.). Kayal Pathippagam, Madurai. *(Note: "சுப" is likely an initial or an abbreviated first name, common in Tamil citations, here represented as 'S.' For the publisher, 625020 is a Madurai PIN code, so the city is included).*
5. Ramalingath Thambiran Swamigal (Ed.). (1955). *Thirugnanasambandha Swamigal's Devara Thirupathigangal, Third Thirumurai*. Dharmapura Adheenam Publication. *(Note: "பதிஆ" means "Editor". "திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிசெய் தேவாரத் திருப்பதிகங்கள்" translates to "Divine Hymns of Devaram composed by Thirugnanasambandha Swamigal").*

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110202501 --:-- Research

Exploring Maternal Uncle Kinship in Classical Tamil Folk Ballads

Dr. S. Renuka Devi,
Guest Lecturer, Tamil Department
M.V. Muthiah Government Arts College for Women, Dindigul,
Email: renukatrinetra@gmail.com

Abstract: *Some customs and elements of society change and shrink over time and in the future, their characteristics will be such that they will appear as a remnant in the events of society in some way or another. This article is a study of how the importance given to maternal uncles in the rituals of life of the folk people of Tamil Nadu, as a remnant of the matrilineal society of ancient Tamils, is recorded in folk songs. In lullabies, the image of maternal uncles, the praise of their bravery, the pride of a sister for the care given to her newborn child by her younger brother, the love of the maternal uncle who guards the place where the child plays, the nature of encouraging the child to attend school, the importance given to the maternal uncle in events such as the ear piercing ceremony, the holy bathing ceremony of a girl child, and the marriage ceremony are highlighted.*

Keywords: *Folk songs, matrilineal society, remnant, primary relative, secondary relative, maternal uncle, rituals.*

நாட்டுப்புறப் பாடல்களில் தாய்மாமன் உறவு

முனைவர் சு.ரேணுகா தேவி,
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்
renukatrinetra@gmail.com

ஆய்வுச்சுருக்கம்: *சமூகத்தின் சில வழக்கங்கள், கூறுகள் போன்றவை பல காலக் கட்டங்களைக் கடந்து செல்லும் போது அவற்றின் தன்மைகள் மாற்றம் பெற்று சுருங்கிப் போய் வருங்காலத்தில் மிச்ச சொச்சமாக சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் இலைமறை காயாக வெளிப்படும் இயல்புடையனவாக இருக்கும். பண்டையத் தமிழர்களின் தாய்;வழிச் சமூகத்தின் எச்சமாக இன்று தமிழக நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகளில் தாய்மாமனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நாட்டுப்புறப் பாடல்களில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தாலாட்டுப் பாடல்களில் தாய்மாமனின் உருவம், வீரம் போற்றப்படலும் பிறந்த குழந்தைக்குத் தன் உடன்பிறந்தான் செய்த சீர் குறித்து சகோதரி கொள்ளும் பெருமிதமும், குழந்தை விளையாடும் இடத்திற்குப் பந்தலிட்டு பாதுகாக்கும் மாமனின் அன்பும், பள்ளியில் சேர்த்து குழந்தையின் கல்வியை ஊக்குவிக்கும் தன்மையும் காதுகுத்தும் சடங்கு, பெண் குழந்;தையின் பூப்புனித நீராட்டு விழா, திருமணச் சடங்கு போன்ற நிகழ்வுகளில் தாய்மாமனுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தின் பின்னணி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

குறிப்பு சொற்கள் *: நாட்டுப்புறப் பாடல்கள், தாய்வழிச் சமூகம், எச்சம், முதன்மை உறவினர், துணைமை உறவினர், தாய்மாமன், சடங்குகள்.*

முன்னுரை:

நாட்டுப்புறப் பாடல்கள் காற்றில் மிதக்கும் கவிதைகள் என்றாலும் கூட அவை மண்ணில் மலர்பவை. மண்ணின் வாசனையும் வளமும் உலராமல் ஒட்டி கிடப்பதுதான் அவற்றின் சிறப்பியல்புகளும் சீர்களும் ஆகும். .சாதாரண பாமர மக்களிடம் இவை உருப்பெற்றதால் புரிந்துகொள்வது மிகவும் சுலபமாகும். எளிய பதங்களும் யாரும் பாடக்கூடிய தன்மையும் வட்டார வழக்குச் சொற்களும் உடையதாகும். இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் கையாள்வதற்கு எளிதாகவும் உள்ளது. மக்கள் மனத்தில் உள்ள எண்ணங்கள், ஏக்கங்கள், லட்சியங்கள், நம்பிக்கைகள், இன்ப துன்பங்கள், உணர்வுகள் ஆகிய அனைத்தையும் இவை பிரதிபலிக்கின்றன எனலாம். தமிழ் மக்களின் உணர்வுக் களஞ்சியமாக விளங்கும் இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் மாமன் உறவு எவ்வாறு பேசப்படுகிறது என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் மாமன் உறவு மூன்று நிலைகளில் வைத்துப் பார்க்க முடிகிறது.

1. **தாய்மாமன் உறவு**
2. **முறைமாமன் உறவு**
3. **மாமனார் உறவு**

தாய்வழிச் சமூகமும் தாய்மாமன் உறவும்:

பண்டைக் காலத்தில் தாய்த்தலைமை முறை பரவலாக ஓங்கியிருந்த போது திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியின் வீட்டிற்குச் சென்று வாழ்ந்து வந்தான் அல்லது அவ்வப்போது சென்று வருபவனாக இருந்தான். இந்நிலையில் மாமியார் மருமகனைத் தன் குடும்பத்தைச் சார்ந்த ஒருவன் என மதிக்காமல் அவளது மக்களையும் சகோதரியின் மக்களையும் மட்டுமே பெரியதாக மதித்தாள். அவர்களே அக்குடியின் கால்வழியினர் என்பதால் அவர்கள் அனைவரும் முதன்மை உறவினர் (primary kin) என்ற வட்டத்திற்குள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். மருமகனும் அவனுடைய உறவினர்களும் இரண்டாம் நிலை உறவினராகவே (secondary kin) கருதப்பட்டனர். இதனால் தாய்வழிக் குடும்பதைச் சேர்ந்த முதனிலை உறவினர்கள் அக்குடும்பத்தின் மருமகனை குறிப்பிட்டுக் கூற முற்பட்ட போது இக்குழந்தைகளின் தந்தை என்றே குறிப்பிட்டனர். மக்களின் வழி தந்தை குறிப்பிடப்படுவது தாய்வழி சமூகத்தின் கூறாகவும், இது பிந்தைய நிலைகளில் எச்சக்கூறாகவும் தொடர்ந்து காணப்பட்டது என்கிறார் டைலர்.(பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், பக்.49-50)

தமிழ்ச் சமூகத்தில் சேய்வழி அழைத்தல் சங்க இலக்கியம் தொட்டு அறிய முடிகிறது. மகள், மகன் பெயரைக் கூறிப் பின்னர் தந்தையைக் கூறும் மரபு சங்க இலக்கியங்களில் சுட்டப்படுகிறது.

அகுதை தந்தை (அகம். 96)
அரிவையர் தந்தை (புறம்.117)
இயினன் தந்தை (ஐங்.409)
இவள் தந்தை (நற்.8, ஐங்.60,கள.61, புறம்.336).
இளையோள் தந்தை (புறம்.341)
குறுங்கொடி தந்தை (குறுந்.233)

இத்தகைய தாய்வழிச் சமூக அமைப்பில் குழந்தை வளர்ப்பில் முழு பொறுப்புடன் தாயின் சகோதரர்கள் செயல்பட்டு வந்துள்ளனர். அதன் எச்சமே இன்றைய சடங்கு முறைகளில் தாய்மாமனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எனலாம். நாட்டுப்புறப் பாடல்களில் தாய்மாமனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பின்னணியாக இதைக் காண முடிகிறது.

குருதி கலப்பாலும் மண உறவாலும் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறைகள் அமைகின்றன. குருதிவழி உறவுகளும் மணவழி உறவுகளும் ஒருமனிதனின் வாழ்வில் பெரும்பங்கு

வகிக்கின்றன. குறிப்பாகப் பெண்களைப் பொருத்தமட்டில் இவை இரண்டுமே தொன்மை வாய்ந்ததாக உள்ளன. இவற்றில் குருதிவழி உறவுகள் அவளுக்கு நன்மை செய்யக் கூடியனவாகவும் மணவழி உறவுகள் பல தீமை செய்யக் கூடியனவாகவும் உள்ளதாக எண்ணுகின்றனர்.

ஆருவரா..(ன்) ரோட்டுமேல
எங்கண்ணா வராரென்று சொல்லி
நா..இன்னா இன்னு செய்ய போறெ..(ன்)
சீரவஞ் சம்பா நெல்லெடுத்து சீக்கரமா குத்துங்கடி
எங்கண்ணா வரார் ரோட்டுமேல வாழஎல பெறிஞ்சி வையுங்கடி
வெள்ள சோத்த சாப்பிடுங்க அண்ணம்மாரே சாய்ஞ்சிடுங்க ஊஞ்சலில
ஆருவரா..(ன்) ரோட்டுமேல மாமா வரார் ரோட்டு மேல
(சத்தியசீலன்.சி., நாட்டுப்பற இலக்கிய ஆய்வுகள், ப.80)

ஒரு பெண் பிறந்தது முதல் மணமாகும் வரை வாழ்வின் பெரும் பகுதியை உடன் பிறந்தவர்களுடன் கழிக்கிறாள். சிறுவயது முதல் விளையாடுதல், பள்ளி செல்லுதல் ஆகிய அனைத்தும் அவர்களுடன் இணைந்தே நடக்கின்றன. இக்காலத்தில் உடன் பிறந்தவர்கள் அவளுக்குத் தேவையானவற்றை வாங்கித் தந்து அவளின் விருப்பங்களை நிறைவு செய்கின்றனர். இதனால், அவள் இயல்பாகவே உடன் பிறந்தவர்களுடன் மிகவும் அன்புடன் பழகுகிறாள். இந்தப் பழக்கம் அவள் மனதில் அண்ணன் தன் வாழ்விற்கு உறுதுணையாக இருப்பான் என்னும் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இந்த எண்ணத்தின் விதை அவர்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்திலும் பதிவாகியுள்ள தன்மையினைக் காணமுடிகிறது.

தாய்மாமன் உருவ வருணனை:

நெல்லை மாவட்டத்தில் ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாடும் தாலாட்டுப் பாடலில் தன் உடன்பிறந்தானின் அழகினையும் சிவந்த நிறத்தினையும் தூய வேட்டி கட்டிவரும் மேன்மையினையும் அறிமுகப்படுத்துகிறாள். இதனை,

“செக்கச் சிவப்பரோ- உங்க மாமா
சீமைக்கோர் அதிபதியோ
அழகு சிவப்பரோட -ஐயா நீ
அருமை மருமகனோ?
சின்னக் கிணறு வெட்டி
சிங்கார கல் பரவி
துவை வேட்டி போட்டு வரும்
துரை ராஜா உங்கள் மாமா" (நா.வானமாமலை,தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.90)

எனும் பாடல் வழி உணர முடிகிறது.

தாய்மாமனின் வீரம் போற்றப்படல்:

சிறுவன் சிவகிரியில் பிறந்தவன். மலைச்சாரலில் மான், பன்றி, முயல் போன்ற விலங்குகள் உண்டு. மலைச்சாரல் பயிரைக் காப்பதற்கும், இறைச்சி பெறுவதற்காகவும் சிவகிரி இளைஞர்கள், கடிநாய் பிடித்து வேட்டைக்குச் செல்லுவார்கள். இவர்களுள், சிறுவனது மாமன்மாரும் இருக்கிறார்கள். சிறுவனது தாய் அவர்களைப் பற்றித் தனது தாலாட்டில் கூறி, அவனது வீர உணர்வுக்கு உரமிடுகிறாள். இதனை,

"காட்டக் கலைத்து உன்மாமன்
கடி நாயை ஏவிவிட்டு
வேட்டைக்குப் போராக,
வீரபுலி உங்கமாமன்,

பன்றி படுமோ,
பதினெட்டு மான் படுமோ,
சிங்கம் புலி படுமோ, உங்க
சின்ன மாமன் வேட்டையில" (நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.96)

என்ற தாலாட்டுப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

பிறந்த குழந்தைக்குத் தாய்மாமன் செய்யும் சீர்:

உடன்பிறந்தாளின் மகிழ்ச்சியில் தமையன்மாருக்கும் பங்கு கொடுத்துவிடுகின்றனர் சமுதாயத்தினர். மாமன் செய்த சீர்வரிசையைத் தாய் தனக்கேயுரிய பெருமித உணர்வில் பாடி மகிழ்கின்றாள்.

“வண்ணமணி தொட்டி கட்டி பொன்னால் அரைஞாணும்
பூட்டினான் உன் மாமன்'
கன்னான் சிறு சதங்கை காலில் அழுத்துமென்று
பொன்னால் சிறு சதங்கை பூட்டினான் உன் மாமன்"

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.235)

தன் பிறந்தகச் சிறப்பைக் குழந்தைக்கு உணர்த்த விழைந்த தாய் குழந்தையின் அழுகைக்குக் காரணம் கேட்கும் போது கூட,

“மாமன் அடித்தானோ மல்லியப்பூச் செண்டாலே
அத்தை அடித்தாளோ அடுக்குமல்லி செண்டால
பாட்டி அடித்தாளோ பால் புகட்டும் கையால"

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.235)

என்று தாய்வீட்டு உறவையே தனித்தனியே உரைக்கின்றாள். குழந்தையை வளர்ப்பதில் பாட்டிக்கும் தாய்மாமனுக்கும் பங்குண்டு என்பதையும் உணர்த்திவிடுகிறாள். தாய்வீட்டு உறவின் நெருக்கத்தையும் அறிவுறுத்தி செல்கிறாள்.

பெண் குழந்தைக்குச் செய்யும் சீர்:

கணவன் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியிருக்கிறான்;. அதனைப் பெருக்கிக்கொள்ள அவனும் சிந்தித்தானல்லன். ஆனால் மாற்று ஏற்பாடாக மனைவியைக் கொடுமைப்படுத்துகின்றான். அவளுடைய உடன்பிறத்தார் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவனிடம் உள்ளது. பொருளாதார வசதி இல்லாத அவளுடைய உடன்பிறந்தாரும் அவளுடைய சார்புநிலையைப் போற்றுகின்றனர். அவளுடைய சார்ந்த நிலையே பெருமையைத் தருகின்றது.

“பால் குடிக்கக் கிண்ணி
பழந் திங்கச் சோணாடு
நெய் குடிக்கக் கிண்ணி
முகம் பார்க்கக் கண்ணாடி
கொண்டைக்குக் குப்பி மாமன்
கொண்டு வந்தார் தாய்மாமன்"

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.133)

அடிப்படைத் தேவைகளைக்கூட மனைவியரின் உறவினர் தருவதைக் கணவன் தடுத்தானல்லன். மனைவியும் அவர்கள் தருவதைப் பெருமையாகக் கருதியிருக்கிறாள்.

குழந்தை விளையாடப் பந்தலிடும் மாமன்:

பெண்களுக்கு எப்போதும் பிறந்தகப் பற்று உண்டு. அது அவள் சாகும் வரையில் நீங்காது. தன் குழந்தை விளையாடும் போது குழந்தையின் மேல் வெயில்படும் என்று எண்ணித் தன் சகோதரன் மரம் நட்டும் பந்தலிட்டும் பாதுகாத்தான் என்று உடன் பிறந்தானின் பெருமை பேசுகிறாள் ஒரு தாய்.

“வெளையாடப் போன பக்கோ – என்சாமி
வெய்யப் படுமுன்னு சொல்லி - உனக்கு
நடையாலே பூமரங்கோ
நடத்தி விட்டாருன் மாமே”

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1,ப.240)

“வெளையாடப் போன பக்கம்
வெயில் படும் என்று சொல்லி
வெள்ளியாலே கால் நிறுத்தி
வெத்திலையால் பந்தலிட்டு
பொன்னாலே கால் நிறுத்தி
பூவாலே பந்தலிட்டு
கமுகாலே கால் நிறுத்தி
கரும்பாலே பந்தலிட்டு
தங்கத்தால் கால் நிறுத்தி
தாமரையால் பந்தலிட்டு - அதிலே
பிள்ளை விளையாடுமென்று
அறிக்கை உட்டார் உன் மாமன்"

(நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.96)

இவ்வாறு குழந்தையின் மீது தாய் மாமன் கொண்டிருக்கக்கூடிய அன்பினைப் பதிவு செய்கின்றன நாட்டுப்புறப் பாடல்கள்.

மேலும் தன் குழந்தை நன்றாக வளர வேண்டும் என்பதற்காகப் பிறந்த வீட்டிலிருந்து சீதனமாக மாடு தந்தார்கள் என்று பிறந்த வீட்டின் பெருமையையும் சகோதரனின் பெருமையையும் கீழ்க்காணும் பாடலில் காண முடிகின்றது.

"மாமே கொடுத்தாச்சி
மலை யோர மேயுதுன்னு - நீ
ஓடி முடுக்கு"

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.240)

குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும் தாய்மாமன்:

நாட்டுப்புறப் பாடல்களில் கல்வியின் முக்கியத்துவம் குறித்துப் பல பாடல்களில் பாடப்பட்டுள்ளன. தாய் தன் குழந்தை எதிர் காலத்தில் எவ்வாறு கல்வி கற்கப் போகிறான் என்பதை எண்ணிப் பூரிப்படைவதையும் தன் சகோதரன் தன் குழந்தையைப் பள்ளியில் சேர்க்க உறுதுணையாக இருப்பான் என்ற நம்பிக்கையையும் தாலாட்டு பாடல்கள் எடுத்துரைக்கின்றன. கல்வியின் அவசியத்தைக் கிராமத்து மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

“தாழை மடல் ஓலை கொண்டு
தமிழ் படிக்க வந்தவனோ?"
(சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.81)

என்று தன் குழந்தையின் கல்விப் பெருமையைக் குறிப்பிடுகிறாள் தாய்.

“வெள்ளியால் செய்த ஏட்டில்
வைர எழுத்தாணி கொண்டெழுத
பள்ளியில் சேர்க்க மாமன்

பரிவுடன் வந்திடுவான்" (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.30)

என்ற பாடல் வழி மாமனின் செல்வச் செழிப்பையும் பள்ளியில் சேரப்போகும் தன் குழந்தையையும் எண்ணி மகிழ்ச்சியுடன் தாலாட்டுப் பாடும் தாயினையும் காண முடிகிறது.

காதுகுத்துக் கல்யாணம்:

குழந்தைக்குக் காதுகுத்துக் கல்யாணம் கிராமப்புறங்களில் இன்றும் நடத்துகின்றனர். அந்த காதுகுத்துக் கல்யாணத்தில் தாய்மாமன் பங்கு பெறுவது பற்றியும் அவர் அளிக்கும் அன்பளிப்புப் பற்றியும் நாட்டுப்புறப்பாடல் விவரிக்கின்றது.

'மாம்பிஞ்சு கொண்டு
மதுரைச்சிமிக்கி கொண்டு
காதுகுத்த வாராக
கனகமுடி உங்களம்மான்'
ராராரோ ராரிரரோ என் அம்மா
உனக்கு காதுகுத்த வேணுமுன்னு
பொன்னான மாமனுக்கு உங்கள் அம்மா
போட்டாளாம் கடுதாசி
கடுதாசி கண்டவுடன் உன் மாமன்
பெட்டி துறந்தாராம்
புடிபுடியா பொன்எடுத்து
உச்சிபூ செய்தாராம்
ஒசந்த வைரம்வைத்து எங்க அம்மா உனக்கு
தகுந்த வைரம்வைத்து
தாழம்பூ செய்தாராம்
கால ரயில் ஏறி
கல்கத்தா போயிறங்கி எங்க அம்மா உனக்கு
கல்இழைத்து சங்குஎடுத்து
சுத்தி சிகப்பிழைத்து
கூறுக்கு பச்சவச்சி
வாய்க்கு வைரம்வைத்து
வாங்கி வந்தார் உன் மாமா"

(ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி8, ப.105)

தட்டானை அழைத்துக் காதில் துளையிட்டு கடுக்கனையோ காதோலையையோ அணிவிப்பர். அழகான குழந்தைகளைக் கண்டு எமன் ஆசை கொள்வான் என்றும் குழந்தையின் உடலில் காயம் ஏற்படுத்திவிட்டால் அக்குழந்தைக்கு எமன் எத்தீங்கும் செய்யமாட்டான் என்றும் நம்பப்படும் நம்பிக்கையே காதுகுத்துக் கல்யாணத்துக்கு அடிப்படைக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கும் இந்நம்பிக்கை காணப்படுகின்றது. தீமை தரும் ஆவிகள் தலை, வாய், காது, மூக்கு ஆகிய உறுப்புக்கள் வழியாக எளிதில் புகுந்துவிடும் என்ற நம்பிக்கையில் காதில் துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சக்தியாகக் காதில் ஏதேனும் ஒரு உலோகத்தை அணிவித்தால் காது வழியாகத் தீய ஆவி நுழைவதைத் தடுத்துவிடலாம் என்ற எண்ணத்தில் இவ்வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். கண்ணேறுபட்டுவிடும் என்பதாலும் காது குத்துகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

பூப்புனித நீராட்டு விழா

கிராமப்புறங்களில் பெண்கள் பருவமடைதல் முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப் படுகின்றது. பெண்கள் பருவமடைதலைப் பூத்தல், புஷ்பவதியாதல், சமைதல், ஆளாகுதல் என்றெல்லாம் குறிப்பிடுவர்.

'மங்கல நீராட்டு மங்கைக்கு
மங்களத் தாலாட்டு
மஞ்சக் கொடியாளும் வயசுக்கு வந்தாளாம்'

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.152)

அக்காலத்தில் பருவம் அடைந்த பெண்களைத் தனிக்குடிசை கட்டி வைப்பர். அக்குடிசையினைத் தாய்மாமனே கட்டுவர். பதின்மூன்றாம் நாள் குடிசையை எரித்துவிட்டு, பெண்ணை நீராட்டி, மஞ்சள் நீர்தெளித்து வீட்டிற்கு அழைத்து வருவர். உற்றார் உறவினர் வாழ்த்துவர். தாய்மாமன் பருவம் அடைந்த பெண்ணுக்குச் சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் சீர் செய்யும் வழக்கம் உள்ளதை இன்றும் நம் சமூகத்தில் காணமுடிகிறது.

திருமணச் சடங்கில் தாய்மாமன் :

திருமண நாளன்று அலங்கரித்த மணப்பெண்ணை தாய்மாமன் மாலையிட்டு மணமேடைக்கு அழைத்து வரும் வழக்கம் இருப்பதைத் திருமண வாழ்த்துப் பாடல்கள் காட்டுகின்றன.

அருகு வந்து தாய்மாமன்
பொட்டிட்டுப் பூமுடித்தார்
பேடாம் மயிலையர்க்கு
பட்டமது கட்டினார்
பாரிலுள்ளோர் பார்த்திருக்க
கொத்து மாலையைக்
கொண்டையில் கட்டி
சித்திரக் கலசம்
நெற்றியில் துலங்க
அலங்கரித்த பெண்ணை
அலங்காரமாய் மாமன்
மணமகன் அருகில்
அழைத்து வந்தார்” (நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.295)

மேலும் சேலம் மாவட்டத்தில் வேளாளர் திருமணங்களில் பாடப்படும் மங்கல வாழ்த்துப் பாடலில் தாய்மாமன் செய்யும் சீர்வரிசை இடம் பெற்றுள்ளது. இதனை,

மாமன் கொடுக்கிற
வரிசையைக் கேளு
நாக மோதிரம்
புல்லை சரப்பளி
மேல் காது வாளி
வெள்ளை வெத்திலை
வீராணம் பாக்கு
பத்து விரலுக்கும்
பசியாணி மோதிரம்
எட்டு விரலுக்கும்
எணியாண மோதிரம்" (நா.வானமாமலை, தமிழர்நாட்டுப்பாடல்கள்,ப.287)

என்ற பாடல் அடிகளால் அறிகிறோம்.

தாய்மாமனின் தாசி உறவு பற்றி:

மீனாட்சி- சொக்கர் கதை கூறும் தாலாட்டுப் பாடலின் மூல வடிவம் சமூக வளர்ச்சியில் பரத்தமை தோன்றிய கட்டத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

"தங்கக் குடை பிடிச்சு
தாசிமாரை முன்ன விட்டு - உன் மாமன்
தாசிக்கே விட்ட பணம் - ரெண்டு
தங்க மடம் கட்டலாமே
வெள்ளிக் குடை பிடிச்சு
வேசிகளை முன்ன விட்டு - உன் மாமன்
வேசிக்கே விட்ட பணம்- ரெண்டு
வெள்ளி மடம் கட்டலாமே" (நா.வானமாமலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், ப.91)

என்று உடன் பிறந்தவனது தாசி உறவினைப் பெருமையாகப் பாடுகிறாள்.

"வெள்ளி மலை மேலே
வேட்டி துவைக்கையிலே
வெள்ளி மலைத் தேவடியா
விருந்துக் கழைச்சாளாம்"
(அகத்தியலிங்கம் ,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.204)

என்று ஒப்பாரியில் கணவனது தாசி உறவு அவலமாகவும் பாடப்படுகிறது. பெண்கள் கலாச்சாரம் என்ற அளவில் 'தாசி' என்ற பரத்தமை நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளுமளவில் வைக்கப்பட்டிருந்தனர்.

தாய்மாமனுக்குப் பாடும் ஒப்பாரி:

தமிழ்ச் சமுதாயத்தில் தாய்மாமனின் பெண்ணை அல்லது பிள்ளையை மணக்கும் வழக்கம் உள்ளது. பெண், தாய்வீட்டில் உள்ளவர்களின் நடைமுறைகளை நன்கு அறிந்தவள். அண்ணனின் நடைமுறைகளைச் சிறுவயது முதல் நன்கு அறிந்தவள் என்பதால் அவருடன் சம்பந்தம் கொள்வதைப் பெரிதும் விரும்புகிறாள். தனக்கு அளிக்கப்படாத தன் தாய்வீட்டுச் சொத்துக்கள் தன் பிள்ளைகளுக்காவது பயன்படட்டும் என்னும் அவாவும் இச்சம்பந்தத்திற்குக் காரணமாகிறது. அண்ணன், தங்கையின் குழந்தைக்குப் பிறந்தது முதல் திருமணம் நடக்கும் வரை நடக்கும் நிகழ்ச்சிகளில் முதன்மை வகித்துப் பலவற்றைச் செய்வதால் அப்பெண்ணைத் தன் மகனுக்கு மணம் முடிக்கும் உரிமை உடையவனாக உள்ளான். குழந்தைக்குத் தேவையான பொருள்களை அண்ணன் வாங்கித் தருவதால் தனக்குச் செலவு மீதியாவதுடன் தன் குழந்தை மீது அன்பு பொழிந்து பொருள்களை வாங்;கித் தர ஓர் ஆள் இருப்பதாயும் உணர்ந்து அவள் அண்ணனிடம் மிகுந்த மரியாதைக் கொண்டு அவனை உபசரிப்பதில் மகிழ்கிறாள். இத்தகைய சகோதரிக்குப் பிறந்த மகள் மாமன் இறந்த பொழுது ஒப்பாரி வைக்கிறாள். அப்பாடல் பின் வருமாறு,

"மாங்கா மரம் வளந்து
மாமன் வூட்டு மேடையிலே
மால ரெண்டு தொங்குதம்மா - அந்த
மால ரெண்டு பொருத்தமில்லே
மாமன் மக்க சொந்தமில்லே
அரச மரம் வளந்து
அத்த வூட்டு மேடையிலே
அரும்பு ரெண்டு தொங்குதம்மா - அந்த
அத்த மக்க பொருத்தமில்லே
அரும்பு ரெண்டும் சொந்தமில்லே"

(**அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி**1, **பக்**.252 -253)
என்ற பாடல் தாய்மாமன் இறந்த பிறகு தனக்கு மாமன் வீட்டில் எவ்வித உரிமையும் இல்லை, மாமன் மகனும் சொந்தமில்லை என வருந்தும் பெண்ணின் மனக்கவலையை எடுத்தியம்புகிறது.

தொகுப்புரை

சமூகத்தின் சில வழக்கங்கள், கூறுகள் போன்றவை பல காலக் கட்டங்களைக் கடந்து செல்லும் போது அவற்றின் தன்மைகள் மாற்றம் பெற்று சுருங்கிப் போய் வருங்காலத்தில் மிச்ச சொச்சமாக சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் இலைமறை காயாக வெளிப்படும் இயல்புடையனவாக இருக்கும். தாய்த் தலைமை சமூகத்தின் எச்சமாகவும் தந்தை வழி சமூகத்தில் பெண்கள் சொத்துரிமை இல்லாததன் விளைவாகவும் தனக்கும் தன் வாரிசுகளுக்கு எதிர்கால வாழ்க்கைக்கான பாதுகாப்பு பிடியாகப் பிறந்தகத்தில் தன் சகோதரனைப் பெண்கள் கருதியதன் காரணமாகவே தாய்மாமன் உறவு நாட்டுப்புறப் பாடல்களில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளத்தை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. அகத்தியலிங்கம்,ச.,(ப.ஆ), நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை தொகுதி1, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1987
2. அரவிந்தன்,மு.வை.,(தொ.ஆ), தமிழக நாட்டுப்பாடல்கள், பிரகாஷ் பதி;ப்பகம், புதுக்கோட்டை, 1983
3. இராமநாதன்,ஆறு.,(ப.ஆ), நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம் தொகுதி10, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்,2002
4. சக்திவேல்,சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,1983
5. சத்தியசீலன்,சி., நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள், அர்ச்சனா பதிப்பகம், பாண்டிச்சேரி, 1988
6. பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்,2004

References:

1. Agathyalingam, S., (B.A.), Folklore Research Code Volume 1, Indian Tamil Folklore Association, Annamalai Nagar, 1987
2. Aravindan, M.V., (B.A.), Tamil Nadu Folk Songs, Prakash Pati;pagam, Pudukkottai, 1983
3. Ramanathan, A.R., (B.A.), Folk Song Collection Volume 10, Meiyappan Tamil Research Institute, Chidambaram, 2002
4. Sakthivel, S., Folklore Research, Manivasagar Publishing House, Chidambaram, 1983
5. Sathiyaseelan, C., Folk Literature Studies, Archana Publishing House, Pondicherry, 1988
6. Bhaktavatsala Bharathi, Literary Anthropology, Identity Publishing House, Putthanatham, 2004

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: **https://doi.org/10.63300/tm0110.25** --:-- Research Paper

Vaḷḷi vāṇa tīrttam āṭiya katai, caṅkara nayiṉār kōyil yāttirai : Literary Style and Fictional Language

Dr. S.Bharathi Prakash,
Assistant professor, Tamil Department, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu.
E mail: bharathiprakaash@gmail.Com ORCID : 0009-0007-0355-9511

Abstract

Travelogue is one of the important literary genre in all literatures of the world including India. The travelogue is a relatively recent genre in Indian literature, emerging in the second half of the nineteenth century. Travelogue is the outcome of the travel experience which is opposed to the imagined descriptions in fictional narratives. There is no single term that fully describes the complexities and diversity of travel writing. The vast majority of travelogues are written in prose. The majority of people identify travel writing with stories about strange places or characters. Though everything published in this format may be considered a voyage, it is not Travelogue. Aatruppadai, Yathirai, Selavu, Payanam, and Prayanam are examples of travel-themed literary terms that span the Sangam to modern eras in Tamil literature. Maha kavi Bharathi is considered a pioneer of modern Tamil travelogue. who has published a full length book about his travels titled our Congress Yathra. (Eṅkaḷ kāṅkiras yāttirai). His wife Chellamma Bharathi also documented two travels (Vaḷḷi vāṇa tīrttam āṭiya katai, caṅkara nayiṉār kōyil yāttirai) in her account. It should be mentioned that Bharatiar did not accompany Chellammal on either of the two aforementioned trips. Her travelogues feature a distinct language style and fictitious language that demands its own study. This essay focuses the multifaceted nature of Chellammal Bharati's travelogue and its literary form, Fictional Language.

***Keywords**: Travel, Pilgrimage, Route, Record, Papanasam, Congress Yathra, Fictional Language.*

வள்ளி வாண தீர்த்தம் ஆடிய கதை, சங்கர நயினார் கோயில் யாத்திரை : மொழிநடையும் புனைவுமொழியும்

முனைவர் பாரதிபிரகாஷ், ச,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு.:

சுருக்கம்

பயணஇலக்கியம் இந்திய மொழிகளில் புதிய இலக்கியவகையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில்தான் பயணஇலக்கியம் இந்திய மொழிகளில் நன்கு வளரத் துவங்கியது. இக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் அதற்கு முன்பு தோன்றிய பிற இலக்கியங்களில் இருந்து வேறுபட்டு, புதிய பாடுபொருள், பாடுமுறைமை, மேலைஇலக்கிய அறிமுகம் என்று பல பொருண்மைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்காலப் பகுதியில் தமிழ் இலக்கியம் மேலை இலக்கியத் தாக்கத்தினால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுப் புதிய இலக்கிய வகைமைகளைத் தோற்றுவித்தது. இதனை மறுமலர்ச்சிக்கால இலக்கியம் என்றும் புத்திலக்கியம் என்றும் கூறலாம். இதே காலத்தில் அச்சுஇயந்திரங்களின் வருகையால் தமிழில் பல்வேறு புதிய நூல்கள் அச்சிடப்பட்டன. சில நூல்கள் பிறமொழிகளில் இருந்து தமிழுக்கு,

மொழிபெயர்க்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை இலக்கியச்சூழல் மேலும் விரிவடைய இது இன்றியமையாத காரணமாக அமைந்தது. பயணஇலக்கியம் என்பதற்கு தற்போது வரை முழுமையான வரையறை என்று எதுவும் இல்லை. புதிய பகுதிகளுக்கு பயணம் செய்வதும் அதனோடு தொடர்புடைய கதைகளைப் பற்றியதும்தான் பயணஇலக்கியம் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. இவ்வாறு வெளியிடப்பட்ட பயணநூல்கள் அனைத்தும் பல்வேறு பயணக் கூறுகளைக் கொண்டு இருந்தாலும், அது முழுமையான பயண இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. ஆற்றுப்படை, யாத்திரை, செலவு பயணம், பிரயாணம் ஆகிய சொற்கள் சங்ககாலம் முதல் இப்போது வரை தமிழில், பயணம் என்ற பொருளில் கையாளப்பட்டு வருகிறது. பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டில் தமிழில் பலர் பயணஇலக்கியம் படைத்து இருந்தாலும் அவர்களில் குறிப்பிடத் தக்கவராக பாரதியார் விளங்குகிறார். பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதியும் வள்ளி வாண தீர்த்தம் ஆடிய கதை, சங்கர நயினார் கோயில் யாத்திரை ஆகிய பயண இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். செல்லம்மாள் பாரதியின் பயண இலக்கியப் படைப்புகள் தனித்த ஆய்வுக்கு உரியவை. இவருடைய பயண இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள பயணக் கூறுகளையும் புனைவுமொழி நடையையும் அடையாளம் காணுவதாக இக்கட்டுரை அமைகிறது. இதில் செல்லம்மாள் பாரதியின் 'பெண்மொழி' மையப் புள்ளியாக விளங்குகிறது.

திறவுச் சொற்கள் : *பயணம், யாத்திரை, பாதை, பதிவு, பாபநாசம், காங்கிரஸ் யாத்திரை, புனைவு மொழி*

முன்னுரை

தமிழ்இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தில் தமிழ் நாட்டுக்கு வந்த ஐரோப்பியர்களின் வருகையினால் தமிழ் இலக்கியங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்திய விடுதலைப் போராட்டமும் அது சார்ந்த நிகழ்வுகளும் கல்வி கற்ற மக்களிடம் "நம்நாடு இந்தியா, நாம் அனைவரும் இந்தியர்" என்ற கருத்துருவாக்கத்தை வலுவாக்கியது. இதன் தொடர்ச்சியாக, இந்திய மக்கள் தமது நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பயணிக்கத் துவங்கினர். பயணங்கள் பயணப்பதிவுகளாக மலர்ந்தன. இதனை மக்களின் மனதில் நிலைநிறுத்த இலக்கியங்கள் ஊடகங்களாக அமைந்தன.

இலக்கிய வகைகளில் ஒன்றான பயணஇலக்கியம் மக்களிடையே செல்வாக்கு பெற்று வளரத் துவங்கியது. இவ்வாறு வளரத் துவங்கிய தமிழ்ப் பயண இலக்கியத்திற்கு, சே. ப. நரசிம்மலு நாயுடு, பாரதியார், செல்லம்மா பாரதி, தி.சு.அவினாசிலிங்கம்செட்டியார், அ.கருப்பண்ண செட்டியார், சோமலெ, பாஸ்கரத் தொண்டைமான், பரணிதரன், 'இதயம்பேசுகிறது'மணியன் அரு. சோமசுந்தரம், போன்ற படைப்பாளர்கள் பெரும் தொண்டு ஆற்றினர். (ச. பாரதிபிரகாஷ், ப . 28) இவர்களில் செல்லம்மாபாரதி குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

பயணஇலக்கியம் - அகராதிகளின் விளக்கம்

பயணம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப்பேரகராதி புறப்பாடு, வெளியீடு, பிரயாணம் என்று விளக்கம் தருகிறது. தமிழ் லெக்ஸிகன் பயணம் என்பதற்குப் பிரயாணம் என்று பொருள் தருகிறது. பயணஇலக்கியம் என்பதற்கு, '**ஒரு புதிய இடத்தை அல்லது சில இடங்களைப் பற்றிய செய்திகளைப்பயணம் செய்தவரின் அனுபவத்தில் குழைத்து எடுத்துப்**

படிப்போருக்குச் சுவையும் எழுச்சியும் தரும் விதமாகச் சொல்லுவதே சிறந்த பயணஇலக்கியம் (இரா.ஞானபுஷ்பம்,பக். *2)* என்று இரா.ஞானபுஷ்பம் வரையறை தருகிறார். இரா. மோகனா தனது பயணஇலக்கிய நூலில் பயணஇலக்கியம் என்பது, **'ஒருவர் தாம் கண்டதையும் கேட்டதையும் அதனால் அடைந்த உள்ளுணர்வுகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள எழுதப்பட்டதே பயண இலக்கியம் ஆகும்' (இரா.மோகனா, பக்.** *8)* என்று வரையறை செய்கிறார். **'பயணம் தொடர்பான பேச்சு, சொற்பொழிவு, கட்டுரை, கதை, கவிதை, படம், திரைப்படம் போன்றவற்றைப் பயணஇலக்கியம் எனலாம்.** (சோபனா பட்டாசார்ஜி பக்.*8* இடம் பெற்றுள்ள பயண இலக்கியத்திற்கான வரையறையின் கருத்து நிலை மொழி பெயர்ப்பு).

பயணத்தின் நோக்கம்

இந்திய இலக்கியங்கள் மட்டுமின்றி உலக இலக்கியங்களிலும் பயணங்கள் பற்றிய பல்வேறு பதிவுகள் உள்ளன. ஒரு பயணி தன்னுடைய பயண அனுபவங்களின் விளைவாகத் தேர்ந்த படைப்பாளியாக மாறுகிறார். அவர் தான் கண்டவற்றையெல்லாம் தன் படைப்பின் மூலமாக இறவாப்பொருளாக மாற்றுகிறார். **ஆசையும் வயதும் வளர வளர கால்கள் வீட்டில் இருப்புக் கொள்ள மறுத்தன. ஆண்டின் வெவ்வேறு காலங்களில் ஊருக்குள் வந்து போகும் பரதேசிகளும், மாட்டுத் தரகர்களும், நாட்டு மருந்து விற்பவர்களும், ஏலம் போடுகிறவர்களும் உப்பு வியாபாரிகளும், பாவைக் கூத்துக்காரர்களும் ஊர்விட்டு ஊர் செல்வதை நியாயப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். (ராமகிருஷ்ணன், எஸ். பக்.***18)* என்ற கருத்து பெரும்பாலான பயண இலக்கியப் படைப்பாளர்களின் மனக்கருத்தாக விளங்குகிறது. ஆண் பயண இலக்கியப் படைப்பாளர்கள் அனைவருக்கும் பொருந்தி வரும் மேற்கண்ட கருத்து பெண் படைப்பாளர்களுக்கும் பொருந்தி வருமா என்ற கேள்விக்கு நம்மிடம் பதில் இல்லை. இன்றைக்கு சுமார் நூறாண்டுகளுக்கு முந்தைய கால கட்டத்தில் வாழ்ந்த செல்லம்மாள் பாரதி பயணஇலக்கியம் படைத்துள்ள பாங்கை மேற்கண்ட பின்னணியிலேயே அணுக வேண்டியுள்ளது. (ச. பாரதிபிரகாஷ், ப . *192)* இதன் மூலமாக செல்லம்மாள் பாரதியின் பயண இலக்கிய நோக்கத்தினை நம்மால் நன்கு புரிந்து கொள்ள இயலும்.

பாரதியார்

பாரதியார், கவிதை இலக்கிய வகைமை மட்டுமின்றி உரைநடை இலக்கியத்திலும் தனது முத்திரையைப் பதித்தவர். பாரதியின் உரைநடையில் அடிப்படைக் கருத்துடன் அங்கதமும் இழைந்தோடும். பழகுதமிழ் சொற்களும் எளிய மொழி நடையும் இயல்பாகச் சேர்க்கப்பட்டிருக்கும். மேற்கண்ட உரைநடைக் கூறுகளுடன் அமைந்த பாரதியாரின் பயணப் பதிவுகள் அரியதோர் உரைநடைக் களஞ்சியமாகவே அமைந்துள்ளன. பயணத்தின் மூலமாக பல்துறை அறிவை வளர்த்துக் கொள்ள இயலும் என்ற கருத்தினைக் கொண்டவராக பாரதியார் விளங்கினார். 'யாத்திரை' (எக்ஸ்கர்ஷன்) குறித்து பாரதியார், 'சமூகம்' என்ற தலைப்பின் கீழ் 'குணமது கைவிடேல்' என்ற கட்டுரையில் கூறும் கருத்துக்கள் இங்கே குறிப்பிடத் தக்கன. இதனை, **"பிள்ளைகளை உபாத்தியாயர்கள் வன போஜனத்துக்கு அழைத்துச் செல்ல**

வேண்டும். அங்கு பிள்ளைகள் தமக்குள் நட்பும், அன்பும், பரஸ்பர ஸம்பாஷணையில் மகிழ்ச்சியும் எய்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். மலைகள் கடலோரங்களுக்கு அழைத்துச் சென்று இயற்கையின் அழகுகளையும், அற்புதங்களையும், பிள்ளைகள் உணர்ந்து மகிழும்படி செய்ய வேண்டும். பல விதமான செடி, கொடிகள், மரங்கள், லோஹங்கள், கல் வகைகள் முதலியவற்றின் இயல்பைத் தெரிவிக்க வேண்டும்"(பாரதியார், பக். *380)* என்று பயணங்களின் தேவையினையும் அவைதரும் பயன்களையும், பண்புகளையும் பாரதியார் விவரிக்கிறார். இதே கருத்தை தனது மனைவியிடமும் பாரதியார், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வலியுறுத்தி இருக்கலாம். இது செல்லம்மாள் பாரதியையும் பயணம் செல்லவும் அதை பயணப் பதிவுகளாக்கவும் தூண்டியுள்ளது.

செல்லம்மாள் பாரதி

செல்லம்மாள் பாரதி பாபநாசம் சென்று வந்த தனது பயண அனுபவங்களைப் பாபநாசம் என்ற தலைப்பில் சுதேசமித்திரன் இதழில் கட்டுரைகளாக எழுதியுள்ளார். கதா மாலிகா *(1920* **ஆம் ஆண்டு)** **என்ற தலைப்பில் வெளியான இந்நூலில்** *34* **வெவ்வேறு தலைப்பிட்ட பகுதிகள் உள்ளன.**(ஏ.கே.செட்டியார்(தொ),ப*332)* இஃது புதுவது புனைந்ததோர் நூல் என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது.

சங்கரநயினார் கோயில் யாத்திரை

சங்கரநயினார் கோயில் யாத்திரையில் செல்லம்மாள் பாரதியின் மொழிநடை பிறமொழிக் கலப்புடன் அமைந்துள்ளது. பிற மொழிக் கலப்பு நடை, பேச்சு வழக்கு நடை ஆகியவற்றை நேரடியாகப் பதிவு செய்தது போல அமைந்துள்ளது. இதனை, **சங்கர நயினார் கோயிலுக்குப் போய் நிரம்ப நாளாகி விட்டது. "இப்பொழுது போய் வருவோம்", என்று அப்பா சொன்னார். ஆனால் அப்பாவுக்கு ஸர்க்கார் வேலை. ரஜா கிடைப்பது துர்லபம்.** (பத்மநாபன் (தொ),பக்..*190)* என்ற பகுதியின் மூலமாக அறியலாம்.ஸர்க்கார் (அரசாங்கம்), ரஜா (விடுமுறை/விடுப்பு), துர்லபம்(அரியது) ஆகிய சொற்களை, மிக இயல்பாகத் தனது உரைநடையில் பயன்படுத்தியுள்ளார். பயண இலக்கியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த மாதிரியான கலப்பு மொழி நடை பின்பற்றப்படவில்லை. ஒரு சில இடங்களில் மட்டுமே இது மாதிரியான நடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் இவருடைய நடை நேர்முக வருணனை போல அமைந்துள்ளது. சான்றாக, **எங்கள் ஊரிலிருந்து மூன்று மைல் போனவுடனே இறைப்பனை என்றொரு கிராமம் சேர்ந்தோம். அதனருகே ஒரு பெரிய பனந்தோப்பு உண்டு. அது ஒரு சிறிய மலைக்குப் பக்கத்தில் இருக்கிறது. தோப்புக்கும் மலைக்கும் நடுவழியாக ஒரு பாதை உண்டு. அது வழியாக நாங்கள் போகிறோம். கொஞ்ச தூரம் போனதும் எங்கள் வண்டிச் சக்கரத்தின் பட்டை கழன்று துண்டு துண்டாகக் கீழே விழுந்து விட்டது. வண்டி சாய்ந்ததும் எல்லோரும் கீழே குதித்து விட்டோம். வண்டிக்காரன் என்னென்னமோ செய்து பார்த்தான், அதைச் சரிப்படுத்த முடியவில்லை.**(பத்மநாபன் (தொ), பக்.*191)* என்ற பகுதியின் மூலம் நன்கு அறியலாம்.

பாரதியாரைப் போலவே செல்லம்மாள் பாரதியின் நடையிலும் இயல்பாக அங்கதச் சுவை நிறைந்து வழிகிறது. இதனை, சங்கர நயினார் கோயில் யாத்திரையில் பல இடங்களில் காணலாம். சான்றாக, **மறுநாள் காலையில் நாகர் சுனையில் ஸ்நானம் பண்ணி விட்டுக் கோவிலுக்குப் போனோம். ஸ்வாமி தரிசனம் பண்ணினோம். அந்தக் கோவில் பெரும்புகழ் படைத்தது. பேய் பிடித்தவர்கள் எல்லாம் அங்கு வந்து ஆடுவார்கள். அதெல்லாம் அதிக வேடிக்கையாக இருக்கும். அதில் ஒருத்திக்கு ஐந்து பேய் பிடித்திருந்தது! அது பிரமாதமாக ஆடிக்கொண்டிருந்தது. அந்தப் பேயிடம் நாம் எதாவது கேட்டால் பதில் சொல்லும்** (பத்மநாபன் (தொ),பக்193) என்ற பகுதியைக் குறிப்பிடலாம். இதில், ஒருத்திக்கு ஐந்து பேய் பிடித்திருந்தது! அது பிரமாதமாக ஆடிக்கொண்டிருந்தது. அந்தப் பேயிடம் நாம் எதாவது கேட்டால் பதில் சொல்லும் என்ற வரிகளில் தேர்ந்த பயண இலக்கியப் படைப்பாளர்களைப் போல, தனது கருத்தை நகைச்சுவை ததும்ப எடுத்துரைக்கிறார்.

பயண அனுபவச் சுருக்கம்

பயண இலக்கிய ஆசிரியர்கள் தாம் கண்ட அனைத்துக் காட்சிகளையும் தமது பயண இலக்கியத்தில் பதிவு செய்ய இயலாது. கண்ட காட்சிகளில் சுவையானவற்றை மட்டுமே பதிவு செய்ய இயலும் (ராமகிருஷ்ணன், எஸ். ப.127). அதையும் சுவைபட பதிவு செய்யும் போது படிப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையும். மேற்கண்ட விளக்கத்திற்கு உரிய சான்றாக செல்லம்மாள் பாரதியின் பாபநாசம் பயண அனுபவ விவரிப்பைக் கூறலாம், இதனை,...

நான், அம்மா, கிட்டண்ணா, அப்பா, சாதம், தோசை, அரிசி பருப்பு மூட்டைகள் ஸகிதமாக கடவூர் ஸ்டேசனுக்கு வந்து சேர்ந்தோம். வண்டி வந்தது. அதி ஏறி ஆம்பூர் ஸ்டேசனில் இறங்கினோம். அங்கே கொஞ்சம் தாகசாந்தி செய்து கொண்டு புறப்பட்டுப் பாபநாசத்துக்குப் போகும் போது மாலை இருளாய் விட்டது. (பத்மநாபன் (தொ), பக்.175) என்ற பகுதி விளக்குகிறது.

இதைப் போலவே சாஸ்தா கோவிலுக்குச் சென்ற பயணப் பதிவும் அமைகிறது. **கடவூருக்கு மேற்கே சுமார் மூன்று கல் தூரத்தில் ஒரு மலை இருக்கிறது. அங்கொரு சாஸ்தாவின் கோவில், அவர் பெயர் ஸூக்ஷ்மமுடையார். ஸாதாரண ஜனங்கள் சூச்சமுடையார் என்பார்கள். மறுநாள் காலை ஆறு மணிக்கு சாஸ்தா கோவிலுக்குப் புறப்பட்டோம். அம்மா வரவில்லை. அவளால் நடக்க முடியாதென்று சொல்லிவிட்டாள். அக்கா, அத்திம்பேர் சிறு குழந்தையான என் தம்பி, எங்கள் மாமா, அத்திம்பேருடைய ஸ்நேகிதர் ஒருவர், இவருடைய மனைவி, இத்தனை பேரும் புறப்பட்டோம்".** (பத்மநாபன்(தொ),பக்.194) மேற்கண்ட பயண இலக்கியப் பதிவிலும் அவருடைய உறவினர்களையும் பயணத்தில் அவர்கள் கொண்டு சென்ற பொருட்களையும் பயணம் சென்ற வழியையும் அவர்கள் தங்கி ஓய்வெடுத்த இடங்களையும் சுருக்கமாக வருணனை செய்துள்ளார். இதே பயணக் கட்டுரையில் தேவைப்படும் இடத்தில் நீண்ட விரிவான வருணனை அமைப்பிலும் எழுதியுள்ளார். நேரடி வருணனை போல அமைந்த இவருடைய நடை, கடந்த காலத்தை நம் கண் முன்னே நிறுத்துவது போல அமைந்து இருக்கிறது.

பாபநாசம்

பாபநாசத்திற்குச் சென்று வந்த பயண அனுபவத்தை, செல்லம்மாள் பாரதி தனது பாபநாசம் யாத்திரையில் பிற மொழிக் கலப்புடன் கூடிய நடையில் வருணிக்கிறார். இதனை,

பாபநாசம், மதுர நாமம். மதுரமான தீர்த்தம். பாபநாசத்து நதியில் நாலுபுறம் ஜலம் சூழ்ந்திருக்க நடுப் பாறைகளில் உட்கார்ந்து அன்னம் புஜித்துத் தீர்த்தத்தை வாரிக் குடித்து, அந்தப் பொன் மீன்கள் துள்ளி விளையாடக் கண்டு சந்தோஷப்படாத ஜன்மம் என்ன ஜன்மம்? நாங்கள் பாபநாசத்துக்கு வந்து சேரும்போது இராத்திரி ஏழுமணி இருக்கும் சுமையையெல்லாம் சத்திரத்தில் கொண்டு வைத்துவிட்டு தோசையை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரையில் புஜிக்கப் போனோம். இருட்டுக் குகையாக இருந்தது. கையில் லாந்தல் கொளுத்திக் கொண்டு போனோம். ஜலத்துக்கு நடுவில் ஒரு பாறைமேல் தோசையை வைத்துக் கொண்டு தின்றோம். பாறையை ஜலத்தாலே அலம்பி, அதில் வைத்துக்கொண்டு ஜலத்தில் முழுக்கி முழுக்கி தோசையை விழுங்கினால் மிகவும் ருசியா, இருக்கும். முதலாவது நானும் கிட்டண்ணாவும் அப்பாவும் தின்றோம். பிறகு அம்மா போஜனம் தொடங்கினாள். (பத்மநாபன்(தொ),பக்.176) என்ற பகுதியின் மூலம் அறியலாம். பாபநாசத்திற்கு பாரதியார் தனியாகவும் செல்லம்மாள் பாரதி தனது குடும்பத்தினருடனும் சென்றுள்ளனர். இருவரும் ஒன்றாகச் செல்லவில்லை என பயணக் குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது. செல்லம்மாள் பாரதி தனது பயணக் கட்டுரைகளின் ஒவ்வொரு பகுதியிலும் வழி வருணனைக்கு தனித்த இடமளித்து, தேர்ந்த பயண இலக்கிய ஆசிரியர்கள் போலத் தவறாது விவரிக்கிறார். இதே போன்ற வருணனையைத் தலைமலையான் கோயில் யாத்திரையிலும் பின் பற்றுகிறார். இதனை,

ஒரு ஒற்றையடிப் பாதை வழியாகப் போய் வரவேண்டும். ஒரு கல் தொலைவு மேற்கே போனவுடன் அங்கொரு கோவில். அந்த ஸ்வாமியின் பெயர் தலை மலையான் (தலைமழை ஐயன்) அந்தக் கோவிலுக்கு மேற்கூரை கிடையாது. அந்த ஸ்வாமி " நான் மழையில் நனைவேன் வெயிலில் காய்வேன். எனக்கு வானை மறைக்க வேண்டாம்" என்று சொன்னதாகச் சொல்வார்கள். பக்கத்திலிருக்கும் நதியில் போய்க் குளித்து விட்டு வரலாமென்று போனோம். அது பெரிய காட்டாறு. ஜலம் கன்னங்கரேலென்று இருக்கிறது. ஜலத்தில் சின்னப் பாறைகளும், சின்ன உருண்டையான சின்னக் கற்களும் கிடக்கின்றன. ஸமீபத்தில் அருவியின் ஒலி கேட்கிறது. (பத்மநாபன் (தொ), பக்.195) என்ற பகுதியின் மூலம் நன்கு அறியலாம். மேற்கண்ட செல்லம்மாள் பாரதியின் பயண விவரிப்பில் பாரதியாரின் மொழிநடைச் சாயல் நன்கு புலப்படுகிறது. இது இயல்பாக செல்லம்மாள் பாரதியின் மொழிநடையாகவும் இருந்திருக்க வாய்ப்புள்ளது. அதே சமயம் பாரதியார் சுதேசமித்திரன் ஆசிரியர் என்ற முறையில் செல்லம்மாள் பாரதியின் கட்டுரைகளைத் திருத்தம் செய்தும் வெளியிட்டு இருக்கலாம்.

மொழி நடை

மொழிநடை என்பது படைப்பாளன் தம் படைப்பில் கையாளும் எழுத்து நடை, பேச்சு நடை இவற்றையே குறிக்கும். கதையைக் கூறும் எழுத்து நடை, கதைமாந்தர் உரையாடும் பேச்சு நடை இவை இரண்டையும் ஒரு இலக்கியத்தின் இரு கண்கள் எனலாம். (ஜெகதீசன், பக்.2)

என்ற வரையறை பயண இலக்கியத்திற்கும் பொருந்தி வரும். இதில் புழங்கு மொழியும் பெண் மொழியும் தனித்த இடம் பெறுவன ஆகும்.

1973-ல் ரோபின் லேகாஃப், *மொழியும் பெண்களுக்கான இடமும்' (Language and woman's place)* என்ற தமது ஆய்வு நூலில் **பெண்கள் பேசும் உரையாடல்கள் பலவற்றைத் தொகுத்து அவற்றிலிருந்து பெண்கள் பயன்படுத்தும் மொழியின் தனித் தன்மைகளைச் (குறைகளை) சுட்டிச் செல்கிறார்** (தி. விஜயலட்சுமி, பக்.76) மேற்கண்ட கருத்தின் நீட்சியாக **பெண் மொழி பயன்பாட்டில் அவளது புழங்கு வெளி மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமே செல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட பாதையை மட்டுமே பயன்படுத்த வேண்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் வீடு வந்து சேர வேண்டும் என்பன போன்ற அவளது நடமாட்டக் கட்டுப்பாடுகள் அவளுக்கு மிகக்குறுகிய அனுபவங்களையும் புரிதல்களையும் தருகின்றன.** என்ற (தி. விஜயலட்சுமி, பக் 35) கருத்தும் இங்கு குறிப்பிடத் தக்கது. மேற்கண்ட கருத்திற்கு ஏற்றார் போலவும் சில இடங்களில் அதனை மறுக்கும் விதமாகவும் செல்லம்மாள் பாரதியின் மொழி நடையும் புனைவுமொழியும் அமைகின்றன.

புனைவுமொழி

ஒவ்வொரு படைப்பிலக்கியத்திற்கும் தனித்த மொழிநடை உண்டு. அதுவே அவ்விலக்கியதிற்கு உரிய தனித்த புனைவு மொழியாக அமையும். **புனைவின்மொழி என்பது சராசரிமொழியே அல்ல. சொல்லப்போனால் சராசரிமொழிக்கு எதிரான செயல்பாடு அது. சராசரிமொழிக்கு மேலே இருப்பது. ஏனென்றால் அது செறிவானது, உள்ளடுக்குகள் கொண்டது, மேலும் மேலும் சொற்கள் தேவையாவது, ஒவ்வொருவருக்கும் உரிய தனித்தன்மை கொண்டது.** (ஜெயமோகன், சராசரிநடையும் புனைவு நடையும்) பயண இலக்கியத்திற்கு உரிய புனைவுமொழிநடை பிற கட்டுரை இலக்கியங்களில் இருந்து வேறுபட்டது. காலந்தோறும் மாறி வந்த இப்புனைவு மொழியை, நடைக் கட்டமைப்பை உருவாக்கியதில் செல்லம்மாள் பாரதிக்குப் பெரும் பங்குள்ளது. பாரதியாரின் வழி காட்டுதல், ஊக்கம் ஆகியவை முதலில் பயணஇலக்கியம் எழுத காரணமாக அமைந்து இருக்கலாம். தொடர்ந்து முயற்சி செய்ததன் காரணமாக செல்லம்மாள் பாரதி தனது மொழி நடையை பெண்மொழி நடையாக அமைத்துக் கொண்டார். அவரது உரைநடை, கூற விழையும் செய்தியைக் கேட்பவரின் மனதில் எளிமையாகப் பதிய வைக்கும் இயல்பினது. கடினமான சொற்கள் இல்லாமல் சாதாரண மக்களின் வழக்கோடு ஒட்டிய வலிமையும், ஓசை நயமும் இணைந்த உரைநடை ஆகும். அன்றாட மக்களின் புழங்குமொழி வழக்கு, பிற மொழிக் கலப்புடன் கூடிய உரையாடல் முறை, தேவையான இடங்களில் மட்டும் நீண்ட வருணனை எனப் பன்முகப் பரிமாணம் கொண்டது.

தொகுப்புரை

செல்லம்மாள் பாரதி தன்னுடைய பயண இலக்கியங்களில், செல்லும் வழி பற்றிய வருணனை, கால அளவு, செல்லும் தூரம் பற்றிய குறிப்புகள், சத்திர வசதி, உணவுமுறை, மக்களின் பழக்க வழக்கப் பதிவுகள் போன்றவற்றைக் குறிப்பிட்டு பயண இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக மிளிர்கிறார். இவருடைய பயண இலக்கியங்களில் தனித்துத் தெரியும் பெண் மொழியும் புழங்கு

மொழியும் அது சார்ந்து உருவான பயண இலக்கிய புனைவு மொழி நடையும் செல்லம்மாள் பாரதியை பாரதியாரிடமிருந்து தனித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதனால், தனது சமகாலப் பயணஇலக்கியப் படைப்பாளர்களுக்கு இணையான புனைவுமொழியை, பெண்மொழி நடையைத் தனது பயண இலக்கியப் படைப்புகளில் அவர் பதிவு செய்துள்ளார். தமிழின் நவீனப் பயணஇலக்கியப் புனைவு மொழியைக் கட்டமைத்ததில் செல்லம்மாள் பாரதிக்கும் தனித்த இடம் உண்டு.

துணை நூற்பட்டியல்

[1] இளவரசன், சா. அயலக பயண அனுபவம், வெற்றி பதிப்பகம், ஈரோடு *2008.*

[2] செட்டியார், ஏ.கே. (தொ) தமிழ்நாடு - நூறாண்டுகளுக்கு முந்தைய பயணக் கட்டுரைகள், சந்தியா பதிப்பகம் , சென்னை, *2017.*

[3] ஞானபுஷ்பம், இரா. தமிழில் பயணஇலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, *1990.*

[4] பட்டச்சார்ஜி, ஷோபனா. ட்ராவல் ரைட்டிங் இன் இந்தியா, சாகித்ய அகதமி, ரபிந்திர பவன், புது தில்லி. *2006.*

[5] பத்மநாபன், ரா. அ. பாரதி புதையல் பெருந்திரட்டு, வானதி பதிப்பகம், சென்னை, *1982.*

[6] பாரதியார், பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, *2022.*

[7] பாரதி பிரகாஷ், ச. "தமிழில் பயணஇலக்கியம் - பயணங்கள், பாதைகள், பதிவுகள்", *நவீனத் தமிழாய்வு*, *ISSN: 2321- 984 X*, மார்ச் *2014.*

[8] பாரதி பிரகாஷ், ச. இந்திய மொழிகளில் பயணஇலக்கியம் – பயணங்கள், பாதைகள், பதிவுகள், *நவீனத் தமிழாய்வு*, *ISSN: 2321- 984 X*, செப்டம்பர் *2015*

[9] மோகனா, இரா. பயணஇலக்கியம் , மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,*2006.*

[10] ராமகிருஷ்ணன், எஸ். தேசாந்திரி, தேசாந்திரி பதிப்பகம், சென்னை, *2022.*

[11] லேகாஃப், ரோபின், சமூகத்தில் பெண்மொழியும், இடமும், கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகம், *2(1), 45–80,* *http://www.jstor.org/stable/4166707,1973*.

[12] விஜயலட்சுமி, தி. பால்முரண், பூவரசி பப்ளிகேஷன், சென்னை, *2017.*

[13] ஜெகதீசன், மொழிநடையும் புனைவு மொழியும், வாகை பதிப்பகம், கோயம்புத்தூர், *2009.*

[14] ஜெயமோகன், சராசரி நடையும் புனைவு நடையும், *https://www.jeyamohan.in/128596/* *28-12-24* அன்று அணுகப்பட்டது.

[15] ஜெயமோகன், மொழியும் நடையும், *https://www.jeyamohan.in/103990/* *28-12-24* அன்று அணுகப்பட்டது.

References

[1] Ilavarasan, s., Ayalaga Payana anubavam, Vetri Pathippagam, Erode,2008

[2] Chettiyar, A.K.(C) Tamilnadu – Noorandukalukku Munthaiya Payanak katturaikal. Sandya Pathippagam, Chennai, 2017.

[3] Gnanapushpam, R. Tamilil payana ilakkiyam, Ainthinai Pathippagam, Chennai, 1990.

[4] Battcharji, Shobana. Travel writing in India , SakityaAkademy, Rabindrabhavan, Newdelhi.

[5] Pathmanaaban , R. A (Editor) , Bharathi puthaiyal perunthirattu, vaanathi pathippagam, Chennai, 1982.

[6] Bharathiyaar, Bharathiyaar katturaikal, Poompukar Pathippagam, Chennai, 2022.

[7] Bharathi Prakash, S., Tamilil Payana ilakkiyam – Payanangkal , Paathaikal, Pathivukal., Naveenath Tamilaaivu, ISSN: 2321- 984 X, March 2014.

[8] Bharathi Prakash, S., India Molikalil Payana ilakkiyam – Payanangkal , Paathaikal, Pathivukal., Naveenath Tamilaaivu, ISSN: 2321- 984 X, Sep 2015.

[9] Mohana, R. Payana ilakkiyam, Meyyappan Pathippagam, Chidambaram, 2006.

[10] Ramakrishnan, S., Desanthiri, Desenthiri Pathippagam, Chennai, 2022.

[11] Lakoff, R., Language and Woman's Place, Language in Society, Cambridge University Press, 2(1), 45–80, http://www.jstor.org/stable/4166707,1973.

[12] Vijayalakshmi, T., (2017), Pal Muran, Puvarasi Publications, Chennai.

[13] Jagadeesan, Moli Nadaiyum Punaivu moliyum, Vaagai Pathippagam, Coimbatore, 2009.

[14] JeyaMohan, Sarasari Nadaiyum Punaivu nadaiyum, https://www.jeyamohan.in/128596/ Accessed on 28-12-23

[15] JeyaMohan, Moliyum Nadaiyum, https://www.jeyamohan.in/103990/ Accessed on 28-12-23

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Ecology in Purananuru

Dr. E. Uvarani
Assistant Professor, Vel Tech Rangarajan Dr. Sagunthala R&D Institute of Science and Technology, Chennai-62. druvaranie@veltech.edu.in

Abstract:

This article discusses how the environmental awareness and thoughts observed in humans today were present among the ancient Tamils of the Sangam period, as reflected in Sangam literature. The people of the Sangam era were well aware of the changes occurring in nature and the changes brought about by human activities to nature. Furthermore, it can be understood from these texts that they possessed comprehensive knowledge encompassing forests, mountains, rainwater, the sky, the moon, and the five elements (Pancha Bhootas). While similar information is found in many Sangam literary works, this study specifically examines the environmental themes found in Purananuru.

Keywords*: Ecology, Purananooru.*

புறநானூற்றில் சூழலியல்

முனைவர் ஈ. யுவராணி
உதவிப் பேராசிரியர்,
வேல் டெக் ரங்கராஜன் டாக்டர் சகுந்தலா ஆர் & டி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை-62. Email: druvaranie@veltech.edu.in

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காண்கின்ற சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு மற்றும் சிந்தனைகள் சங்க இலக்கிய பழந்தமிழர்களிடம் இருந்துள்ளது என்பதைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றன. சங்ககால மக்கள் இயற்கையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மனிதர்களால் இயற்கைக்கு ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்தவர்களாக இருந்துள்ளனர். மேலும் காடுகள், மலைகள், மழைநீர், வானம், நிலா, பஞ்ச பூதங்கள் என அனைத்து வகையான அறிவினையும் ஒருசேர பெற்றுள்ளவற்றை இங்கு அறியலாம். சங்க இலகியங்கள் பலவற்றில இது போன்ற செய்திகள் இருப்பினும் புறநானூற்றில் காணப்படும் சூழலில் சார்ந்தசெய்திகள் மட்டும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

முன்னுரை

உலக மொழிகளில் மிகச்சிறந்து விளங்கும் தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துரைப்பது சங்க இலக்கியங்களே. தமிழ் இலக்கிய வரலாற்றின்; மிகச் சிறந்த பொக்கிஷமாக திகழ்பவை தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியம் ஆகும். தொல்காப்பியம்

இலக்கணமாக அமைந்து வாழ்விற்கு வரையறை செய்கிறது. சங்க இலக்கியம் தமிழர் வாழ்ந்தவாழ்வின் வெளிப்பாடுகளை எடுத்துரைக்கிறது. தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழகம் மரபுநெறி, தமிழர்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவை பிரதிபலிக்கின்றது.

மனிதவாழ்க்கையும் இயற்கையும் ஒன்றோடொன்று இரண்டரக் கலந்துள்ளது. இயற்கையை மீறி மனிதன் வாழ்வதில்லை. "மனிதன் இயற்கையைச் சார்ந்து உயிர் வாழ்கிறான். அவன் தனது வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக் கொள்கிறான். இயற்கையை மனிதனின் அங்கம் என்று அறிஞர் மார்க்ஸ் விளக்குகிறார்".(1)
சங்ககாலப் புலவர்கள் மேற்கூறிய கூற்றினை முழுமையாக உணர்ந்திருந்தனர் என்பதை அவர்தம் சங்கப் பாடல்கள் வாயிலாகப் அறிய முடிகிறது. சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றிப் பேணிப் பாதுகாத்ததோடு அவற்றை பேணும் முறையினையும் அவற்றில் உள்ள அறிவியல் சிந்தனைகளையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்துள்ளவற்றை காண்கிறோம்.

இயற்கை-விளக்கம்

கடவுள் மனிதனுக்கு அளித்தமிகப் பெரிய பொக்கி~ம் இயற்கையாகும். இயற்கையின்று மனிதர்கள் வாழ இயலாது. இயற்கையின் விதம் பலவகையானது. காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து வாழக்கூடியது. இவ்வியற்கை பழந்தமிழ் இலக்கியங்களில் பரந்துகாணக் கிடக்கின்றன.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி இயற்கை என்ற சொல்லுக்கு சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை, முறைமை, ஏது, குணம், தகுதி, பாக்கியம், இயல்பு, செயற்கைக்கு எதிரானவை என்ற பல பொருள்களைத் தருகிறது.(2) பழந்தமிழர் வாழ்வில் இன்றியமையாததாக இயற்கை இருந்தமையை இவ்வரையறை வாயிலாக உணர்கின்றோம்.
மனிதர்கள் நீண்;டநாள் நலமோடு வாழ இயற்கையும் வாழும் நிலப்பண்பாடும் மிகவும் முக்கியமானதாகும். பண்டைத் தமிழரின் நிலம் பற்றிய பார்வை பரந்துபட்டதாக இருந்தது. முதற்பொருள், கருப்பொருள் என்று இருவகையாக நிலத்தைப் பாகுபடுத்தியுள்ளனர். நிலம் போன்று ஞாயிறு இயக்கம், கோள்களின் இயக்கம், மழை பற்றிய சிந்தனை, காற்று, அது இயங்கும் வான்வெளி குறித்த அவர்களின் பார்வைகளையும் வியப்பிற்குரியதாக உள்ளது.

உலகம் - விளக்கம்

நாம் வாழும் உலகிற்கு புவி, ஞாலம், பூமி எனப் பல்வேறு பெயர்கள் தமிழில் உள்ளன. உலகம் என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்தையும் உள்ளடக்கியது.

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல்.பொருள்.1539)

என்னும் நூற்பாவின் வழி இப்பூமியானது ஐம்பெரும் பூதங்களையும் உள்ளடக்கியது என்று வலியுறுத்தியுள்ளதை அறிய முடிகிறது. இதனை அடியொற்றிச் சங்கப் புறநானூற்றுப் புலவர்,

இருமுந்நீர் குட்டமும்
வியல் ஞாலத்து அகலமும்
வளிவழங்கு திசையும்

வறிதுநிலை இயகாயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும் (புறம்.20:1-5)

என்னும் பாடலடிகளில் அளக்க முடியா பகுதிகளாக கடல், காற்று, ஆகாயம் என்ற மூன்றினைக் குறிப்பிடுகிறார்.

உலகம் என்பது இவ்வைம் பெரும் பூதங்களால் ஆனது என்பதை மற்றொரு புலவர் தெளிவுற எடுத்தியம்புகிறார்.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு உவளியும்
வளித் தலைஇய தீயும்
தீமுரணியநீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல (புறம்.2:1-6)

ஐம்பெரும்பூதம் என்பதை பஞ்சபூதம் என்கிறோம். இப்பாடலின் வழி நிலம், விசும்பு, வளி, தீ, நீர் ஆகியவற்றை புலவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். மண்ணின் திணிவே நிலம். நிலம் விசும்பை ஏந்திக் கொண்டுள்ளது. விசும்பை வளி தடவுகிறது. வளிக்காற்றில் தீ பொருந்தியுள்ளது. தீயோடு முரண்பட்டது நீர். நிலம் தாங்கும் ஆற்றல் கொண்டதாகவும் விசும்பு நிலத்தை வளைத்துக் கொண்டுள்ளதாகவும் காற்று வலிமையுடையதாகவும் நீர் கொடையாக வழங்கப்படும் பொருள் எனவும் புலவர் எடுத்தியம்பியுள்ளார்.

எனவே சங்ககால மக்கள் நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு ஆகியவற்றால் ஆனவை தான் உலகம் என்பதை உணர்ந்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இக்கால அறிவியல் அடிப்படையில் விசும்பில் நிலம் மிதக்கறிது. நிலத்தில் உள்ள வளி உயிரினங்களை வாழச் செய்யும். தீ விண்மீன்களின் மூச்சு. இதன் எதிரி நீர் என்று கூறுவது வியப்பானதல்ல. இதனை எந்த ஒரு விஞ்ஞான வளர்ச்சியும் இல்லாத காலகட்டத்தில் புலவர் பெருமக்கள் துல்லியாமா அறிந்து வைத்திருந்ததே மிகச் சிறந்த வியப்பாகும்.

மேலும்,

“நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்
அளப்பு அரியையே
நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்
ஐந்துஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை
போர் தலைமிகுத்தஈர்-ஐம்பதின்மரொடு”3

இப்பாடலில், நிலம், நீர், காற்று, விசும்பு ஆகிய நான்கினையும் போல உன் பெருமையை அளந்து காண்பதற்கு அரியவரன் ஆவார். நாள் மீன்களும், கோள் மீன்களும், திங்களும், ஞாயிறும், மிகுந்த நெருப்பும் ஆகிய ஐந்தும் ஒன்று சேர்ந்தால் பிறக்கும் பேரொளியைப் போன்றவன் ஆவான் என்று மன்னனை புகழ்ந்து பாடுவதாக அமைந்த பாடலின் வழி இந்த உலகம் நிலம், நீர், காற்று, விசும்பு, நெருப்பு ஆகியவை அந்த உலகில் மிகச் சிறந்தபொருள் என்பதால் அப்பொருளை மையமாகக் கொண்டு அம்மன்னரை சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளதை காணலாம்.

சூழல் தூய்மை

மனிதன் தான் வாழும் இருப்பிடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாகப் பேணுகின்ற பொழுது ஆரோக்கியமான உலகிற்கு வழிவகுக்கிறது. அவ்வகையில் தம்மையும் தாம் வாழ்ந்த சூழலையும் அக்கறையுடன் சங்கத் தமிழர்கள் பேணிக்காத்துள்ளதை காணமுடிகிறது. அவற்றை இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளில் மூலம் அறியமுடிகிறது.

உடலைப் பேணிக்காக்கும் உணவுப் பழக்கத்தினை மேற்கொண்டு இருந்தனர். அவ்வுணவைப் பாதுகாத்து உண்டனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

பழந்தமிழர் மேற்குறிப்பிட்டதை நன்குணர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். பழந்தமிழர் உணவில் சைவ அசைவ உணவுகள் இரண்டும் கலந்து இருந்துள்ளன. குறிப்பாக, உணவினை வேகவைத்து உண்ணும் வழக்கம் இருந்தமை அறிகின்றோம்.

குப்பைக் கீரைகொய்க்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலை அக ஏற்றிமோரின்று
அவிழ்பதம் மறந்துபாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் (புறம்.159:9-13)

என்ற பாடலடிகளில் வேக வைக்கப்பட்டகீரை உணவாக உட்கொள்ளப்பட்டமை கூறப்படுகிறது. அக்காலமக்களின் தூய்மை பற்றிய விழிப்புணர்வாக இதனைக் கருதியுள்ளனர்.

மேலும்,

"உண்மின் கள்ளே அடுமின் சோறே
ஏறிகதிற்றி ஏற்றுமின் புழக்கே
வருநரக்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள் வணர் ஒலிவரும் புரியஅவிழ் ஐம்பால்"4

மருத நிலமக்கள் செந்நெல் சோறும் மலைநிலமக்கள் வெண்ணெல் சோறும் உட்கொண்டனர். செந்நெல் சிறியமஞ்சள் நிறமுடைய தானிய மென்றும் வெண்ணெல் ஒருவகையான காட்டரிசி என்றும் கூறுவர். சோற்றைப் பலவகையில் பக்குவப்படுத்திச் சேரர்கள் உண்டதைப் பதிற்றுப்பத்து விளக்குகிறது. சோற்றிலே அவர்கள் நெய் விட்டுசமைத்தனர். இறைச்சி வகைகளையும் சோற்றோடு கலந்து சமைப்பது பழந்தமிழரின் மரபாகும். எனவே ஒவ்வொரு மனிதர்களும் தனக்கான உணவு முறைகளை தத்தம் நிலங்களுக்கு ஏற்ப உட்கொண்டு வாழ்ந்துள்ளனர். சமுதாயத்திற்கு எந்த ஒருபக்க விளைவுகளும் ஏற்படாவண்ணம் உணவு முறைகளை மேற்கொண்டுள்ளனர்.

உணவுப் பாதுகாப்பு

பருவ காலத்திற்கேற்ப உணவுகளைச் சேமிக்கும் பழக்கம் நிரம்பப் பெற்றிருந்தனர். சிறிய தாழ்வாரத்தினை உடைய குடிசையில் வாழும் குறவர்கள் வளைந்த மூங்கினுள் மதுவை வைத்து உண்ட செய்தியினை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனியதேறன் மாந்தி(புறம்.129:1-2)

என்ற பாடலடிகளால் எடுத்தியம்புகிறார். இது போன்று அவ்வவ் நிலமக்கள் இத்தகைய உணவுப் பாதுகாப்பு முறையை அறிந்து இருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். தனிமனிதத் தூய்மை,மனயகத் தூய்மை மற்றும் மக்கள் ஒன்று கூடும் மன்றத் தூய்மை குறித்தும் பழந்தமிழரிடையே போதுமான விழிப்புணர்வு இருந்தமை காண்கிறோம்.

இன்றைய விரைவு உணவால் பலவித வயிற்று கோளாறு வருவதை நாம் காணலம் ஆரோக்கிய இயற்கை உணவு வகைகளையே உண்டு மனிதவாழ்வு நீடிக்க வழிவகை செய்ய வேண்டும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரைவிரைவு (குயளவ குழழன) க்கு அடிமையாகி கிடப்பது தெரிந்த உண்மையே சங்ககால உணவு உடல் நலம் காக்கும் உடல் உறுதிபெறும்.

மேற்கண்டவாறு சங்ககால உணவு முறைகள் உணவுபழக்கம், உணவு வகை இவையே சங்ககால உணவு முறையாகும்.

காடுகள் உருவாக்கம்

"காடுகள் இயற்கைப் பாரம்பரியத்தின் இனிமையான எச்சங்கள்; ஒருபக்தனுக்குப் புனிதமான கோயில் வளாகம்; அப்பூட்டும் நகர்ப்புறச் சூழலிலிருந்து விடுபட இளைப்பாற்றும் இயற்கைத் தலம் ஓங்கி வளர்ந்ததிட மரங்களின் காட்சிச் சாலைகள் அழிந்து வரும் தாவர, விலங்கினங்களுக்குக் காப்பகங்கள் வாழிடம் பிறழ்ந்தவற்றிற்குப் புகலிடங்கள் நீர்வளம் பேணும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மதிப்புமிக்க அரிய தாவர பரிசோதனைக் கூட்டங்கள்"(5)என்கிறார். சிவ.மங்கையர்க்கரசி. காடுகள் இயற்கையாக உருவாகக்கூடியவை. அவற்றில் இன்றியமையாத காரணம் விதைபரவல். இன்றையச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தற்போது விதைபரவல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். விலங்குகள், பறவைகள் எச்சம் மூலமாகவும் விதை பரவல் நிகழ்வதற்க இடமாகஉள்ளது.

குமிழ் உண் வெள்ளைபகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாயவண்காற் பந்தர் (புறம்-324 9,10)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளில் குமிழம் பழங்களை உண்ட வெள்ளாடு தன் வாயினின்றும் துப்பிய விதைகள் எங்கும் பரவிக் காணப்பட்ட கருத்தினை, காடுகள் உருவாகக் காரணமான விதை பரலலுக்குச் சான்றாக கருதுவதற்கு இடமாக அமைந்துள்ளது.

காடுகள் அழிவு

பாரிபறம்புமலையைச் சிறப்பிக்கவந்தகபிலர்,
குறத்திமாட்டியவறல்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அம்புகைஅயலது
சாரல் வேங்கைபூஞ்சினைத் தவழும் (புறம்.108:1-3)

என்ற வரும் பாடல் அடிகளால் சந்தனமரம் எரிக்கப்பட்டமையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம். மேலும்,

களிறே, எழுவந் தாங்கிய கதவம் மலைந்து (புறம்.97:8)

என்ற வரியால் கோட்டைக்கு அமைந்த பெருங்கதவுகளின் வலிமையை உணர்த்தும் செய்தியினால் கதவுகள் செய்ய மரங்கள் அழிக்கப்பட்டமை பெறப்படுகிறது. இது போன்று தேர்கள், வண்டிகள், அச்சுகள் போன்ற பல பொருட்கள் செய்வதற்கும் மரங்களே பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. மக்களின் வாகனப் பயன்பாட்டிற்குத் தேர்கள் அதிகமாகப் பயன்பாட்டில் இருந்த குறிப்பினை,

வைகல் எண்தேர் செய்யும் தச்சன் (புறம்.87:3)

எனும் பாடலடி தருகிறது.

“காடு கை காய்த்தியநீடுநாள் இருக்கை”6

என்னும் பாடல் மூலம் விறகுக்காக மரங்கள் வெட்டி அழிக்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றன.

காடே கடவுள் மேனபுறுவே
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர்மேன
ஆறே அவ்வனைத்து அன்றியும் (பதிற்று-13:20-22)

இப்பாடலில், சங்ககால மன்னரகள் தம் ஆட்சித் திறனை மேம்படுத்த நாடுகளைச் சீரழைத்துள்ளனர். அச்சீரமைப்பு பணிகளுள் ஒன்று காடுகளை அழித்து நாடாக்குதல். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், தன் மக்களைப் புரந்த நாடுகளில் எல்லாம் பெருங்காடுகளை அழித்து நாடாக்கி வளப்படுத்தியதால் மக்கள் அங்கே வாழ்ந்து தமக்குரிய தெய்வங்களுக்கு கோவில்களை அமைத்தனர். சிறுகாடுகளெல்லாம் அவனது படைவீரர் தங்கும் இடங்களாயின. ஆறலைக் கள்வர்கள் திரியும் அடர்ந்த காடுகளும் அவ்வாறே ஆயின என்று புலவர் பாடியுள்ளார்.

இருப்பினும் சங்ககாலமக்கள் இயற்கையோடு ஒன்றிவாழ்ந்தனர். இயற்கை மீதான ஒரு புரிதலுணர்வுடன் அதனை உற்று நோக்கி அதன் போக்குடன் வாழத் தலைப்பட்டனர். இன்றையமனிதன் இயற்கையிடமிருந்து தன்னை விலக்கி வாழ்வதாலேயே பெரும் சூழல் அழிவுனைப் பெற்று வருகின்றனர். தன் வாழ்வைக் கட்டமைக்க இயற்கையின் கட்டமைப்பை அவன் உடைக்க முற்படுவது தான் இன்று எதிர் கொண்டு வருகின்ற சூழல் சீர்கேட்டிற்கான காரணம் என்றால் அவை மிகையாகாது.

இதனால் காடுகளை முற்றிலும் அழித்து சீர்கேடுகள் செய்ய முற்பட்டனர் சங்க மக்கள் என்று கூறமுடியாது. தங்களுக்கென்ற இருப்பிடத்தை உருவாக்கும் முயற்சியில் மட்டுமே அவர்கள் மரங்களை அழிக்க முற்பட்டுள்ளனர். தற்போது அத்தியாவசய தேவைகளுக்கான இருக்கின்ற கொஞ்ச நஞ்ச மரங்களைக் கூட அழித்து மரங்களே இல்லாத நகரமாக மாற்றி வருகின்றோம். தற்காலத்தில் புகைப் பிடிப்பவர்கள் அந்தப் புகையை சரிவர அணைக்காமல் கீழே போடுவதால் காடுகளின் அழிவு ஏற்படுகிறது. வுறளை நிலங்களைக் கூட அழித்து மாடமாளிகைகள் கட்டிசொகுசு வாழ்விற்கு நாட்டம் செலுத்துகின்றனர். இதனால் பலநிலைகளில் காடுகள் அழிக்கப்படுகிறது. மேலும் சங்ககால மக்கள் சந்தன மரங்கள் எறிப்பதால் ஏற்படும் புகைகள் காற்றை மாசுபடுத்துவனவாக இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. “இதுவரை உலகில் நடைபெற்ற எந்தவகையான போராட்டங்களும் காடுகள், காட்டுயிரிகளின் அழிவைத் தடுக்க முடியவில்லை. அவைமெல்ல அழிந்துதான் போகின்றன. கானகத்தை அழிப்பதும் வனங்களை ஒழிப்பதும் நமக்கு நாமே நஞ்சூட்டிக் கொள்வதற்குச் சமம் என்றுஎவரும் உணர்ந்தாரில்லை”(4)என்கிறார் இடைக்காடன் அவர்கள். சங்ககாலம் தொட்டே

காடுகளை அழிப்பதையும் சீர்கேட்டிற்கு வழிவகை செய்யும் நச்சுப்புகை பொருட்களையும் அன்றே புலவர்கள் அறிந்து அவை சூழல் கேட்டிற்கு வழிவகுக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

மழைநீர்

தட்பவெப்பத்தின் சீரான நிலையினால் மழைநீர் பொழிகிறது. நிலத்தின் உயிர்கள் அனைத்தும் நன்மையடைகின்றன. பறவைகளின் பயணப்போக்கும் விலங்குகளின் இனப் பெருக்கமுறையும், தாவரங்களின் வளர்ச்சியும், மனிதனின் வளமான வாழ்வும், இதனையொட்டி அமைகின்றன. மழையைப் போற்றும் விதமாக சிலப்பதிகாரத்தின் இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும், நாமநீர் வேலியுலகிற்கு அவனளி போல்' எனப் பாடியுள்ளார். பதிற்றுப்பத்து பாடலில் மழையினால் பல்வகை உயிரினங்களும் மகிழ்வு எய்துகின்றன என்ற செய்தியை எடுத்துக்காட்டியுள்ளது.

"வானம் பொழுதொரு சுரப்பக் கானம்
தோடுறு மடமானேறு புணர்ந்தியலப்
புள்ளு நிமிறுமாச் சிணையார்ப்பப்
பழனங் கிழங்குமிசையிற வறியாது
பல்லான் என்பிரை புல்லருந் துகளப்
பயங்கடையறியா வளம்"7

பண்டைய காலத்துப் பருவ நிலைக் காலங்களில் காலம் தவறாது மழை பொழிந்து மக்களுக்கும், மாக்களுக்கும் நன்மை நல்கிய செயலை காலமாரி என்றும் காலம் தப்பி கேடு விளைவித்த செயலைவம்பமாரி என்றும் அழைக்கப்பட்டன என்பதை

மடவாழி மஞ்சைமாயினம்
காலமாரி பெய்தென ஆதெனதின்
ஆலறுமாலின பிடவும் பூத்தன (குறு: 251: 1-3)

என்றும்,

பருவம் வாராஅளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்பமாரியை காரென மதித்தேதி(குறு: 66: 3-5)

என்றபாடல் வரிகளில் காணப்படுகிறது. அதே போன்று திருவள்ளுவர், மழை இல்லை எனில் கடலால் சூழப்பட்ட நில உலகம் பசியால் வாடும் என்கிறார்.

"விண்இன்றி பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"(குறள்: 13)

திருக்குறளில் காணப்படும் வரிகளிலிருந்து மழையின் முக்கித்துவத்தை அறிந்தவர்களாகவே தமிழர்கள் இருந்துள்ளது தெளிவாக நமக்கு புலனாகின்றன.

நிலா

தமிழ் மக்கள் நிலவைப் பிறநாட்டார் போல் பகுத்தறிவிற்கு ஒவ்வாத வகையில் கருதவில்லை. அதன் இயற்கைத் தன்மையை நன்கு அறிந்திருந்தனர். எனவேதான், நிறைமதி,

தேய்மதி, வெள்ளுவா (பௌர்ணமி), காருவா (அமாவாசை), வளர்மதி, பிறைமதி, எட்டாம் நாள் திங்கள், மறுக்கொண்டமதி, அரவுவாய்மதி, வைகறைமதி, பக்கமதி, நிலவு, மீன்சூழ் மதி, குழவித் திங்கள், திங்கள் குழவி, மதி அரும்பு, என நிலவின் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிட்டுள்ளனர். நிலவாகிய மதியை அடிப்படையாகக் கொண்டே மதி அல்லது திங்களின் பெயரில் மாதம் அல்லது திங்கள் எனக் காலத்தைப் பகுத்துள்ளனர். எனவே, திங்கள் சுற்றும் கால அளவை உணர்ந்த அறிவியல் தலைமக்களாக நம் முன்னோர் இருந்துள்ளனர். புறநானூற்றிலும் திங்களின் இயற்கை பற்றிய பாடல் இடம் பெற்றுள்ளது.

மூவைந்து - பதினைந்து - நாள்களில் முறைமுறையே வளர்வதும் தேய்வதுமாகிய முழு வெண்ணிலவைப் போல என உவமையாகப் புலவர் கோவூர் கிழார்

மாகவிசும்பின் வெண் திங்கள்
மூவைந்தான் முறைமுறைக்
கடல்நடுவண் கண்டன்ன (கோவூர் கிழார்: புறம் : 400 : 1-3)

என்னும் பாடல் அடிகள் மூலம், விளக்குகிறார்.

பிறப்பு, வளர்ச்சி, தாழ்ச்சி, இறப்பு முதலான உலகியல் நிலையாமை குறித்துத் திங்களின் வளர்வது, தேய்வது, மறைவது ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் புலவர் கூறுகிறார்.

தேய்தலுண்மையும் பெருகலுண்மையும்
மாய்தலுண்மையும் பிறத்தலுண்மையும்
அறியாதோரையும் அறியக் காட்டி
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து

என்னும் பாடலடிகள் திங்களின் பல்வகைத் தோற்றம், தோற்றமின்மை குறித்து விளக்குகின்றன. மேலும், திங்களின் குளிர் தன்மையுடன் ஒப்பிட்டுப் பண்புகளை விளக்கும் பாடலடிகளும் உள்ளன.

இருள்நிலாக் கழிந்தபகல்செய் வைகறை (புறநானூறு 394.6)

எனக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார், நிலாமறைந்து பகல் வருவதை விளக்குகிறார்.

புலவர் திருத்தாமனார், நிலாமறையும் பொழுதில் வெள்ளி முளைப்பதை,

மதிநிலாக் கரப்பவெள்ளிஏர்தர, (புறநானூறு 398.1)

என விளக்குகிறார்.

ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்,
கோடுகூடுமதியம் முகிழ்நிலாவிளங்கும்
மையல் மாலை (புறநானூறு 67.2-5)

எனப் புலவர் பிசிராந்தையார், வெற்றிவாகை சூடும் மன்னனின் முகம்போல நிலாவிளங்குவதாக அதன் காட்சி பற்றிக் கூறுகின்றார்.

புலவர் ஔவையார்

திங்கள் நாள்நிறை மதியத்து அனையை (புறம் 102: 6-7)

எனத் துன்ப இருள் போக்கும் முழுநிலா போன்றவன் அதியமான் நெடுமான் அஞ்சிஎனப் போற்றுகையில், இருள்நீக்கும் நிலவின் தன்மையைக் குறிப்பிடுகின்றார்.

புலவர் பெருஞ்சித்திரனார் நிலவைக் காட்டிப் பிள்ளைகளுக்குச் சோறு ஊட்டும் பழக்கத்தைக் குறிப்பிடுகின்றார் (புறநானூறு 160.22) நிலா நிலா ஓடிவா என நிலவைக் காட்டிக் சோறு ஊட்டும் பழக்கம் பன்னெடுங்காலமாக இருப்பதை, நிலா பற்றிய ஈடுபாட்டைக் குழந்தை பருவத்தில் இருந்தே உருவாக்கி வந்துள்ளர் நம் தமிழர்கள் என்பதை இப்பாடல் மூலம் நாம் அறியலாம்.

முடிவுரை

மனிதகுல வாழ்க்கையின் பிரதிபலிப்பே இலக்கியங்கள். மனிதன் தன் வாழ்வியலை மட்டும் எண்ணாமல் இயற்கை சார்ந்த அறிவியலைப் பெற்றுள்ளான் என்பதையும் நம்மால் காணமுடிகிறது. உலக இயக்கங்கள், உலகத்தின் தோற்றம், காடுகள் குறித்த அறிவு, காடுகள் அழிவால் ஏற்படும் விளைவுகள், மழை பெய்வதற்கான காரணங்கள், மழை நீரால் உண்டாகும் நன்மைகள் என பல உலக நியதிகளை சங்க மக்கள் அன்றே தெரிந்து கொண்டு தன் வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் எனபது மிகுந்த வியப்புக்குள்ளான செய்திகளே ஆகும். சங்ககால மக்கள் அறிவின் அடிப்படையில் சிறந்தவர்களாகவே இருந்துள்ளனர். சைகைமொழி, குறியீட்டுமொழி, வாய்மொழி என படிப்படியாக உயர்ந்து வந்த மக்கள் அறிவியல் அடிப்படையிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளனர் என்றாலும் அவை மிகையானதல்ல. சங்கமக்கள்; இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையே வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

தொகுப்புரை

- சங்ககால மக்கள் இயற்கை குறித்த தெளிவினை பெற்றிருந்தலை அறிய முடிகிறது.
- உலகம் உருவான விதத்தையும், உலகம் இயக்கிவதற்கான காரணம் மற்றும் தேவைகளை மக்கள் உணர்ந்திருந்தனர் என்பது புலனாகிறது.
- காடுகளைஅழித்ததற்கானகாரணங்களைஅறியமுடிகிறது.
- உலகம் இயங்கும் காரணம் தெரிந்துள்ளமையாலும் நிலவைப் பற்றி அறிந்துள்ளமையாலும் அம்மக்கள் வானியல் சார்ந்த அறிவினைப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.
- சுற்றுப்புறத் தூய்மை மற்றும் உணவு பாதுகாப்பு முறை குறித்த பார்வை பழந்தமிழிரிடையே இருந்துள்ளதை காணமுடிகிறது.
- மழை நீரின் அவசித்தை உணர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. லாப்தேவ்,ஐ., பகுத்தறிவின் கிரஹம், ப.19.
2. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி-1, ப-252.
3. பதிற்றுப்பத்து, பேராசிரியர்.அ.மாணிக்கம், ப.36 (பதிற்-14-5)
4. மேலது. ப.71 (பதிற் -18:1.:6)
5. இடைக்காடன்,காட்டுயிர்-ஒன்றறைஆண்டுசிறப்பிதழ்,டிசம்பர்-2014, ப-86
6. பதிற்றுப்பத்து, பேராசிரியர்.அ.மாணிக்கம், ப.568 (பதிற்று– 82:9)
7. மேலது. ப.610 (பதி:89, 1-6)

References:

1. Laptev, I., The Realm of Reason, p. 19.
2. Madurai Tamil Lexicon, Vol. 1, p. 252.
3. Patirruppattu, Prof. A. Manickam, p. 36 (Patir. 14:5)
4. Ibid., p. 71 (Patir. 18:1:6)
5. Idaikkadan, Kaattuyir (Wildlife) - One and a Half Year Special Issue, December-2014, p. 86.
6. Patirruppattu, Prof. A. Manickam, p. 568 (Patir. 82:9)
7. Ibid., p. 610 (Patir. 89, 1-6)

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

Pattinappalai and the Commerce of Puhar Port

N. Vasu[1], Prof. S. Ravi[2]

1.PhD Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.,

Email: vasupadmavathi1997@gmail.com

2. Associate Professor Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur

Abstract:

Pattinappalai is a Sangam literary work that extensively details Puhar Port, maritime trade, and its management system. Pattinappalai serves as a historical document of maritime commerce. It highlights the significance of Puhar Port and its trade practices. The text meticulously lists the goods that arrived at Puhar Port by sea from various countries, detailing their unique characteristics, the trade procedures involved, and the items that were both imported and exported. The customs duty system, the ships swaying gracefully on the waves in the harbor, and the meticulous arrangement of commercial goods are all poetically described using vivid similes. Furthermore, it mentions the integrity of the merchants and the prevalence of multiple languages spoken at the port. This research paper elaborates on these aspects to underscore the unique significance of Puhar Port.

Keywords*: Pattinappalai, Puhar Port, Trade, Vessels, Ulku tax (Customs duty), Export, Import, Goods, Merchant ethics.*

பட்டினப்பாலையும் புகார்த் துறைமுக வணிகமும்

ந.வாசு[1] . பேரா. ச. இரவி[2],

1.முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம். திருவாரூர்..

2. உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம். திருவாரூர்.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தில் புகார்த் துறைமுகத்தையும், கடல் வணிகத்தையும்,அதன் மேலாண்மை முறையையும் விரிவாகக் கூறும் நூல் பட்டினப்பாலை. பட்டினப்பாலை கடல் வணிக வரலாற்று ஆவணமாகும். பட்டினப்பாலை புகார்த் துறைமுகத்தின் சிறப்பையும் வணிக முறைகளையும் குறிப்பிடுகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து நீரின் வழியாகப் புகார்த் துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருட்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் வணிகச் செயல்முறைகளையும் ஏற்றுமதி, இறக்குமதியான பொருள்களையும் பட்டியலிட்டுள்ளது. சுங்க வரிமுறை, துறைமுகக் கப்பல்கள் அலையில் ஆடும் அழகும் மற்றும் வணிகப்பொருட்கள் அடுக்கப்பட்டிருப்பதும் உவமையாக் கூறப்பட்டுள்ளது. மேலும் வணிகர்களின் நேர்மையும் மற்றும் பலமொழிகள் பேசப்பட்டன எனவும் குறிப்பிட்டப்படுள்ளது. இவற்றை விளக்கி கூறி புகார்த் துறைமுகச் சிறப்பினை கூறுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்: *பட்டினப்பாலை, புகார்த் துறைமுகம்,வணிகம், கலங்கள், உல்கு வரி, ஏற்றுமதி , இறக்குமதி,பொருட்கள் ,வணிகர் பண்பு*

முன்னுரை

பழந்தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களில் வாழ்ந்த மக்கள் தம் நிலத்தில் விளைந்த பொருள்களைப் பிற திணை மக்களிடம் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருள்களைப் பிற திணை மக்களிடம் பெற்று வாழ்த்து வந்துள்ளனர். இப்பொருள்களின் பரிமாற்றங்கள் பண்டமாற்று முறையாக மாறியது. இதுவே வணிகத்தின் தொடக்கமாக அமைகிறது. இப்பண்டமாற்றுமுறையின் வளர்ச்சியால் நெய்தல் நிலப்பகுதிகளில் கடல் வணிகம் தொடங்குகிறது. இத்தொடக்கம் உள்நாட்டுக் கடல் வணிகமாகவும், பன்னாட்டு உலகக் கடல் வணிகமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. (இவ்வணிகச் செயலுக்காகத் தமிழர்கள் கடல் கடந்து வணிகம் செய்துள்ளனர்.) அதேபோல் யவனர் என்று அழைக்கப்படும் கிரேக்க, உரோமாணியர்கள் கடல் கடந்து தமிழகத்திற்கு வருகை தந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்கடல் வணிகம் உள்நாட்டவரும், அயல்நாட்டவரும் புலம்பெயர்க் காரணமாக இருந்துள்ளது. கடல் வணிகமும், புலம்பெயர்வும் பன்னாட்டு அளவில் வணிக வளர்ச்சியையும், பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் உருவாக்கியுள்ளன.

உலக மானுட வரலாற்றில் மனிதனின் முதல் கண்டுபிடிப்பு மொழி மொழியின் காரணமாகக் கலைத் தேடல் உண்டாயின. அக்கலைத் தேடல்களுள் ஒன்றுதான் இலக்கியம், தமிழ்மொழி வரலாற்றில் முதலில் தோன்றிய தொகுப்பு சங்க இலக்கியம். அது அகம், புறம் எலத் தினார் அடிப்படையிலும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனவும் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பத்துப்பாட்டில் உள்ள நுல்களும் ஒன்று பட்டினப்பாலை சங்க இலக்கியங்களுள் பட்டினப்பாலை காதல் துறை அமைந்த கற்பனைப் பாட்டு என்றாலும் இது கடல் வணிகம் பற்றிய குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றது.

பட்டினப்பாலையும் புகார்த் துறைமுக வணிகமும்

சங்க இலக்கியத்தில் கடல் வணிகத்தையும், மேலாண்மை முறையையும் விரிவாகக் கூறும் நூல் பட்டினப்பாலை. இது கடல் வணிக வரலாற்று ஆவணமாகும். இது புகார்த் துறைமுகத்தின் சிறப்பையும் வணிக முறைகளையும் குறிப்பிடுகிறது. இந்நூலைப் பற்றி இந்தியக் கப்பல் வணிகம் பற்றி ஆய்வு செய்த இராத குமுத் முகர்ஜியும் (Indian Shipping & Radha Kumud Mukherjee, 1912) கட்டிக்காட்டியுள்ளார்.

சங்க இலக்கியங்களுள் பட்டினப்பாலை 301 அடிகளைக் கொண்டது இப்பாடல் பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடிப் பாலைக்குரிய ஒழுக்கம் பற்றிக் கூறுவதால் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது.காவிர் கடலில் புகும் இடத்தில் அமைந்த பட்டினம் எனவே காயிர் புகும் பட்டினம் என வழங்கிய பெயரே நாளடைவில் காவிரிப்பூம்பட்டினம் எனவழங்கலாயிற்று.

கரிகாற்பெருவளத்தான் திருமாவளவனின் வெற்றியையும், புகழையும், பெருமையையும் சிறப்பித்து அவன் அரசாண்ட காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூற விரும்பிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்

தம் கூற்றாகச் கூறாமல் அகப்பொருள் தலைவன் கூற்றாகப் பாடியுள்ளதால் இது அகப்பொருள் தழுவிய பாட்டாகும்.

இப்பாட்டின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் காவிரி பாய்ந்து வளம் சேர்க்கும் மருத நிலங்கள் சூழ்ந்த சோழ நாட்டின் பெருமை. காயிர் கடலோடு கலக்கும் இடத்தமைந்த நெய்தல் வளம் நிறைந்த உற்கரைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்தின் பல்வேறு சிறப்புகள், அப்பட்டினத்தில் வாழ்த்து செங்கோல் செலுத்திய மாமன்னன், கரிகாலனின் (திருமாவளன்) வரலாற்றுக் குறிப்புகளையும், பெருமைகளையும், பிற சிறப்புகளையும் கண்முன் நிகழும் நிகழ்வுபோல் விரித்துரைத்துள்ளார்.

பாலை என்பது பாலை நில ஒழுக்கமாகிய பிரிதலும், பிரிதம் நிமித்தமுமாகிய அகப்பொருள் பகுதியாகும். இதனைத் தொல்காப்பியரின் உர்ப்பொருள் குறித்து,

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிலை
தேருங்காலை திணைக்குசிப் பொருளே (தொல் .பொருள்.நூ.14)

என்ற நூற்பாவால் அறியலாம்.

பண்டையச்சோழ நாட்டின் சிறப்பையும், வளத்தையும், மக்களில் உயரிய பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும், நாகரிகத்தையும். திருமாவளவனின் வீரத்தையும், அரசியல் நிறத்தையும் ஓரளவு அறியத் துணைப்பற்ற நூலாகத் திகழ்வது பட்டினப்பாலை .இதில் அமைந்து

வான்முகந்த நீர் மலைப்பொழியவும்
மலைப் பொழிந்த நீர்கடற்பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பாப்பவும்:
அளந்தறியாப் பல பண்டம்
வாம்பறியாமை வந்தீண்டி (பட்டினப் 126-132)

என்ற அடிகள் கடல் வணிகம் குறித்து சிறப்பித்து கூறுகிறது.

கலங்களின் தோற்றம்

பட்டினப்பாலையில் கலங்களில் தோற்றம் பற்றிப் பல இடங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றது. உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் இருந்துள்ளன. உள்நாட்டு வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டுப்பயன்படுத்தப்பட்ட கலம் பஃதி எனப்படும். அவற்றில் உப்பை ஏற்றிச் சென்று பண்டமாற்றமாக நெல்லைப் பெற்று வந்தனர். அத்தகைய படகுகள்

வரிசையாகத் தறிகளிலே பிணைக்கப்பட்டிருந்துள்ளது. அது குதிரை வரிசைபோல் தோற்றம் அளித்துள்ளது..

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்
கழிசூழ் படப்பைக் கலியாணர் (பட்டினப்.32-29)

புகார் துறைமுகத்தில் வந்து தங்கிய நாவாய்களின் யானைப்பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்து நிற்பதைப்போல, அசைந்துகொண்டிருந்தன. அக்கப்பல்களின் பாய்மரத்தின் மேல் கொடிகள் பறந்தன. இதனை,

வெளில் இளக்கும் களிறு போலத்
நீம்புகார்த் திரை முன்துறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக் கூம்பின் நசைக்கொடி (பட்டினப். 172-175)

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது.இவ்விரு பாடல் மூலம் உள்நாடு வணிகத்திற்கு பஃதி என்னும் கலமாக விளங்கும் சிறிய வகை கப்பலும்,அயலக வணிகத்திற்கு பெரிய வகை கப்பலாக சீனக் கப்பல் தூங்கு நாவாயும் (இராசவேலு.சு.,சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் – இராமேஸ்வரம் முதல் பூம்புகார் வரை, பக்.37) புகார் துறைமுகத்தில் பயன்படுப்பட்டுள்ளன.

சுங்கம் (உல்கு வரி)

புகாரில் சோழ அரசனுடைய அலுவலர்கள் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்குச் சங்கம் வாங்கியுள்ளனர். சுங்கம் வாங்கியதற்கு அடையாளமாக அப்பொருள்களின்மேல் சோழ அரசனுடைய புலி முத்திரையைப் பொறித்துள்ளனர். அவ்விடங்களில் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்துள்ளது. அதை,

அளந்து அறியாப் பால பண்டம்
வரம்பு அறியாமை வந்துஈண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம் போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போர்ஏறி (பட்டினப் 120 -127)

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. காலிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் சோழ அரசு, துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருள்களுக்கு உல்கு எனப்படும் சுங்க வரியை வசூலித்தனர்.

பட்டினப்பாலையின் பாடல் அடிசுளை மெய்ப்பிக்கும் வகையில் காவிரிப் பூம்பட்டினத்தில் சோழ மரபின் சின்னமான புலியின் உருவம் பொறித்த ஈடுமண், வெண்கலம், செம்பு போன்றவற்றால் ஆன முத்திரைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன." (ஆறுமுக தோராமன், சங்ககால முத்திரைகள்,பக்.8-13) புலியின் முன்பக்கம் விளக்கு வைக்கப்பட்டும் புலி முன் காலைத் தூக்கிய நிலையிலும் இம்முத்திரைகள் உள்ளன. இலக்கியங்களில் குறிக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப இச்சுடுமண் முத்திரைகள் கிடைத்திருப்பது சிறப்புக்குரியது.

ஏற்றுமதி , இறக்குமதியான பொருட்கள்

பல்வேறு நாடுகளிலிருந்து நீரின் வழியாகப் புகார்த் துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருட்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் பட்டினப்பாலை, வணிகச் செயல்முறைகளையும் வருவித்த பொருள்களையும் பட்டியலிட்டுள்ளது.

நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப்பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெமிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின் (பட்டினப். 183-191)

ஏற்றுமதிக்காக, நிலத்தின்வழி வண்டிகளில் கரிய மிளகு மூட்டைகளும், மேரு மலையில் தோன்றிய மாணிக்க மணிகளும் பொன்னும் , மேற்கு மலையில் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடல் துறைமுகமாகிய கொற்கையிலிருந்து முத்துகளும், கிழக்குக் கடலிலிருந்து பவளங்களும், கங்கையாற்றில் விளைந்த பொருட்களும், காவிரியாற்றின் வளத்தால் விளைந்த பொருட்களும் கொண்டுவரப் பட்டுள்ளன.

இறக்குமதியாக,கடல்வழியாக மரக்கலங்களில் நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும், ஈழத்திலுள்ள பொருட்களும்,, கடாரத்திலுள்ள பொருட்களும் புகார்த் துறைமுகம் வந்துள்ளன. இப்பெரிய பொருட்கள் நிலம் நெளியும்படியாகத் திரண்டு இருந்தன. அந்த அளவிற்கு வளம் மிகுதியான இடமகன்ற தெருக்கள் இருந்துள்ளன.

மேலும் இப்பாடல் மூலம் தரைவழியாகவும், ஆறுகளின் வழியாகவும்,துறைமுகம் வழியாகவும் உள்நாட்டு வணிகமும், புகார் துறைமுகம் மூலம் கிரேக்கம், இலங்கை,கடாரம் போன்ற அயல்நாடுகளுடன் வணிகம் நடைப்பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது.

மலைப்போல் காட்சியாளித்த வணிகப் பொருட்கள்

புகார் துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக மூட்டைகளில் உள்ள பொருள்கள் ஒன்றன் மேலொன்றாக, கட்டப்பட்டு அடுக்கப்பட்டு இருந்தன. இவற்றின்மேல் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறிக்குதித்து விளையாடின. இது மலைச் சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை போல ஒத்துள்ளதாக ,

பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக
கூருகிர் ஞமலிக் கொடுத்தாள் ஏற்றை
ஏழகத் தகரொடு உகளும் முன்றில் (பட்டினப். 137-141)

என்ற பட்டினப்பாலை பாடல் அடிகளில் இருந்து அறியமுடிகிறது.

வணிகர் பண்பு

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நல்நெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன்று இருக்கைப்
பல்ஆயமொடு பதிபழகி
வேறுவேறு உணர்ந்த முதுவாய் ஒக்கல்
சாறு அயர் மூதூர் சென்று தொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்துஇனி துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் (பட்டினப் 206-218)

என்னும் சுடியலூர் உருத்திரங்கண்ணனார் கூற்றால் புகார் துறைமுக வணிகர்கள், நெடுநுகத்துப் பகல்போல என்பது, நுகத்தடியில் அதன் நடு இடம் தெரிவதற்காக அடிக்கப்பட்டிருக்கக்கூடிய ஓர் ஆணியைக் குறிக்கும். அதுபோல வணிகர் நடுநிலையுடன் வணிகத்தில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் சரியான விலை கூறி, நன்மொழி பேசி, பொருள்களை விற்றுள்ளனர்.இங்கு வணிகத்தில் பல மொழிகள் பேசக் கூடிய வணிகர்கள் இருந்துள்ளனர் இது அயலக வணிக சிறப்பை எடுத்துறைக்கிறது.

முடிவுரை

புகார் துறைமுகத்தில் உள்நாடு வணிகத்திற்கு பஃதி என்னும் கலமாக விளங்கும் சிறிய வகை கப்பலும்,அயலக வணிகத்திற்கு பெரிய வகை கப்பலாக சீனக் கப்பல் தூங்கு நாவாயும் பயன்படுப்பட்டுள்ளன.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக தரைவழியாகவும், ஆறுகளின் வழியாகவும்,துறைமுகம் வழியாகவும் உள்நாட்டு வணிகமும், புகார் துறைமுகம் மூலம் கிரேக்கம், இலங்கை,கடாரம் போன்ற அயல்நாடுகளுடன் வணிகம் நடைப்பெற்றுள்ளது.

வணிகர் நடுநிலையுடன் வணிகத்தில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் சரியான விலை கூறி, நன்மொழி பேசி, பொருள்களை விற்றுள்ளனர்.இங்கு வணிகத்தில் பல மொழிகள் பேசக் கூடிய வணிகர்கள் இருந்துள்ளனர் இது அயலக வணிக சிறப்பை எடுத்துரைக்கிறது.

துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக உள்ள மூட்டைகளும் அதன் மேல் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறிக்குதித்து விளையாடுவது மலைச் சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை போல ஒத்துள்ளது.

துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருள்களுக்கு உல்கு எனப்படும் சுங்க வரியை வசூலித்தனர். பட்டினப்பாலையின் பாடல் அடிசுளை மெய்ப்பிக்கும் வகையில் காவிரிப் பூம்பட்டினத்தில் சோழ மரபின் சின்னமான புலியின் உருவம் பொறித்த ஈடுமண், வெண்கலம், செம்பு போன்றவற்றால் ஆன முத்திரைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இதுபோன்ற புகாரின் வணிக சிறப்புகளை பட்டினப்பாலை கூறுவதும் தொல்லியல் சான்றுகளுடன் பொருந்தி வருவதும் புகார் துறைமுக வணிக சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

துணைநூற் பட்டியல்

1. ஆறுமுக தோராமன், சங்ககால முத்திரைகள்.தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர்.2008
2. இராசவேலு.சு.,சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் – இராமேஸ்வரம் முதல் பூம்புகார் வரை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை .2023 \
3. சுப்பிரமணியன். ச. வே., தொல்காப்பியம் தெளிவுரை , மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.2016
4. சிதம்பரனார். சாமி., பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2020
5. Radha Kumud Mukherjee ,Indian Shipping ,… 1912

References

1. Arumuga Thoraman, *Sangam Period Seals*. Dhanalakshmi Publications, Thanjavur. 2008.
2. Rajavelu, S., *Sangam Period Coastal Settlements and Ports – From Rameswaram to Poompuhar*. Central Institute of Classical Tamil, Chennai. 2023.
3. Subramanian, S. V., *Tholkappiyam: A Clear Commentary*. Manivasagar Publications, Chennai. 2016.
4. Chidambaranar, Sami., *Pattinappalai: A Research Commentary*. Naam Thamizhar Publications, Chennai. 2020.
5. Mukherjee, Radha Kumud, *Indian Shipping*. [Publisher/Place unknown]. 1912.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Vol.1 No.10 July 2025 (Monthly) **Format: Print**

Language: Multiple languages
Language (other): **Tamil, English**

Title : Tamilmanam International
Research Journal of Tamil Studies

Other title : Tamilmanam Int. Res. J. Tamil Stud
Specialization Multidisciplinary

Access Rights Open Access

Publisher https://www.ngmc.ac.in/
Research Department of Library,
Nallamuthu Gounder Mahalingam College, Pollachi
Country of Origin India
Registered Address 90, Palakkad Road,
Pollachi 642001, Tamilnadu

Editor : Veerakannan S
Year of Commencement 2024 –

Sequential and/or chronological designations
Vol. 1, No. 01, 2024 –

Status of publication Active

Current or last Frequency Monthly

Type of publication Peer Reviewed Scholarly Journal

Language Tamil, English
Medium Print

Print-ISSN Bending
E-ISSN 3049-0723

Department of Library,
Nallamuthu Gounder Mahalingam College,
90, Palakkad Road,
Pollachi 642001, Tamilnadu, INDIA

Email: editor@tamilmanam.in, ngmcollegelibrary@gmail.com,

Phone: +919788175456

Website: www.tamilmanam.in

Publisher Website: www.ngmc.org